# ஞானசம்பந்தர்

பேராசிரியர்
டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்

# ஞானசம்பந்தர்




பேராசிரியர்
டாக்டர் ந. சுப்புரெட்டியார்

## திருஞானசம்பந்தர்

யாவர்க்கும் தந்தைதாய்
　　எனும்இவர்இப் படிஅளித்தார்
ஆவதனால் ஆளுடைய
　　பிள்ளையா ராய்அகில
தேவருக்கும் முனிவருக்கும்
　　தெரிவரிய பொருளாகும்
தாவில்தனிச் சிவஞான
　　சம்பந்தர் ஆயினார்.[1]

---

1. பெ. பு. திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம்-69.

# ஞானசம்பந்தர்

(ஆசிரியரின் 70-வது அகவை நினைவு வெளியீடு)

'அருங்கலைக்கோன்' பேராசிரியர்
டாக்டர் ந. சுப்புரெட்டியார்
(எம்.ஏ. பி.எஸ்சி., எல்.டி., பிஎச்.டி.)
தமிழ்ப்பேராசிரியர் - துறைத்தலைவர் (ஓய்வு)
திருவேங்கடவன் பல்கலைக்கழகம் திருப்பதி

விற்பனை உரிமை :

பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600108

முதற் பதிப்பு—நவம்பர், 1986

© டாக்டர் எஸ். இராமலிங்கம்
(ஆசிரியரின் மூத்தமகன்)
"வேங்கடம்"
AD—13 (பிளாட் - 3354)
அண்ணாநகர், சென்னை - 600 040

விலை ரூ. 27-00

VENKATAM PUBLICATIONS
AD—13 (Plot. No. 3354)
Anna Nagar, Madras - 600 040

---

அச்சிட்டோர் : கற்பகம் அச்சகம், 6, நல்லதம்பி தெரு
சென்னை - 600 002.

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. (குறள்-78)



பிறப்பு : ஆகஸ்டு 3, 1908

திரு P. B. K. இராஜா சிதம்பரம்

திருச்சி மாவட்டக் கழக முன்னாள் தலைவர் (1952-54)

சென்னை மாநிலச் சட்டப் பேரவை உறுப்பினர் (M.L.A.)
(1952 - 57)

திருச்சி மாவட்டம் பெருவளநல்லூர் பண்டகுலத் தோன்றல் ஈத்துவக்கும் இன்பம் கண்ட பெருந் தகையும் ஆட்சித் துறையில் அருந்தொண்டாற்றி ஆசிரியப் பெருமக்கள், ஏழை எளியவர்கள் இவர்கள் உள்ளத்தைக் கவர்ந்தவரும் நாட்டுப் பற்றாளரு மான திரு. P.B.K. இராஜா சிதம்பரம் அவர்கட்கு,

அன்புப் படையல்

ஒப்பிலாப் பண்பன்; நுட்பமார் அறிஞன்;
உறுவது தேர்ந்துணர் விறலோன்;
திப்பியம் மிக்க கொள்கையன்; அறிஞர்
சிந்தனைக்கு விருந்தருள் திறத்தன்;
துப்பமை உளத்தன்; எங்குல விளக்காய்த்
துலங்குவோன்; நியதியைத் தெளிந்தோன்;
செப்பமார் 'இராஜா சிதம்பரம்' என்னும்
செம்மலுக் குரியதிந் நூலே.

# மூன்று வயதில்
# அருள்பெற்ற மணி

அடியெனல் எதுவோ முடியெனல் எதுவோ
அருட்சிவம் அதற்கெனப் பலகால்
படியுற வருந்தி இருந்தஎன் வருத்தம்
பார்த்தரு ளால்எழுந் தருளி
மிடியற எனைத்தான் கடைக்கணித்து உனக்குள்
விளங்குவ அடிமுடி என்றாய்
வடிவிலாக் கருணை வாரியே மூன்று
வயதினில் அருள்பெற்ற மணியே.[2]

—இராமலிங்க அடிகள்

---

2. *ஆளுடைய பிள்ளையார் அருள்மாலை-7 (ஐந்தாம் திருமுறை)*

ஓம்

நமசிவாய வாழ்க!

## சிறப்புப் பாயிர மாலை

(திருமதி சௌந்தரா கைலாசம்)

# நெஞ்சினிமை நிறைந்து வர நிலைத்து வாழி!

1. யுகமுடிவில் பெருக்கெடுத்த ஊழி வெள்ளம்
உலகழிக்கச் சீற்றமுடன் எழுந்த வேளை
புகலருளும் பேரிறைவன் உறைந்த கோயில்
பொன்றாமல் தோணியென மிதந்த தாலே
சகமுழுதும் கொண்டாடிப் பெருமை சேர்க்கும்
தலமான சீகாழி யதனைப் பற்றிப்
புகல்வதற்கு மொழியுண்டோ? வார்த்தை உண்டோ?
பூதலத்தில் இணையான பதியும் உண்டோ?

2. வெள்ளத்தில் தோணியென மிதந்த கோயில்
வீற்றிருக்கும் முதலிறையாம் தோணி யப்பர்
பள்ளத்தில் வீழ்ந்துதுயர்ப் பட்டு மாளும்
பாருலக மானுடரைக் கரையிற் சேர்க்க
உள்ளத்தில் அருள்பொங்கி ஞானச் செல்வம்
ஊட்டுகிற குருவாகக் காட்சி நல்கும்
கொள்ளையெழில் திருப்பதியாம் காழி நோக்கிக்
கும்பிட்டால் அதுபோதும்; வினைகள் போகும்!

3. அத்தகைய காழியிலே வேதம் ஓதும்
அந்தணரில் சிறந்தவராய்த் திகழ்ந்து நின்ற
உத்தமராம் சிவபாத இருத யத்தார்,
உற்றதுணை பகவதியார், உள்ளம் ஒன்றி
நித்தியனை எப்பொழுதும் நெஞ்சில் தாங்கி
நெறிசிறிதும் பிறழாமல் அறங்கள் போற்றி
எத்தகைய குறையுமிலா துலகில் சைவம்
ஏற்றமுற வேண்டுமென வாழ்ந்தி ருந்தார்.

4. வேதநெறி தனைவளர்க்கும் அன்பு மைந்தன்
வேண்டுமென இருவருமே இறையை வேண்ட
ஆதிமுதற் பொருளான ஈசன் நல்ல
அருள்காட்டி வரம் தந்தான்; கோள்கள் எல்லாம்
ஆதரவாய் அமைந்துள்ள வேளை தன்னில்,
ஆதிரையில், ஆளுடைய பிள்ளை நல்லார்
பேதமிலாத் தம்பதியர்க் குலகில் என்றும்
பெருமைதரும் மகவாக அவத ரித்தார்!

5. எவருக்கும் பிறவாத பிள்ளை தன்னை
ஈன்றெடுத்த பெற்றோர்கள் மகிழ்வில் துள்ள,
அவருடைய சுற்றத்தார் அழகு பொங்கும்
அருமகவை நிதம் வாழ்த்தி உவகை கொள்ள,
புவனமதில் வாழ்கின்ற உயிர்கள் இன்பப்
பொழிலதனில் திளைத்தாடிப் பூரிப் பெய்த,
சிவனவனின் அருட்பரிசாய், அமுத ஊற்றாய்த்
திருஞான சம்பந்தப் பிள்ளை வாழ்ந்தார்.

6. பெற்றெடுத்த அன்னைபக வதியார் மிக்கப்
பிரியமுடன் முலைப்பாலை ஊட்டும் காலை
சிற்பரனின் திருப்பாதம் எந்தப் போதும்
சிந்திக்கும் அன்பினையும் கலந்து தந்து

குற்றமெலாம் தீர்த்துவிடும் நீறை மட்டும்
கோலமிகும் திருநுதலில் காப்பாய் இட்டு
நற்றவத்தின் தடத்தினிலே நடைப யிற்றி
நாள்தோறும் நலம்பெருக வளர்த்தி ருந்தார்!

7. கையூன்றிக் கால்மடித்துத் தலைய சைத்துக்
களங்கமிலாச் செங்கீரை ஆடும் தோற்றம்,
“ பொய்யூன்றிப் பாழ்பட்டுக் கிடக்கும் இந்தப்
பூவுலகம் நன்மையுறப் புன்மை மாய,
மெய்யூன்றும் பெருமழுவார் தொண்டை அல்லால்
வேறேதும் ஒப்புகிலேம் ” என்று சொல்லித்
தெய்வநெறி வளர்ப்பதுவாய்த் தெரியக் கண்டு
திகட்டாத ஆனந்தத் தேனை உண்டார்!

8. பிள்ளையவர் இருகரமும் சேர்த்த வண்ணம்
பேரழகாய்ச் சப்பாணி கொட்டும் தோற்றம்
கொள்ளைநலம் தரும்சைவ நெறியை அன்றிக்
கொள்வதிலை வேறொன்றை என்ப தேபோல்
உள்ளமதில் பெற்றோர்கள் உணர்ந்து கொண்டார்!
ஒப்பரிய மகிழ்ச்சியெனும் இமயம் சென்றார்!
எள்ளளவும் குறையின்றி எந்த நாளும்
எழில்விழியின் இமையாகக் காத்தி ருந்தார்!

9. ஈரகவை கடந்துவிட மூன்றாம் ஆண்டும்
இசைவாக நடைபோடத் தொடங்கும் போது
சீருடைய பிள்ளையினைப் பெற்ற தாதை
சிவபாத இருதயர்ஓர் தினத்தில் ஓங்கும்
பேருடைய பிரமபுரக் கோயி லுக்குள்
பிரமநறுந் தீர்த்தமதில் ஆடப் போந்தார்.
ஆர்வமுடன் ஆளுடைய பிள்ளை யாரும்
அவரோடு திருக்கோயில் சென்ற டைந்தார்.

10. புனிதமிகு தீர்த்தத்தின் கரையில் அன்பு
பொங்கிவரப் பிள்ளையினை அமர்த்தி ஐயன்
மனம்ஒன்றி அகமருட மந்தி ரத்தை
மாசறவே ஓதுதற்கு நீருள் ஆழ்ந்தார்
முனம்உலகில் பிறந்திட்ட நினைவு மீண்டும்
மூண்டுவரப் பிள்ளையவர் வதனம் வீங்க
இனிமைமிகு குரல்காட்டி "அம்மை அப்பா"
என்றழுதார் திருக்கோயில் விமானம் நோக்கி.

11. பிள்ளையவர் அழுங்குரலைச் செவியில் கேட்ட
பிரமபுரத் தீச்வரனார் உமையை நோக்கி
வள்ளத்தில் முலைப்பாலைச் சிறிது வாங்கி
வாடியழும் குழந்தைக்கு வழங்கச் சொல்ல,
உள்ளத்தில் தாயாகிப் பொற்கிண் ணத்தில்
உயர்வுதரும் சிவஞானம் குழைத்த பாலை
கிள்ளைமொழித் திருநிலைநா யகியாள் தந்தாள்!
கிட்டாத பெரும்பேற்றைப் பெற்றார் பிள்ளை!

12. சிற்றெறும்பு பக்கத்தில் ஊர்ந்து விட்டால்
தேள்கொட்டி விட்டதுபோல் நடுக்கம் கொண்டு
பெற்றவொரு பிள்ளையினைப் பெண்ணொ ருத்தி
பெட்டகத்துப் பொற்குவையாய்க் காப்பாள் [என்றால்
முற்றுகிற அன்பாலே உலகை ஈன்ற
முதல்வியவள் தெருப்பிள்ளை அழுத வேளை
உற்றவொரு தாய்மைநலம் உளத்தில் பொங்க
ஓடிவந்து காப்பதிலே விந்தை என்ன?

13. ஒப்பரிய தாய்மைநலம் உள்ள தால்தான்
உலகமெலாம் தழைக்கிறது! நாட்கள் எல்லாம்
செப்பரிய விதமாக ஓங்கி நிற்கும்
சிறப்பதனை அடைகிறது! கவிழ்ந்து போகாக்

கப்பலிலே பயணித்து வாழ்க்கை என்னும்
கடல்கடக்கச் செய்கிறது! மக்கள் காணும்
சொப்பனத்தை நனவாக்கிக் கையில் தந்து
சுகம்பெருக்கி நிற்கிறது! வாழ்க தாய்மை!

14. தாயுமையாள் அருளூறித் தந்த பாலைத்
தன்பசிக்கு மருந்தாக உண்ட பிள்ளை
வாயினிரு மருங்கினிலும் பால்வ ழிந்து
வருவதனைத் தந்தையவர் வெகுண்டு நோக்கி,
ஆய்வின்றி, அப்பாலைத் தந்தார் யாரென்
றரும்மகவைக் கோலொன்றால் அடிக்கப் போக,
நேயமிகும் மகவதுவோ விரலாற் சுட்டி
நிர்மலனாம் தோணிபுரத் திறையைக் காட்டும்!

15. 'தோடுடைய செவியன்' எனத் தொடங்கு கின்ற
தூயதமிழ்ப் பாட்டிசைத்து ஞானப் பிள்ளை
பீடுபெற விளங்கியவோர் நிலைமை கண்டு
பெற்றெடுத்த தந்தையவர் வியப்பில் ஆழ்ந்தார்!
ஆடுகிற சிவபெருமான் தாளைப் பற்றும்
அருள்நெறியைத் தமிழிசையால் பரப்பு தற்கு
நாடுபல வலம்வந்து தொண்டு செய்யும்
நல்லவரைப் பெற்றதனால் உவகை சூழ்ந்தார்!

16. தெய்வநெறி, சைவநெறி உலகம் எங்கும்
திகழ்ந்தினிது பரவுதற்கு நாளும் தொண்டு
செய்ததிரு ஞானசம் பந்தர் வாழ்வைச்
சிறப்பாக ஆய்ந்தினிய தமிழ்நூ லாக்கி
வையமெலாம் பயன்எய்த வழங்கு கின்ற
மாண்புடைய ஆசிரியர் அவரைப் பற்றிக்
கையகலத் தாளுக்குள் எழுதப் போமோ?
களித்தமிழில் அடங்கிடுமோ கவின்கள் எல்லாம்?

17. சுப்புரெட்டி யாரென்று சொல்லும் போதே
சுகமான சுவைமிக்க தமிழ்ம ணக்கும்!
ஒப்பரிய ஆராய்ச்சித் திறன்கள் மிக்க
உயர்வுடைய நூல்களின்நற் சங்கொ லிக்கும்!
செப்பமுள சிந்தனையின் ஆழத் துள்ளே
திகழ்ந்தொளிரும் முத்தான கருத்துப் பூக்கும்!
கப்புகிற இருளதனை விலக்கி வைக்கும்
காரியங்கள் அகலாமல் கால்ப திக்கும்!

18. முத்துமணி ரத்தினங்கள் கோத்த தேரில்
முடியாத அழகதனைக் கொலுவி ருத்தி
எத்திசையும் புகழ்விளங்கப் பவனி செல்லும்
ஏற்பாட்டைச் செய்யுமொரு வேந்த னைப்போல்
மெத்தஎழில் விளங்குகிற கருத்துத் தேரில்
மேலான இலக்கியத்தை அமரச் செய்து
புத்தொளியை நாற்புறமும் பரவ விட்ட
பூந்தமிழர் திரு.சுப்பு ரெட்டி யார்தான்!

19. திருமாலை நெஞ்சத்தில் நிறைத்தி ருப்பார்!
சிவனாரை எக்கணமும் நினைத்தி ருப்பார்!
ஒருகாலும் பிறர்போற்றும் மதத்தை, வாழ்வை
உள்ளத்தில் குறைவாகக் கருத மாட்டார்!
சருகாக உலகத்தில் வாழ்வோர் மீண்டும்
தழைக்கின்ற வழிகாண முயற்சி செய்வார்!
கருகாமல் காயாமல் அறிவுக் கன்று
கற்பகமாய்ச் செழித்தோங்க வகைகள் காண்பார்!

20. துறையூருக் கருகினிலே கோட்டாத் தூரில்
தூயர்திரு நல்லப்ப ரெட்டி யாரும்
உறுதுணையாம் காமாட்சி அம்மாள் தாமும்
உளம்கலந்து நிதம்வாழ்ந்த குடும்ப வாழ்வில்

இறைவனவன் அருள்பூக்க இன்பம் சேர்க்கும்
எழில் மகவாய்ச் சுப்பு ரெட்டி யார்பிறந்தார்!
கறையறியாப் பாதையினைப் பெற்றோர் காட்டக்
காலமெலாம் அவ்வழியே நடக்க லானார்!

21. ஏணியென வறுமையினை இளமை வாழ்வில்
ஏற்றுக்கொண் டயராமல் உயரச் சென்றார்!
சாணையென நூல்களினால் அறிவைத் தீட்டித்
தக்கபல பரிசுகளைப் பெற்றுக் கொண்டார்!
பூணுகிற பதவிஎது வான போதும்
புகழ்பெருகும் விதமாகச் செயல்கள் செய்தார்
ஆணவமே இல்லாமல் அமைதி சார்ந்த
அன்பொளிரும் நல்லகத்தை உடைமை பெற்றார்!

22. பெருமைமிகு துறையூரில் நிலக்கி ழாரின்
பேரோங்கும் பள்ளியிலே தலைமை தாங்கி
அருமைமிகு கல்வியினை இளஞ்சி றார்கள்
அறிந்துணர ஊக்கமுடன் தொண்டு செய்தார்!
தருமமிகு திருக்காரைக் குடியில் கல்வி
தனைப்பயிற்றும் ஆசிரியர் பயிலு கின்ற
ஒருபெரிய கல்லூரி யதனில் வாழ்வை
உணர்த்துகிற தமிழ்த்துறையின் தலைமை
[பெற்றார்!

23. திருப்பதியில் வேங்கடவன் பேரைக் கொண்டு
திகழ்ந்திடுபல் கலைக்கழகம் தன்னில் இன்பம்
வரப்புரியும் செந்தமிழை வளப்ப டுத்தும்
வாய்ப்பான நற்றுறையின் தலைமை ஏற்றுக்
கருத்துயரச் செயலுயரச் சிந்தை முற்றும்
கரும்பான தமிழமுதம் உயர்ந்து பொங்க,
திருத்தமுறும் பலபணிகள் ஆற்றி நின்ற
திருவுடையார் அறிவுடையார் திறமை மிக்கார்!

24. அரியகலைக் களஞ்சியத்தைப் பதித்து நல்கும்
ஆசிரியர் குழுவதனில் முதன்மை தாங்கி
உரியபல சிறப்புடைய நூல்கள் தம்மை
ஊன்றிநிதம் படித்தாய்ந்து முடிவு செய்து,
பெருமையுற வெளியிட்டுத் தமிழன் னைக்குப்
பெரிதான புகழாரம் தேடித் தந்த
ஒருதமிழர்! உயர்தமிழர்! உலகம் யாவும்
உளமாரப் புகழ்ந்தேத்தும் உண்மைத் தொண்டர்!

25. கணக்கற்ற அவைகளிலே பங்கு கொண்டு
கலைவளரப் பேருதவி புரிவார்! அன்பு
மணக்கின்ற மனம்தாங்கி நாடு முற்றும்
வலம்வந்து தீந்தமிழை ஆய்வார்! தெய்வ
அணுக்கத்தில் எப்போதும் இன்பம் காணும்
ஆசையுடன் நல்வாழ்க்கை வாழ்வார்! தூய
குணக்குன்றாய், அருட்குன்றாய், கொள்கைக் குன்றாய்
குறையற்ற நலக்குன்றாய்த் திகழ்வார்! வாழி!

26. அவரெழுதித் தந்திருக்கும் நூல்கள் தம்மை
அளவிடுதல் எளிதில்லை! சொல்லப் போனால்
நவநிதியக் குவியல் அவை! மதிக்க ஒண்ணா
நலமருளும் நதிகள் அவை! சூழ்ந்து மாய்க்கும்
பவவினையின் இருளதனை விலக்க வந்த
பகலவனின் கதிர்களவை! வாழ்வு நல்கும்
தவத்தின்உயர் மலைகள்அவை! என்று போற்றத்
தக்கவிதம் விளங்குவன! தந்தார் வாழி!

27. அறிவியலை அவரறிவார்! இலக்கி யத்தை
ஆராயும் வகையறிவார்! வளமை கொள்ள
உறுதுணையாய் யாவர்க்கும் உதவு கின்ற
உளவியலும் தெளிவுறுவார் நாட்டில் உள்ள
சிறுவர்களை இளைஞர்களைப் பயிற்று விக்கும்
திறனறிந்து செயல்புரிவார்! இவற்றின் மேலாய்
இறையுணர்வில் தலைமையிழந்த பெரியோர் வாழ்வை
எழிலமுதத் தமிழ்மொழியில் தருவார்! வாழி!

28. இவ்வகையில் அவர் தந்த ஞானசம் பந்தர்
எனும்அரிய நூலதனைப் படித்த போதில்
செவ்வையுற விளக்கும்அரும் கருத்த னைத்தும்
சிந்தையிலே ஒளிகாட்டித் திகழக் கண்டேன்!
கொவ்வைமலர் வாயிதழாள் உமையி னோடு
குலவுகிற சிவபெருமான் எதிரில் தோன்றி
உய்வகையைக் காட்டுகிற உணர்வைப் பெற்றேன்!
ஓங்குகிற சிவநெறியின் உயர்வைக் கண்டேன்!

29. மதுபோன்ற பூந்தமிழின் இனிமை காட்டி
மதிநுட்ப ஒளிகாட்டி மகிழ்வை ஊட்டும்
இதுபோன்ற பலநூல்கள் யாத்து மாந்தர்
இறையருளைத் துய்க்கின்ற வழியும் காட்டப்
பொதுமன்றில் நடமாடும் ஈசன் அன்பு
பூத்தருளைத் திரு. சுப்பு ரெட்டி யார்க்கு
நிதம்வழங்கி நின்றிடுவான்! நீண்ட காலம்
நெஞ்சினிமை நிறைந்துவர நிலைத்து வாழி!

30. சித்தமதில் எப்பொழுதும் இறையைத் தாங்கித்
திகழ்வுடைய நறுந்தமிழில் தெளிவு மிக்க
புத்தகங்கள் புதுமையுற எழுதி இந்தப்
புவியினர்க்கு வழங்கிஉயர் புகழ்கு விக்கும்
வித்தகராம் திரு. சுப்பு ரெட்டி யார்க்கு
மேன்மைகளும் வளமைகளும் மிகுந்து சேர
அத்தனவன் அருளமுதம் பொழிவான்! நீண்ட
ஆயுளுடன் அப்பெரியார் இனிது வாழி!

நாதன்தாள் வாழ்க.

'முருகனடி'
24, கஸ்தூரி ரங்கன்சாலை
தேனாம்பேட்டை
சென்னை-600018
24-11-1986

— சௌந்தரா கைலாசம்

## ஐந்தெழுத்து மந்திரம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாம நமச்சி வாயவே.

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயினு ருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரதன் நாம நமச்சி வாயவே!

—ஞானசம்பந்தர்

1. தேவாரம். 3 : 49 : 1, 6.

# அணிந்துரை

பேராசிரியர் டாக்டர் இரா. சாரங்கபாணி
எம். ஏ; எம். லிட்., பிஎச். டி.
(முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
அழகப்பா கல்லூரி, காரைக்குடி;
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.)

**பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்** *அவர்கள் காரைக்குடி அழகப்பச் செட்டியார் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராய் இருந்தகாலை, எனக்கு அவர்களோடு கலந்து பழகும் வாய்ப்புக் கிடைத்தது. எனக்கு வாய்த்த உளங்கலந்து பழகும் பண்புடையார் சிலருள் பேராசிரியரும் ஒருவராவர். அவர்தம் கேண்மையினால்,*

**நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
**பண்புடை யாளர் தொடர்பு** (குறள்—783)

*என்னும் அருங் குறளின் செஞ்சொற் பொருளைத் தெளிவாக உணர்ந்தேன். இவ்விழுமிய பண்பினைத் திருமுறைச் செல்வர், பேராசிரியர்* **க. வெள்ளைவாரணனார்** *தாம் நல்கிய நாவுக்கரசர் நூலின் சிறப்புப் பாயிர மலரில்,*

**" செயிர்தீர் நட்பால் அன்பரொடு**
**சேர்ந்து பழகும் தெளிவுடையான்;**
**மயர்வில் மனத்தான் மதிநலத்தால்**
**மக்கள் சுற்றம் மகிழ்கூரத்**
**துயர்தீர்ந் துலகம் வாழச்செய்**
**தூயோன் நேயம் மிக்குடையான்."**

*எனப் பாரித்துப் பாராட்டியுள்ளார்.*

ஞா. II

முதலில் அறிவியல் துறையில் பட்டம் எய்திப் பின்னர்ப் புலவர், எம். ஏ. முதலிய தமிழ்ப் பட்டங்களைப் பெற்ற பேராசிரியர்க்கு அறிவியல் நூல்கள் பல படைத்து அவற்று வழியே தமிழ்க் கல்வியை யாண்டும் பரப்பவேண்டும் என்னும் வேணவா மனத்துட் பதிந்து கிடந்தது. அதன் பயனாக அணுவின் ஆக்கம், அம்புலிப் பயணம், அறிவியல் விருந்து, இல்லற நெறி, வாழையடி வாழை, இளைஞர் வானொலி, இளைஞர் தொலைக்காட்சி முதலிய பல நூல்கள் மலர்ந்தன. இவற்றுட் சில தமிழக அரசும் பல்கலைக் கழகமும் வழங்கிய பரிசுகளைப் பெற்றன. ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றியதன் விளைவாகத் தமிழுலகிற்குத் தமிழ் பயிற்று முறை, கவிதை பயிற்று முறை, அறிவியல் பயிற்று முறை, கல்வி உளவியல் கோட்பாடுகள் முதலிய அரும் பெறல் நூல்கள் கிடைத்தன. திறனாய்வு, இலக்கியம், சமயம், வரலாறு முதலிய பல துறைகளிலும் எண்ணற்ற நூல்களைப் படைக்கும் வித்தகம் கண்டு தவத்திரு குன்றக்குடி அடிகளார் அருங்கலைக் கோன் என்னும் பட்டமளித்துச் சிறப்பித்தார்கள். மடியை மடிவித்து 'வினையே ஆடவர்க்கு உயிரே' என்னும் பெருநெறி பிடித்தொழுகும் பேராசிரியர் இடையறாது எழுதிக் கொண்டே இருக்கும் இயல்பினர்.

> உண்ணா நாள்பசி யாவதொன் றில்லை
> ஓவா தேநமோ நாரணா என்று
> எண்ணா நாளும் இருக்கெசுச் சாம
> வேத நாண்மலர் கொண்டுன பாதம்
> நண்ணா நாள்அவை தத்துறு மாகில்
> அன்றெ னக்கவை பட்டினி நாளே.
>
> —பெரியாழ். திரு. 3. 1:6

எனப் பெரியாழ்வார் பணித்தாங்கு, எழுதாத நாளெல்லாம் அவர்களுக்குப் பட்டினி நாளாகும். எழுபான் ஆண்டுகளை எட்டிப்பிடிக்க இருக்கும் பேராசிரியர் தம் வயதுக்கு

மேற்பட்ட நூல்களை இயற்றியவராவர். தம் பருவ நிலைக்குப் பாங்காக இப்பொழுது பத்திப் பனுவல்களாய தேவார திருவாசகங்கள், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ஆகியவற்றில் ஆழங்காற்பட்டு 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் பெருநோக்கோடு திருத்தலப் பயண நூல்கள் எழுதி வருகின்றார்கள். தம்பிரான் தோழர், நாவுக்கரசர் என்னும் படைப்புகளைத் தொடர்ந்து இப்பொழுது 'ஞானசம்பந்தர் என்னும் அரியநூல் வருகின்றது.

**வல்லார் பிறப்பறுப்பர் வண்மைநலங் கல்வி**
**நல்லா தரவின்ப ஞானங்கள்—எல்லாம்**
**திருஞான சம்பந்தன் சேவடியே என்னும்**
**ஒருஞான சம்பந்த முற்று.**

என்று ஓதாது ஞானமெலாம் உணர்ந்த முத்தமிழ் விரகராய திருஞானசம்பந்தப் பிள்ளையாரைச் சிவப்பிரகாச சுவாமிகள் ஈடுபாட்டுடன் ஏத்திப் போற்றுவர். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் சமண பௌத்த சமயங்கள் பரவிச் செழித்திருந்தமையால் சமய குரவர்கள் அவற்றோடு போராட வேண்டியநிலை இருந்தது. அப்பொழுது நாடாண்ட வேந்தர்களும் பர சமய வளர்ச்சிக்குக் கைகொடுத்துதவினர். வேத நெறியும் சைவத் துறையும் செழித்து வளராமல் நலிவுற்று மெலிவெய்திய காலம் அது. அக்காலத்தில் சிவபாத இருதயரும் அவர்தம் வாழ்க்கைத் துணைவியாரம் பகவதியாரும் தம் சமயம் பொலிவு பெறாமல் தளர்ச்சியுறுவது கண்டு, உளம் வருந்தி தம் சமயம் வளர்ந்தோங்கவும் பரசமயம் பாழ்படவும் மகப்பேறு வேண்டிக் கண்ணுதற் பெருங் கடவுளை நோக்கிப் பாடு கிடந்தனர். அப்பெருமானின் தண்ணருளால் அவ்விருவர்க்கும் மகவாக ஆளுடைய பிள்ளையார் திருவவதாரம் செய்தார். தம் மூன்றாம் வயதில் உமையம்மையார் பாலடிசிலைப் பொன்வள்ளத்து ஊட்ட உண்டு, பிள்ளையார் சிவஞானசம்பந்தராயினார். இந்

நிலையில் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம், பவமதனை அறம் ஆக்கும் பாங்கினில் ஓங்கிய ஞானம், உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம் ஆகியவற்றைப் பிறர் துணையின்றித் தாமே உணர்ந்தார். 'யார் அளித்த பாலடிசில் உண்டாய்' என வெகுண்டு வினவிய தந்தையாரிடம் பிள்ளையார் 'தோடுடைய செவியன்' எனத்தொடங்கும் பதிகப் பாடல்களால் விடையிறுத்தார். இச்செயலைக் கண்டு வியந்த தந்தையாரும் பிறரும் ஞானக்கன்றை ஏத்திப் புகழ்ந்தனர். அதுமுதல் ஞானசம்பந்தர் பல திருப்பதிகளுக்கும் சென்று இசையுடன் இறைவன் புகழ்பாடி இறைஞ்சி வருவாராயினார்.

திருக்கோலக்காவில் எழுந்தருளிய ஈசனைக் கைம்மலர்களால் தாளமிட்டுப் பாடிய காலை, சிறிய பெருந்தகையாரின்மீது அருள்சுரந்து ஐந்தெழுத்து எழுதப் பெற்ற இருபொற்றாளங்களை புகலிப்பெருமான் வழங்கியருளினார். பின்னர்த் தில்லை முதலிய திருப்பதிகளை வழிபட்டுத் திருநெல்வாயில் அரத்துறையை எய்தினார். அக்காலை அப்பதியுறை ஈசனின் இன்னருளால் முத்துச் சிவிகை, குடை, சின்னம் ஆகியவை கிடைக்கப் பெற்றார். பின் மழநாட்டிலுள்ள திருப்பாச்சிலாச்சிரமம் சென்று அவ்விறைவனை வழிபட்டுக் கொல்லி மழவன் மகளின் முயலகன் என்னும் நோயைப் போக்கினார். அடுத்துத் திருச்செங்குன்றூரில் பனிநோயால் வாடிய மக்களின் வாட்டம் கண்டு அவ்வூர்ப் பெருமான் திருவடி போற்றி அவர்தம் துயர்துடைத்தார். பின்னர்ப் பாண்டிக் கொடுமுடி முதலிய பதிகளைப் பாடிப் பட்டீச்சுரம் வந்தெய்தியபோது அவருக்கு முதுவேனில் வெப்பம் நீங்க முக்கண்ணனார் அளித்த முத்துப்பந்தர் கிடைத்தது. பின் திருவாவடுதுறைப் பெம்மானைப் பாடித் தன் தந்தையார் வேள்வி செய்வதற்காகப் பொற்கிழி பெற்றார். திருமருகல் என்னும் பதியை வந்தெய்தியபோது தன் மாமன் மகன் பாம்பு தீண்டப்பெற்று இறந்ததனால் உழந்த வணிக

மகளின் இன்னல் தீர்க்க அப்பதியிறைவனைப்பாடி மாய்ந்த அவ்வணிகனை உயிர்பெறச் செய்தார். திருவீழிமிழலையில் பஞ்சத்தைப் போக்க இறைவனிடம் படிக்காசு பெற்றார். திருமறைக் காட்டில் மறைக் கதவு அடைக்கப் பாடினார். பின் மதுரையம்பதி ஏகி ஆலவாய் இறைவனை இறைஞ்சிச் சமணர்களை அனல்வாதம் புனல் வாதங்களில் வென்றார். வெப்பு நோயால் துன்புற்ற கூன்பாண்டியனைத் திருநீற்றுப் பதிகம் பாடி உய்யச் செய்தார். கொள்ளம்பூதூரில் ஓடத்தைக் கட்டவிழ்த்து அதன்கண் அடியார்களை ஏற்றிக் கொண்டு திருப்பதிகம் பாடிக் கரை கடந்தார். போதிமங்கையில் புத்தர்களை வாதில் வென்றார். திருவோத்தூரில் ஆண் பனைகளைப் பெண் பனைகளாக மாற்றினார். காஞ்சி, காளத்தி முதலிய தலங்களை வணங்கிப் பின் மயிலை சென்று அங்கு எலும்பைப் பெண்ணாக்கினார். திருமணக்கோலத்தோடு நல்லூர்ப் பெருமணக் கோயிலை எய்தி அங்குத் தோன்றிய பேரொளியில் அன்பர்கள் அனைவருடனும் இரண்டறக் கலந்தார். இவையே சம்பந்தப் பெருமான் வாழ்க்கையின் சிறப்புக் கூறுகளாகும்.

ஞானசம்பந்தரின் வாழ்க்கை வரலாற்றைப் பதினாறு இயல்களாகப் பகுத்துக் கொண்டு பேராசிரியர் சுப்பு ரெட்டியார் அவர்கள் நயம்பட விளக்கிக் காட்டுவர். முதலியல் ஆளுடைய பிள்ளையாரின் பிறப்பும் வளர்ப்பும் பற்றிக் கூறுகிறது. அடுத்தது அவர் தம் கன்னித் திருத்தலப் பயணத்தைக் கட்டுரைக்கும். பின் சோழ நாட்டுத் திருத்தலப் பெரும் பயணம் 5, 7, 12 ஆம் இயல்களிலும், கொங்குநாட்டுத் தலவழிபாடு 6ஆம் இயலிலும், பாண்டி நாட்டுத் திருத்தல வழிபாடு 11ஆம் இயலிலும், நடுநாட்டுத் தலவழிபாடு 13ஆம் இயலிலும், தொண்டை நாட்டுத் தலப் பயணம் 14ஆம் இயலிலும், விரிவாகப் பேசப்படுகின்றன. ஞானசம்பந்தர் தம் தலப்பயணங்களில் திருநீலகண்ட யாழ்ப்பாணருடன் சென்று பாடியிறைஞ்சிய நிகழ்ச்சிகளை

3ஆம் இயலிலும், அப்பர் பெருமானுடன் வழிபட்ட நிகழ்ச்சிகளை 8ஆம் இயலிலும், விரித்துரைப்பர். கழுமல நிகழ்ச்சிகளை 4ஆம் இயலிலும், வீழிமிழலை நிகழ்ச்சிகளை 9ஆம் இயலிலும், மதுரை மாநகர அற்புதங்களை 10ஆம் இயலிலும் குறிப்பிடுவர். பெருமண நல்லூரில் திருமணம் செய்து கொண்டு பேரொளியிற் கலந்து வீடுபேறு எய்திய செய்தியை 15ஆம் இயலிற்கூறி இறுதியாக அமைந்த 16ஆம் இயலில் ஞானசம்பந்தர் அருளிய தேவாரப்பாடல்கள் குறித்து 'அருளிச் செயல்கள்' என்னும் தலைப்பில் விளக்குவர்.

திருஞானசம்பந்தர் அருளிய தேவாரப்பாக்கள் சேக்கிழார் பெருமான் அருளிய பெரியபுராணம் முதலிய வற்றைத் துணையாகக் கொண்டு ஆளுடைய பிள்ளையாரின் வரலாற்றினை எளிய இனிய நடையில் பேராசிரியர் தொடர்புபடுத்தி எடுத்துக் காட்டுவர். தலப்பயணத்தைக் குறிப்பிடும்போது அவ்வத்தலத்தில் பாடியருளிய சில இனிய பாசுரங்களைத் தேர்ந்தெடுத்துக் காட்டுவர். ஆதலால் இந்நூல் வரலாறு அறிவதற்கு மட்டும் துணையாகாமல் தேவாரப் பாக்களை அறிந்துகொள் வதற்கும் துணையாகின்றது. சில தேவாரப் பாடல்களுக்குச் சேக்கிழார் தரும் விளக்கங்களை ஆங்காங்கே பேராசிரியர் இயைத்துக் காட்டுவது படிப்போருக்கு நல்விருந்தாக அமைகின்றது.

'அமணரிட்ட தீத்தழல் போய்ப் பையவே சென்று பாண்டியற்காகவே' எனத் திருஞானசம்பந்தர் பணித்தார். 'பையவே சென்று' எனக் கூறுவதன் நோக்கமறிந்து சேக்கிழார் ஒரு பாடலில் விளக்கம் அளிக்கின்றார்.

> பாண்டிமா தேவியார் தமது பொற்பிற்
> பயிலுநெடு மங்கலநாண் பாதுகாத்தும்
> ஆண்டகையார் குலச்சிறையார் அன்பினாலும்
> அரசன்பால் அபராதம் உறுதலாலும்

மீண்டுசிவ நெறியடையும் விதியினாலும்
வெண்ணீறு வெப்பகலப் புகலி வேந்தர்
தீண்டியிடப் பேறுடையன் ஆதலாலும்
தீப்பிணியைப் 'பையவே செல்க' என்றார்.
—திருஞான. புரா: 705.

என்ற இப்பாடலைத் தழுவிப் பாண்டிமா தேவியின் மங்கல நாணைப் பாதுகாத்தற் பொருட்டும், அமைச்சர் குலச்சிறையார் மன்னன்பால் வைத்த அன்பினைக் கருதியும், பாண்டியன்பால் அபராதம் உறுதலை எண்ணியும், அவன் திரும்பவும் சிவநெறியில் சேர்தற்குரிய நற்பேற்றினை நினைந்தும் பிள்ளையார் தீப்பிணியினைப் 'பையவே செல்க' எனப் பணித்தருளினதாகக் கூறுவர் சேக்கிழார் பெருமான் எனப் பேராசிரியர் எடுத்துக் காட்டுவது நயமுடைத்து (பக். 208).

நனிபள்ளியைப் பாடிய பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் முதலிரண்டடி பாலைப் புனைவாகவும் பின்னிரண்டடி நெய்தலும் மருதமும் கலந்த புனைவாகவும் உள்ளன. பாலையாக இருந்த நனிபள்ளி என்னும் பதி பதிகம் பாடியபின் வளமுடையதாக மாறியது என்பதற்குப் பல இலக்கியச் சான்றுகள் உள்ளன. எனினும், இந் நிகழ்ச்சியைச் சேக்கிழார் பெருமான் குறிப்பிடவில்லை என்று பேராசிரியர் எடுத்துக் காட்டுவது அவர்தம் இலக்கிய ஒப்பு நோக்குக்குச் சிறந்த சான்றாகும்.

பேராசிரியர் திருமாலிடமும் ஈடுபாடுடையவராதலின் நாயன்மார்களின் வரலாறு கூறும்போதும் திருமாலைப் பற்றிய கருத்துக்களைத் தொடர்புபடுத்திக் காட்டுவர்.

ஞானசம்பந்தரது தந்தையார் சிவபெருமானது திருவடியை நினைந்து போற்றும் தவப்பெருஞ் செல்வ ராதலின் சிவபாத இருதயர் என வழங்கப்பட்டார் என்று கூறும்போது அடிக்குறிப்பில் பெரியாழ்வார் திருமாலையே

சித்தத்தில் கொண்ட காரணத்தால் விஷ்ணுசித்தர் என்று பெயர் பெற்றார் என்ற செய்தியையும் தொடர்பு படுத்துவர் (பக்.1). சிதம்பரத்தைச் சைவர்கள் கோயில் என்று வழங்குவதைச் சுட்டும்போது வைணவர்கள் திருவரங்கத்தைக் கோயில் என்று வழங்குவது போல என்று காட்டுவர் (பக். 31). சிவபெருமான் நந்தன் தன்னைச் சேவிப்பதற்கு நந்தியை விலகச் சொன்னதற்குத் தென் திருப்பேரைநகரில் பெருமாள், பிள்ளைகள் விளையாட்டைக் காண்பதற்குக் கருடனை விலகச் சொன்னதை ஒப்பிடுவர் (பக் 77). சம்பந்தர் பல பதிகளையும் வணங்கித் தில்லைக் கூத்தரிடம் வந்து சேர்ந்ததைச் சொல்லும்போது 'எங்கும் சுற்றி அரங்கனைச் சேர்ந்தது போல' என்பர் (பக்.303). சண்பைவேந்தர் 'எனதுரை தனதுரையாக நீறணிந்து ஏறுகந்தேறிய நிமலன்' என்று பாடிய அடிகளுக்கு ஒப்புமையாக 'என்னைத் தன்னாக்கி, என்னால் தன்னை இன்தமிழ் பாடிய ஈசனை' (திருவாய் 7. 9:1) என்றும்,

" என்சொல்லால் யான்சொன்ன
இன்கவி என்பித்துத்
தன்சொல்லால் தான்தன்னை
கீர்த்தித்த மாயன்." (ஷ் 7. 9:2)

என்றும் நம்மாழ்வார் அருளியதைக் காட்டுவர். (பக். 326)

ஞானசம்பந்தர் தேவாரத்தில் வரும் செய்திகளைப் பிறர் பாடிய தேவாரப் பாடல்கொண்டு வலியுறுத்துவது பேராசிரியரின் ஆழ்ந்தகன்ற புலமையினைக் காட்டும். திருக்கோலக்காவில் புகலிப் பிள்ளையார் பொற்றாளம் பெற்ற செய்தியை,

" நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும்
ஞானசம்பந் தனுக்கு உலகவர்முன்
தாளம்ஈந் தவன்பாடலுக் கிரங்கும்
. தன்மையாளனை." (7. 62: 8)

என்னும் நம்பியாரூரரின் பாடலால் வலியுறுத்துவர்.

திருவாவடுதுறை இறைவனை வேண்டித் தம் தந்தையார் வேள்வி செய்வதற்காகப் பொற்கிழியினைச் சம்பந்தர் பெற்ற செய்தியினை,

காயிரும் பொழில்கள் சூழ்ந்த
கழுமல வூரர்க் கம்பொன்
ஆயிரம் கொடுப்பர் போலும்
ஆவடு துறைய னாரே (4. 56: 1)

என்னும் திருநாவுக்கரசரின் பாடல்கொண்டு தெளிவு படுத்துவர்.

திருநீலகண்ட யாழ்ப்பாணருடன் சம்பந்தர் திருவெருக்கத்தம்புலியூரை அடைந்தபோது 'இப்பதி அடியனேன் பதி' எனப் பாணர் கூறக் காழிப்பெருந்தகை, 'ஐயர் நீர் அவதரித்திட்ட இப்பதி அளவில் மாதவம் முன் செய்தது' எனச் சிறப்பித்துரைத்தார். இந்கழ்ச்சியைச் சுட்டும்போது கண்ணன் தூது சென்ற ஞான்று, தன் மனைக்கு வந்ததும் விதுரன் 'நீ எய்தற்கு என்ன மாதவம் செய்தது இச்சிறு குடில்' என்று இயம்பியதை ஒப்பிட்டுக் காட்டுதல் நயமுடைத்து (பக். 35). நல்லூர்ப் பெருமணத்தில் திருஞான சம்பந்தருடன் அன்பர்களெல்லாம் பேரொளியிற்கலந்து வீடுபேறுற்ற செய்தியை உரைக்கும்போது,

கொள்ளை கொள்ள வீடுதவிக்
கூற்றைப் பிடர்பிடித்துத்
தள்ளும் திருஞான சம்பந்தா

என்னும் சிவப்பிரகாச சுவாமிகளின் நால்வர் நான்மணி மாலைப் பகுதியைப் பொருத்திக்காட்டுவது இன்பந் தருவதாகும் (பக். 314).

நாயன்மார்களின் செயல்களை விளக்கும்போது உலகியல் நிகழ்ச்சிகளைப் பொருத்திக் காட்டுவது சுவை பயக்கின்றது. திருநாவுக்கரசர் தம்மைக் காணும் பொருட்டுக் காழிப்பதியின் எல்லையில் வந்தணைந்தார்

என்பதைப் பிள்ளையார் அடியார்கள்மூலம் கேள்விப் படுகின்றார். இதனை உணர்த்த அமைச்சர் முதலியோர் வருகையைச் சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சித் தொண்டர்கள் மூலம் அறிவதை எடுத்துக்காட்டுகின்றார் (பக். 59). பாண்டிய அரசன் சமண சமயத்தைச் சார்ந்த தால் அந்நாட்டுக் குடிமக்களும் அச்சமயத்தை மேற்கொள் கின்றனர். 'அரசன் எவ்வழியோ குடிமக்களும் அவ்வழி தானே நடப்பார்கள். இன்றைய கட்சி அரசியலிலும் இதைத்தானே நாம் காண்கின்றோம்? சனநாயக ஆட்சியில் பொதுமக்களில் சிலர் ஆட்சியாளர்களின் பாட்டுக்குத் தாளம் போட்டு அல்லது அதற்குத்தகச் சீறியாழை வாசித்துப் பல சலுகைகளையும் பதவிகளையும் பெறுவது நமக்குத் தெரியும் அன்றாட நிகழ்ச்சிகள் அன்றோ?' என விளக்குவர்.

கவுணியப்பப் பிள்ளையார் தேவர்க்கும் முனிவர்க்கும் கிடைத்தற்கரிய சிவஞானம் பெற்றமையால் திருஞான சம்பந்தர் எனப் போற்றப்பெறுகின்றார் என்று குறிப்பிட்ட பின்னர், அடிக்குறிப்பில் 'சிவஞானம் — பதிஞானம். பதிஞானத்திற்குத் தான் பதிப் பொருள் இனிது விளங்கும். பதிஞானத்தால் இறைவனை அறிதலையே சைவ சமய ஆச்சாரியர்கள் அருட்கண்ணால் காணுதல் என்று கூறுவர். இந்த ஞானம் பசுஞானம், பாசஞானம் இரண்டிலும் வேறுபட்டது; உயர்ந்தது' எனச் சிவஞானத்திற்கு விளக்கந் தருவது பேராசிரியரின் சமயப் புலமையைக் காட்ட வல்லதாம். (பக். 6).

கோளும் நாளும் தீயவேனும் இறைவனடியார்களுக்கு அவை நல்லவே என்று 'வேயுறு தோளிபங்கன்' எனத் தொடங்கும் பாடல் வாயிலாக உணர்த்திவிட்டுக் காழிப் பிள்ளையார் மதுரை புறப்படுகிறார். சமணர் செய்த தீமைகள் அவரைத் துன்புறுத்தவில்லை என்ற செய்தியைத் தெரிவித்தபின் பேராசிரியர் 'நம் வாழ்க்கையில் நாளும்

கோளும் நன்னிலையில் இல்லை என்பதை அறிய நேரும் போது இப்பதிகத்தைக் காலையிலும் மாலையிலும் ஓதி உளங்கரைதல் நன்று என்பது என் அநுபவம்' என்று குறிப்பிடுகின்றார். பிறிதோரிடத்தில் பிள்ளையார்க்குப் பிற காப்புகள் மிகை எனக் கருதித் திருநீற்றுக் காப்பினையே அவர்தம் திருநெற்றியில் அணிகின்றனர் என உரைத்த பின் பிற்காலத்தில் பாண்டியம்பதியில் 'மந்திரமாவது நீறு' என்று தொடங்கித் 'திருநீற்றுப் பதிகம் பாடித் திருநீற்றின் பெருமையைக் கட்புலனாகக் காட்டப் போகின்றார் அல்லவா?' என்று இச்செய்தியை இயைபு படுத்திக் காட்டுவர். மேலும் சொந்த வாழ்க்கையில் தமக்கு நேர்ந்த நிகழ்ச்சியை — 'மஞ்சட் காமாலையால் தாக்கப் பெற்று நாடியிறங்கி இறைவன் திருவடி நீழலை அடையும் நிலையில் இருந்த அடியேன் திருநீற்றுப் பதிகம் ஓதித் திருநீற்றினை நெற்றியிலும் உடலிலும் அணிந்து பிழைத்து இன்றும் தமிழ்த் தொண்டும் சிவத் தொண்டும் செய்து வருவதை நினைவு கூர்கிறேன்' — என்று கூறித் திருநீற்றின் பெருமையைப் புலப்படுத்துவர். இச் சொந்த அநுபவங்கள் அன்பர்களுக்குச் சிவநம்பிக்கை ஊட்டத் துணை புரியும்.

ஞானசம்பந்தர் வழிபட்ட பதிகளைக் கூறுமிடத்து அவற்றின் பெயர்க் காரணங்களையும் பேராசிரியர் விளக்கிச் செல்வர். தலைச் சங்கையைச் சம்பந்தர் பாடி இறைஞ்சினார் என்று கூறுமிடத்து அப்பதியின் பெயர்க் காரணம் விளக்கப்பட்டுள்ளது. சிறந்த சங்குகள் விற்பனை செய்யப்பெற்றதால் தலைச்சங்கம் என்று வழங்கினர். இவ்விடத்தைச் சுற்றிப் புரச (பலாச)மரக் காடாக இருந்தமையால் இவ்விடத்தைக் காடு என்றும் வழங்கினர். நாளடைவில் இவ்விரண்டு பெயர்களும் சேர்ந்து தலைச் சங்கக்காடு என்ற திருப்பெயராக வழங்கலாயிற்று. மக்கள் வாக்கில் இத்திருப்பெயர் மருவித் தலைச்சங்காடு என்ற பெருவழக்குப் பெறலாயிற்று (பக். 19). சத்தி முற்றம் (சத்தி முத்தம்) சத்தி சிவத்தை முத்தமிட்ட தலம்

(பக். 119), மருகல் (திருமருகல்) மருகல் என்பது வாழை; வாழை தல விருட்சமாதலால் அப்பெயர் பெற்றது (பக். 150), ஏடகம் (திருவேடகம்) ஏடு தங்கிய இடம் ஏடகம் ஆயிற்றுப் போலும் (பக். 221) இவ்வாறு பெயர் விளக்கங்களைப் பலவிடத்தும் காணலாம். இப்பொழுது பெயர் மாறியிருக்கும் தலப் பெயர்களை நாம் அறிந்து கொள்வதற்குத் துணையாகப் பழைய பெயருக்குப் பக்கத்தில் அடைப்புக் குறிக்குள் மாறிய பெயரையும் பேராசிரியர் குறித்துச் செல்கின்றார். மயேந்திரப்பள்ளி (கோயிலடிப் பாளையம்) கலிக்காமூர் (அன்னப்பன் பேட்டை) குருகாவூர் (திருக்கடவூர்) எருக்கத்தம் புலியூர் (இராசேந்திரப்பட்டினம்) முதுகுன்றம் (விருத்தாசலம்) நணா (பவானி), கோளிலி (திருக்குவளை) கானப்பேர் (காளையார் கோயில்) தினைநகர் (தீர்த்தகிரி) சோபுரம் (தியாகவல்லி) மயிலை (மயிலாப்பூர்) என்பன சில காட்டுகள். முன்னிருந்த பதி மாற்றியமைக்கப்பட்டிருந்தால் அதனையும் சுட்டிச் செல்வர், 'கழிப்பாலை என்னும் பழைய தலம் கொள்ளிடநதி வெள்ளத்தில் போயிற்று. இப்பொழுதுள்ள கோயில் நெல்வாயில் அரத்துறையாகிய சிவபுரியில் ஒரு தனிக் கோயிலாக உள்ளது' (பக். 33). ஊர்பற்றிய பல செய்திகளையும் தொகுத்துக் கூறியிருப்பது நூலைப் படிப்போர்க்குத் தலப் பயணம் செய்யும்போது பெரிதும் உதவியாயிருக்கும். 'பெண்ணாகடம்; விழுப்புரம் — திருச்சி இருப்பூர்தி வழியிலுள்ள பெண்ணாகடம் என்ற நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவு. தலப் பெயர் சுருக்கமாகக் கடந்தை என்றும், ஆலயப் பெயர் தூங்கானை மாடம் என்றும் வழங்கும். கலிக்கம்ப நாயனார் தலம். அப்பர் பெருமான் தம்மைச் சிவன் சொத்து என்று உலகறியச் சூலக் குறியும் இடபக் குறியும் தமது தூல உடலில் பொறிக்கும்படி வேண்டி அவ்வாறே பெற்ற அற்புதத் தலம். அச்சுத களப்பாளர் என்ற வேளாளர் திருவெண்காட்டு முக்குள நீராடி வழிபட்டு மெய்கண்டார் என்ற புதல்வரைப்

பெற்ற தலம். மெய்கண்டார் சிவஞானபோதம் அருளிச் செய்து திருக்கயிலாய பரம்பரையைத் தாபித்த சந்தான முதற்குரவர்' இங்ஙனம் பதிகளைப் பற்றிய பல்வேறு செய்திகளைப் பேராசிரியர் அரிதின் முயன்று தொகுத்துத் தந்திருப்பது அன்பர்கள் அவற்றை எளிதில் உணர வழி வகுத்துள்ளது.

ஞானசம்பந்தர் அருளிச் செயல்களின் யாப்புப் பற்றிப் பேராசிரியர் விரிவாக ஆராய்ந்துள்ளார். 'யாப்பின் வகைகளை மொழி மாற்று, மாலை மாற்று, வழிமொழி, மடக்கு, இயமகம், ஏகபாதம், இருக்குக்குறள், எழுகூற்றிருக்கை ஈரடி, ஈரடி வைப்பு, நாலடிமேல் ஈரடி வைப்பு, முடுகியலாகிய திருவிராகம், சக்கரமாற்று, கோமூத்திரி, கூடற்சதுக்கம் முதலியனவாகும்' எனக் குறிப்பிட்டு விட்டு அவற்றை 56—72 பக்கங்களில் விளக்கியுள்ளார். யாழ்முரியின் இலக்கணத்தைத் தெளிவுபடுத்தியுள்ளார் (பக். 144). இவை பேராசிரியரின் யாப்பு, இசை ஆகியவை குறித்த புலமையைத் தெள்ளிதிற் காட்டவல்லன.

ஞானசம்பந்தர் பாசுரங்களில் கற்பனை வளத்தையும் காணலாம். அப்பாடல்கள் எல்லாம் தொகுத்துத் தரப்படவில்லையெனினும் பேராசிரியர் காட்டிய பாடல்களில் அவை இடம் பெற்றுள்ளன. சான்றாகத் திருவையாற்றுப் பதிகப் பாடலைக் காணலாம்.

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
　　யறிவழிந் திட்டைமே லுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்
　　றருள்செய்வான் அமருங் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
　　முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி
　　முகில்பார்க்கும் திருவை யாறே. (1.130:1)

இப்பாடலின்கீழ் 'பலமுறை படித்து — இல்லை பாடி — அநுபவித்து இதிலுள்ள இயற்கைக் காட்சிகளை மனத் திரையில் அமைத்து ஆனந்தம் அடையவேண்டும்' என்று குறித்துள்ளார். தேவாரப் பாடல்கள் கற்பனை வளமும் பொருட் செறிவும் பத்திமையும் நிறைந்தவை. அவற்றைத் துய்த்து இன்புறுதல் கற்பவர் கடனாகும்.

'நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறை மொழிகளாய்' தேவாரப் பாக்களைச் சுவையுடன் எடுத்துரைத்து நாயன்மார்கள் வழிபாடு செய்த தலங்களுக்கு விளக்கங் கூறி அவர்தம் வரலாறுகளை எளிய இனிய நடையில் நூலாக்கித் தரும் பேராசிரியர் சுப்பு ரெட்டியாரின் தொண்டு பாராட்டுதற்குரியது. அவர்தம் பத்திப் பனுவல்களை மெய்யன்பர்கள் சுவைத்துப் பயன் கொள்வார்கள். நாவுக்கரசர், ஞானசம்பந்தர் என்னும் நூல்களைப்போல் நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் போன்ற நூல்களைப் படைத்து மேலும் தமிழ்ப்பணி செய்து உடல்நலத்துடன் எல்லா நலங்களும் பெற்று வாழிய பல்லாண்டு என அப் பெரியவரை வாழ்த்துகிறேன்.

'குறள் இல்லம்'
330, மாரியப்பா நகர்,
அண்ணாமலைநகர் அஞ்சல்
பின்கோடு-608 002
15-11-1986

இரா. சாரங்கபாணி

# நூல்முகம்

பரசமயக் கோளரியைப் பாலறா
　　வாயினைப்பூம் பழனம் சூழ்ந்த,
சிரபுரத்துத் திருஞான சம்பந்தப்
　　பெருமானைத் தேய மெல்லாம்,
குரவையிடத் தமிழ்வேதம் விரித்தருளும்
　　கவுணியர்தம் குலதீ பத்தை,
விரவியெமை யாளுடைய வென்றிமழ
　　விளங்களிற்றை விரும்பி வாழ்வாம்.[3]

— சிவஞான முனிவர்

'திருவருட் செல்வர்கள்' — என்ற வரிசையில் முதலாவதாக வர வேண்டிய நூல் மூன்றாவதாக வெளிவருகின்றது. 'தம்பிரான் தோழர்' என்ற நூலை எழுதி முடித்த உற்சாகத்தில் ஞானசம்பந்தப் பெருமானின் அருளிச் செயல்களில் ஆழங்கால் பட்டு அநுபவித்தேன். இவர்தம் தமிழ்ப் பாடல்கள் கட்டளை வகைகளாக அமைந்துள்ளன; இவை இசை நுணுக்கம் கொண்டவை. இவற்றில் நட்டபாடை (8 கட்டளைகள்), தக்க நாகம் (7 கட்டளைகள்), தக்கேசி (2 கட்டளைகள்), குறிஞ்சி (5 கட்டளைகள்), வியாழக் குறிஞ்சி (6 கட்டளைகள்) மேகராகக் குறிஞ்சி (4 யாப்பு விகற்பங்கள்) என்பவை முதல் திருமுறையிலும்; இந்தளம் (8 யாப்பு விகற்பங்கள்), சீகாமரம் (2 கட்டளைகள்), காந்தாரம் (9 யாப்பு விகற்பங்கள்), பியந்தைக் காந்தாரம் (3 கட்டளைகள்), நட்டராகம் (4 யாப்பு விகற்பங்கள்), செவ்வழி (ஒரே கட்டளை) என்ற ஆறு பண்கள் இரண்டாம் திருமுறையிலும்; காந்தார பஞ்சமம் (5 யாப்பு விகற்பங்

---

3. காஞ்சிப் புராணம்—பாயிரம்.

கள்), கொல்லி (4 கட்டளைகள்), கொல்லிக் கௌவாணம் (4 கட்டளைகள்), பஞ்சமம் (3யாப்பு வகைகள்), சாதாரி (5 யாப்பு விகற்பங்கள்), பழம்பஞ்சுரம் (5 யாப்பு வகைகள்)[4] புறநீர்மை (ஒரே கட்டளை), அந்தாளிக் குறிஞ்சி (ஒரே கட்டளை அமைப்பு) என்ற எட்டு பண்கள் மூன்றாம் திருமுறையிலும் அமைந்துள்ளன.[5] அதிகாலையில் (4 மணிக்கு) எழுந்து உலகம் முழுதும் உறங்கிய நிலையில் இருக்கும்போது இவர்தம் திருப்பாடல்களை வாய்விட்டுப் படித்தால் நம் ஒலியே நம் காதின்மூலம் சென்று நம் மனத்தை உருக்கும்; கண்ணீர் ஆறாகப் பெருகும். இதை அநுபவத்தில் கண்டு மகிழ்கின்றேன். உடனே இப் பெருமான்பற்றியும் நூல் எழுதத் துணிந்தேன். நூலும் ஞானசம்பந்தர் என்ற திருப்பெயருடன் மார்க்கண்டேயர் வயதைப் போல 16 இயல்களில் நிறைவு பெற்றது.

சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தில் காட்டியுள்ள வழியைக் கடைப்பிடித்துக் கொண்டு அவருடன் மேற்கொண்ட கற்பனைப் பயணத்தின் விளைவாக இந்நூல் உருவாகியது. இதற்குப் பேராசிரியர் க. வெள்ளைவாரணனாரின் பன்னிரு திருமுறை வரலாறு (இரண்டு பகுதிகள்) என்ற நூல் கைகொடுத்து உதவியது.

---

4. பழம்பஞ்சுரம் என்ற பண் திருமுறைகண்ட புராணத்தில் ஞானசம்பந்தர் தேவாரப் பதிகங்களுக்கு உரியதாகக் கூறப்பெறாமையால் இப்பண்ணுக்குரிய 100 முதல் 116 வரையுள்ள பதிகங்களையும் முன்னுள்ள 67 முதல் 99 வரையமைந்த பதிகங்களுடன் சேர்த்துச் சாதாரிப் பண்ணுக்கு உரியனவாகக் கொண்டு 'சாதாரிக்கு ஒன்பது' எனத் திருமுறைகண்ட புராணம் கூறியபடி 9 கட்டளைகளாக அடக்குவர் யாழ் நூலாசிரியர் (யாழ் நூல்—பக். 245-246).

5. பன்னிரு திருமுறை வரலாறு—பகுதி 1. பக். (354-391)இல் விவரம் காண்க.

இப்பெருமானின் வாழ்க்கை வரலாறு என்னைத் திகைக்க வைக்கின்றது; நெஞ்சை உருக்குகின்றது. இந்தப் பனுவலின் அடிக்குறிப்புகளில் சேவித்த தலங்கள் பற்றிய விவரங்களை யும் நூலில் அவர் பாடியுள்ள பதிகங்களின் ஒவ்வொரு பாடலையும் (பதிக, பாடல் எண்களுடன்) தந்துள்ளேன். மேலும் அறிய வேண்டுவோர் தேவார அடங்கன் முறையைப் படித்து அறிந்து கொள்ளலாம். இந்த நூலைத் துணை கொண்டு சம்பந்தப் பெருமான் வழிபட்ட திருத்தலங்களைச் சேவிக்கவும், அவர் பாடியுள்ள திருப்பதிகங்களை அநுபவித்து மகிழவும் இதனை வாய்ப்பாகவும் அமைத்துக் கொள்ளலாம். படிப்போரின் மனநிலை, பக்தியில் வளர்ச்சி, இறைவனிடம் ஈடுபாடு இவற்றிற்கேற்பச் "சிவாநுபவம்" பெறத் துணை செய்யும். இஃதெல்லாம் கை கூடுவதற்கு அவன் அருளாலே அவன்தாள் வணங்கும் பேறும் பெற்றாக வேண்டும்.

சீமானுக்கு அழகு செழுங்கிளை தாங்குதலாகும். இவ் வுலகில் ஒரே செல்வச்சீமானாக இருப்பவன் ஏழுமலையான்; 'அகலகில்லேன் இறையும்' என்று அவன் மார்பை விட்டு அகலாதிருக்கும் செல்வச் சீமாட்டியைத் தாங்கிக் கொண் டிருப்பவன். இந்நிலையில் நாடோறும் எண்ணற்ற பக்தர்கள் அவனுடைய கருவூலத்தை நிரப்பி வழியச் செய்து கொண்டுள்ளனர். ஆகவே, இந்த உறுபெறுஞ் செல்வத்தைச் செழுங்கிளையைச் சேர்ந்த பக்தர்கள் எழுதும் சமய வெளியீடுகளுக்கு வரையாது வழங்கும் நிதி உதவித் திட்டத்தில் இந்நூலும் நிதி உதவிபெற்று வெளிவருகின்றது. இந்த உதவி பெறாது போயின் 40 ஆண்டுகள் கல்வித் தொண்டாற்றி ஓய்வு ஊதியம் (Pension) கூட பெறாது தவிக்கும் அடியேனால் இந்த நூலை வெளியிட்டிருக்க முடியாது. இந்த வேங்கடத் தெம்மான் மேலும் வெளிவர இருக்கும் தாயுமான அடிகள், மாணிக்கவாசகர், வடலூர் வள்ளலார், பட்டினத்தடிகள், 'விட்டு சித்தன் விரித்த தமிழ்'

'சடகோபன் செந்தமிழ்' போன்ற பக்திப் பனுவல்கட்கும் உதவுவான் என்ற நம்பிக்கை என்பால் உண்டு. இவனது கருவியாக இயங்கிவரும் திருமலை—திருப்பதி தேவஸ்தானத்தாருக்கும், குறிப்பாகத் திரு. K. சுப்பாராவ், திரு. N. S. இராமமூர்த்தி ஆகிய இருவருக்கும் என் அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்நூலைச் செவ்விய முறையில் அழகுற அச்சிட்டு உதவிய கற்பகஅச்சக மேலாளர் திரு. க. நாராயணன் அவர்கட்கும் எழில் கொழிக்கும் முறையில் அட்டை ஓவியம் வரைதல், அச்சுக்கட்டை தயாரித்து மூவண்ணத்தில் அச்சிடும் வரையிலும் பொறுப்பேற்று உதவிய ஓவியமன்னர் திரு. P. N. ஆனந்தன் அவர்கட்கும், லாமினேஷன் போட்டு உதவிய மாருதிலாமினேஷன் உரிமையாளர் திரு. பார்த்திபன் அவர்கட்கும் இவ்வளவும் ஆனநிலையில் அழகிய முறையில் கட்டமைத்துக் கற்போர் கையில் கவினுறத் தவழச் செய்த திருநாவுக்கரசுக்கும் என் இதயம் கலந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றேன்.

இந்நூலுக்குச் சிறப்புப் பாயிரம் நல்கிய திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் மங்கையர்திலகம்; சிவன்பால் ஈடுபாடு மிக்கவர்கள். பிறந்த இடமும் பெரியது; புகுந்த இடமும் பெரியது. அண்மையில் சிவப்பேறு எய்திய ஜஸ்டிஸ் கைலாசத்தின் அருமைத் துணைவியார். வள்ளல் இரத்தின சபாபதி கவுண்டரின் (புதுப்பாளையம், திருச்செங்கோடு வட்டம், சேலம் மாவட்டம்) பேத்தி; செட்டிப்பாளையம் (கரூர்வட்டம்) சுந்தரக் கவுண்டரின் திருமகளார். ஒரு குடும்பம் சிறப்புடன் பொலிய 'பானை பிடித்தவள் பாக்கியம்' என்று சொல்லுவர்கள். ஜஸ்டிஸின் குடும்பம் சிறந்து விளங்குவதற்கு அம்மையார் காரணம் என்று சொல்லுவது பொருந்தும். செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சங்கள் கலந்த குடும்பம்; இக்குடும்பத்தில் அம்மையார் 'விழவு முதலாட்டி' (குறுந். 10) யாகத் திகழ்கின்றார்கள். புலமையில் சங்கப் பெண்பாற்

புலவர்களை யொத்தவர்கள்; பக்தியில் திலகவதியார், காரைக்காலம்மையார் இவர்களை நிகர்த்தவர்கள்.

நான்கு மக்கட்செல்வத்தைப் பெற்ற (மூவர் மகளிர்; ஒருவர் ஆண்) இப்பெருமாட்டி முருகனின் அடிமை என்று தம்மைக் கூறிக் கொள்வதில் பெருமை கொள்பவர்கள். இவர் இல்லமும் 'முருகன் அடி'. முருகன் தமிழ்க் கடவுள் அல்லவா? இவன் அருளால் அம்மையார் நாவில் நாவின் கிழத்தி தாண்டவமாடுகின்றாள்; கவிதை மழை பொழிகின்றாள். இவர்தம் எழுதுகோலும் கவிதை, கட்டுரை, கதை போன்ற படைப்பிலக்கியங்களை பிறப்பிக்கின்றன. இவருக்கு எழுதுகோலும் தெய்வம்; எழுத்தும் தெய்வம். பக்தி இலக்கியத்தில் ஈடுபாடு மிக்க இப்பெருமாட்டி இந்தியாவிலுள்ள பெரும்பாலான மூர்த்தி, தலம், தீர்த்தம் இவற்றை முறையாக வழிபட்ட பெரும்பேறு பெற்றவர்கள். கலைமகளும் திருமகளும் இவர் இல்லத்தில் இணைபிரியாது வாழ்கின்றனர். இத்தகை பேறுபெற்ற இந்தச் சீமாட்டி பல்வேறு இலக்கியக் கூட்டங்கள், கவியரங்கங்கள், கருத்தரங்குகள் இவற்றில் பெரும்பங்கு கொண்டு வருகின்றார். அலைகடலுக்கு அப்பால் இலங்கை, சிங்கப்பூர், மலேசியா போன்ற இடங்கட்குச் சென்று சொற்பொழிவு ஆற்றிய பெருமை இவருக்கு உண்டு. 2-வது 5-வது உலகத் தமிழ் மாநாட்டில் பங்கு கொண்டவர்.

சிவத் தொண்டு, கலைத் தொண்டுடன் பொதுத் தொண்டிலும் இப்பெருமாட்டிக்குப் பெரும்பங்கு உண்டு. சென்னை வானொலி ஆலோசனைக்குழு, இந்து அற நிலையக்குழு, தமிழ்நாடு சுற்றுலா நிறுவனக்குழு, சென்னை அண்ணாமலைப் பல்கலைக்கழக பேரவைகள் (Senate), போன்றவற்றில் உறுப்பினராக இருந்து பணியாற்றியவர். குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் 10-வது ஆண்டுவிழாக் குழுவின் தலைமைப் பொறுப்பும், இந்தச் சங்கத்தின் வெள்ளிவிழாக் குழுவின் தலைமைப் பொறுப்பும் இவருக்கு

இருந்தன. இங்ஙனம் தமிழ் ஆர்வம், பக்திச் செல்வம், தலவழிபாடு முதலியவற்றை நிறையப் பெற்றுள்ள ஔவைப் பாட்டி போன்ற இந்த மூதாட்டி இந்நூலுக்கு அன்புடன் 'சிறப்புப் பாயிர மாலை' வழங்கி வாழ்த்தியமைக்கு என் இதயம் கலந்த நன்றி என்றும் உரியது. இந்தப் பாமாலை பெற்ற இந்தப் பக்திப் பனுவல் பெறற்கரிய பேறு பெற்றது என்பது என் கருத்து.

இந்த நூலுக்கு அணிந்துரை நல்கிய டாக்டர் இரா. சாரங்கபாணி நான் காரைக்குடியில் இருந்த நாள் தொட்டே (1950 ஜூலை முதல்) நெருங்கிய பழக்கம் உடையவர். அப்போது அழகப்பா கல்லூரியில் தமிழ்த் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்தார். கடுமையான உழைப்பாளி. தமிழ் இலக்கியத்தை ஆராய்ச்சிக் கண் கொண்டு பயின்றவர்; ஆராய்ச்சியில் ஆழங்கால் பட்டவர். இவருடைய திருக்குறள்—உரைவேற்றுமை' இவருடைய ஆய்வுத் திறனுக்கு எடுத்துக்காட்டு. காரைக்குடியிலேயே டாக்டர் வ. சுப. மாணிக்கத்தின் கீழ் நீதி நூல் இலக்கியத்தில் ஆய்வு நடத்தி டாக்டர் பட்டம் பெற்றவர். டாக்டர் மாணிக்கம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்ற பிறகு இவரே தமிழ்த்துறைத் தலைவராகி துறையை நெறியுடன் நடத்தி நற்பேர் ஈட்டியவர். பலரை டாக்டர் பட்டத்திற்கு நெறிப்படுத்தி நடத்தியவர். இலக்கண ஆசிரியர்கள் குறிப்பிடும் நல்லாசானுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகத் திகழ்பவர். பல நல்ல மாணாக்கர்களை உருவாக்கியவர். பன்னூல்களின் ஆசிரியர். ஓய்வு பெறுவதற்கு ஓராண்டிற்கு முன்னர் இவரைத் தஞ்சைத் தமிழ்க்கழகம் அழைப்பு விடுத்து சில ஆண்டுகள் ஆய்வுத்துறைப் பேராசிரியராக நியமித்துப் பெருமைப் படுத்தியது. இத்தகைய நண்பர் இந்நூலுக்கு அணிந்துரை நல்கிச் சிறப்பித்தமைக்கு என் இதயம் கலந்த நன்றி என்றும் உரியது.

பெருவளநல்லூர் (திருச்சி மாவட்டம் இலால்குடி வட்டம்) திரு. P. B. K. இராஜா சிதம்பரம் அவர்களை அறியாதவர்கள் அரியர். நான் துறையூரில் பணியாற்றத் தொடங்கிய நாள்முதல் (ஜூன்-1941) இவரை நன்கு அறிவேன். என்னைவிட எட்டு ஆண்டு மூத்தவர். இவர்தம் பொதுத் தொண்டும் மனிதாபிமானமும் என்னைக் கவர்ந்தன. என் அளவில் அவற்றை நான் கடைப்பிடித்து வருகின்றேன். நான் அறியாக் காலத்தே தந்தையை இழந்தவன். அவர் பிறந்த ஐந்து நாட்களில் அன்னையை இழந்தவர். எனக்குத் தந்தையின் கடிந்துரை இல்லை; அவருக்கு அன்னையின் அன்பும் இல்லை; எம்முள் இது ஒருவித ஒற்றுமை, வேற்றுமை.

1908-ஆகஸ்டு 3ஆம் நாள் நாரணமங்கலத்தில் (பெரம்பலூர் வட்டம்) பிறந்த இப்பெருமகனார்க்கு மணக்காலில் தந்தை P. B. கிருஷ்ணசாமி ரெட்டியாரைப் பெற்ற பாட்டன் அரவணைப்பில் வளர்ந்து இலால்குடி உயர்நிலைப் பள்ளியில் கல்வி கற்று, திருச்சி பிஷப்ஹீபர், தேசியக் கல்லூரியில் உயர் கல்வி பெற்றார். பேராசிரியர் கார்டினர், பேராசிரியர் சாரநாதன் இவர்கள் அரவணைப்பில் வளர்ந்தது இவர்தம் நற்பேறு. திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரிடம் தமிழ் பயின்ற தால் இன்றளவும் அவரிடம் தமிழ்ப்பற்று காணமுடிகின்றது. பொதுவாக எல்லா ஆசிரியர்களிடமும் சிறப்பாகத் தமிழாசிரியர்களிடமும் குழைந்து பழகி வேண்டுவன நல்கி அவர்தம் உள்ளத்தைக் கவர்ந்தவர்.

திரு. P. B. K. இராஜாசிதம்பரம் சிறந்த தேசியவாதி; நாட்டுப் பற்றாளர். காந்திவழி ஒழுகும் நற்பண்பினர். இன்றளவும் கதருடையே அவர் திருமேனிக்குப் பொலிவு தருவதைக் காணலாம். செல்வச் செழிப்புள்ள குடும்பத்தில் பிறந்தவராயினும் எளிமையாக வாழ்பவர். சாதி சமய அரசியல் பற்றுகளைக் கடந்து மனிதநெறியில் வாழ்பவர்.

காங்கிரஸ் கட்சியினராக இருந்தாலும் குறுகிய கண்ணோட்டம் இன்றி எல்லாக் கட்சியினரிடமும் நன்கு பழகி அவர்கள் நட்பைப் பெற்றுத் திகழ்பவர்.

1949—1954இல் திருச்சி மாவட்டக் கழகத் தலைவராகவும், 1952—1957இல் சென்னை மாநில சட்டப்பேரவை உறுப்பினராகவும் இருந்து பணியாற்றிய காலத்தில் இவர் ஆற்றிய நற்பணிகள் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியவை. உயர்குலத்தில் (சாதியல்ல) பிறந்தவராதலால் 'குலத்தளவேயாகும் குணம்' என்ற முதுமொழிக்கு ஏற்பப் பரந்த நோக்கமும் மனிதாபிமானமும் கொண்டவராகத் திகழ்கின்றார். அருமை இராஜாஜியிடம் நெருங்கிப் பழகி அவர்தம் ஆசியைப் பெற்றவர். திரு. சி. சுப்பிரமணியம் இவருடைய நெருங்கிய நண்பர். மூதறிஞர் தி. மு. நாராயணசாமிப் பிள்ளை இவர் குடும்ப நண்பர்; வழிகாட்டி. சில குறுக்கு வழிகளைக் கையாள விரும்பாமையால் அமைச்சர் பதவி இவருக்கு வரவில்லை. எனினும் அமைச்சருக்குமேல் மதிப்புடன் திகழ்ந்தார். பொதுத் துறைகளில் பணியாற்றியபொழுது 'பண்புடையார் பட்டுண்டு உலகம்' 'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே!' என்ற ஆன்றோர் வாக்கிற்கு எடுத்துக்காட்டாக இருப்பவர். எவர்மாட்டும் புன்முறுவலுடன் இனிமையாகப் பேசுபவர். காண்டற்கெளியவர்; கடுஞ்சொல் அறியாதவர். நாட்டு நலனிலும் இளைஞர் கல்வியிலும் பேரூக்கம் காட்டுபவர். எந்தப் பணியை ஏற்றபோதிலும் அதைத் தெய்வப் பணியாக மனம் வாக்கு செயல் தூய்மையுடன் ஆற்றுபவர். இத்தகைய பெரியவர்பால் நான் கொண்டிருக்கும் அன்பிற்கும் மரியாதைக்கும் அறிகுறியாக 'ஞானசம்பந்தர்' என்னும் இந்நூலை இவருடைய 78-ஆவது ஆண்டின் நினைவாக இவருக்கு அன்புப் படையலாக்கிப் பெருமை கொள்கின்றேன். இப்பெருமகனார் ஆசியால் இந்நூல் பல இளம் உள்ளங்களில் பல நல்லெழுச்சிகளை

விளைவித்து ஞானக்கன்றின் அருளையும் கிட்டச் செய்யும் என்பது என் திடமான நம்பிக்கை.

இந்த நூலை யான் எழுதி வெளியிட என் இதய கமலத்தில் அந்தர்யாமியாக எழுந்தருளியிருக்கும் 'வேங்கடம் மாமலை மேய ஆயனை' மனம், மொழி, மெய்களால் வணங்கி வாழ்த்தி அடிமையாகின்றேன். மற்றும் காழி வேந்தரின் இணையடிகளையும் முடிமீது எழுந்தருளச் செய்கின்றேன்.

கடியவிழ் கடுக்கை வேணித்
  தாதைபோற் கனற்கண் மீனக்
கொடியனை வேவ நோக்கிக்
  குறையிரந் தனையாள் கற்பிற்
பிடியன நடையாள் வேண்டப்
  பின்னுயிர் அளித்துக் காத்த
முடியணி மாடக் காழி
  முனிவனை வணக்கம் செய்வாம்

—பரஞ்சோதி முனிவர்[6]

'வேங்கடம்'
AD-13 (பிளாட் - 3354
அண்ணாநகர்
சென்னை-600 040
நவம்பர் 24, 1986

ந. சுப்புரெட்டியார்
தொ. பே : 615583

---

6. திருவிளையாடற் புராணம் - பாயிரம் - 18.

## திருநீற்றின் பெருமை

மந்திர மாவது நீறு
    வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு
    துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு
    சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்
    திருஆல வாயான் திருநீறே

முத்தி தருவது நீறு
    முனிவர் அணிவது நீறு
சத்திய மாவது நீறு
    தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு
    பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு
    திருஆல வாயான் திருநீறே

—ஞானசம்பந்தர்

---

1. தேவாரம் 2. 66: 1, 3.

# பிழை—திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 4 | 15 | செங்கிரை | செங்கீரை |
| | 31 | வருவதைப் | வருவதை |
| 30 | 16 | பாரட்டுகின்றார் | பாராட்டுகின்றார் |
| 33 | 16 | வோயிமே | வோயுமே |
| 46 | 22 | மூலத்தான் | மூலத்தான |
| 51 | 4 | பக்கம் அடியிற்கண்ட பாடலைச் சேர்க்க. | |

வண்ணவர்கள் வெற்பரசு
பெற்றமகள் மெய்த்தேன்
பண்ணமரு மென்மொழியி
னாரைஅணை விப்பான்
எண்ணிவரு காமனுடல்
வேவளரி காலம்
கண்ணவ னிருப்பது
கருப்பறிய லூரே (6)

என்பது ஆறாவது வாடா நறுமலர்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 54 | 8 | நவுக்கரசர் | நாவுக்கரசர் |
| 78 | 21 | நீரூர் | நீடூர் |
| 103 | 19 | தொத்திணைத் | தொத்திணைத் |
| 178 | 27 | கைவிரற்குடி | கைவிரற்குறி |
| 258 | 27 | படித்துரை | படித்துறை |
| 265 | 18 | | சேர்க்க : திருமேனிகள் |
| 282 | 19 | பொனமுகலி ஊர்த் | பொன்முகலி ஊர் |
| 301 | 22 | அச்சு-சிறுபாக்கம் | அச்சு-இறுபாக்கம் |
| 316 | | '15 அருளிச் செயல்கள்' என்பதை '16 அருளிச் செயல்கள்' என மாற்றுக. | |

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | அன்புப் படையல் | v |
| | சிறப்புப் பாயிர மாலை | vii |
| | அணிந்துரை | xvii |
| 1. | பிறப்பும் வளர்ப்பும் | 1 |
| 2. | பிள்ளையாரின் கன்னித்திருத்தலப் பயணம் | 15 |
| 3. | திருநீலகண்ட யாழ்ப்பாணருடன் தல வழிபாடு | 29 |
| 4. | கழுமல நிகழ்ச்சிகள் | 52 |
| 5. | சோழநாட்டுத் திருத்தலப் பெரும்பயணம்-(1) | 73 |
| 6. | கொங்குநாட்டுத் தலவழிபாடு | 108 |
| 7. | சோழநாட்டுத் திருத்தலப் பெரும்பயணம்-(2) | 115 |
| 8. | அப்பர் பெருமானுடன் தலவழிபாடு | 156 |
| 9. | வீழிமிழலைச் சிறப்பு நிகழ்ச்சிகள் | 188 |

| | | |
|---|---|---|
| 10. | மதுரை மாநகர் அற்புதங்கள் | 199 |
| 11. | பாண்டி நாட்டுத் திருத்தல வழிபாடு | 229 |
| 12. | சோழநாட்டுத் திருத்தலப் பெரும்பயணம்-(3) | 241 |
| 13. | நடுநாட்டுத் தல வழிபாடு | 255 |
| 14. | தொண்டை நாட்டுத் திருத்தலப் பயணம் | 268 |
| 15. | பெருமணத்தில் திருமணம் | 306 |
| 16. | அருளிச் செயல்கள் | 316 |
| | பின்னிணைப்பு—1: பயன்பட்ட நூல்கள் | 327 |
| | பின்னிணைப்பு—2: ஞானசம்பந்தர் வழிபட்ட தலங்கள் | 329 |
| | பின்னிணைப்பு—3: சிறப்புத் தலங்கள் | 339 |
| | பேராசிரியர் ரெட்டியாரின் நூல்கள் | 342 |

# 1. பிறப்பும் வளர்ப்பும்

சோழவள நாட்டில் சீகாழிப்பதியில்[1] சிவபாத விருதயர் என்ற புகழ்பெற்ற அந்தணர் ஒருவர் வாழ்ந்து வருகின்றார். இவர் சிவபெருமான் திருவடியை நினைந்து போற்றும் தவப் பெருஞ் செல்வர். இதனால் 'சிவபாத இருதயர்'[2] என வழங்கப் பெறுகின்றார். வேத நெறி தழைத்தோங்க, தாம் பிறந்த கவுணியகோத்திரம் மிகு விளங்க, சிவம் பெருக்கும் சீலராய் வாழ்ந்து வந்தவர் இப்

---

1. காழி (சீகாழி, சியாழி): விழுப்புரம்—மயிலாடுதுறை இருப்பூர்திப் பாதையில் சிய்யாழி என்ற நிலையத்திலிருந்து 1 கல் தொலைவு. பாடல் பெற்ற தலங்களுள் மிகுதியான பதிகத்தொகை (71) இத்தலத்திற்கு உண்டு. இத்தலம் கழுமலம், காழி, கொச்சைவயம், சண்பைநகர், சிரபுரம், தோணிபுரம், பிரமபுரம், புகலி, புறவம், பூந்தராய், வெங்குரு, வேணுபுரம் என்ற 12 பெயர்களைக் கொண்டது. (பெ. பு. திருஞான. 14) சம்பந்தர் மட்டிலும் 67 பதிகங்கள் அருளியுள்ளார்.

2. விஷ்ணுவையே சித்தத்தில் கொண்ட பெரியாழ்வார் 'விஷ்ணுச்சித்தர்' என்ற பெயருடன் திகழ்ந்தது நினைவு கூரத்தக்கது.

பெரியார். இவர் வேத நெறியும் சைவப் பற்றும் மிக்க தம் குடும்பத்தோ டொத்த வேதியர் குலத்துப் பிறந்த பகவதி யார் என்ற மறைச் செல்வியை தமது வாழ்க்கைத் துணை யாகக் கொண்டு இல்லறமாகிய நல்லறத்தை நிகழ்த்தி வருகின்றார்.

இவர்கள் இருவரும் தம் முன்னோர் கொண்டொழுகிய சிவநெறியில் அளவிலாப் பற்றுடையவர்களாகத் திகழ் கின்றனர். சிவபெருமானின் திருவருள் வண்ணமாகிய திருநீற்றின் ஒளியைத் திசையெலாம் பரப்பவேண்டும் என்ற பேரார்வமுடையவர்களாய் விளங்குகின்றனர். இவர்கள் காலத்தில் சமண நெறி, சாக்கிய நெறி தமிழகத் தில் புகுந்தமையால் வேத நெறி வளர்ச்சிக் குன்றித் தளர்ச்சி யுறுகின்றது. இதனால் பெரிதும் கலக்கமுற்ற இத் தம்பதிகள் புற இருளைப் போக்கி திருநீற்றின் ஒளி யைப் பரப்பவல்ல ஒரு நன் மகனைப் பெறவேண்டும் என்று தோணிபுரத்து ஈசனை வழிபட்டு அரிய பல நோன்புகளை இயற்றுகின்றனர். இதனைச் சேக்கிழார் பெருமான்,

**நினைவுறமுன் பரசமயம்**
**நிராகரித்து நீறாக்கும்**
**புனைமணிப்பூண் காதலனைப்**
**பெறப்போற்றும் தவம் புரிந்தார்**

(திருஞான. 19)

என்று செப்புவர்.

தோணிபுரத்து அம்மையப்பன் திருவருளால் இவர்கள் இருவருடைய கருத்தும் நிறைவேறும் நிலையில் பகவதியார் திருவயிறு வாய்க்கப்பெற்று மகப்பேற்றுக்கு உரியவராகின்றார். அருக்கன் முதல் கோள் அனைத்தும் உச்சநிலையில் விளங்க அமைந்த நற்பொழுதில் சிவபெரு மானுக்குரிய ஆதிரை நன்னாளில், தவநெறிக்குரிய சீகாழிப்

பதியில் ஆளுடைய பிள்ளையார் திருவவதாரம் செய்தருள் கின்றார். இதனைச் சேக்கிழார் பெருமான்,

> தவம்பெருக்கும் சண்பையிலே
> தாவில்சரா சரங்களெலாம்
> சிவம்பெருக்கும் பிள்ளையார்
> திருவவதா ரஞ்செய்தார்
>
> (திருஞான. 26)

என்று கூறிக் களிப்பெய்துவார்[3] இத் திருமகனாரின் தோற்றத்தால் எவ்வுயிர்களும் மகிழ்ச்சி அடைகின்றன.

இங்ஙனம் அவதரித்த பிள்ளையாரின் வளர்ப்பைப் பற்றிச் சேக்கிழார் பெருமான் அற்புதமாகப் போற்றி யுரைப்பர்.[4] திருநாமம் சூட்டுதல், தொட்டிலமர்வித்தல் முதலிய சடங்குகள் உரிய காலத்தில் நிகழ்கின்றன. இன்னாட்கள் கழித்து உமையம்மையார் அளிக்கும் திரு முலைப் பாலைப் பருகி ஞானத் தலைவராகத் திகழப் போகும் காழிப் பிள்ளையாருக்கு அன்னையாராகிய பகவதியார் இறைவன் திருவடிகளையே பரவும் பேரன் பினையே திருமுலைப்பாலுடன் அமுது செய்விக்கின்றார். உலகப் பெருமக்களின் நற்பேறாகத் திருவவதாரம் செய்த பிள்ளையார்க்கு பிற காப்புகள் மிகை எனக் கருதி திருநீற்றுக் காப்பினையே அவர்தம் திருநெற்றியில் அணிகின்றார். பிற்காலத்தில் பாண்டியம்பதியில் 'மந்திர மாவதுநீறு' (2. 66) என்று[5] தொடங்கித் திருநீற்றுப் பதிகம்

---

3. நம் போலிவர் தோன்றுவதைப் 'பிறப்பு' என்றும் கடவுள், கடவுளருள் பெற்ற பெரியார்கள் தோன்றுவதை 'அவதாரம்' (மேலிருந்து இறங்குதல்) என்றும் வழங்குவது மரபு.

4. பெ. பு. திருஞான. (41—54).

5. 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டு-செப்டம்பர் திங்களில் கடுமையான மஞ்சட் காமாலையால் தாக்கப் பெற்று நாடி

பாடித் திருநீற்றின் பெருமையை கட்புலனாகக் காட்டப் போகின்றார் அல்லவா?

வளர்ப்பு: பிள்ளையார் வளர்ந்த சிறப்பைச் சேக்கிழார் பெருமான்,

தாயர்திரு மடித்தலத்தும்
தயங்குமணித் தவிசினினும்
தூயசுடர்த் தொட்டிலினும்
தூங்குமலர்ச் சயனத்தும்
சேயபொருள் திருமறையும்
தீந்தமிழும் சிறக்கவரு
நாயகனைத் தாலாட்டு
நலம்பலபா ராட்டினார் (திருஞான - 44)

என்று காட்டுவார். இன்னும் அவர் வளர்ந்து வரும் நாட்களில் பிள்ளையார் தவழ்ந்து தலையசைத்துச் செங்கிரையாடிய தோற்றம் 'பெருமழுவர் தொண்டல்லால் பிறிதிசையோம் என்பார்' போலிருந்தது என்பார். இரண்டு கைகளையும் சேர்த்துச் சப்பாணி கொட்டி விளையாடிய செயல் 'நாம் சிவநெறியன்றிப் பிற சமய நெறிகளை மதியோம். அடியரானீர் எல்லீரும் புறச் சமயங்களில் புக்கு உழலாது அகன்று உயர்வீர்' என விலக்கு வது போலத் தோன்றியது என்பார்; மற்றும் 'கோலக்கா இறைவன் பால் பெறும் பொற்றாளத்தினை ஒத்து இசை பாடுவது இவ்வாறு எனச் செப்புவது போலவும் இருந்தது' எனச் செப்புவார். ''முறையற்ற கொள்கையினவாய் புறச் சமயங்கள் இயக்கமற்றுத் தடைபடும்படி மாளிகை முன்றிலில் தளர் நடையை மேற்கொண்டார்'' என்று

---

இறங்கி இறைவன் திருவடி நீழலை அடையும் நிலையில் இருந்த அடியேன் திருநீற்றுப் பதிகம் ஓதி திருநீற்றினை நெற்றியிலும் உடலிலும் அணிந்து பிழைத்து இன்றும் (1985) இருந்து தமிழ்த் தொண்டும் சிவத் தொண்டும் செய்து வருவதைப் நினைவு கூர்கின்றேன்.

புகழ்வர். சுற்றத்தாரும் தோழிமாரும் "காழியர் தம் சீராட்டே! கவுணியர் தம் கற்பகமே! வருக, வருக" என்று அழைப்பதாக மொழிவர்.

பிறந்து ஓராண்டு நிரம்புவதற்கு முன்னரே சண்பக வேந்தர் தளர் நடையிட்டு நடக்கத் தொடங்குகின்றார். இதனைச் சேக்கிழார் பெருமான்,

**கிளர்தலிகின் கிணிஎடுப்பக்**
**கீழ்மைநெறிச் சமயங்கள்**
**தளர்நடையிட் டறந்தாழும்**
**தளர்நடையிட் டருளினார்.**

(திருஞான -50)

என்று காட்டுவார். பின்னர்த் தாதியர்களின் கைப்பற்றி நடந்து தளர்ச்சி நீங்குகின்றார்; திருப்பாதங்கள் நிலத்திற் பொருந்த விளையாடுகின்றார். இரண்டாம் ஆண்டு நிறை வெய்துகின்றது. இந்நிலையில் சிறுதேர் உருட்டியும், சிற்றில் சிதைத்தும் விளையாடிப் பெற்றோர்களை மகிழ்விக்கின்றார். காழிப் பிள்ளையாருக்கு மூன்றாம் ஆண்டு தொடங்குகின்றது. திருத்தொண்டின் பயனாகிய சிவஞானத்தை அளித்தருளும் சிவபெருமானை முற்பிறவிகளில் வழிபட்டுப் பிரிந்த பிரிவுணர்வு அவ்வப்பொழுது தோன்றுகின்றது. இந்நிலையில் இவர் இருந்தாற் போல் வெருண்டு அழத் தொடங்குகின்றார். இந்த அழுகைக் குறிப்பு எவராலும் அறியக் கூட வொண்ணாததாக உளது.

**ஞானப்பால் உண்டது :** பிள்ளையார் வாழ்வில் நிகழ்ந்த முதல் அற்புத நிகழ்ச்சி இது. மூன்றாண்டுப் பருவத்தில் வேத விதிப்படி நீராடி வருவதற்கு திருக்கோயிலிலுள்ள பிரம்ம தீர்த்தத்தை நோக்கிப் புறப்படுகின்றார் சிவபாத இருதயர். தானும் உடன் வருவதாகத் தந்தையாரின் காலைப் பற்றிக் கொண்டு அடம்பிடிக்கின்றார் பிள்ளையார். 'உன் செய்கை இதுவாயின் உடன் வருக' என்று சொல்லித் தந்தையார் அவரையும் இட்டுச் செல்

கின்றார். பிரம்ம தீர்த்தத்தின் கரையில் பிள்ளையாரை அமரச்செய்துவிட்டு விரைவில் நீராடித் திரும்பும் கருத்துடன் நீரில் இறங்கி செய்தற்குரிய பல நியமங்களைச் செய்கின்றார். பிள்ளையாரும் அவற்றை ஒன்று விடாமல் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றார். பின்பு சிவபாத இருதயர் நீருள் மூழ்கிச் செபித்தற்குரிய அக மருட மந்திரத்தை ஓதுதற் பொருட்டு நீருள் சிறிது நேரம் மூழ்கி இருக்கின்றார்.

கரையிலமர்ந்திருந்த பிள்ளையார் தம் தந்தையாரைக் காணாமல் முற்பிறப்பின் நினைவு மூளப் பெற்றுக் கண்களில் நீர் ததும்பக் கைகளால் பிசைந்து உதடுகள் துடிப்பப் பொருமி அழுகின்றார். வேறொன்றையும் நோக்காது திருத்தோணிபுரத்து விமானத்தின் சிகரத்தைப் பார்த்து 'அம்மையே, அப்பா' என்று அழைத்து அழுகின்றார். இந்நிலையில் தோணிபுரத்து இறைவன் உமாதேவியாருடன் விடையின்மீது எழுந்தருளிப் பிரம்ம தீர்த்தக் கரையை அடைகின்றார். உமையம்மையை நோக்கி 'நின் துணை முலைகள் பாலடிசிலைப் பொன் வள்ளத்தில் ஊட்டுக' எனப் பணிக்க, அவரும் திருமுலைப்பாலைப் பொற் கிண்ணத்தில் கறந்தருளிச் சிவஞானமாகிய அமிழ்தத்தையும் குழைத்துப் பிள்ளையார் கையில் கொடுத்து அவரது அழுகையைத் தீர்த்துப் பாலடிசிலை ஊட்டியருளுகின்றார். இங்ஙனம் கவுணியப்பப் பிள்ளையார் இளம்பருவத்தில் அம்மையப்பரால் ஆட்கொள்ளப் பெற்றமையால் 'ஆளுடைய பிள்ளையார்' எனவும், 'தேவர்க்கும் முனிவர்க்கும் கிடைத்தற்கரிய சிவஞானம்[6] பெற்றமையால்

---

6. சிவஞானம்—பதிஞானம். பதிஞானத்திற்குதான் பதிப்பொருள் இனிது விளங்கும். பதிஞானத்தால் இறைவனை அறிதலையே சைவ சமய ஆச்சாரியர்கள் 'அருட் கண்ணால் காணுதல்' என்று கூறுவர். இந்த ஞானம் பசு ஞானம், பாச ஞானம் இரண்டிலும் வேறுபட்டது; உயர்ந்தது.

'திருஞான சம்பந்தர்' எனவும் போற்றப்பெறுகின்றார். இந்நிலையைச் சேக்கிழார் பெருமான்,

சிவனடியே சிந்திக்கும்
திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும்
பாங்கினில்ஓங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம்
உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர்
தாம் உணர்ந்தார் அந்நிலையில்

(திருஞான- 70)

என்று காட்டுவர்.

இங்ஙனம் இறைவனருளால் ஞானவாரமுதம் உண்ட பிள்ளையார் உலகிலுள்ள எவ்வகைப்பட்ட பொருள்களையும் தன் சங்கற்பத்தாலே ஆக்கவல்ல தனிமுதல்வன் பிறப்பிறப்பற்ற செம்பொருளாகிய சிவபெருமான் ஒருவனே என உணரும் பேருணர்வும், அத்தகைய முழுமுதற்பொருளாகிய இறைவன் என்றே கருதி வழிபடத் தக்க பெருமையுடையவர்கள் சிவனடியார்கள் எனத் தெளியும் சிறந்த பேரறிவும் உடையவராகக் கிளர்ந்தெழுகுகின்றார். 'இம்முறையால் விளைவது இஃது' என உணர்ந்து புறச்சமயக் கொள்கைகள் யாவும் சிதறுண்டழியும்படி மெய்ப் பொருளை நிலைநாட்டும் துணிவும் வாய்க்கப் பெறுகின்றார்.

இந்நிலையில் நீராடி நியமங்களை முடித்த சிவபாத இருதயர் தடாகக் கரைக்கு வருகின்றார். சிவஞானத்தின் திருவுருவாகக் கரையில் நின்று கொண்டிருக்கும் பிள்ளையாரின் செவ்வாயிதழின் இருமருங்கும் பால்வழிந்து கொண்டிருப்பதைக் காண்கின்றார். அவரை நோக்கி, "பிள்ளாய்! யாரளித்த பாலடிசிலை நீ உண்டனை? எச்சில் கலக்கும்படி உனக்கு இட்டாரைக் காட்டுக" என

வெகுண்டு அருகிற்கிடந்த கோலொன்றை எடுத்து அடிப்பதற்கு ஓங்குகின்றார். பிள்ளையார் தம் உச்சிமேல் குவித்த கைவிரலொன்றினால் தோணிபுரத்து இறைவனைச் சுட்டிக் காட்டி, தம் உள்ளத்துள்ளே பொழிந்தெழுந்த உயர்ஞானத் திருமொழியால்,

**தோடுடையசெவியன் விடையே றியோர்**
**தூவெண்மதி சூடி**
**காடுடைய சுடலைப்பொடி பூசியென்**
**உள்ளங்கவர் கள்வன்**
**ஏடுடைய மலரான்முனை நாட்பணிந்**
**தேத்தவருள் செய்த**
**பீடுடைய பிரமாபுர மேவிய**
**பெம்மான் இவனன்றே** (1)

என்ற திருப்பாடலை முதலாகவுடைய பதிகத்தை (1.1) பாடி 'எம்மை இது செய்த பிரான் பிரமாபுர மேவிய பெம்மான் இவனே' எனத் தம் தந்தையாருக்கு அடையாளங்களுடன் குறிப்பிடுகின்றார்.

மண்ணுலக மக்கள் அறியாமையாற் பிழைசெய் தாலும், பின் தம் தவற்றையுணர்ந்து இறைவனை உள முருகிப் போற்றி வழிபடுவாராயின், இறைவனது திருவருள் அவர்களை உய்விக்கும் என்ற உண்மையை அறிவுறுத்தக் கருதிய சண்பை வேந்தர், இறைவன் வீற்றிருக்கும் திருக்கயிலாயத்தை ஆராயாது எடுக்க முயன்ற இராவணன் அம்மலையின் கீழ் அகப்பட்டு வருந்தித் தன் தவறுணர்ந்து இன்னிசைப் பாடலால் இறைவனைப் போற்ற, இறைவனும் அவனுக்கு அருள்புரிந்த பெருங்கருணைத் திறத்தினை இத்திருப்பதிகத்தின் எட்டாம் பாடலில் எடுத்துரைக் கின்றார். இறைவனை அன்பினால் வழிபடும் அடியார் களுக்கே இறைவனது திருவருள் எளிதிற்கிடைக்கும் என்னும் நல்லுணர்வுடன் அப்பெருமானைத் தொழாமல் தாங்களே முதல்வர் என வழுவான மனத்தினால் மயக்கமுற்ற

திருமாலும் நான்முகனும் பன்றியும் அன்னமுமாகி இறைவனுடைய அடியும் முடியும் தேடி அயர்வுற்றுப் பின்பு திருவைத்தெழுத்தினை ஓதி உய்ந்த செய்தியினை ஒன்பதாவது திருப்பாடலில் எடுத்துரைக்கின்றார்.

கலைஞானங்கட்கெல்லாம் முதல்வராகிய கயிலை நாதனின் திருவருள் நெறியினை அறிந்து உய்யும் மெய் யுணர்வின்றித் தம்மில் தாமே நன்மையைத் தேடிக் கொள்ள முயலும் சமணர் சாக்கியர் இவர்தம் சமய நெறிகள் பழிவிளைக்கும் குற்றமுடையனவே என்பதனைப் பத்தாம் திருப்பாடலில் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றார். இங்ஙனம் இத்திருப்பதிகத்தைப் பத்துப் பாடல்களால் நிறைவு செய்து பதிகப்பயன் கூறும் பதினொன்றாம் பாடலாகிய திருக்கடைக் காப்பினையும் பாடித் தம் திருநாமத்தையும் அதில் பதித்து தம் கண் எதிரே விசும்பின்கண் விடைமீது தோன்றியருளிய அம்மை யப்பரைத் தொழுது நிற்கின்றார்.[7]

பிறவிப் பெருங்கடலைக் கடந்திடும்படி தம் திருவடிப் புணையினைச் சம்பந்தர் பெருமானுக்கு தந்தருள வந்த சிவபெருமான் உமாதேவியாருடன் திருத்தோணிபுரத் திருக்கோயிலை நோக்கி எழுந்தருள்கின்றார். காழி ஞானச் சிவக்கன்றும் தம் கண்வழி சென்ற கருத்து விடாது தொடர்ந்து செல்லத் தாமும் திருத்தோணி புரக் கோயிலை நண்ணுகின்றார். தவம் பல செய்து இவருக்குத் தாதையெனும் பெருமை பெற்ற சிவபாத இருதயரும் பிள்ளையாரை அடித்தற்கெடுத்த சிறுகோலும்

---

7. இங்ஙனம் ஞானசம்பந்தர் பதிகங்களில் எட்டாம் பாடலில் இராவணன் செய்தியும், ஒன்பதாம் பாடலில் திருமால்-பிரமன் பற்றிய செய்தியும், பத்தாம் பாடலில் சமண சாக்கியர் செய்தியும் திருக்கடைக்காப்பில் தம் பெயரும் விடாமல் மரபாக வருவதைக் காணலாம்.

வெடிகொள் வினையை வீட்ட வேண்டுவீர்
கடிகொள் கொன்றைக் கலந்த சென்னியன்
கொடிகொள் விழவார் கோலக் காவுளெம்
அடிகள் பாதம் அடைந்து வாழ்மினே (6)

என்பது ஆறாவது பாடல். இந்தப் பதிகத்தைத் தக்க ராகத்தில் கைகொட்டிப் பாடியதைக் கண்ட கோலக்காப் பெருமான் இந்தப் பிஞ்சுக் கை வருந்தும் என்றெண்ணித் திருவைந்தெழுத்து வரையப் பெற்ற பொற்றாளம் இரண்டைப் பிள்ளையார் கையில் வந்து பொருந்தும்படி அருளுகின்றார். அம்பாள் அத்தாளத்திற்கு ஓசை கொடுக்கின்றார். இதனால் இங்குள்ள ஈசன் திருத்தாள முடையார் என்றும், அம்பாள் ஓசைகொடுத்த நாயகி என்றும் திருநாமங்களால் வழங்கப்பெறுகின்றனர்.

சம்பந்தருக்குப் பின்னர் சுமார் நூறு ஆண்டுகள் பின் வந்த நம்பியாரூரருக்கு கோலக்காவில் பிள்ளையார் பொற்றாளம் பெற்ற செய்தி தெரிந்து, இந்த வழியாகப் போனபோது கோலக்கா இறைவனை வணங்கி,

நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும்
ஞானசம்பந் தனுக்கு உலகவர்முன்
தாளம்ஈந் தவன்பாடலுக் கிரங்குந்
தன்மையாளனை என்மனக் கருத்தை
ஆளும் பூதங்கள் பாடநின்றாடும்
அங்கணன்தனை என்கண மிறைஞ்சும்
கோளிலிப் பெருங்கோயி லுளானைக்
கோலக்காவினிற் கண்டுகொண் டேனே
(7·62:8)

(புறவம் — சீகாழி)

எனவரும் திருப்பாடலில் உளமுருகிப் போற்றியுள்ளதைக் கண்டு மகிழ்கின்றோம். இதன்கண் 'உலகவர் முன் தாளம் ஈந்து' எனத் தம்பிரான் தோழர் தெளிவாகக் குறிப்பிடு

தலால் சம்பந்தர் பொற்றாளம் பெற்ற அருட்செயல் உலகமக்கள் கண்காண நிகழ்ந்ததென்பது தெளிவாகின்றது. சீகாழியில் திருமுலைப்பால் உற்சவத்தன்று ஞான சம்பந்தரைத் திருக்கோலக்காவிற்கு எழுந்தருளச் செய்து தாளம் வாங்கிச் செல்வதாக உற்சவம் இன்றும் நடைபெற்று வருகின்றது.

திருக்கோலக்காவில் பொற்றாளம் பெற்ற காழிப பிள்ளையார் சீகாழிக் கோயிலையடைந்து **'பூவார் கொன்றை'** (1.24) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ்ப் பதிகம் பாடிக் காழிப் பெருமானைப் போற்றுகின்றார். இதில்,

> **கொங்கு செருந்தி கொன்றை மலர்கூடக்**
> **கங்கை புனைந்த சடையார் காழியார்**
> **அங்கண் அரவம் ஆட்டும் அவர்போலாம்**
> **செங்கண் அரக்கர் புரத்தை எரித்தாரே.** (6)

என்பது ஆறாவது பாடல். பின்னர் திருக்கோயிலிலிருந்து திரும்பித் தம் திருமாளிகை வந்து தங்குகின்றார்.

சம்பந்தர் வாழ்க்கையை நோக்கும்போது மற்றைய நாயன்மார்களைக் காட்டிலும் இவர் ஒருவரே சமண சமய எதிர்ப்பில் ஈடுபட்டுச் சோழ, பாண்டி, தொண்டை நாடுகளில் அவர்கள் சமயத்தின் குறைபாடுகளை எடுத்துச் சொல்லியும் அவர்களைப்போல் அற்புதங்கள் நிகழ்த்திக் காட்டியும் மக்களை முன்போல் சைவத்திற்குத் திருப்பியவர் என்ற உண்மையைக் கண்டு தெளியலாம். இவருக்குத் துணையாகப் பல போதகர்கள் இவருடன் சென்றிருக்க வேண்டும். இவர்கள் **'சம்பந்த சரணாலயர்'** என்று வழங்கப்பெறுகின்றனர்.

சம்பந்தர் வரலாற்றை விரிவாக அறிந்து கொள்வதற்கு 4286 செய்யுட்களையுடைய பெரிய புராணத்தில் 1256 செய்யுட்களையுடைய திருஞான சம்பந்தர்

புராணம் துணை செய்கின்றது. திருத்தொண்டத் தொகை வகையாகத் திருத்தொண்டர் திருவந்தாதி பாடிய நம்பியாண்டார் நம்பி ஆளுடைய பிள்ளையார் மீது பாடிய ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, திருச் சண்பை விருத்தம், திரு மும்மணிக்கோவை, திருவுலா மாலை, திருக்கலம்பகம், திருத்தொகை என்னும் ஆறு[10] பிரபந்தங்களிலும் குறிப்பிடப் பெற்றுள்ள சில வரலாற்று நிகழ்ச்சிகளும் உதவுகின்றன.

10. இவை பதினோராம் திருமுறையில் தொகுக்கப் பெற்றுள்ளன.

## 2. பிள்ளையாரின் கன்னித் திருத்தலப் பயணம்

திருக்கோலக்காவில் பொற்றாளம் பெற்ற சம்பந்தர் பெருமான் சீகாழிக்குத் திரும்பி வந்ததும் அவருடைய இசைப்பெருமை பல இடங்களுக்கும் பரவியது. சீகாழிக்கு அருகிலுள்ள சம்பந்தரின் தாயார் பிறந்த ஊரான 'நனி பள்ளிக்கும்[1]' இவர் பெருமை எட்டியது வியப்பில்லை. ஆகையால் அவ்வூரிலுள்ள அந்தணர்கள் மூவாண்டுப் பருவத்தில் அருள்ஞானம் பெற்ற பிள்ளையாரது அற்புத நிகழ்ச்சியைக் கேட்டு மகிழ்ந்து மங்கல வாத்திய ஒலிகள் முழங்க, சீகாழிப்பதியை அடைந்து திருஞான சம்பந்தரின் திருவடிகளைப் பணிந்து போற்றுகின்றனர். தமது ஊருக்கு எழுந்தருள வேண்டும் எனப் பிள்ளையாரை வேண்டுகின்றனர். அவர்களது வேண்டுகோட் கிணங்கிய காழிப் பிள்ளையார் தோணிபுரத்து இறைவன்பால் விடை பெற்றுத் தாமரை மலர்போலும் தம் மெல்லிய பாதங்கள் தரைமீது பட்டு வருந்த நனி பள்ளியை நோக்கி நடக்

---

1. **நனி பள்ளி** (புஞ்சை): மயிலாடுதுறை-தரங்கம்பாடி இருப்பூர்தி வழியிலுள்ள செம்பொன்செய் கோயில் என்ற நிலையத்திலிருந்து 2½ கல் தொலைவு. சம்பந்தர் தாயார் பிறந்த ஊர். தந்தையார் தோளிலிருந்த வண்ணம் தம்மேல் ஆணை வைத்துப் பாடிய தலப்பதிகம் சிறப்புடையது. இவ்வூர்த் திருக்கோயிலில் எழுந்தருளி யிருக்கும் எம்பெருமானின் திருநாமம் நற்றுணையப்பர் என்பது.

கின்றார். இதனைப் பிள்ளையாரின் திருத்தலப் பயணத்தின் முதல் சுற்றாகக் கருதலாம். ஆளுடைய பிள்ளையார் அடிமலர் வருந்த நடப்பதும் அவரைப் பிறர் எடுத்துச் செல்வதும் பொறாத அவரது திருத்தந்தையார் பிள்ளையாரைத் தமது தோளின்மேல் அமர்த்திக் கொண்டு செல்லுகின்றார். இதனைச் சேக்கிழார் பெருமான்,

தாதவிழ்செந் தாமரையின் அகவிதழ்போல்
சீரடிகள் தரையின் மீது
போதுவதும் பிறர்தருவர் பொறுப்பதுவும்
பொறா அன்பு புரிந்த சிந்தை
மாதவஞ்செய் தாதையார் வந்தெடுத்துத்
தோளின்மேல் வைத்துக் கொள்ள
நாதர்கழல் தம்முடிமேல் கொண்டகருத்
துடன்போந்தார் ஞானம் உண்டார்
(ஞானசம்பந். 113)

என்று காட்டுவர்.

தந்தையார் தோளில் அமர்ந்து செல்லும் பிள்ளையார் நனிபள்ளியை நெருங்கிய நிலையில் அந்நகரைச் சுட்டிக் காட்டி "எதிரே தோன்றுவதாகிய இப்பதி யாது?" எனத் தந்தையாரை வினவுகின்றார். தந்தையாரும் "இதுதான் நனி பள்ளி" என்கிறார். தந்தையாரின் திருத்தோளில் இருந்த வண்ணம் அத்திருப்பதியைத் தொழுது "காரைகள் கூகை முல்லை" (2. 84) என்ற முதற் குறிப்பையுடைய திருப்பதிகம் பாடிப் போற்றுகின்றார். இதில்,

காரைகள் கூகைமுல்லை களவாகை யீகை
படர்தொடரி கள்ளி கவினிச்
சூரைகள் பம்மி விம்மு சுடுகா டமர்ந்த
சிவன்மேய சோலை நகர்தான்
தேரைகள் ஆரைசாய மிதிகொள்ள வாளை
குதிகொள்ள வள்ளை துவள
தாரைகள் ஆரல்வாரி வயன்சேதி வைகு
நனிபள்ளி போலும் நமர்காள் (1)

என்பது முதற்பாடல். இதில் முதலிரண்டடிகளில் பாலை நில இயல்பும், பின்னிரண்டடிகளில் நெய்தல் நில இயல்பும், இவ்வாறே பின்வரும் பாடல்கள் எல்லாவற்றிலும் மருத நிலத்தோடு தொடர்புடைய நெய்தல் நில இயல்பும் கூறப் பெற்றிருத்தலால் இத்திருப்பதிகம், பாலை நிலமாக இருந்த நனிபள்ளி வளமுடைய நெய்தல் நிலமாக மாறும்படி பாடி யருளப் பெற்றதென்ற செய்தி நெடுங்காலமாக வழங்கப் பெற்று வருகின்றது. திரு நனிபள்ளியை அடைந்த காழிப் பிள்ளையார் அவ்வூர் மக்கள் வேண்டுகோட்கிணங்க வளமற்ற பாலை நிலமாகிய அவ்வூர் வளமான நெய்தல் நிலமாக மாறும்படி திருப்பதிகம் பாடியருளினார் என்ற வர லாற்றினைப் பின்வந்த நம்பியாண்டார் நம்பி ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, திருச்சண்பை விருத்தம், திருவுலா மாலை, திருத்தொகை என்று தாம் இயற்றிய நூல் களிலும், திருக்கடவூர் உய்ய வந்த தேவநாயனார் தம் திருக்களிற்றுப்படியாரிலும் குறிப்பிட்டுப் போற்றியுள்ளனர். இத்துணைச் சிறப்புடைய இந்நிகழ்ச்சியைச் சேக்கிழார் பெருமான் தம் நூலில் குறிப்பிடவில்லை.

ஆனால் சம்பந்தர் தமது தந்தையாரின் தோளின்மேல் அமர்ந்த நிலையில் பாடினார் என்பதும், 'நனிபள்ளி உள்குவார்தம் பேரிடர் கெடுதற்கு ஆணை நமது' என்றும் இறுதி மொழியைக் கூறினார் என்பதும் இப்பதிகத் திருக்கடைக் காப்புச் செய்யுளால் இனிது விளங்குகின்றது. தவிர, பிள்ளையார் திருநனிபள்ளிக்குப் போகும் பொழுது தாமே நடந்து செல்ல இயலாத இளம்பருவத்தினரா யிருந்தமை திருக்கடைக் காப்பினால் நன்கு துணியப்படும்.

இத்தேவாரத் திருப்பதிகத்தில் நெய்தல், பாலை நிலப் பொருள்கள் வந்து, பின் மருத நிலத்திற்குரிய அடையாளங் களும் வருவதால் இலக்கியப் புலவர்கள் தம் கற்பனைக்கு இடம் தந்து வருணனை செய்துவிட்டார்கள். ஆனால் சேக்கிழார் பெருமான் இங்ஙனம் செய்யவில்லை.

முன்னோர் தோற்றுவித்த மரபைப் பின்னோர் போற்றுவது என்ற வழக்கத்தையும் மேற்கொள்ளவில்லை. இன்றும் அது பாலையாகவே காட்சி அளிப்பதுபோல் சேக்கிழார் காலத்திலும் இதே நிலையில் இருந்திருக்க வேண்டும். இதனால்தான் இப்பெருமான் இந்த ஊர்பற்றித் தமது கற்பனைக்கு இடங் கொடுக்கவில்லை என்று நினைக்கத் தோன்றுகின்றது.

நனிபள்ளி என்ற திருப்பெயர் இவ்வூருக்கு எப்படி ஏற்பட்டதோ? தெரியவில்லை. ஆனால் 'பள்ளி' என்பது சமணர் இருக்கை என்பதனை நாம் அறிவோம். சம்பந்தர் காலத்தில் சமணர்கள் இப்பகுதியில் அதிகமாக வாழ்ந் திருக்கலாம் என நினைக்கத் தோன்றுகின்றது. பல்லவர்கள் பாடலிபுரத்தை (கடலூர்) தலைநகராகக் கொண்டு ஆண்டதை நாம் அறிவோம். அக்காலத்தில் சமணர்களின் செல்வாக்கும் அதிகமாக இருந்து இப்பகுதியில் பள்ளிகள் அமைந்திருக்கலாம்; இதுகாரணமாக 'நனிபள்ளி' என்ற திருப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்று கருத இடம் உண்டு.

சம்பந்தப் பெருமான் நனிபள்ளியில் அதிகம் தங்க வில்லை. தம் அன்னையாரின் உறவினர்களைக் கண்டு அளவளாவி மகிழ்ந்தவுடன் நனிபள்ளி ஈசனிடம் விடை பெற்றுக் கொண்டு தலைச்சங்காடு[2] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். வந்தவர் 'நலச்சங்க வெண்குழை' (2.55) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடி மகிழ்கின்றார். இதில்,

> அடிபுல்கு பைங்கழல்க ளார்ப்பப்
> போந்தோ ரனல்ஏந்திக்
> கொடிபுல்கு மென்சாயல் உமையோர்
> பாகங் கூடினீர்

---

2. தலைச்சங்காடு : மயிலாடுதுறை — தரங்கம்பாடி இருப்பூர்தி வழியிலுள்ள ஆக்கூர் நிலையத்திலிருந்து 3 கல் தொலைவு. மயிலாடுதுறையிலிருந்து ஆக்கூர் செல்லும் பேருந்து மூலம் வந்து திரும்புவதே சிறந்தது; எளிதானது.

பொடிபுல்கு நூல்மார்பர் புரிநூ
லாளர் தலைச்சங்கைக்
கடிபுல்கு கோயிலே கோயி
லாக நினைந்தீரே. (7)

என்பது ஏழாம் திருப்பாடல். பழங்காலத்தில் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து (தலைச்சங்காட்டிலிருந்து 5 கல் தொலைவிலுள்ளது) சிறந்த சங்குகள் இங்கு விற்பனை செய்யப் பெற்றதால் இவ்விடத்தைத் 'தலைச்சங்கம்' என்று வழங்கினர். இவ்விடத்தைச் சுற்றிலும் புரச (பலாச) மரக் காடாக இருந்தமையால் இவ்விடத்தைக் 'காடு' என்றும் வழங்கினர். நாளடைவில் இவ்விரண்டு பெயர்களும் சேர்ந்து 'தலைச் சங்கக் காடு' என்ற திருப்பெயராக வழங்கலாயிற்று. காலப் போக்கில் மக்கள் வாக்கில் இத் திருப்பெயர் மருவி 'தலைச்சங்காடு' என்ற பெருவழக்குப் பெறலாயிற்று. இவ்வூருக்கு அருகில் 'திருவெண் காடு' என்ற ஊரும் இருப்பதால் 'காடு' என்ற முடிவு பொருந்து வதாகக் கருதலாம். திருமங்கையாழ்வாரும் 'தலைச் சங்கம்' என்றே தம் பாசுரத்தில் (பெரி. திரு. 8.9:9) குறிப்பிடுகின்றார்.[3]

தலைச்சங்காடரிடம் விடைபெற்றுக் கொண்டு வலம் புரம்[4] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார் பிள்ளையார். 'கொடியுடை மும்மதில்' (3·103) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகத்தால் இத்தலத்து எம்பெருமானை வழிபடு கின்றார். இதில்,

3. 1968 ஜூன் மாதம் தலைச்சங்க நாண்மதியத்தைச் சேவித்தபோது தலைச்சங்காட்டுக் கோயிலைப் பேருந்தில் செல்லும்போதே சேவித்தேன்.

4. வலம்புரம் (பெரும்பள்ளம்) சீகாழியிலிருந்து 8 கல் தொலைவிலுள்ளது.

புரிதரு புன்சடை பொன்தயங்கப்
புரிநூல் புரண்டிலங்க
விரைதரு வேழத்தி னீருரித்தோல்
மேல்மூடி வேய்புரைதோள்
அரைதரு பூந்துகி லாரணங்கை
அமர்ந்தார் இடம்போலும்
வரைதரு தொல்புகழ் வாழ்க்கையறி
வலம்புற நன்னகரே (7)

என்பது எழாம் திருப்பாடல்.

வலம்புர ஈசுவரரிடம் விடை பெற்றுக்கொண்டு காவிரிப்பூம் பட்டினம்[5] வருகின்றார். இவ்வூர்ப் பல்லவனீச்சரம் என்ற திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைச் சேவிக்கின்றார். இப்போது தொடுத்த செந்தமிழ்ப் பதிகம் ‘அடையார்தம் புரங்கள்’ (1. 65) என்ற முதற் குறிப்புடையது. இதில்,

மங்கை யங்கோர் பாகமாக
வாணில வார்சடைமேற்

---

5. காவிரிப்பூம் பட்டினம்: இங்குள்ள கோயில் பல்லவனீச்சரம் என்பது, பல்லவவேந்தன் திருப்பணி செய்த பின்பு இத்தலத்திற்கு இப்பெயர் வழங்கலாயிற்று. இவ்வூர் சீகாழியிலிருந்து 10 கல் தொலைவிலுள்ளது. சங்ககாலத்தில் கரிகாற் பெருவளத்தான் அரசு புரிந்த தலைநகரம் (புகார்) என்பது இதுவே. இங்கிருந்த துறைமுகம், நடைபெற்ற வாணிகம், மக்கள் செல்வநிலை முதலியவற்றைப் ‘பட்டினப்பாலை’ என்ற பாட்டில் காணலாம். கோவலன், கண்ணகி, மாதவி, மணிமேகலை முதலியோர் வரலாற்றுத் தொடர்புடையது. நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப் பதிவாழ் சதுக்கபூதம் ஈறாக எல்லாக் கடவுள் கோயில்களும் திகழ்ந்த நகர். சிலம்பு கூறும் ‘பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்’ தான் பல்லவனீச்சரமாகக் கருத இடம் உண்டு. இங்கு இந்திர விழா மிகச்

கங்கை யங்கே வாழவைத்த
கள்வன் இருந்த இடம்
பொங்க யஞ்சேர் புணரியோத
மீதுயர் பொய்கையின்மேல்
பங்க யஞ்சேர் பட்டினத்துப்
பல்லவ னீச்சரமே. (3)

என்பது மூன்றாவது பாடல். பட்டினப்பாலையிலும் சிலம்பிலும் மேகலையிலும் கண்ட பட்டினத்தை கற்பனையில் தான் காணமுடியும். இன்று பழைய கோயில்கள், அவற்றையடுத்துச் சில குடில்கள், கடலருகே சில மீனவர் குடும்பங்கள் இவைதாம் இன்றைய காவிரிப்பூம் பட்டினம். தவிர, தமிழக அரசு ஏற்படுத்திய நினைவுச் சின்னங் களும் உள்ளன.

தேவாரம் எழுந்த மூவர் காலத்திற்கு முன்பே பண்டைய காவிரிப்பூம் பட்டினம் தனது எழிலை இழந்து விட்டது. சம்பந்தர் பெருமான் சேவிக்க வந்தபோது இருந்த கோயில்தான் பல்லவனீச்சரம். இவரும் இத்திருக் கோயிலைப்பற்றிச் சிறப்பாக ஒன்றும் சொல்லவில்லை. அண்மையில் உள்ள சாய்க்காட்டைச் சேவித்த நாவுக்கரசர் பெருமானும் காவிரிப்பூம் பட்டினத்தைப் பற்றிய பேச்சையே எழுப்பவில்லை. சேக்கிழார் காலத்தில் தில்லை யையும் திருவாரூரையும் வருணித்ததுபோல் காவிரிப்பூம் பட்டினத்தை வருணிக்கவில்லை.

நன்னெ டும்பெருந் தீர்த்தமுன் னுடையது
நலஞ்சி றந்தது வளம்புகார் நகரம்

---

சிறப்பாக நடைபெற்றதைச் சிலப்பதிகாரம் — புகார் காண்டத்துள் காணலாம். கடல் கொண்டதால் முடிவுற்ற புகார் நகரச் சிதைவு இன்றும் கடலுட் காணப்படுகின்றது. இயற்பகை நாயனாரும் பட்டினத்தடிகளும் வாழ்ந்த திருத்தலம்.

என்று மட்டும் இயற்பகை நாயனார் புராணத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆகவே, எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னரே இப்பட்டினம் சிதைந்தழிந்திருத்தல் வேண்டும்.

பல்லவனீச்சர இறைவனை 'பரசு பாணியர்' (3. 112) என்ற முதற்குறிப்புடைய இன்னொரு பதிகத்தாலும் ஏத்திப் போற்றுகின்றார்.

பச்சைமேனியர் பிச்சைகொள்பவர்
பட்டினத்துறை பல்லவனீச்சரத்
திச்சையா யிருப்பாரிவர்
தன்மையறி வாரார் (6)

என்பது இதில் ஆறாவது பாடல்.

பல்லவனீச்சரத்தினின்றும் சாய்க்காடு[6] என்னும் திருத்தலத்திற்கு வருகின்றார் சண்பை வேந்தர். சாய்க்காடு இறைவனை இரண்டு பதிகங்களால் வழுத்துகின்றார். 'மண்புகார்' (2. 41) என்ற முதற்குறிப்புடைய பதிகத்தில்,

---

6. சாய்க்காடு (சாயாவனம்). இது பல்லவனீச்சரத்துக் கருகிலேயே உள்ளது. இது சீகாழியிலிருந்து 9 கல் தொலைவு; ஆக்கூரிலிருந்து 5 கல் தொலைவு; திருவெண்காட்டிலிருந்து 1 கல் தொலைவு. இஃது ஒரு மாடக் கோயில். கோச்செங்கணான் என்ற சோழவேந்தன் 70 மாடக் கோயில்களைக் கட்டியதாக வரலாறு. சுவாமி: சாயாவனேசுவரர்; அம்பாள்: குயிலு நன் மொழியாலம்மை, கோஷாம்பாள். இந்த சாயாவனத்தில் வைத்துதான் இயற்பகை நாயனார் தமது மனைவியை அடியார் ஒருவருக்குக் கொடுத்துத் திரும்பியதாக ஐதிகம். இதற்கு வடக்கில் மேலூர் என்ற பெரும் பள்ளத்திலுள்ள சுவாமியின் பெயர் பிரியா வணங்கீசுவரர். இங்குதான் இயற்பகையின் மனைவியைத் தனியே விட்டு அடியாராக வந்த இறைவன் பிரிந்தார்.

நீநாளும் நன்னெஞ்சே
    நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும்
    சாய்காட் டெம்பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்பப்
    புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப்
    பெறலாமே நல்வினையே (3)

என்பது மூன்றாவது பாடல். அடுத்தது 'நித்தலும் நியமம்' (2. 38) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம். இதில்,

வேத நாவினர் வெண்பளிங்
    கின்குழைக் காதர்
ஓத நஞ்சணி கண்ட
    ருகந்துறை கோயில்
மாதர் வண்டுதன் காதல்வண்
    டாடிய புன்னைத்
தாது கண்டு பொழில்மறைந்
    தூடுசாய்க் காடே (7)

என்பது ஏழாவது பாடல்.

சாய்க்காட்டு ஈசனிடம் விடைபெற்றுக் கொண்டு திருவெண்காடு[7] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார் காழி வேந்தர். இத்தலத்து இறைவனை மூன்று திருப்பதிகங்

---

7. வெண்காடு (திருவெண்காடு). சீகாழியிலிருந்து 7 கல் தொலைவு. பேருந்து வசதி உண்டு. இத்தலத்தில் கோயிலுக்குள் சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், அக்கினி தீர்த்தம் என்ற முக்குளங்கள் உள்ளன. இத்தீர்த்தங்களில் நீராடி இறைவனை வழிபடுவோருக்கு மகப்பேறு வரம் பெறலாம் என்று 2. 48: 2 என்ற பாசுரம் கூறும். இவ்வாறு வழிபட்ட அச்சுத களப்பாளருக்கு மெய்கண்டார் என்ற சந்தான குரவர் தோன்றினார். இத்தலத்தில் பஞ்ச பிரம்ம மூர்த்தங்களுள் தென்முகமாயுள்ள அகோர மூர்த்தியின்

களால் ஏத்துகின்றார். 'கண்காட்டு நுதலாலும்' (2.48) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகச் செந்தமிழ் மாலையில்,

வேலைமலி தண்கானல்
வெண்காட்டான் திருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால்
வழிபடுநன் மறையவன்றன்
மேலடர்வெங் காலனுயிர்
விண்டபினை நமன்தூதர்
ஆலமிடற் றான் அடியார்
என்று அடர அஞ்சுவரே (5)

என்பது மாலையின் ஐந்தாவது மலர். அடுத்தது, 'உண்பாய் நஞ்சை' (2.61) என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ்த் தமிழ் மாலை. இதில்,

பிள்ளைப் பிறையும் புனலும்
சூடும் பெம்மானென்(று)
உள்ளத் துள்ளித் தொழுவார்
தங்கள் உறுநோய்கள்
தள்ளிப் போக அருளுந்
தலைவன் ஊர்போலும்
வெள்ளைச் சுரிசங் குலவித்
திரியும் வெண்காடே (5)

என்பது ஐந்தாவது மலர். இப்பதிகத்திற்கு அடுத்தது 'மந்திர மறையவை' (3.15) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ்ப் பதிகம். இதில்,

---

சந்நிதியும் வழிபாடும் புகழ் பெற்றவை. இறந்தவர்களின் சமச்சுடலை சந்திர தீர்த்தத்திற்கு அருகில் உள்ளது. கயையில் உள்ளதுபோல் 'வட ஆலம்' என்ற அழியா ஆலமரம் உள்ளது. இங்கு முக்குள நீராடிப் பலர் தென் புலத்தார் வழிபாடும் செய்வர். பட்டினத்தடிகளின் வரலாற்றுத் தொடர்புடைய திருத்தலம் இது.

நயந்தவர்க் கருள்பல நல்கி யிந்திரன்
கயந்திரம் வழிபட நின்ற கண்ணுதல்
வியந்தவர் பரவுவெண் காடு மேவிய
பயந்தரும் மழுவுடை பரம ரல்லரே (7)

என்பது ஏழாவது திருப்பாடல். வெண்காட்டிலிருக்கும்போது சில தலங்கள் நினைவிற்கு வருகின்றன.

வெண்காட்டு இறைவனிடம் விடை பெற்றுக் கொண்டு கீழைத் திருக்காட்டுப்பள்ளிக்கு[8] வருகின்றார். இத்தலத்து இறைவன் மீது, 'செய்யருமே' (1. 5) என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ்ப் பாமாலை தொடுத்துப் போற்றுகின்றார். இதில்,

திரைகளெல் லாமலரும் சுமந்து
செழுமணி முத்தொடு பொன்வரன் றிக்
கரைகளெல் லாமணிசேர்ந் துரிஞ்சிக்
காவிரி கால்பொரு காட்டுப்பள்ளி
உரைகளெல் லாமுணர் வெய்தி
நல்லவுத்தமரா யுயர்ந்தா ருலகில்
அரவமெல் லாமரை யார்த்தசெல்
வர்காட்செய அல்லல் அறுக்கலாமே (3)

என்பது மூன்றாம் பாடல்.

இதன் பின்னர் தென் திருக்காட்டுப்பள்ளி இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு தென் முல்லை வாயில்[9] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். வந்தவர்,

---

8. காட்டுப்பள்ளி (கீழைத்திருக்காட்டுப்பள்ளி): ஆவணீசுவரர் கோயில் என்றும் பெயர் வழங்கும். சீகாழியிலிருந்து 9 கல் தொலைவிலுள்ளது. வழியில் திருவெண்காடு உள்ளது. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

9. முல்லை வாயில்: (தென்) சீகாழியிலிருந்து 8 கல் தொலைவு. கடற்கரைத் தலம். சம்பந்தர் ஒருவரே பாடிய தலம்.

'துளி மண்டி யுண்டு' (2. 88) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ் மாலையால் தலத்து இறைவனை வாழ்த்திச் சேவிக்கின்றார்.

ஒன்றொன் றொடொன்று ஒருநான்கொ டைந்து
    மிருமூன்றொ டேழு முடனாய்,
அன்றின் றொடென்றும் அறிவான வர்க்கும்
    அறியாமை நின்ற அரனூர்,
குன்றொன் றொடொன்று குலையொன் றொடொன்று
    கொடியொன் றொடொன்று குழுமிச்
சென்றொன் றொடொன்று செறிவால் நிறைந்த
    திருமுல்லை வாயில் இதுவே (4)

என்பது இம்மாலையின் நான்காவது மலர். இதன் பின்னர் சீகாழிக்குத் திரும்பி விடுகின்றார். சில நாட்கள் அங்குத் தங்குகின்றார். இதனைச் சேக்கிழார் பெருமானின்,

திருமுல்லை வாயில் எய்திச்
    செந்தமிழ் மாலை சாத்தி
மருவிய பதிகள் மற்றும்
    வணங்குவார் மறையோர் ஏத்தத்
தருமலி புகலி வந்து
    ஞானசம் பந்தர் சாிந்தார் (ஞானசம்ந் 127)

(புகலி-சீகாழி)

என்ற பாடலால் அறிய முடிகின்றது. சீகாழியில் தங்கியிருக்கும் போது நாடோறும் தோணிபுரத்து ஈசனை வழிபடும் வழக்கத்தை விருப்புடன் மேற்கொண்டுள்ளார்.

சீகாழியில் தங்கியிருக்கும் ஒரு நாள் மயேந்திரப் பள்ளி[10] வருகின்றார்.

---

10. மயேந்திரப் பள்ளி (கோயிலடிப்பாளையம்). இத் தலம் கொள்ளிடம் என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து 7 கல் தொலைவிலுள்ளது. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

'திரை தரு பவளமும்' (3·31) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ் மாலையை இத்தலத்து ஈசனுக்குச் சூட்டு கின்றார். இதில்,

நித்திலத் தொகைபல நிரைதரு மலரெனச்
சித்திரப் புணரிசேர்த் திடத்திகழ்ந் திருந்தவன்
மைத்திகழ் கண்டனன் மயேந்திரப் பள்ளியுட்
கைத்தல மழுவனைக் கண்டடி பணிமினே (5)

என்பது ஐந்தாவது நறுமலர். இது முதல் முறை வந்தபோது பாடியது. இங்கிருந்து மீண்டும் திருமுல்லை வாயில் வந்து (ஞானசம்பந்-129) அதனருகேயுள்ள கலிக்கா முருக்கு[11] வருகின்றார். 'மடல்வரையின்' (3·105) என்ற திருப்பதிகச் செந்தமிழ் மாலையால் இத்தலத்து இறைவனை ஏத்துகின்றார். இதில்,

வானிடை வாண்மதி மாடந்தீண்ட
மருங்கே கடலோடிய
கானிடை நீழலில் கண்டல் வாழும்
கழிசூழ் கலிக்காமூர்
ஆனிடை ஐந்துகந் தாடினானை
அமரர் தொழுதேத்த
நானடை வாம்வண மன்புதந்த
நலமே நினைவோமே (5)

என்பது ஐந்தாவது மணம் மிக்க வாடா நறுமலர். அடுத்து, குருகாவூர்[12] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். 'சுண்ண வெண் நீரணி' (3·124) என்ற முதற்குறிப்புடைய

---

11. கலிக்காமூர் (அன்னப்பன் பேட்டை): சீகாழி யிலிருந்து 7 கல் தொலைவிலுள்ளது. இத்தலத்தை சம்பந்தர் மட்டிலுமே பாடியுள்ளார்.

12. குருகாவூர் (திருக்கடாவூர்): சீகாழியிலிருந்து 3½ கல் தொலைவிலுள்ளது. இறைவன் சுந்தரருக்குக்

திருப்பதிகம் பாடி குருகாவூர் ஈசனைச் சேவிகின்றார். இதில்,

> அடையலர் தொல்நகர் மூன்றெரித் தன்ன
> நடைமட மங்கை யோர்பாகம் நயந்து
> விடையுகந் தேறுதிர் வெள்ளடை மேவிய
> சடையமர் வெண்பிறைச் சங்கரன் நீரே (3)

என்பது மூன்றாவது திருப்பாடல். இப்பதிகத்தில் 7, 8, 9, 10, 11 ஆம் பாடல்கள் காணப்பெறவில்லை. தவிர, 'குருகாவூர்' என்ற தலப் பெயர் ஒரு பாடலில்கூட குறிப்பிடப் பெறாதது வியப்பாகவே உள்ளது. காழிப் பிள்ளையாரின் கன்னித் தலப் பயணம் இத்துடன் நிறைவு பெறுகின்றது. சீகாழிக்குத் திரும்பித் தோணியப்பரை வழுத்தி 'உய்வகை மண்ணுளோருக்குதவிய பதிகம் பாடி' உவந்து காலம் கழிக்கின்றார். இப்பொழுதுதான் திருநீலகண்ட யாழ்ப் பாணர் தொடர்பு ஏற்படுகின்றது. இதனை அடுத்துக் காண்போம்.

---

கட்டமுது கொடுத்தருளினதை 7.29:15 என்ற சுந்தரர் தேவாரம் கூறும்.

# 3. திருநீலகண்ட யாழ்ப்பாணருடன் தல வழிபாடு

கோலக்காவிலிருந்து சீகாழிக்குத் திரும்பிய காழிப் பிள்ளையாரின் இசைப் பெருமை பல இடங்களுக்கும் பரவியது. தொண்டை நாட்டில் எருக்கந்தம் புலியூரைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த யாழ் வேந்தன் திருநீலகண்ட யாழ்ப்பாணரின் செவிக்கும் எட்டுகின்றது. பிற ஊர்களில் வசித்து வந்த இசைக் கலைஞர்களும் சீகாழியில் பச்சிளங் குழந்தையாகிய ஞானக் கன்று இசைத் துறையில் மேதையாகிச் செந்தமிழ்ப் பண்களை வாரி இறைத்துக் கொண்டிருந்ததைக் கேள்வியுறுகின்றனர். பழந்தமிழ் இசையாகிய பண் முறையில் பாடல் இயற்றும் இசைக் கலைஞர்கள் அருகிய காலத்தில் சண்பை வேந்தரின் தேவாரப் பதிகங்கள் ஒரு விதப் புதுமையைத் தருகின்றன.

**நீலகண்ட யாழ்ப்பாணர் தொடர்பு:** மதுரைச் சொக்கநாதர் சந்நிதியில் ஒரு நாள் யாழ் வாசித்தபின் அந்தப் பெருமானின் அருள் கிடைக்கின்றது. அன்று முதல் **திருநீலகண்ட யாழ்ப்பாணர்** தமது யாழ்வாசிப்பை இறைவனுக்கே அன்புப் படையலாக்கி வருகின்றார். அவர்தம் அருமைத் துணைவியார் **மதங்க சூளாமணி** தம் கணவர் யாழ் வாசிக்கும் போது அதற்குப் பொருத்தமாகப் பாடவல்ல பெருமாட்டியாக விளங்குகின்றார். இந்தத் தம்பதிகள் பல தலங்களைச் சேவித்து வரும் நாளில் சம்பந்தப் பெருமானின் அபூர்வ இசைஞானத்தைக் கேள்வியுற்று

சண்பை நகருக்கு வருகின்றனர். காழிப்பிள்ளையாரும் பெரும்பாணரின் பெரும் புகழைக் கேள்விப் பட்டிருந் தவராகையால், அவரை எதிர்கொள்ளத் தயாராக இருக் கின்றார். பாணர் உடனே சிவக்கன்றின் திருவடியில் வீழ்ந்து வணங்கி நிற்கின்றார். பின்னர் இருவரும் திருத்தோணிபுரத் திருக்கோயிலுக்குச் சென்று தோணி யப்பரை வழிபடுகின்றனர்.

பின்னர் இருவரும் கோயிலின் புறமுன்றிலுக்கு வரு கின்றனர். பிள்ளையார் பாணரை நோக்கி, 'ஐயா, இசையமைந்த யாழினை உங்கள் இறைவர்க்கு இயற்று மின்' என்று பிள்ளையார் பணித்தருள, பாணரும் பிள்ளையாரைத் தொழுது தந்திரியாழினை வீக்கி இசையாராய்ந்து இறைவனுக்குரிய பாணியினை ஏழிசை வல்ல தம் துணைவியாருடன் பாடுகின்றனர். யாவரும் இந்த இசையமுதத்தைச் செவியால் பருகி மகிழ்கின்றனர்; கவுணியக் கன்று இதனை மெச்சிப் பாரட்டுகின்றார்.

காழிப்பிள்ளையார், பாணரும் அவர்தம் பத்தினியாரும் தங்குதற்கேற்ற தனி இல்லம் அமைத்துத் தந்து நல்விருந்து அளித்து மகிழ்கின்றார். பின்னர் பிள்ளையார் அதுகாறும் பாடியருளிய திருப்பதிகங்களைக் கேட்டு உளம் உருகு கின்றார்; அவற்றைத் தம் யாழின் முறைமையில் வாசித்து எவ்வுயிரும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்து திளைக்குமாறு செய்கின்றார் 'ஏழிசையும் பணி கொண்ட திருநீலகண்ட யாழ்ப்பாணர்.' இதன் பின்னர் பாணர் பிள்ளையாரை நோக்கி, ''சுவாமி, தங்கள் இசைப்பாடலுக்கு அடியேன் யாழ் வாசிக்கும் பணியை நிரந்தரமாகவே வேண்டு கின்றேன்'' எனக் கேட்க, சம்பந்தப் பெருமானும் அதற்குச் சம்மதம் தெரிவிக்கின்றார். அன்று முதல் பெரும்பாணர் சம்பந்தர் அருளிச் செயல்கட்கு யாழ்வாசிக்கும் வழக்கம் நிலைபெற்று விடுகின்றது.

**பயணத் தொடக்கம்:** ஒரு நாள் தில்லைச் சிற்றம் பலப் பெருமானை வழிபடவேண்டும் என்ற எண்ணம்

பிள்ளையாரின் சிந்தையில் எழுகின்றது. தம் திருத் தந்தையார், திருநீலகண்ட யாழ்ப்பாணர், அடியார்கள் குழாம் இவர்களுடன் சீகாழிப்பதியினின்றும் தில்லையை[1] நோக்கிப் புறப்படுகின்றார். இதனைத் திருத்தலப் பயணத்தின் இரண்டாவது சுற்றாகக் கருதலாம். கொள்ளிட நதியைக் கடந்து செல்வம் மல்கிய தில்லையில் தென்றிசை வாயில் வழியாக திருக்கோயிலின் உட்புகுகின்றார்.[2] எழுநிலைக் கோபுரத்தைத் தொழுகின்றார்; பொன் மாளிகையினை வலம் வருகின்றார். பேரம்பலத்தை இறைஞ்சிக் கூத்தப் பெருமான் திருமுன்புள்ள திருவணுக்கன் வாயிலை அடைகின்றார். அண்ணலார் தமக்கு அளித்த மெய்ஞ் ஞானமாம் அம்பலமும் தம் உள்ளத்தில் நிறைந்த ஞானத்தின்கண் நிகழும் ஆனந்தமாகிய ஒரு பெருந்தனிக் கூத்தும் ஆகிய திருக்காட்சியைக் கண்ணினால் கண்டு களித்து வணங்குகின்றார். "உணர்வின் நேர் பெற வருஞ்சிவபோகத்தை உருவின்கண் அணையும் ஐம்பொறியளவினும் ஒளிவர அருளினை" எனப் போற்றுகின்றார். **கற்றாங்கெரியோம்பி** (1.80) எனத் தொடங்கும் செந்தமிழ் மாலையால் தில்லைவாழ் அந்தணர்களைச் சிறப்பிக்கின்றார். இதில்,

---

1. **கோயில்** (சிதம்பரம்): சிதம்பரம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து ¾ கல் தொலைவு. மிகப் பழங்காலத்தில் தில்லை மரங்கள் நிறைந்த வனமாக இருந்தது. வைணவர்கள் திரு அரங்கத்தைக் **கோயில்** என்று வழங்குவது போல சைவர்கள் சிதம்பரத்தைக் **கோயில்** என்று வழங்குவர். இங்கு நடராசர் கோவிந்தராசர் பேர் போனவர்கள். சமய குரவர் நால்வரும் வழிபட்ட தலம்.

2. பிள்ளையாரின் தில்லை வருகையைக் குறித்துச் சேக்கிழார் பெருமான் ஞானசம்ப. புராணம் 147—161 செய்யுட்களில் அற்புதமாக வருணிப்பர்; இவை படித்து அநுபவிக்க வேண்டியவை.

அலையார் புனல்சூடி ஆகத் தொருபாக
மலையான் மகளோடு மகிழ்ந்தா னுலகேத்தச்
சிலையா லெயிலெய்தான் சிற்றம் பலந்தன்னைத்
தலையால் வணங்குவார் தலையானார்களே (7)

என்பது ஏழாவது வாடாநறுமலர். முதல் முறை வந்த போது பாடியது இப்பதிகம்.

உயிர்கள் உய்யும் பொருட்டுக் கூத்தப்பெருமான் ஐந்தொழில் நாடகம் நடத்தும் பேரங்கமாகத் திகழும் தில்லை மூதூரில் தங்குவதற்கு அஞ்சி ஊருக்குக் கிழக்கே யுள்ள திருவேட்களம்[3] என்ற திருத்தலத்தைத் தாம் தங்கும் இடமாகக் கொள்கின்றார்; நாடோறும் கோயில் வந்து கூத்தப் பெருமானை வணங்கி வருகின்றார். வேட்களத் திறைவனை 'அந்தமும் ஆதியுமாகிய' (1·39) என்ற திருப்பதிகத்தால் வழுத்துகின்றார். இதில்,

பண்ணுறு வண்டறை கொன்றையலங்கல்
பால்புரை நீறுவெண் நூல்கிடந்த
பெண்ணுறு மார்பினர் பேணார்
மும்மதில் எய்த பெருமானே
கண்ணுறு நெற்றி கலிந்தவெண் திங்கள்
கண்ணியர் விண்ணவர் கைதொழுதேத்தும்
வெண்ணிற மால்விடை அண்ணல்
வேட்கள நன்னக ராரே. (5)

என்பது ஐந்தாவது திருப்பாடல். திருவேட்களத்தில் தங்கி யிருக்கும்போது அண்மையிலுள்ள சில தலங்களை வழிபடு கின்றார்.

---

3. திருவேட்களம் (சிதம்பரம்): இருப்பூர்தி நிலையத் திலிருந்து கிழ்த்திசையில் ஒரு கல் தொலைவிலுள்ளது. இப்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இருக்கும் அண்ணாமலை நகரின் கிழக்கெல்லையில் உள்ளது. பார்த்தன் பாசுபத அத்திரம் பெற்ற தலம். சம்பந்தரும் அப்பரும் பாடி வழிபட்ட தலம்.

முதலில் கழிப்பாலை [4] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். கழிப்பாலை ஈசனை இரண்டு செந்தமிழ் மாலைகளால் வழிபடுகின்றார். 'புனலாடிய புன்' (2·21) என்ற முதற்குறிப்புடையது முதல் செந்தமிழ் மாலை. இதில்,

முதிரும் சடையின் முடிமேல் விளங்கும்
கதிர்வெண் பிறையாய் கழிப்பா லையுளாய்
எதிர்கொள மொழியா விரந்தேத் துமவர்க்
கதிரும் வினையா யினஆ சறுமே. (7)

என்பது ஏழாவது வாடா நறுமலர். இரண்டாவது மாலை 'வெந்தருங்குலி' (3·44) என்ற முதற்குறிப்புடையது. இதில்,

துள்ளு மான்மறி யங்கையி லேந்தியூர்
கொள்வ னாரிடு வெண்தலை யிற்பலி
கள்வ னாருறை யுங்கழிப் பாலையை
உள்ளு வார்வினை யாயின வோயுமே. (6)

என்பது ஆறாவது நறுமலர்.

கழிப்பாலை ஈசனிடம் விடை பெற்றுக் கொண்டு நெல்வாயின் திருவுச்சி (சிவபுரி)[5] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். 'புடையினார் புள்ளி' (2·26) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகத்தில் வழிபடுகின்றார். இதில்,

---

4. கழிப்பாலை: (திருக்கழிப்பாலை): சிதம்பரம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 3 கல் தொலைவு. பழைய தலம் கொள்ளிடநதி வெள்ளத்தில் போயிற்று. இப்பொழு துள்ள கோயில் நெல்வாயில் அரத்துறையாகிய சிவபுரியில் ஒரு தனிக்கோயிலாக உள்ளது.

5. நெல்வாயில் திருவுச்சி (சிவபுரி): சிதம்பரம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 3 கல் தொலைவிலுள்ளது. சம்பந்தர் ஒருவராலேயே பாடப்பெற்ற தலம்.

விருத்த னாகிவெண் ணீறு பூசிய
கருத்த னார்கன லாட்டு கந்தவர்
திருத்த னாநெல் வாயில் மேவிய
ஒருத்த னாரெம துச்சி யாரே. (5)

என்பது ஐந்தாவது நறுமலர்.

திருவேட்களத்தில் தங்கியிருக்கும்போது ஒருநாள் திருநீலகண்ட யாழ்ப்பாணர் தில்லையம்பலத்தில் திருநடனம் புரிந்தருளும் திருவடிகளை அணுகிப்போற்றும் பேற்றினை விரும்புகின்றார். பாணனாரின் ஒழுக்கத்தின் விழுப்பத்தினை எண்ணிய பிள்ளையார் அன்பு நிறைந்த உள்ளத்தினராய்ப் பாணனாரை உடன் அழைத்துக் கொண்டு தில்லையம்பதிக்கு வருகின்றார். இந்நிலையில் கூத்தப்பெருமான் அருளால், தில்லை மூவாயிரவரும் சிவகணநாதர்களாய்த் தம் எதிரே தோன்றுகின்றனர். இவ்வழகிய காட்சியைப் பிள்ளையார் பெரும்பாணருக்குக் காட்டியருள்கின்றார். இதனைச் சேக்கிழார் பெருமான்,

அண்டத் திறைவர் அருளால் அணிதில்லை
முண்டத் திருநீற்று மூவா யிரவர்களும்
தொண்டத் தகைமைக் கணநாத ராய்த்தோன்றக்
கண்ட பரிசுபெரும் பாணர்க்கும் காட்டினார்.
(ஞானசம்பந் - 170)

என்று கூறுவர்.

பிள்ளையாரின் வருகையைக் கேட்ட தில்லைவாழ் அந்தணர்கள் எதிர்கொண்டு இறைஞ்சத் திருக்கோயிலினுட் புகுந்து சிற்றம்பலத்துள் நிறைந்தாடும் மாணிக்கக் கூத்தரை வழிபடுகின்றார். 'ஆடினாய் நறுநெய்யொடு' (3·1) என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ் மாலையால் போற்றுகின்றார்.

ஆடி னாய்நறு நெய்யொடு பால்தயிர்
அந்தணர் பிரியாத சிற்றம்பலம்
நாடி னாயிட மாநறுங் கொன்றை நயந்தவனே

பாடி னாய்மறை யோடுபல் கீதமும்
பல்சடைப் பனிகால்கதிர் வெண்டிங்கள்
சூடி னாயரு ளாய்சுருங்க எம் தொல்வினையே. (1)

என்பது முதல் வாடா நறுமலர். இதன் மூன்றாவது பாடலில் தாம் தில்லைவாழ் அந்தணர்களைச் சிவகண நாதர்களாகக் கண்ட காட்சியினைப் பிள்ளையார் தெளிவாக விளக்கியுள்ளமை கண்டு மகிழலாம்.

**தொடரும் பயணம்:** ஒருநாள் திருநீலகண்டப் பெரும் பாணர் பிள்ளையாரை வணங்கிப் பணிந்து, "அடியேன் பதி முதலாக வெள்ளாற்றின் (நிவாநதிக்) கரையிலுள்ள திருத்தலங்களைப் பணிந்திடல் வேண்டும்" என வேண்டு கின்றார்; அதற்குப் பிள்ளையாரும் இசைந்தருள்கின்றார். இருவரும் அடியார்கள் குழாத்துடன் மேற்கு நோக்கிப் பயணத்தைத் தொடர்கின்றனர்; திருவெருக்கத்தம் புலியூர் எல்லையை அடைகின்றனர். இந்நிலையில் பெரும் பாணர் பிள்ளையாரை வணங்கி, "கார், நெருங்கு சோலை சூழ் இப்பதி அடியனேன் பதி" என்கின்றார். இதனைக் கேட்டு மகிழ்ந்த பிள்ளையார், "ஐயர், நீர் அவதரித்திட்ட இப்பதி அளவில் மாதவம் முன்பு செய்தது" எனச் சிறப் புரைத்து[6] அருளுகின்றார்.

எருக்கத்தம்புலியூர் என்றால் இப்போது பலருக்குத் தெரியாது. இராஜேந்திரப் பட்டணம் என்றால்தான் தெரியும். முன்னொரு காலத்தில் நைமிசாரண்ய முனிவர்கள் இங்கு மரங்கள் வடிவமெடுத்து நின்று தவஞ் செய்தனர் என்றும், இந்த உண்மை அறியாத வேட்டுவர் அந்த மரங்களை வெட்ட முயன்றனர் என்றும், இதை

6. கண்ணன் தூது சென்றபோது விதுரன் மனைக்கு ஏகுகின்றான். விதுரன், 'நீ எய்தற்கு, என்ன மாதவம் செய்தது இச்சிறு குடில்!' என்கின்றான் (கிருட்டிணன் தூது—78). இந்த நிகழ்ச்சியுடன் ஒப்பிட்டு மகிழ்தல் தகும்.

புணர்ந்த இறைவன் அம்மரங்கள் யாவற்றையும் வெள்ளெருக்குகளாக்கிவிட்டனரென்றும், வெள்ளெருக்கு விறகுக்கு உதவாதாகையால் வெட்டாமல் விட்டனர் என்றும் ஒரு கதை வழங்குகின்றது. இந்தப் புராணக் கதைக்கு ஆதாரமாகத் தல விருட்சம் எருக்கஞ்செடியாக உள்ளமை கவனிக்கத்தக்கது.

பின்னர் இருவரும் எருக்கத்தம்புலியூர்[7] திருக்கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்குகின்றனர். பிள்ளையார், 'படையார் தருபூதம்' (1·89) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ் மாலையால் இறைவனைப் போற்றுகின்றார். இதில்,

> விண்ணோர் பெருமானே விகிர்தா விடையூர்தீ
> பெண்ணாண் அலியாகும் பித்தா பிறைசூடீ
> எண்ணார் எருக்கத்தம் புலியூர் உறைகின்ற
> அண்ணா எனவல்லார்க் கடையா வினைதானே. (3)

என்பது மூன்றாவது வாடா நறுமலர்.

எருக்கத்தம்புலியூரிலிருந்து திருமுது குன்றத்துக்கு[8] வருகின்றனர். பிள்ளையார் பழமலை நாதரை ஏழு செந்தமிழ்ச் சொல்மாலைகளால் வழிபடுகின்றார். 'மத்தாவரை நிறுவி' (1.12) என்ற முதற்குறிப்புடைய மாலையில்,

---

7. எருக்கத்தம்புலியூர் (இராஜேந்திரப் பட்டணம்) விருத்தாசலம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து தெற்கே 7 கல் தொலைவு. திருநீலகண்ட யாழ்ப்பாணர் அவதரித்தத் தலம். இத்தலத்து எம்பெருமான் பெயர் நீலகண்டர்; குமரேசர் என்றும் சொல்வர். தாயார் வீறா முலையம்மன்.

8. முதுகுன்றம் (விருத்தாசலம்). விருத்தாசலம் டவுன்ரோடு — இருப்பூர்தி நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. கோயில் சில அடிகளே உயரமுள்ள ஒரு சிறு கற்பாறையின் மீதுள்ளது. இதுவே விருத்தாசலம் அல்லது பழமலை. தல விநாயகர் பல படிகள் இறங்கிச் சென்று

ஏவார்சிலை எயினன் உரு
வாகி யெழில்விசயற்
கோவாதவின் னருள்செய்தவெம்
ஒருவர்க்கிட முலகில்
சாவாதவர் பிறவாதவர்
தவமேமிக உடையார்
மூவாதபன் முனிவர்தொழு
முதுகுன்றடை வோமே. (6)

என்பது ஆறாவது நறுமலர்.

'தேவராயும் அசுரராயும்' (1·53) என்ற முதற் குறிப்புடையது இரண்டாவது மாலை.

பாடு வாருக் கருளு மெந்தை
பனிமுது பௌவமுந்நீர்
நீடு பாரு முழுது மோடி
அண்டர் நிலைகெடவும்

---

சேரும் பள்ளமான இடத்திலுள்ளார். இங்கிருந்து தண்ணீர் செல்ல வழியிருப்பதால் பழமலையின் உயரத்தை ஊகிக்கலாம். கோயிலுக்கெதிரில் மணிமுத்தாறு ஓடுகின்றது. இத் தலத்தில் பதிகம் பாடி சுந்தரர் 12000 பொன் பெற்று இந்த ஆற்றிலிட்டு ஆரூர்க் குளத்தில் எடுத்த வரலாறு சிறப்புடையது. காசியில் இறந்தால் முத்தி கிடைப்பதுபோல் இத்தலத்தில் இறந்தால் சாரூப பதமுத்தி கிடைக்கும் (கந்த புராணம்). துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் முதலிய பல பெரியோர்கள் இத்தலத்தில் பெரிதும் ஈடுபட்டவர்கள். மாசி மகத்தைத் தீர்த்தமாகக் கொண்ட 10 நாள் விழாவில் 6ஆம் நாள் பகலில் இடபோத்ஸவம் பிரபலமானது. காசியிலும் வீசம் பெரியதால் இத்தலம் 'விருத்தகாசி' என்று கூறப் பெறுவதுண்டு.

நாடு தானு மூடு மோடு
ஞாலமு நான்முகனும்
ஊடு காண மூடும் வெள்ளத்து
உயர்ந்தது முதுகுன்றே (4)

என்பது இம்மாலையின் நான்காவது நறுமலர்.

'நின்று மலர் தூவி' (1-93) என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ் மாலை மூன்றாவது. இதில்,

நின்று மலர் தூவி
இன்று முதுகுன்றை
நன்றும் ஏத்துவீர்க்(கு)
என்றும் இன்பமே. (1)

இருவர் அறியாத
ஒருவன் முதுகுன்றை
உருகி நினைவார்கள்
பெருகி நிகழ்வோரே. (9)

என்பவை முதலாவது, ஒன்பதாவது நறுமணம் மிக்க வாடா மலர்கள்.

'மெய்த்தாறு சுவையும்' (1.131) என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ்ச் சொல்மாலை நான்காவது.

மேனியிற்சீ வரத்தாரும் விரிதருதட்
டுடையாரும் விரவலாகா
ஊனிகளா யுள்ளார்சொற் கொள்ளாது
முள்ளுணர்ந்தங் குய்மின்தொண்டீர்
ஞானிகளா யுள்ளார்கள் நான்மறையை
முழுதுணர்ந்தைம் புலன்கள்செற்று
மோனிகளாய் முனிச்செல்வர் தனித்திருந்து
தவம்புரியும் முதுகுன்றமே. (10)

என்பது பத்தாவது வாடா நறுமலர்.

'தேவாசிறியோம்' (2·64) என்ற முதற்குறிப்புடைய பதிகம் ஐந்தாவது. இதில்,

அல்லிமலர்மேல் அயனும்
அரவின் அணையானும்
சொல்லிப் பரவித்
தொடரவொண்ணா சோதியூர்
கொல்லை வேடர்
கூடிநின்று கும்பிட
முல்லைஅயலே முறுவல்
செய்யும் முதுகுன்றே. (9)

என்பது ஒன்பதாவது பாடல். ஆறாவது சொல்மாலை 'வண்ண மாமலர்" (3·34) என்ற முதற் குறிப்பையுடையது. இதில்,

கடிய வாயின குரற்களிற் றினைப் பிளிறவோர்
இடிய வெங்குரலி னோடாளிசென் றிடுநெறி,
வடிய வாய்மழு வினன்மங்கையோ டமர்விடம்
செடிய தார்புற வணிதிரு முதுகுன்றமே (5)

என்பது ஐந்தாவது வாடா நறுமலர். 'முரசதிர்ந் தெழுதரு' (3·99) என்று தொடங்கும் பதிகம் ஏழாவது. இதில்,

முழவமர் பொழிலணி முதுகுன்ற மேவிய
மழவிடை யதுவுடை யீரே
மழவிடை யதுவுடை யீருமை வாழ்த்துவார்.
பழியொரு பகையிலர் தாமே. (3)

என்பது மூன்றாவது மலர். இந்தப் பதிகத்தில் 5, 6, 7-ஆம் பாடல்கள் காணப்பெறவில்லை.

பழமலை நாதரிடம் விடை பெற்றுக்கொண்டு பெண்ணாகடம்[9] வருகின்றார். 'ஒடுங்கும்பிணி' (1·59)

---

9. பெண்ணாகடம்: விழுப்புரம் - திருச்சி இருப்பூர்தி வழியிலுள்ள பெண்ணாகடம் என்ற நிலையத்திலிருந்து 1 கல் தொலைவு. தலப்பெயர் சுருக்கமாகக் கடந்தை

என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ் மாலையைப் பாடி இறைவனை வழிபடுகின்றார். இந்த மாலையில்,

பன்னீர்மை குன்றிச் செவிகேட்பிலா
    படர்நோக்கிற் கண்பவளந்நிற
நன்னீர்மை குன்றித் திரைத்தோலொடு
    நரைதோன்றும்காலம் நமக்காதல்முன்
பொன்னீர்மை துன்றப் புறந்தோன்று
    நற்புனல்பொதிந்த புன்சடையினானுறையும்
தொன்னீர்க் கடந்தை தடங்கோயில்சேர்
    தூங்கானைமாடம் தொழுமின்களே. (6)

என்பது ஆறாவது வாடா நறுமலர்.

**முத்துச்சிவிகை முதலியன பெறுதல் :** பெண்ணாகடம் இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு நெல் வாயில் அரத் துறை[10] என்ற திருத்தலத்தை நோக்கிப் புறப்படுகின்றார். இதற்கு முன்எல்லாம் வழிநடை இளைப்பு நீங்க ஒவ்வொரு சமயம் தம் தந்தையார் தோளின்மேல்

---

என்றும், ஆலயப் பெயர் தூங்கானை மாடம் என்றும் வழங்கும். கலிக்கம்ப நாயனார் தலம். அப்பர் பெருமான் தம்மைச் சிவன் சொத்து என்று உலகறியச் சூலக்குறியும் இடபக்குறியும் தமது தூல உடலில் பொறிக்கும்படி வேண்டி அவ்வாறே பெற்ற அற்புதத் தலம். அச்சுத களப்பாளர் என்ற வேளாளர் திருவெண்காட்டு முக்குள நீராடி வழிபாடு செய்து மெய்கண்டார் என்ற புதல்வரைப் பெற்ற தலம். மெய்கண்டார் சிவஞான போதம் அருளிச் செய்து திருக்கயிலாய பரம்பரையைத் தாபித்த சந்தான முதற்குரவர்.

10. நெல்வாயில் அரத்துறை : பெண்ணாகடம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 4 கல் தொலைவு. நிவா என்னும் வெள்ளாற்றங்கரையிலுள்ளது. சம்பந்தருக்கு முத்துச் சிவிகை, குடை, சின்னங்கள் சிவபெருமானால் தரப்பெற்ற அற்புதத் தலம்.

அமர்ந்து செல்லும் பழக்கமுடைய பிள்ளையார் திருவரத் துறையினை நோக்கிச் செல்லும்போது அப்பழக்கத்தை விடுத்து நடந்து செல்கின்றார். மலரினும் மெல்லிய திருவடிகள் தரையிற்பட்டு வருந்த விரைந்து நடக்கின்றார். இது கண்டு தந்தையாரும் பரிவுறுகின்றார். பிள்ளையார் திருவைந் தெழுத்தினை ஓதிக் கொண்டு மாறன்பாடி என்ற ஊரினை அடைவதற்கு முன்னர்க் கதிரவனும் மேற் றிசையில் மறைகின்றான். அன்றிரவு பிள்ளையாரும் அடியார்களும் மாறன்பாடியிலேயே தங்குகின்றனர்.

பிள்ளையாரது வழிநடை வருத்தத்தைத் திருவுளங் கொண்ட அரத்துறையீசன் நெல்வாயிலிலுள்ள மறை யோரின் கனவில் தோன்றி "ஞானசம்பந்தன் நம்மை நோக்கி வருகின்றான். அவனுக்கென முத்துச் சிவிகை, குடை, சின்னம் ஆகியவற்றை நம்பாற் பெற்றுக்கொண்டு அவனையடைந்து கொடுப்பீர்களாக" என அருள்செய்து மறைந்தருளுகின்றார். அஃதுணர்ந்த மறையவர் அனை வரும் வியப்புற்று விழித்தெழுகின்றனர்; தாம் கனவில் கண்ட காட்சியை ஒருவருக்கொருவர் கூறி மகிழ்கின்றனர். அருணோதயத்தில் அரத்துறைக் கோயிலைத் திறந்து பார்க்கும்போது முத்துச் சிவிகை, முத்துக் குடை, முத்துச் சின்னம் என்பன இருத்தலைக் கண்டு மகிழ்கின்றனர். அவற்றையெடுத்துக் கொண்டு மங்கல ஒலி முழங்க காழிப் பிள்ளையாரை எதிர்கொண்டழைக்கச் செல்லுகின்றனர்.[11]

அரத்துறை இறைவன் பிள்ளையார் கனவிலும் தோன்றி, "நாம் அரத்துறை வாழும் வள்ளல். யாம் மகிழ்ந்தளிப்பனவற்றை நீ ஏற்றுக்கொள்ளலாம்" என்று கூறி மறைகின்றார். சண்பை வேந்தரும் திருவைந்தெழுத் தோதி எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு இறைவன் திருவருளை சிந்தித்தவண்ணம் அமர்ந்திருக் கின்றார். இந்நிலையில் அரத்துறை மறையவர்கள் காழிப்

11. பெ. பு: ஞானசம்பந்

பிள்ளையார் தங்கியிருக்கும் இடம் ஏகி, "அந்தமில்சீர் அரத்துறை ஆதியார் தந்த பேரருள் தாங்குவீர்" எனப் பணிந்து தமக்கு இறைவன் உணர்த்திய அனைத்தையும் எடுத்துரைத்துத் தாம் கொணர்ந்த பொருள்களை பிள்ளையாரிடம் சமர்ப்பிக்கின்றனர்.

ஆளுடைய பிள்ளையார் இறைவனது பேரருளை நினைந்து 'எந்தையீசன்' (2.90) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ்ச் சொல்மாலையால் அரத்துறை ஈசனை ஏத்துகின்றார். இதன் முதற் பாடல்,

**எந்தை யீசனெம் பெருமான்**
**ஏறமர் கடவுளென் றேத்திச்**
**சிந்தை செய்பவர்க் கல்லாற்**
**சென்றுகை கூடுவ தன்றால்**
**கந்த மாமலர் உந்திக்**
**கரும்புனல் நிவாமல்கு கரைமேல்**
**அந்தணர் சோலைநெல் வாயில்**
**அரத்துறை அடிகள்தம் அருளே.** (1)

என்பது. ஒவ்வொரு பாடலும் 'அரத்துறை யடிகள்தம் அருளே' என்று முடிவது கண்டு இன்புறத் தக்கது. பின்னர், பிள்ளையார் திருவைந் தெழுத்தோதி முத்துச் சிவிகையில் ஏறியமர்கின்றார்; குடை நிழற்றத் திருச்சின்னம் ஊத அரத்துறை ஆலயத்தை அடைகின்றார். இந்த இடத்தில் சேக்கிழாரின் வருணனை[12] படித்து இன்புறத் தக்கது; காட்சிகளை மனத் திரையில் அமைத்து மகிழத் தக்கது. சில நாட்கள் அரத்துறையிலேயே தங்கி விடுகின்றார் காழி வேந்தர்.

அரத்துறை ஈசனிடம் விடை பெற்றுக் கொண்டு நெல் வெண்ணெய்[13] என்ற தலத்திற்கு வருகின்றார். 'நல்

12. ஷை ஷை 216-224.

13. நெல் வெண்ணெய் (நெய் வெண்ணெ): விழுப்புரம் விருத்தாசலம் இருப்பூர்தி வழியிலுள்ள உளுந்தூர்ப்

வெண்ணெய் (3.96) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடி ஏத்துகின்றார் இத்தலத்து இறைவனை. இதில்,

> நீர்மல்கு தொல்புகழ் நல்வெணெய் மேவிய
> ஊர்மல்கி உறையவல்லீரே
> ஊர்மல்கி உறையவல் லீர்உமை யுள்குதல்
> பார்மல்கு புகழவர் பண்பே. (4)

என்பது நான்காவது பாடல்.

நெல் வெண்ணெய் ஈசனிடம் விடை பெற்றுக் கொண்டு பழுவூர்[14] என்ற திருத்தலத்தை அடைகின்றார் சீகாழி ஞானக் கன்று. இத்தலத்துப் பெருமான்மீது 'முத்தன் மூவிலை' (2.34) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ்ப் பாமாலை பாடிப் பரவுகின்றார். இதில்,

> எண்ணுமொ ரெழுத்துமிசை
> யின்கிளவி தேர்வார்
> கண்ணுமுத லாயகட
> வுட்கிடம தென்பர்
> மண்ணின்மிசை யாடிமலை
> யாளர்தொழு தேத்திப்
> பண்ணினொலி கொண்டுபயில்
> கின்றபழு வூரே. (4)

என்பது நான்காவது பாடல்.

பழுவூர்ப் பரமரிடம் விடைபெற்றுக் கொண்டு 'விசய மங்கை[15] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். வந்தவர்

---

பேட்டை நிலையத்திலிருந்து 4 கல் தொலைவு. சம்பந்தரது பாடல் மட்டிலுமே பெற்றுள்ளது இத்தலம்.

14. பழுவூர் : விருத்தாசலம் — திருச்சி இருப்பூர்தி வழியில் கல்லகம் என்ற நிலையத்திலிருந்து 4 கல் தொலைவு.

15. விசயமங்கை : தஞ்சாவூர் — மயிலாடுதுறை இருப்பூர்தி வழியிலுள்ள சுந்தரப் பெருமாள் கோயில்

'மருவமர்' (2.17) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடிப் போற்றுகின்றார். இதில்,

> தோடமர் காதினன்; துதைந்த நீற்றினன்;
> ஏடமர் கோதையோ டினித மர்விடம்;
> காடமர் மாகரி கதறப் போர்த்ததோர்;
> வேடம துடையண்ணல் விசய மங்கையே. (5)

என்பது ஐந்தாவது பாடல். விசய மங்கையிலிருந்து வைகாலூர்[16] என்ற திருத்தலத்துக்கு வருகின்றார் திருஞான சம்பந்தர். 'கோழைமிடறாக' (3.71) என்ற முதற் குறிப் புடைய செந்தமிழ் மாலை பாடி வைகாலூர் இறைவனை வழுத்துகின்றார்.

> இன்னவுரு இன்னநில மென்றறிவ
> தேலரிது நீதி பலவும்
> தன்னவுரு வாமென மிகுத்தவன்
> நீதி யொடுதா னமர்விடம்
> முன்னைவினை போய்வகையி னால்முழு
> துணர்ந்துமுயல் கின்ற முனிவர்
> மன்னஇரு போதுமரு வித்தொழுது
> சேரும்வயல் வைகா விலே. (4)

என்பது நான்காவது மலர்.

வைகாலூர் இறைவனிடம் விடை பெற்றுக் கொண்டு புறம்பயம்[17] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். 'மறம்

---

(கும்பகோணத்திற்கு மேற்கில்) என்ற நிலையத்திலிருந்து 4 கல் தொலைவு. விசயன் (= அருச்சுனன்) வழிபட்டு வரம் பெற்றதை அப்பரின் 6.11:18 என்ற பாசுரம் கூறும்.

16. வைகாலூர் : சுந்தரப் பெருமாள் கோயில் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 5 கல் தொலைவு. கும்ப கோணத்திலிருந்து 5 கல் தொலைவே.

17. புறம்பயம் (திருப்புறம்பியம்): கும்பகோணத்தி லிருந்து 6 கல் தொலைவு. இங்கு சங்க காலத்தில்

பயமலைந்தவர்' (2.30) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ்ப் பதிகம் பாடிப் புறம்பயம் அமர்ந்த பெருமானை வழுத்துகின்றார்.

> விரிந்தனை குவிந்தனை விழுங்குயி ருமிழ்ந்தனை
> திரிந்தனை குருந்தொசி பெருந்தகையு நீயும்
> பிரிந்தனை புணர்ந்தனை பிணம்புகு மயானம்
> புரிந்தனை மகிழ்ந்தனை புறம்பய மமர்ந்தோய். (3)

என்பது இப்பதிகத்தின் மூன்றாவது பாடல்.

புறம்பயத் தீசனிடம் விடை பெற்றுக் கொண்டு சேய்ஞலூர்[18] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். 'நூலடைந்த' (1.48) என்ற செந்தமிழ்ச் சொல் மாலையால் இத்தலத்துப் பெருமானைப் போற்றுகின்றார்.

> நூலடைந்த கொள்கை யாலே
> நுன்னடி கூடுதற்கு
> மாலடைந்த நால்வர் கேட்க
> நல்கிய நல்லறத்தை
> ஆலடைந்த நீழல் மேவி
> யருமறை சொன்னதென்னே
> சேலடைந்த தண்கழனி சேய்ஞலூர்
> மேய வனே. (1)

என்பது இப்பதிகத்தின் முதற் பாடல்.

---

பாண்டியனுக்கும் சோழனுக்கும் போர் நடந்தது. கோச்செங்கட்சோழன் வெற்றி பெற்றுத் தென்னவனாய் உலகாண்டான் (சுந்த. 7.39; 11). திருமருகல் வரலாற்றைப் போல் இங்கு ஒரு வணிகப் பெண்ணின் திருமணத்தை மெய்ப்பிக்க இறைவன் சாட்சி சொல்லியதால் தலத்து இறைவனுக்குச் சாட்சிநாதன் என்று பெயர் வழங்குகின்றது.

18. சேய்ஞலூர் : ஆடுதுறை (இருப்பூர்தி நிலையம்): நிலையத்திலிருந்து 7 கல் தொலைவு. முருகப்பிரான் பூசித்த தலங்களுள் ஒன்று. சண்டேசுவர நாயனார் அவதரித்துப் பூசித்து முத்தி பெற்ற தலம்.

சேய்ஞலூர் மேயவனிடம் விடை பெற்றுக் கொண்டு பனந்தாளுக்கு[19] வருகின்றார். 'கண் பொலி நெற்றி' (3.62) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ்ப் பாமாலையால் சேவிக்கின்றார்.

சூழ்தரு வல்வினையும்
  உடல்தோன்றிய பல்பிணியும்
பாழ்பட வேண்டுதிரேல்
  மிகஏத்துமின் பாய்புனலும்
போழிள வெண்மதியும்
  மனல்பொங்கா வும்புனைந்த
தாழ்சடை யான்பனந்தாள்
  திருத்தாடகை யீச்சரமே. (4)

என்பது நான்காவது நறுமணம் கமழும் வாடாமலர்.

தாடகையிச்சர ஈசனிடம் விடைபெற்றுக் கொண்டு பந்தணை நல்லூர்[20] வருகின்றார். 'இடறினார் கூற்றை' (3.121) என்ற செந்தமிழ்ச் சொல்மாலை கொண்டு பசுபதி யாரைப் பரவுகின்றார்.

---

19. பனந்தாள் (திருப்பனந்தாள்) : ஆடுதுறையிலிருந்து 6 கல் தொலைவு. பேருந்து வசதி உண்டு. தாடகை என்னும் அசுரப் பெண் வழிபடும்போது அவள் உடை நெகிழ, அவள் கையிற் சேர்த்தணைத்து வழிபாட்டை விடாது செய்ய, மூலத்தான் மூர்த்தி சாய்ந்து வழிபாட்டை ஏற்றனன். இதை நிமிர்த்த மன்னன், யானைகளால் கயிறு சாத்தி இழுத்து முயன்றான். குங்குலியக் கலிய நாயனார் தம் கழுத்தில் கயிறு சாத்தி இழுக்க, அன்புக்குச் சாய்ந்த பரமன் அன்புக்காகவே நிமிர்ந்தனன். குமரகுருபர அடிகள் நிறுவிய காசி மடத்தின் தலைமைத் தானம் இது.

20. பந்தணை நல்லூர்: குத்தாலம் என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து 6 கல் தொலைவு.

காட்டினா ரெனவும் நாட்டினா ரெனவும்
கடுந்தொழிற் காலனைக் காலால்
வீட்டினா ரெனவும் சாந்த வெண்ணீறு
பூசியோர் வெண்மதி சடைமேல்
சூட்டினா ரெனவும் சுவடுதா மறியார்
சொல்லுள சொல்லுநால் வேதப்
பாட்டினார் போலும் பந்தணை நல்லூர்
நின்றஎம் பசுபதி யாரே. (3)

*என்பது மூன்றாவது சொல்மலர். இது முதல் வருகையின் போது பாடியது.*

*பந்தணை நல்லூர் பசுபதியாரிடம் விடை பெற்றுக் கொண்டு* ஓமாம் புலியூருக்கு[21] *வருகின்றார்.* ‘பூங்கொடி மடவாள்’ (3. 122) *என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ்ப் பாமாலையால் சேவிக்கின்றார்.*

பாங்குடைத் தவத்துப் பகீரதற் கருளிப்
படர்சடைக் கரந்தநீர் கங்கை
தாங்குதல் தவிர்த்துத் தராதலத் திழிந்த
தத்துவன் உறைவிடம் வினவில்
ஆங்கெரி மூன்றும் அமர்ந்துட னிருந்த
அங்கையா லாகுதி வேட்கும்
ஓங்கிய மறையோர் ஓமமாம் புலியூர்
உடையவர் வடதளி யதுவே. (3)

*என்பது மூன்றாவது நறுமணம் மிக்க வாடாத சொல்மலர்.*

---

21. ஓமாம் புலியூர்: *குத்தாலம் என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து* 11 கல் *தொலைவு. (கொள்ளிடத்தைக் கடக்க வேண்டும்). சிதம்பரத்திலிருந்து* 19 கல் *தொலைவு. காட்டு மன்னார்குடி வழியாகப் பேருந்து மூலமாகவும் போகலாம்.*

ஓமாம் புலியூர் வடதளியாரிடம் விடைபெற்றுக் கொண்டு வாள்கொளிப் புத்தூர்[22] என்ற திருத்தலத்துக்கு வருகின்றார். 'பொடியுடை மார்பினர்' (1.40) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ் மாலையால் சேவிக்கின்றார்.

அளைவளர் நாக மசைந்தன லாடி
யலர்மிசை அந்தணன் உச்சிக்
களைதலை யிற்பலி கொள்ளும்
கருத்தனே கள்வனே என்னா
வளையொலி முன்கை மடந்தையொர் பாக
மாயவன் வாழ்கொளி புத்தூர்த்
தளையவிழ் மாமலர் தூவித் தலைவன
தாளிணை சார்வோம். (6)

என்பது ஆறாவது சொல்மலர். 'சாகையாயிரம்' (2.94) என்ற முதற் குறிப்புடைய இன்னொரு பதிகத்தாலும் பரவு கின்றார். இதில்,

நொடியோ ராயிர முடையார்
நுண்ணிய ராமவர் நோக்கும்
வடிவு மாயிர முடையார்
வண்ணமு மாயிர முடையார்
முடியு மாயிர முடையார்
மொய்குழ லாளையு முடையார்
வடிவு மாயிர முடையார்
வாழ்கொளி புத்தூர் உளாரே. (3)

என்பது இப்பதிகத்தின் மூன்றாவது பாடல்.

---

22. வாள்கொளிப் புத்தூர் (திருவாளப்புத்தூர்). வைத்தீஸ்வரன் கோயிலிலிருந்து 5 கல் தொலைவு. வாள் ஒளிப் புற்றூர், வாள் ஒளிக்கப்பட்ட புற்று உள்ள ஊர் என்றும் கூறப்படுகின்றது.

புத்தூர் பெருமானிடம் விடை பெற்றுக் கொண்டு கடம்பூர் [23] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். 'வானமர் திங்களும்' (2·68) என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ் மாலையால் கடம்பூர் ஈசனைச் சேவிக்கின்றார்.

தீவிரியக் கழலார்ப்பச்
சேயெரிகொண் டிடுகாட்டில்
நாவிரிகூந் தனற் பேய்கள்
நகைசெயநட் டம்நவின்றோன்
காவிரிகொன் றைகலந்த
கண்ணுதலான் கடம்பூரில்
பாவிரிபா டல்பயில்வார்
பழியொடு பாவமிலாரே. (5)

என்பது ஐந்தாவது நறுமணம் மிக்க சொல்மலர்.

கடம்பூர் பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு நாரையூர்[24] வருகின்றார். இந்த ஊர்ப் பெருமான்மீது சம்பந்தர் மூன்று பதிகங்கள் பாடியுள்ளார். 'உரையினிடல் வந்த' (2.86) என்ற முதற் குறிப்புடைய பதிகத்தில்,

---

23. கடம்பூர் : சிதம்பரத்திலிருந்து 15 கல் தொலைவு. காட்டு மன்னார் குடியிலிருந்து 3 கல் தொலைவு. சிதம்பரத்திலிருந்து காட்டு மன்னார் கோயிலுக்குப் பேருந்து வசதி உண்டு. ஆலயம் கரக்கோயில். இரதம், சக்கரம், குதிரை யமைந்துள்ள சிற்பமுறையில் மூலத்தானம்.

24. நாரையூர் (திருநாரையூர்) : சிதம்பரத்திலிருந்து 10 கல் தொலைவு. பேருந்து வசதி உண்டு. காட்டு மன்னார் கோவில் செல்லும் வழி. நம்பியாண்டார் நம்பி பிறந்த ஊர். நம்பி பொல்லாப் பிள்ளையாரிடம் கற்ற நிகழ்ச்சி, திருமுறை கண்ட வரலாறு இந்தப் பிள்ளையாரை பொறுத்தது. சுவையான வரலாறு.

தீயுற வாயஆக்கை யதுபற்றி வாழும்
விளைசெற்ற வுற்ற வுலகின்,
தாயுறு தன்மையாய தலைவன்றன் நாமம்
நிலையாக நின்று மருவும்,
பேயுற வாயகானில் நடமாடி கோல
விடமுண்ட கண்டன் முடிமேல்
தேய்பிறை வைத்துகந்த சிவன் மேய
செல்வத் திருநாரையூர் கைதொழலே. (4)

என்பது நான்காவது பாடல். அடுத்தது, 'காம்பினைவென்ற' (3.102) என்ற முதற் குறிப்புடையது.

மாயவன் சேயவன் வெள்ளியவன்
விடஞ்சேரும் மைமிடற்றன்
ஆயவ னாகியொ ரந்தரமும்
அவனென்று வரையாகம்
தீயவன் நீரவன் பூமியவன்
திருநாரை யூர்தன்னில்
மேயவ னைத்தொழு வாரவர்
மேல்வினை யாயின வீடுமே. (3)

என்பது இதன் மூன்றாவது பாடல். மூன்றாவது திருப்பதிகம் 'கடலிடை வெங்கடு' (3.107) என்ற முதற் குறிப்புடையது.

ஊழியு மின்பமுங் கால மாகி
யுயரும் தவமாகி
ஏழிசை யின்பொருள் வாழும் வாழ்க்கை
வினையின் புணர்ப்பாகி
நாழிகை யும்பல ஞாயி றாகி
நளிர்நாரை யூர்தன்னில்
வாழியர் மேதகு மைந்தர் செய்யும்
வகையின் விளைவாமே. (7)

என்பது இப்பதிகத்தின் ஏழாம் பாடல்.

நாரையூர்ப் பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு கருப்பறியலூர்[25] வருகின்றார். இத்தலத்துப் பெருமானை 'சுற்ற மொடு பற்றவை' (2·31) என்ற திருப்பதிகத்தால் வழிபடுகின்றார். இத்தலம்தான் இச் சுற்றுத்தலப் பயணத்தில் இறுதியாக வழிபட்டது. இதனை முடித்துக் கொண்டு சீகாழி வந்து விடுகின்றார். இச்சுற்றின் முடிவில் பிள்ளையார் கழுமலத்திற்குத் திரும்பியபோது ஊர்ப் பெருமக்களும் சிவனடியார்களும் அவரை வரவேற்ற சிறப்பினைச் சேக்கிழார் வாக்கினால்தான் அநுபவிக்க வேண்டும்.[26] இச்சுற்றிலுள்ள தலங்களைப் படம் வரைந்து குறிப்பிட்டால் ஒன்றை விட்டு ஒன்று அண்மையிலிருப்பது தெரியவரும்.

25. கருப்பறியலூர்: (தலை ஞாயிறு): வைத்தீஸ்வரன் கோயிலிலிருந்து 5 கல் தொலைவு. கோயில் பெயர் 'கொகுடிக் கோயில்.'

26. பெ. பு: ஞானசம்பந்தர். (256 — 262).

# 4. கழுமல நிகழ்ச்சிகள்

சம்பந்தப் பிள்ளையார் சீகாழிப்பதியில் அமர்ந் திருக்கும்பொழுது அவருக்கு ஏழாண்டுப் பருவம் வந்துறு கின்றது.[1] ஒரு பிறப்பும் நேராதபடி அம்பிகையூட்டிய ஞானப்பாலால் சிவஞானம் பெற்ற பிள்ளையாருக்கு அருமறை அந்தணர்கள் தம் குலத்தின் இருபிறப்பின் நிலைமையினைச் சடங்கு காட்டி எய்துவிக்கும் உப நயனச் சிறப்பினை உலகியல் முறைப்படி செய்கின்றனர். மான் தோலுடன் அமைந்த முப்புரி நூலினை அணிந்து 'மறை நான்கும் தந்தோம்' என்று மொழிந்த மறையோர்கட்குப் பிள்ளையார்தம் புனிதவாக்கால் எண்ணிறந்த புனித வேதங்களை இயம்பியருளினார் என்று சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகின்றார்.[2] மறைவல்லோர்கள் தாம் தாம் ஓதிப் பயிற்சி பெற்ற மறைகளில் தமக்கு உண்டான ஐயங்களைப் பிள்ளையாரிடம் கேட்டுத் தெளிவு பெறு கின்றனர். மந்திரங்கள் யாவும் தோன்றுவதற்கு ஏதுவாகிய மூலமந்திரம் திருஐந்தெழுத்தே என்ற உண்மையினை வேதியப் பெருமக்களுக்கு உணர்த்தக் கருதுகின்றார்

1. மூன்றாண்டுப் பருவத்தில் பாடத் தொடங்கிய பிள்ளையார் மூன்று ஆண்டுக் காலத்தில் திருத்தலப் பயணத்தை மேற்கொண்டு இருபது தலங்கட்குமேல் சேவித்ததை நினைக்கும்போது நாம் வியப்புக் கடலில் ஆழ்கின்றோம்.

2. பெ. பு: ஞானசம்பந்-264.

காழிப் பிள்ளையார். உடனே 'துஞ்சலும் துஞ்சலிலாத போதிலும்' (3.22) என்ற முதற் குறிப்புடைய பஞ்சாக்கரத் திருப்பதிகத்தைப் பாடியருளுகின்றார். இதன்கண்,

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே. (2)

என்ற இரண்டாவது திருப்பாடல் அருமறையந்தணர் சந்தியாவந்தன காலங்களிலும் சிறப்பாக அந்திக்காலத் திலும் ஓத வேண்டிய திருமந்திரம் 'சிவய நம' என்ற திருவைந்தெழுத்தே என்று வலியுறுத்துவதைக் காணலாம். ஐந்தெழுத்தின் பெருமையைப் பிள்ளையார்,

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாம நமச்சி வாயவே. (3.49:1)

என்று பிறிதோரிடத்திலும் கூறுவதைக் காணலாம்.

உலகியல் முறைப்படி உபநயனச் சடங்கு நிகழ வேண்டிய பருவம் ஏழாண்டு என்பது மரபாக நடைமுறை யிலிருப்பது. இதனைச் சேக்கிழார் பெருமானும்,

நிகழும் முறைமை ஆண்டேழும்
  நிரம்பும் பருவம் வந்தெய்தப்
புகழும் பெருமை உபநயனப்
  பொருவில் சடங்கு முடித்து[3]

என்று கூறியிருப்பதைக் காணலாம். வைதிக நூல்களிலும் உபநயனச் சடங்கு நடைபெற வேண்டுவது ஏழாண்டுப் பருவத்திலேயே என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. ஞான சம்பந்தர் முதல் சுற்றுப்பயணத்தில் பல தலங்களைச்

3. பெ.பு: சண்டேசு-14.

சேவித்தும் ஆங்காங்கே சில நாட்கள் தங்கியும் வந்த நிகழ்ச்சிகளை நோக்கும்போது இந்தக் காலம் மூன்றாண்டுகளாவது கடந்த காலம் என்பதை ஊகிக்கலாம். ஆகவே, பிள்ளையாருக்கு ஆறுவயது நிரம்பி ஏழாம் வயது தொடங்கிய காலத்தில்தான் உபநயனச் சடங்குகள் நடைபெற்றிருத்தல் வேண்டும் என்பது ஒருவாறு துணியப்படும்.

நவுக்கரசர் நட்பு: உபநயனம் முடிந்து சண்பை வேந்தர் சீகாழிப்பதியில் தங்கியிருக்கும்போது தில்லையம்பலப் பெருமானை வணங்க வருகின்றார் சிதம்பரத்திற்கு. இதற்கு முன்னரே காழிப் பிள்ளையார் மூவாண்டுப் பருவத்திலேயே சிவஞானம் பெற்ற அற்புத நிகழ்ச்சியை அடியார்கள்மூலம் கேள்வியுற்றிருந்தார் நாவுக்கரசர். இப்போது பிள்ளையாரைக் காணவேண்டும் என்று பேரார்வத்துடன் சீகாழிக்கு எழுந்தருள்கின்றார். அமைச்சர் முதலியோர் வருகையைச் சட்டமன்ற உறுப்பினர்கள், கட்சித் தொண்டர்கள்மூலம் அறிவதுபோல், கல்லே புணையாகக் கடலினைக் கடந்த திருநாவுக்கரசர் தம்மைக் காணும்பொருட்டுக் காழிப்பதியின் எல்லையில் வந்தணைந்தார் என்பதைப் பிள்ளையார் கேள்வியுறுகின்றார் அடியார்கள் மூலம். உடனே அடியார்களும் அன்பர்களும் புடைசூழ நாவுக்கரசரை நகர் எல்லையிலேயே எதிர்கொண்டு வரவேற்கின்றார்.

உள்ளத்துப்பெருகி வழியும் இடையறாத பேரன்பாலும் மூப்பின் தளர்ச்சியாலும், சிவானந்தவிளைவின் மிகுதியாலும் திருமேனியில் தோன்றிய அசைவும் உடுத்த கந்தையும் மிகையெனக் கருதும் துறவுள்ளமும், உழைப்பே பெரிதெனக் கொண்டதற்கு அடையாளமாகத் தாங்கியுள்ள உழவாரப்படையும், இறைவனை இடையறாது நைந்து உருகுதலால் கண்களிலிருந்து மழைபோல் சொரியும் கண்ணீரும் பொன்மேனியிற் பூசப்பெற்ற திருவெண்ணீறும் உடையராய் ஈறிலாச் சிவவேடத்தோடும்

பிள்ளையாருக்கு எதிரே தோன்றுகின்றார் வாகீசர் பெருமான். இவரைக் கண்ட கவுணியக்கன்று நேயமலிந்தவர் சிவவேடத்தைச் சிவனெனவே தெளிந்து வழிபடும் முறைப் படி, இதுகாறும் தமது உள்ளக் கிழியிலே எழுதிப் போற்றப் பெற்ற தொண்டர் திருவேடமே திருநாவுக்கரசர் வடிவில் எழுந்தருளியதெனக் கொண்டு தொழுது போற்று கின்றார்.

பேராவலுடன் ஆராவிருப்பினால் எதிர் வந்து வணங்கிய நாவுக்கரசரைப் பிள்ளையார் தம் எழுதரிய மலர்க்கையால் எடுத்திறைஞ்சி 'அப்பரே' என்று அழைக் கின்றார். நாவுக்கரசரும் 'அடியேன்' என மகிழ்ந்துரைக் கின்றார். இந்தக் காட்சி அருகிருந்தோரின் நெஞ்சினை நெகிழவைக்கின்றது. பின்பு பிள்ளையார் அரசரைத் திருத் தோணிபுரத் திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்று இறை வனை வணங்கித் தமது திருமாளிகைக்கு உடன்கொண்டு செல்லுகின்றார். அரசர்க்கும் உடன்வந்த அடியார்க்கும் சிறப்பாக அமுது செய்விக்கின்றார்; உண்ட பின்னர் இருவரும் அளவளாவி மகிழ்கின்றனர். அப்பர் பெருமானும் சீகாழியில் சில நாட்கள் தங்கியிருந்து இறைவனை வணங்கிப் போற்றுகின்றார். பின்னர் பிரியாத நண்புடைய பிள்ளையார்பால் விடைபெற்றுச் சோழநாட்டுத் திருத் தலங்களை சேவிக்கச் செல்லுகின்றனர்.

**பிள்ளையாரின் மொழித்தொண்டு:** பிள்ளையார் சீகாழிப் பதியில் தங்கியிருக்கும் நாட்களில் திருத்தோணிபுரத்து இறைவனைப் பல்வேறு சித்திரக் கவிகளால் பரவிப் போற்றுகின்றார். இதனைச் சிறிது விவரமாகக் காண்போம்[4]. மிறைக்கவிகள் ஒவ்வொன்றையும் தனித் தனியாக விளக்குவேன்.

---

4. 'அருளிச் செயல்கள்' என்ற தலைப்பில் விவரிக்க வேண்டியவற்றை ஈண்டுக் காட்டுகின்றோம்—தோன்றிய இடத்திலேயே சொல்லலாம் என்று கருதி.

மொழி மாற்று: செய்யுளில் மொழிகள் தம்முட் புணரும் முறை நிரல் நிறை, சுண்ணம், அடிமறி, மொழி மாற்று என நால்வகைப்படும். இவற்றுள் மொழி மாற்று என்பது, செய்யுளகத்து சொற்கள் அமைந்து நிற்க, அவை நின்ற நிலையில் பொருள் விளங்காதவழி அச் செய்யுட் பொருளுக்குப் பொருந்த அச்சொற்களை முன்னும் பின்னும் மாற்றிப் புணர்த்துப் பொருள் கொள்ளும் முறையாகும். செய்யுளில் சில இடங்களில் தன்னியல்பில் மாறி நின்ற சொற்களைப் பொருள் எதிர் இயையப் புணர்க்கும் பொருள் கோள் முறையிலன்றி, செய்யுட் களைக் கற்போர் அச்செய்யுட் பொருளைக் கூர்ந்து நோக்கி இப் பொருள்கோள் முறை யுணர்ந்து சொற்களை முன்னும் பின்னும் இயைத்துப் பொருள் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் இயற்றப்படுவது 'மொழி மாற்று' என்னும் மிறைக் கவியாகும்:

"காட தணிகலம்" (1. 117) என்ற முதற்குறிப்புடைய திருப்பிரமபுரத் திருப்பதிகம் 'மொழி மாற்று' என்ற சித்திரகவிக்கு மூல இலக்கியமாக அமைகின்றது. இதன் முதற்பாடல்.

காட தணிகலம் காரர
வம்பதி காலதனில்
தோட தணிகுவர் சுந்தரக்
காதினிற் றூச்சிலம்பர்
வேட தணிவர் விசயற்குருவம்
வில்லும் கொடுப்பர்
பீட தணிமணி மாடப்
பிரமபுரத் தரரே

என்பது,

காடது பதி, காரரவம் அணிகலம்,
காலதனில் தூச்சிலம்பர்,
சுந்தரக் காதினில் தோடது அணிகுவர்
வேடது உருவம்,

விசயற்கு வில்லும் கொடுப்பர்:
(அவர்யாரெனின்)
பீடது அணிமணி மாடப்
பிரமபுரத்து அரர்.

என இவ்வாறு மொழிகளை முன்னும் பின்னும் மாற்றிப் பொருள் கொள்ளும் முறையில் பிள்ளையாரால் அருளிச் செய்யப் பெற்றிருத்தல் காணலாம். இவ்வாறே இத்திருப் பதிகத்துள்ள எல்லாப் பாடல்களும் மொழிகளை மாற்றிப் பொருள் கொள்ளும் நோக்கத்துடன் அருளிச் செய்யப் பெற்றமையால் இத்திருப்பதிகம் மொழி மாற்றுக்கு இலக்கியமாகின்றது. இது 'பிரமபுரம்' என்ற தலப் பெயரில் எழுந்தது.

**மாலை மாற்று:** ஒரு செய்யுளை முதலிலிருந்து படித்தாலும், அன்றி இறுதி தொடங்கி படித்தாலும் அதே செய்யுளாக அமையும்படிப் பொருளும் ஓசையும் ஒத்த எழுத்துகளை நிரலே பெற்ற செய்யுள் '**மாலை மாற்று**' என்ற சித்திரக்கவியாகும். '**யாமாமாநீ**' (3. 117) என்னும் திருப்பதிகம் பிள்ளையார் அருளிய மாலை மாற்றாகும்.

**யாமா மாநீ யாமாமா யாழீ காமா கா ணாகா**
**காணா காமா காழீயா மாமா யாநீ மாமாயா**

என்பது இப்பதிகத்தின் முதற்பாடல். ஈரடிகளாக அமைந்த இப்பாடலில் முதலடியை இறுதி தொடங்கிப் படித்தால் அஃது இரண்டாமடியாக அமைதலும், இரண்டாமடியை இறுதி தொடங்கிப் படித்தால் அது முதலடியாக அமைதலும், இவ்விரண்டடிகளையும் முதலி லிருந்து படித்தாலும், இறுதியிலிருந்து படித்தாலும் ஒரே பாடலாக அமைதலைக் காணலாம். இது '**காழி**' என்ற தலப் பெயரில் எழுந்த திருப்பதிகம். இப்பதிகத்தின் பாடல் களனைத்துமே இம்முறையில் அமைந்து 'மாலை மாற்றுக்கு' இலக்கியமாகின்றது.

வழிமொழி : ஒரு பாடலில் அடி முதற்சீரின் இரண்டாம் எழுத்து அப்பாடலில் பின்வரும் சீர்கள்தோறும் ஒன்றி வழி யெதுகையாய் வருவது 'வழிமொழி' எனப்படும். 'சுரருலகு' (3. 67) என்ற திருப்பதிகம் இந்தச் சித்திரக் கவிக்கு எடுத்துக் காட்டாகும். இதன் முதற்பாடலின் முதலடி,

சுரருலகு நரர்கள்பயில் தரணிதல
முரணழிய அரணமதில் முப்

தனனதன தனனதன தனனதன
தனனதன தனனதனனா

என வரும். இப்பதிகப் பாடல்கள் குற்றெழுத்துப் பயின்று முடுகியவாய் அடி முதற்சீரின் இரண்டாம் எழுத்து சீர் தோறும் ஒன்றி வழி எதுகையாய் வந்தமையால் 'வழி மொழித் திருவிராகம்' என்னும் பெயர் பெறுகின்றது. இதன் திருக்கடைக்காப்பில் 'கழுமலநகர்ப், பழுதிலிறை யெழுதுமொழி தமிழ் விரகன் வழி மொழிகள்' எனக் குறிக்கப் பெறுதலால், இப்பதிகம் வழியெதுகை யாகி, 'வழி மொழி' என்னும் பெயர் பெற்றமை இனிது புலனாதல் காண்க. 'வழிமொழி' என்பது, பிள்ளையாரால் இடப் பெற்றதும் தெளிவாகும். இவ்வாறே இதனையடுத்துள்ள பதிகமும் (3.68) 'வாளவரி கோளபுலி கீளதுரி தாளின்மிசை நாளு மகிழ்வர்' என்றாங்கு வழியெதுகை பெற்றிருத்தல் காணலாம். இது 'பிரமபுரம்' என்ற தலத்தின் மீதெழுந்தது.

மடக்கு : ஒருபாடலில் முன்வந்த சீரும் அடியும் அவ்வாறே மீட்டும் மடக்கி வரப் பெறுவது 'மடக்கு' ஆகும். (வட மொழியில் இது 'யமகம்' எனப் பெயர் பெறும்). 'விண்ணவர் தொழுதெழு' (1. 94) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் இதற்கு எடுத்துக்காட்டாகும். இதில்,

வித்தக மறையவர் வெங்குரு மேவிய
மத்த நன்மலர் புனைவீரே
மத்த நன்மலர் புனைவீ ருமதடி தொழும்
சித்தம துடையவர் திருவே. (8)

என்பது எட்டாவது பாடல். இதில் இரண்டாம் அடியே மூன்றாம் அடியாக இடை மடக்காய் அமைந்துள்ளது. இப் பதிகப் பாடல் தோறும் இம்முறையே அமைந்துள்ளது. இது 'வெங்குரு' என்ற தலத்தின் மீதெழுந்த பதிகமாகும்.

இயமகம்: யமகம் என்பது, ஓரடியில் முன்வந்த சொல்லோ தொடரோ வேறொரு பொருள்பட மீண்டும் அதே அடியில் மடக்கி வருவது. இதனை 'மடக்கு' எனவும், வழங்குதல் உண்டு. 'யமகம்' என்பது வட சொல், அதன் முதல் எழுத்தாகிய யகரம் தமிழியல் முறைப்படி மொழிக்கு முதலில் வராது; 'யவ்விற்கு இய்யும்' (நன். பதவியல்-21) என்றபடி இகரத்தை முதலில் பெற்று, 'இயமகம்' என வழங்கப்பெறும். ஈண்டு அது 'திரு' என்னும் சிறப்புடை அடைமொழி பெற்றுத் 'திரு இயமகம்' என வழங்கப் பெறு கின்றது. 'உற்றுமை சேர்வது' (3. 113) என்ற முதற் குறிப் புடைய திருப்பதிகம் அறுசீரடியால் இயன்றது.

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே.

தானன தானன தானதனா
தனதன தானன தானதனா

எனவரும். இதில் 'மெய்யினையே' என்ற சொல் மடக்கி வருதல் காண்க. இது பிரமபுரத்தின்மேல் எழுந்தது.

ஏக பாதம்: ஏகம்-ஒன்று; பாதம்-அடி. ஏகபாதம்-ஓரடி. ஓரடியே பொருள் வேறுபட நான்கு முறை மடித்து வந்து ஒரு பாடலாக அமைவது 'ஏகபாதம்' என்னும் சித்திரக் கவியாகும். 'பிரமபுரத்துறை' (1. 127) என்ற முதற்குறிப் புடைய திருப்பதிகம் இதற்கு எடுத்துக்காட்டாகும். இதில்,

புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே
புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே
புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே
புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே.

என்பது மூன்றாம் திருப்பாடலாகும். இப்பாடலில்,

புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே என்ற ஓரடியே நான்கு முறை மடித்து வந்து ஒரு பாடலாக அமைந்திருப் பதைக் காணலாம். இதிலுள்ள 12 பாடல்களிலும் முறையே பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சை, கழுமலம் — என்ற சீகாழியின் 12 பெயர்களும் அமைந் திருப்பதைக் கண்டு மகிழலாம். இப்பதிகத்திலுள்ள 12 பாடலிலும் ஓரடியே நான்கு முறை மடித்து வந்திருப் பதையும் காணலாம்.

இருக்குக் குறள் : பிள்ளையார் அருளிய திருப் பாடல்கள் 'இருக்கு' எனப் போற்றப்பெறும் வேத மந்திரங்களைப் போன்று இறைவனைப் போற்றும் மறை மொழிகளாய மந்திரங்களாய் அமைந்தமையால் பொருளமைதி பற்றி 'இருக்கு' என்ற பெயரும், இரு சீரடி யாகிய குறளடிகளால் இயன்றமையால் யாப்பமைதி பற்றிக் 'குறள்' என்ற பெயரும் பெறத்தக்கன வாதலின், இவ்விரு பெயர்களும் ஒருங்கியையப் பெற்றுத் 'திரு இருக்குக் குறள்' என வழங்கப்பெறுகின்றது. 'அரனை யுள்குவீர்' (1. 90) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

அரனை யுள்குவீர்,
பிரம னூருளெம்
பரனை யேமனம்
பரவி யுய்ம்மினே. (1)

என்பது இதன் முதற் பாடலாகும். இது பிரமாபுரம்மீது எழுந்தது.

வடமொழி மறையாகிய இருக்கு வேதத்தினைப் போன்று தமிழ் மறையாகத் திகழ்வது இது என்பார், இதனைத் 'தமிழ் இருக்குக் குறள்' எனப் போற்றுவர்

சேக்கிழார் பெருமான்.[5] திருவள்ளுவர் அருளிய திருக்குறள் யாப்பு, முதலடி நாற்சீராய் இரண்டாமடி முச்சீராய் செப்பலோசை பெற்று இவ்வாறு இரண்டடிகளால் இயன்று வரும் குறள் வெண்பாவாகும். பிள்ளையார் அருளிய 'இருக்குக் குறள்', இரு சீரடியாகிய குறளடி நான்கினால் அமைந்த சந்தச் செய்யுளாகும். எனவே, திருக்குறள் யாப்பும் திரு இருக்குக் குறள் யாப்பும் தம்முள் வேறாதல் கண்டு தெளியலாம்.

> **கல்லால் நீழல்**
> **அல்லத் தேவை**
> **நல்லார் பேணார்**
> **அல்லே நாமே.** (3.40:1)

இது நான்கெழுத்தாலாகிய இருசீர்க் குறளடி நான்கினால் வருவது. 'தானா தானா' என்பது, 'தனன தானா' எனவும், 'தான தனனா' எனவும், 'தனன தனனா' எனவும் வருதல் பொருந்தும். 3.40, 3.41 ஆம் பதிகங்கள் ஒரே யாப்பின. இருசீர்க் குறளடி நான்கினால் இயன்ற திருப்பாடல்களையுடைய இப்பதிகங்களும் திரு இருக்குக் குறள் வகையைச் சேர்ந்தவையாகும். இவற்றுள் 3·40 காழிப்பதியின்மீது எழுந்தது.

> **கருவார் கச்சித்**
> **திருவே கம்பத்**
> **தொருவா வென்ன**
> **மருவா வினையே.** (3.41:1)

இது 'தனனா தானா' என்னும் ஐந்தெழுத்தாலான அடிகளால் அமைந்ததாகும். இதன் ஈற்றடி 'தனனா தனனா' என ஆறெழுத்தால் வந்தமை காணத்தக்கது. இது கொச்சைப்பதிமீது எழுந்தது.

எழுகூற்றிருக்கை : ஒன்று இரண்டு ஒன்று, ஒன்று இரண்டு மூன்று இரண்டு ஒன்று என இவ்வாறு ஒன்று முதல்

5. பெ. பு: ஞானசம்பந். 276.

ஏழு முடியப் படிப்படியாக ஒவ்வொன்று ஏற்றியும் இறக்கியும் இங்ஙனம் ஏழு கூறுகளிலும் எண்கள் இருக்க இயற்றப்படும் செய்யுள் 'எழுகூற்றிருக்கை' எனப்படும். இதனைச் சித்திர கவிகளுள் ஒன்று எனப் போற்றுவர் பெரியோர்[6]. ஏழு கூறுகளாக அறைகளைக் கீறும்போது முதற் கூறில் மூன்று அறைகளும், இரண்டாம் கூறில் ஐந்து அறைகளும், மூன்றாம் கூறில் ஏழு அறைகளும், நான்காம் கூறில் ஒன்பது அறைகளும், ஐந்தாம் கூறில் பதினொரு அறைகளும், ஆறாம் கூறில் பதின்மூன்று அறைகளும், ஏழாம் கூறில் அவ்வாறே பதின்மூன்று அறைகளும் கீறி, அவ்வறைகளில் முறையே,

$$1+2+1$$
$$1+2+3+2+1$$
$$1+2+3+4+3+2+1$$
$$1+2+3+4+5+4+3+2+1$$
$$1+2+3+4+5+6+5+4+3+2+1$$
$$1+2+3+4+5+6+7+6+5+4+3+2+1$$
$$1+2+3+4+5+6+7+6+5+4+3+2+1$$

என்ற எண்ணமைந்த சொற்றொடர்கள் பொருந்தியிருக்கும்படி இயற்றப்பெறும் செய்யுளாதலின் எழுகூற்றிருக்கை எனப் பெயர்எய்துகின்றது. இதன்கண் எண்கள் ஈறு திரிதலும் எண்களைக் குறித்த சொற்களேயன்றி எண்ணுதற் பொருள் அல்லாத பிற சொற்களும்

6. திருமங்கையாழ்வார் அருளிய திரு எழுகூற்றிருக்கையும், மாறனலங்காரத்தில் ஓர் எழுகூற்றிருக்கையும், பதினோராந் திருமுறையில் நக்கீரதேவ நாயனார் இயற்றிய ஓர் எழுகூற்றிருக்கையும், யாப்பருங்கல விருத்தியில் ஓர் எழுகூற்றிருக்கையும் ஆக ஐந்து எழுகூற்றிருக்கைச் செய்யுட்கள் அறியப்படுகின்றன.

இரட்டுற மொழிதலால் எண்ணுதற் பொருள் தோன்ற அமைதலும் இயல்பென்பர்.[7]

எழு கூற்றிருக்கை என்னும் இப்பனுவலைப் பாட்டின் தொடக்க எண் முதல் ஈற்றெண் முடிய அமைந்த எண் வரிசைப்படி ஏழு கூறுகளாக எழுதி, அந்நிரல்கள் ஏழினையும் தேரொன்றின் மேற்பரப்பாகவும், பாட்டின் ஈற்றெண் முதல் தொடக்க எண் வரை அமைந்த எண்களை அவ்வாறே ஏழு நிரல்களாக எழுதி அக்கூறுகள் ஏழினையும் அத்தேரின் அடிப்பரப்பாகவும் கொண்டு 'தேர்ப்பந்தம்' (இரதபந்தம்) என்ற சித்திரக் கவியாக அமைத்துக் காட்டுதலும் உண்டு. எழுகூற்றிருக்கைச் செய்யுளைத் தேர்ப் பந்தத்தில் அமைத்துக் காட்டுங்கால் தேரின் மேற்பரப்பிலுள்ள முதல் ஏழு நிலங்களும் ஒன்று முதல் எண்ணேறி இறங்கி ஏழிறுதியேறியது 'பேரேற்றம்' எனவும், அடிப்பரப்பிலுள்ள பின்னேழு நிலங்களும் அவ்வாறு ஒன்றீறாக இறங்கியது 'பேரிறக்கம்' எனவும் வழங்கப்படும் என்பர் மாறனலங்கார உரையாசிரியர். இவ்விரு முறைகளிலும் செய்யுளிலமைந்த எண்கள் ஏழு கூறுகளாகவே அமைந்திருத்தலால், இதற்கு 'எழு கூற்றிருக்கை' என்ற பெயரே பொருத்தமுடையதாயிருக்கும்.

காழிப்பிள்ளையார் அருளிய திரு எழுகூற்றிருக்கை (1.128) என்னும் பனுவல் 'ஓருரு வாயினை' என்று தொடங்கும் 47 அடிகளால் இயன்ற இணைக் குறளாசிரியப்பா. இதனை எழு கூற்றிருக்கைக்குள்ள மூல இலக்கியம் என்பர் சேக்கிழார் பெருமான்.[8] எனவே இப்பனுவல் தமிழில் 'எழு கூற்றிருக்கை' என வழங்கும் சித்திரக் கவிக்குரிய மூல இலக்கியம் எனப் போற்றத் தகும் தொன்மையுடையது என்று துணிந்து கூறலாம். இது பிரமபுரத்தின் மேல் எழுந்த பாடலாகும்.

---

7. மாறனலங்காரம்—சொல்லணியியல்—சூத். 48.
8. பெ. பு: ஞானசம்பந். 276.

ஈரடி: 'வரமதே கொளா' (3.110), 'வேலினேர்தரு' (3.111), 'பரசுபாணியர்' (3.112) என்ற திருப்பதிகங்கள் ஈரடிகளால் ஆன திருப்பாடல்களைக் கொண்டவை. எ-டு. இவற்றுள் (3.110) பதிகத்தில்,

வாம தேகொளா வுரம தேசெயும்
புரமெ ரித்தவன் பிரம நற்புரத்
தான னாமமே பரவு வார்கள்சீர்
விரவுநீள் புவியே. (1)

என்பது முதற் பாடல்.

தனன தானனா தனன தானனா
தனன தானனா தனன தானனா
தனன தானனா தனன தானனா
தனன தானதனா.

என ஈரடியாய் வரும். முதலடியில் 'தனன தானனா' என்பது நான்கு முறையும், இரண்டாமடியில் இரண்டு முறையும் வந்து அதன்பின் 'தனன தானதனா' என முடிவது இவ்யாப்பு விகற்பமாகும். இதன்கண் 'தனன' என்பது 'தான' ஆதலும் பொருந்தும். அடுத்த இரண்டு பதிகங்களும் ஒரே தன்மையுடையவை. இவண் காட்டிய யாப்பினின்றும் இரண்டாம் அடி சிறிது வேறுபட்டு வருவது.

பரசு பாணியர் பாடல் வீணையர்
பட்டி னத்துறை பல்லவ னீச்சுரத்
தரசு பேணி நின்றார் இவர்
தன்மை அறிவா ரார்.

என்னும் இது 112 ஆம் பதிகமாகும். இதன் ஈற்றடி,

அரசு பேணிநின்றார் - இவர் - தன்மை அறிவாரார்
தனன தான தானா - தன - தானா - தனதானா.

என வரும்,

இவர் - தன்மை அறிவா ரார்.

என்பதனை மீண்டும் ஒருமுறை இசைத்துப் பாடலின் இசை

நலமும் பொருள் நயமும் சிறந்து விளங்குதலைக் காணலாம்.

**ஈரடி ஈரடிவைப்பு :** ஈரடிச் செய்யுளின்மேல் ஈரடி வைப்பாக அமைந்திருப்பது. 'தக்கன் வேள்வி' (3·5), 'கொட்டமே கமழும்' (3·6) என்ற இரண்டு பதிகங்களும் ஈரடி ஈரடி வைப்பு வகையைச் சேர்ந்தவை.

> தக்கன் வேள்வி தகர்த்தவன் பூந்தராய்
> மிக்க செம்மை விமலன் வியன்கழல்
>
> சென்று சிந்தையில் வைக்க மெய்க்கதி
> நன்ற தாகிய நம்பன் தானே. (3·5 : 1)

இச்செய்யுள்,

> தான தான தன்தனா தானனா
> தான தான தனனா தனதனா

என இரண்டடிச் செய்யுளாய் அதன்மேல்,

> தான தானன தான் தானன
> தான தான்னா தானா தானா

என ஈரடி வைப்பாய் வருதலின் ஈரடிமேல் ஈரடி வைப்பா கின்றதைக் காணலாம். இது பூந்தராய்மீது எழுந்த பதிக மாகும். 3·6 பதிகமும் இது போன்றதே; இது 'கொள்ளம் பூதூர்' மீது எழுந்தது.

**நாலடிமேல் ஈரடி வைப்பு :** நாலடிச் செய்யுளின்மேல் ஈரடி வைப்பாக அமைந்திருத்தலால் இப்பெயர் பெறு கின்றது. 'இயலிசையெனும்' (3·3) என்ற முதற் குறிப் புடைய பதிகம் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

> இயலிசை யெனும்பொரு ளின்திறமாம்
> புயலன மிடறுடைப் புண்ணியனே
> கயலன வரிநெடுங் கண்ணியொடும்
> அயலுல கடிதொழ அமர்ந்தவனே,

கலனாவது வெண்டலை
　　கடிபொழிற் கச்சிதன்னுள்
நிலனாள்தொறு மின்புற
　　நிறைமதி யருளினனே. (1)

என்பது இப்பதிகத்தின் முதற்பாடலாகும். இது,

'தனதன தனதன தானதனா'

என முச்சீரடி நான்கினால் இயன்ற செய்யுளாய், அதன்மேல்,

'தனனாதன தானன தனதன தானதனா'

என நாற்சீர்களால் இயன்ற அடியிரண்டினை வைப்பாகப் பெற்று வந்தமையால் 'நாலடிமேல் ஈரடி வைப்பு' என்னும் பெயர் பெறுகின்றது. நான்கடிகளால் ஆகிய பாடலின் மேலாக இரண்டடியாக வைக்கப்பெற்ற இவ்வுறுப்பு, முன்னுள்ள பாடலின் பொருளை முடித்துக் கூறுவதாகும். இவ்வுறுப்பு நாலடிச் செய்யுளின்மேல் வருவதால் 'நாலடி வைப்பு' எனப்படுகின்றது.[9] 'இடரினும் தளரினும்' (3.4), 'வேத வேள்வியை' (3.108) என்னும் பதிகங்கள் இவ்வகையின. 3.3 பதிகம் 'புகலிநகர்'மீது எழுந்தது.

முடுகியலாகிய திருவிராகம்: செய்யுளில் குற்றெழுத்துகளே மிகப் பயின்று முடுகியலாக அமையும் 'பிறையணிபடர்'

9. ஈரடி மேல் வருவது 'ஈரடி வைப்பு' என முன்னர்க் காட்டப் பெற்றது (3.5: 3.6 பதிகங்கள்). ஈரடிமேல் வைப்பாகவும் இரண்டடிகளால் அமைந்த இவ்வுறுப்பு ஒத்தாழிசைக் கலிப்பாவின், முடிவில் அதன் பொருளை முடித்துக் கூறும் முறையில் அமைந்த 'சுரிதகம்' போன்று அச்செய்யுளில் வைக்கப்பெறுதலின் 'வைப்பு' என வழங்கப் பெறுகின்றது. "போக்கியல் வகையாகிய சுரிதகம் 'வைப்பு' எனவும் வழங்கப்பெறும்" (தொல், பொருள். செய்யு. 136, 137 காண்க)

(1. 19) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் இதற்கு எடுத்துக்காட்டாகும். இதில்,

பிறையணி படர்சடை முடியிடை
 பெருகிய புனலுடை யவனிறை
இறையணி வளையிணை முலையவ
 ளிணைவன தெழிலுடை யிடவகை
கறையணி பொழினிறை வயலணி
 கழுமல மமர்கன லுருவினன்
நறையணி மலர்நறு விரைபுல்கு
 நலமலி கழல்தொழன் மருவுமே. (1)

என்பது முதற் பாடல். இதில் குற்றெழுத்துகள் மிகுதியாகப் பயின்று முடுகியலாக அமைவதைக் காணலாம். ஆகவே, இது 'முடுகியல் திருவிராகத்' திருப்பாடலாக அமைந்திருத்தல் காணலாம். முதல் திருமுறையில் 19 முதல் 22 வரையும், 120 முதல் 125 வரையும்; இரண்டாம் திருமுறையில் 29 முதல் 84 வரையுள்ள பதிகங்களும், 97, 98, 100, 101 ஆம் பதிகங்களும்; மூன்றாம் திருமுறையில் 52, 53 பதிகங்களும், 67 முதல் 88 வரையுள்ள பதிகங்களும் முடுகியலாகிய திருவிராகத் திருப்பாடல்களாக அமைந்துள்ளன. இப்பதிகம் (1.19) கழுமலம் பற்றியது.

**சக்கர மாற்று :** பிள்ளையாரின் இரண்டாந் திருமுறையில் '**பிரமனூர் வேணுபுரம்** (2.70), '**விளங்கிய சீர்**' (2.73) என்ற முதற் குறிப்புகளையுடைய இரண்டு திருப்பதிகங்கள் 'சக்கரமாற்று' என்னும் மிறைக்கவிக்கு இலக்கியமாக அமைகின்றன. இவற்றுள் '**விளங்கிய சீர்**' என்ற பதிகம் பிரமபுரம்மேல் எழுந்தது.

விளங்கிய சீர்ப் பிரமனூர் வேணுபுரம்
 புகலிவெங்குரு மேற்சோலை
வளங்கவருந் தோணிபுரம் பூந்தராய்
 சிரபுரம்வண் புறவமண்மேல்

களங்கமிலூர் சண்பைகமழ் காழிவயங்கொச்சை
கழுமல மென்றின்ன
இளங்குமரன் றன்னைப் பெற் றிமையவர்தம்
பகையெறிவித் திறைவனூரே. (1)

என்பது இதன் முதற் பாடல். இதன் இறுதியில் வைத்து எண்ணப் பெற்ற 'கழுமலம்' என்பது இரண்டாம் பாடலின் முதலிலும்; இரண்டாம் பாடலின் இறுதியிலுள்ள 'தோணி புரம்' மூன்றாம் பாடலின் முதலிலும், மூன்றாம் பாடலின் இறுதியிலுள்ள 'வெங்குரு' நான்காம் பாடலின் முதலிலும்; நான்காம் பாடலின் இறுதியிலுள்ள 'சண்பை' ஐந்தாம் பாடலின் தொடக்கத்திலும்; ஐந்தாம் பாடலின் இறுதி யிலுள்ள 'புறவம்' ஆறாம் பாடலின் முதலிலும்; ஆறாம் பாடலின் இறுதியிலுள்ள 'அயனூர்' ஏழாம் பாடலின் முதலிலும்; ஏழாம் பாடலின் இறுதியிலுள்ள 'புறவம்' எட்டாம் பாடலின் முதலிலும்; எட்டாம் பாடலின் இறுதியிலுள்ள 'தோணிபுரம்' ஒன்பதாம் பாடலின் தொடக்கத்திலும்; ஒன்பதாம் பாடலின் இறுதியிலுள்ள 'கழுமலம்' பத்தாம் பாடலின் தொடக்கத்திலும்; பத்தாம் பாடலின் இறுதியிலுள்ள 'சண்பை' பதினோராந் திருப்பாடலின் முதலிலும்; பதினோராம் பாடலின் இறுதி யிலுள்ள 'வெங்குரு'வாகிய தருமனூர் பன்னிரண்டாம் பாடலின் இறுதியிலுள்ள 'அயனூர்' என்னும் பிரமபுரம் 'பிரமபுரம்' என்ற முதற் பாடலிலும் இயைந்து நின்று பொருட்டொடர்பு பற்றிய அந்தாதியாக மண்டலித்து முடிந்திருத்தல் காணலாம்.

இங்ஙனம் இத்திருப்பதிகத்திலுள்ள பன்னிரு திருப் பாடல்களும் சீகாழிப் பதிக்குரிய பன்னிரு திருப்பெயர் களில் முன்னும் பின்னுமுள்ள பாடல்களுடன் அமைந்து ஒரு வட்டமாக அமைந்து செல்லுதலால் இப்பதிகம் 'சக்கரம்' எனப் பெயர் பெற்றது. இப்பெயர் பிள்ளை யாராலேயே இடப்பெற்றதென்பது 'அயனூர்மேல் இச்

சக்கரம் சீர்த்தமிழ் விரகன்தான் சொன்ன தமிழ் தரிப்போர் தவம் செய்தாரே' என வரும் திருக்கடைக் காப்பின் ஈற்றடியால் இனிது தெளிவாகும். பிற்காலத்தார் இதனைச் 'சக்கரமாற்று' எனக் குறித்தனர்.[10]

**கோமூத்திரி :** கோமூத்திரியாவது[11], ஒரு செய்யுளின் முன்னிரண்டடிகளை மேல்வரியாகவும், பின்னிரண்டடி களைக் கீழ்வரியாகவும் வரைந்து அவ்விரண்டு வரிகளின் எழுத்துகளை மேலும் கீழுமாக ஒன்றிடையிட்டுப் படித் தாலும் அதே செய்யுளால் அமையும் சித்திர கவியாகும். இதன்கண் மேலும் கீழும் உள்ள அடிகளில் அமைந்த எழுத்துகள் கோமூத்திரி ரேகைபோல் ஒன்றிடையிட்டுப் படிக்கப் பெறுதலின் கோமூத்திரி எனப்பட்டது. 'பூமகனூர்' (2.74) என்னும் முதற் குறிப்புடைய பிரமபுரத் திருப் பதிகம் 'கோமூத்திரி' என்ற சித்திர கவியாகக் குறிக்கப் பெற்றுள்ளது. 'கோமூத்திரி' எனப் பிற்காலத்தார் கூறும்

---

10. பிற்கால யாப்பணி நூலார் கூறும் 'சக்கர பந்தத்தின்' அமைப்பும் சம்பந்தரின் சக்கர மாற்றின் அமைப்பும் தம்முள் வேறுபட்டவை. 'சக்கர பந்தம்' 'சக்கர மாற்று' என வழங்கும் பெயர் வேறுபாட்டாலேயே நன்கு புலனாகும். அன்றியும், தேவாரத் திருப்பதிகங்களில் அமைந்த 'சக்கர மாற்று' ஒரு பதிகமாய் அப்பதிகம் முழுவதும் ஒரு வட்டமாய் அமைந்தது; யாவர்க்கும் பொருள் இனிது விளங்க இயல்பு வகையாற் பாடப் பெறுவது. பிற்காலத்தார் கூறும் 'சக்கர பந்தம்' ஒரு பாடலாய் வட்டங்கீறி ஆரைகளில் எழுத்துகளை அமைத்துக் காட்டும் நிலையில் அமைந்தது; எழுத் தெண்ணிச் செயற்கை வகையால் பாடப் பெறுவது; பொருள் தெளிவில்லாதது. தண்டியலங்காரத்திலுள்ள நான்காரைச் சக்கரம், ஆறாரைச் சக்கரம், எட்டாரைச் சக்கரம் காண்க (தண்டி - சொல்லணி - 9).

11. தண்டி - சொல்லணி. சித்திர கவி - 1 காண்க.

பாடலமைப்பு இப்பதிகத்தில் இருப்பதாகப் புலப்படவில்லை. இப்பதிகத்திற்குப் பிள்ளைார் இட்ட பெயர் கோமூத்திரி என்பதன்று; 'வழி முடக்குமாவின் பாய்ச்சல்' என்பதே இப் பதிகத்தின் பெயராகும்.[12] இதன் பெயர்க் காரணம் நன்கு புலனாகவில்லை. இப்பதிகத்திலுள்ள பாடல் ஒவ்வொன் றிலும் பிரமபுரத்திற்குரிய பன்னிரு திருப்பெயர்களும் எண்ணப்பெற்றுள்ளன. ஒரு பாடலின் இறுதியில் வைத் தெண்ணப்படும்பெயர் அடுத்த பாடலின் முதலாக மீண்டும் மடித் தெண்ணப் பெறும் நிலையில் அமைந்த இப்பதிகம், முடக்காக வளைந்த வழியிலே சென்ற மாவானது மீண்டும் வந்த வழியே மடங்கிச் சென்றாற் போலும் நடை அமைப்பினை யுடையதாதல் ஈண்டு நோக்கத் தக்கது.

கூடற்சதுக்கம்: இது கூடசதுக்கம் என்றும் குறிப்பிடப் பெறும். 'மண்ணது வுண்டரி' (3. 109) என்ற முதற்குறிப் புடைய பதிகம் இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிக்கப் பெற்றுள்ளது. ஒரு செய்யுளின் நான்காம் அடியிலுள்ள எழுத்துகள் யாவும் ஏனைய மூன்றடிகளுள்ளும் மறைந்து நிற்குமாறு பாடப்பெறுவது கூடசதுக்கம். கூடம்—மறைவு. சதுக்கம் - நான்காவது; மறைவான நான்காமடி யுடையது. எனவே, நான்காமடியிலுள்ள எழுத்துகள் எல்லாம் மற்றைய முதல் மூன்றடிகளுள்ளும் நிற்றல் 'கூடசதுக்கம்' என்ற சித்திர கவியின் அமைப்பாதல் பெறப்படும்.[13]

பிள்ளையார் அருளிய 'மண்ணது வுண்டரி' என்னும் பதிகப் பாடல்களின் நான்காம் அடிகளில் முன்னை மூன்றடிகளிலும் இல்லாத எழுத்துகள் சில இருத்தலால், இப்பாடல்களின் நான்காம் அடியிலுள்ள எழுத்துகள்

---

12. திருக்கடைக்காப்புத் திருப்பாடலால் இது தெளி வாகும்.

13. தண்டி-சொல்லணி-சித்திர கவி-2.

யாவும் ஏனைய மூன்றடிகளிலும் மறைந்துள்ளன எனக் கருதற்கு இடம் இல்லை. ஆகவே, தேவாரத்தில் அமைந்த கூடற்சதுக்கம் என்ற மிறைக் கவியும் பிற்காலத்தார் வழங்கும் கூடசதுக்கம் என்ற சித்திர கவியும் தம்முள் வேறெனவே கொள்ளற்பாலது.

நான்கு தெருக்கள் ஒன்றாகச் சந்திக்கும் இடத்தைச் 'சதுக்கம்' என வழங்குதல் மரபு. இம்முறையில் திருமயேந்திரம், திருக்கயிலாயம், திருவாரூர், திருவானைக்கா என்னும் நான்கு தலங்களும் ஒன்று கூடிய நிலையில் இந்நான்கு தலங்களிலும் கோயில் கொண்டருளிய பெருமானைப் பரவிப் போற்றுவதாக அமைந்தது,

> **மண்ணது வுண்டரி மலரோன்காணா**
> **வெண்ணா வல்விரும்பு மயேந்திரரும்**
> **கண்ணது வோங்கிய கயிலையாரும்**
> **அண்ணலா ரூராதி யானைக்காவே.** (1)

என்ற பாடலை முதலாகவுடைய திருப்பதிகமாகும். இப் பதிகப் பாடல்கள் யாவும் மேற்குறிப்பிட்ட நான்கு தலங்களையும் குறித்துப் போற்றுமுகத்தால் அவை நான்கும் ஒருங்கே கூடிய சதுக்கம் போன்று அமைந்துள்ளதால் இப்பதிகம் 'கூடற் சதுக்கம்' என்ற பெயர் பெறுகின்றது.

**பூட்டுவிற் பொருள்கோள்:** செய்யுளின் முதலிலும் இறுதியிலும் நிற்கும் மொழிகள் தம்முள் பொருள் நோக்க முடையனவாய் இயைந்து நிற்கும் நிலையினைப் 'பூட்டுவிற் பொருள்கோள்' என்பர். 'அலர் மகள் மலிதர' (1. 124) என்ற முதற்குறிப்பினையுடைய திருப்பதிகத்தின் முதற் பத்துப் பாடல்களும் பூட்டுவிற் பொருள்கோளில் அமைந் திருப்பவை.

> **அலர்மகள் மலிதர அவனியில் நிகழ்பவர்**
> **மலர்மலி குழலுமை தனையிட மகிழ்பவர்**
> **நலமலி யுருவுடை யவர்நகர் மிகுபுகழ்**
> **நிலமலி மிழலையை நினையவ லவரே** (1)

என்ற முதற்பாடலில் 'மிழலையை நினைய வல்லவர்' என வரும் இறுதித் தொடரை 'அலர்மகள் மலிதர அவனியில் நிகழ்பவர்' என முதலடியுடன் இயைத்து நோக்கிப் பொருள் கொள்ளல் வேண்டும்.

மேலும், பிள்ளையார் சீகாழியில் தங்கியிருக்கும்போது புகலியின்மீது 'முன்னியகலை' (2. 29) என்ற பதிகமும், சண்பையின்மீது 'எந்தமது' (3. 75) என்ற பதிகமும் தோணிபுரத்தின்மீது 'சங்கமரு' (3. 81) என்ற பதிகமும், புறவம் மீது 'பெண்ணியலுரு (3. 84) என்ற பதிகமும் பாடியதாகக் குறிப்பிடுவர் சேக்கிழார் பெருமான். இவற்றை,

செந்தமிழ் மாலை விகற்பச்
 செய்யுட்க ளான்மொழி மாற்றும்
வந்தசொற் சீர்மாலை மாற்றும்
 வழிமொழி எல்லா மடக்குச்
சந்தவி யமகம் ஏகபாதம்
 தமிழ்இ ருக்குறள் சாத்தி
எந்தைக் கெழுகூற் றிருக்கை
 ஈரடி பாடி வைப்பு

நாலடி மேல்வைப்பு மேன்மை
 நடையின் முதுகுடுமி ராகம்
சால்பினில் சக்கரம் ஆதி
 விகற்பங்கள் சாற்றும் பதிக
மூல இலக்கிய மாக
 எல்லாப் பொருகளும் முற்ற
ஞாலத் துயர்காழி யாரைப்
 பாடினார் ஞானசம்பந்தர்.[14]

என்ற பாடல்களால் தெரிவிப்பர். இத்திருப் பதிகங்களையெல்லாம் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவர் துணைவி மதங்க சூளாமணியாரும் யாழிட்டுப் பாடிப் போற்றியதாகவும் குறிப்பிடுவர்.

14. பெ. பு: ஞானசம்பந்—276, 277.

# 5. சோழநாட்டுத் திருத்தலப் பெரும் பயணம்

காழிப்பிள்ளையார்கழுமலத்தில் திருப்பதிகங்கள் பாடி தோணியப்பரை வழிபட்டு வரும் நாட்களில் தமிழகத் திலுள்ள சிவத்தலங்கள் எல்லாவற்றிற்கும் சென்று சிவ பெருமானை வழிபட வேண்டும் என்ற விருப்பம் எழுகின்றது. தமது விருப்பத்தைப் பெற்றோருக்குத் தெரிவிக்கின்றார். இதனை யுணர்ந்த திருத்தந்தையார் "பிள்ளாய், நான் நின்னைவிட்டுக் கணநேரமும் பிரிந்து தரித்திருக்க இயலாது. இருமைக்கும் இன்பமளிக்கும் வேள்வியொன்றையும் செய்ய வேண்டியுள்ளது. ஆதலால் சில நாட்கள் நின்னுடன் போதருவேன்" என்கின்றார். பிள்ளையாரும் தந்தை கருத்திற்கு இசைகின்றார். திருத் தோணிபுரத்திறைவரை வணங்கி அவரிடம் விடைபெற்றுக் கொண்டு திருநீலகண்ட யாழ்ப்பாணர் அவருடைய துணைவியார் மதங்கசூளாமணிதேவியார், திருத்தந்தை யார் இவர்கள் உடன்வர, அடியார்கள் புடைசூழ, திருத்தலப்பயணம் தொடங்குகின்றது.

முதலில் 'கண்ணார் கோயில்'[1] என்ற திருத்தலம் அடைகின்றார். இத்தலத்துப் பெருமான்மீது 'தண்ணார்

---

1. கண்ணார் கோயில் (குறுமாணக்குடி): வைத்தீஸ் வரன் கோயிலிலிருந்து $1\frac{1}{2}$ கல் தொலைவிலுள்ளது. தகாத முறையில் அகலிகையைப் புணர்ந்ததன் விளைவாகத் தேவேந்திரன் உடல் முழுவதும் ஆயிரம் பெண்குறிகள்

திங்கள்' (1.101) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடிப் போற்றுகின்றார்.

தருவளர் கானந் தங்கிய
    துங்கப் பெருவேழம்
மருவளர் கோதை அஞ்ச
    உரித்து மறைநால்வர்க்(கு)
உருவளர் ஆலநீழ லமர்ந்(து)
    ஈங்குறை செய்தார்
கருவளர் கண்ணார் கோயில்
    அடைந்தோர் கற்றோரே. (4)

என்பது இப்பதிகத்தின் நான்காவது பாடல்,

கண்ணார் கோயில் கண்ணுதலப்பனிடம் விடை பெற்றுக் கொண்டு புள்ளிருக்கு வேளூர்[2] என்ற திருத்

---

நிரம்பப்பெற்ற சாபம் நீங்க இத்தலத்து இறைவனைப் பூசித்து அக்குறிகள் கண்களாக மாற்றப் பெற்றதால், தலப்பெயர் 'கண்ணார் கோயில்' என்றாயிற்று. வாமனாவ தாரத்தில் மாவலியிடம் மூவடி மண் இரந்து பெற்று உலகளந்த திருமால் செருக்கை ஒடுக்கி நெற்றியிலிருந்து இரத்தம் இறுத்த சிவபெருமானை வழிபட்டு அருள்பெற்ற தலமாகையால், 'குறுமாணிக்குடி' என்பது மருவி 'குறு மாணக்குடி' யாயிற்று தலப்பெயர். இரு வரலாறுகளையும் 1·101:7,5 என்ற பாடல்களில் காணலாம். சம்பந்தர் பாடல்கள் மட்டிலும் பெற்ற தலம்.

2. புள்ளிருக்குவேளூர் (வைத்தீஸ்வரன் கோயில்): கோயில் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 1 கல் தொலைவு. சிதம்பரத்திலிருந்து பேருந்து வசதியும் உண்டு. புள் (சடாயு, சம்பாதி), இருக்கு (ரிக்வேதம்), வேள் (முருகன்) பூசித்த தலம். இறைவன் வைத்தியநாதன், "தீராதநோய் தீர்த்தருள வல்லான்" (அப்பர் 6·54:8). அம்பிகை தையல் நாயகியின் அருட் பார்வையிலிருப்பது சித்தாமிர்த தீர்த்தம்.

தலத்திற்கு வருகின்றார். 'கள்ளார்ந்த' (2·43) என்ற செந்தமிழ் மாலை பாடி இறைவனை ஏத்துகின்றார்.

திறங்கொண்ட அடியார்மேல்
தீவினைநோய் வாராமே
அறங்கொண்ட சிவதன்மம்
உரைத்தபிரான் அமருமிடம்
மறங்கொண்டங் கிராவணன்றன்
வலிகருதி வந்தானைப்
புறங்கண்ட சடாயென்பான்
புள்ளிருக்கு வேளூரே. (6)

என்பது இப்பதிகத்தின் ஆறாவது திருப்பாடல். ஒவ்வொரு பாடலிலும் இராவணனைப்பற்றிய குறிப்பு வருகின்றது.

1968-மே ஜுன் மாதங்களில் சோழ நாட்டுத் திருமால் திருப்பதிகளை வழிபட வந்தபோது மயிலாடுதுறையில் தங்கிச் சுற்றுப்புறத்திலுள்ள திருப்பதிகளைச் சேவித்த

---

சிறப்பெல்லாம் செல்வமுத்துக் குமாரசுவாமி என்னும் முருகனுக்கே. கிருத்திகைதோறும் பகலில் பாலாபிஷேகமும், இரவில் உற்சவமும் செல்வ முத்தையாவிற்கு உண்டு. அடியார்கள் ஆயிரக் கணக்கில் தரிசித்துச் சந்தனக் குழம்பு பெறுவர். நாடோறும் அர்த்த சாம வழிபாட்டில் முதலில் செல்வ முத்தையாவிற்குப் பால் நிவேதனம், நேத்திரப்பிடி, சந்தன அர்ப்பணம் செய்த பிறகே, மற்ற மூர்த்திகட்கு வழிபாடு. பஞ்ச மூர்த்திகள் திருவீதி உலாவில் வலத்தில் வைத்தியநாதர், நடுவில் செல்வ முத்துக்குமாரசுவாமி, இடத்தில் தையல்நாயகி (சோமாஸ்கந்த அமைப்பு வரிசையில்) எழுந்தருள்வர். செவ்வாய் தோஷம் போக்கும் தலம், செவ்வாய்க்கிழமை தோறும் மேஷ வாகனத்தில் அங்காரகன் திருச்சுற்றில் வலம் வருவதுண்டு. 'முத்துக் குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்' குமரகுருபர அடிகள் அருளியது. தலபுராணம் வடுகநாததேசிகர் இயற்றியது.

போது வைத்தியநாதன், முத்துக்குமரன் இவர்களைச் சேவித்தேன். சடாயு கதையை விளக்குவதற்கு சிலைகள் முதலியவை வைத்திருப்பதைக் கண்டு களித்தேன். "மருகிருக்கும் வேளூரின் வைத்திமகன்" என்ற காளமேகப் புலவரின் பாடல் நினைவுடன் முத்துக்குமரனைச் சேவித்து 'எழுதரிய' அநுபவத்தைப் பெற்றேன். இவையெல்லாம் இப்போது பசுமையாக என் மனத்தில் உள்ளன.

வைத்தியநாதனிடம் விடை பெற்றுக்கொண்டு நின்றியூர்[3] வருகின்றார் சம்பந்தர். 'சூலம் படை' (1·18) என்ற முதற்குறிப்புடைய பதிகத்தால் இறைவனை வழிபடு கின்றார்.

> அச்சமிலர் பாவமிலர் கேடுமிலர் அடியார்
> நிச்சம்முறு நோயுமிலர் தாமுநின்றி யூரில்
> நச்சம் மிடறுடையார் நறுங்கொன்றை நயந்தாளும்
> பச்சம் முடையடிகள் திருப்பாதம் பணிவாரே. (2)

என்பது இப்பதிகத்தின் இரண்டாவது திருப்பாடல்.

நின்றியூர் நிமலனாரிடம் விடை பெற்றுக் கொண்டு நீடூர்[4] வருகின்றார். இறைவனை வழிபட்டுப் (பதிகம் இல்லை) புன்கூர்[5] வருகின்றார். 'முந்திநின்ற' (1·27) என்ற முதற்குறிப்புடைய பதிகம் பாடி இறைவனைப் போற்று கின்றார்.

---

3. நின்றியூர்: விழுப்புரம் - மயிலாடுதுறை இருப்பூர்தி வழியில் ஆனந்த தாண்டவபுரம் என்ற நிலையத்திலிருந்து 2 கல் தொலைவு. இலக்குமி பூசித்ததைப் (சுந்தரர் 7.64:5) பாசுரம் கூறும்.

4. நீடூர்: விழுப்புரம் - மயிலாடுதுறை இருப்பூர்தி வழியில் நீடூர் (மயிலாடுதுறைக்கு அடுத்தது) நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவு. முனையாடுவார் நாயனார் தொண்டு புரிந்த தலம்.

5. புன்கூர் (திருப்புன்கூர்): வைத்தீஸ்வரன் கோயிலி லிருந்து தென்மேற்கே 2 கல் தொலைவு. திருநாளைப்

தெரிந்தி லங்கு கழுநீர் வயற்செந்நெல்
திருந்த நின்ற வயல்சூழ்த் திருப்புன்கூர்ப்
பொருந்தி நின்ற அடிகளவர் போலும்
விரிந்தி லங்கு சடைவெண் பிறையாரே. (6)

என்பது ஆறாவது பாடல். திருப்புன்கூரை நினைக்கும் போது நந்தன் சரிதம் நினைவுக்கு வராமற் போகாது. அருகிலுள்ள ஆதனூரில் அவதரித்த நந்தன் அடிக்கடித் திருக்கோயிலுக்குப் புறத்தே நின்றபடி சேவித்ததும், மூலவரைச் சேவிக்க வேண்டுமென்ற பேரவா இருந்ததும், 'வழிமறைத்திருக்குதே மலைபோல் ஒரு மாடு' என்ற பாடல் பெற்ற நந்தியைச் 'சற்றே விலகி இரும்பிள்ளாய் சந்நிதானம் மறைக்குதாம்' என்று இறைவன் செப்பியதும், நந்தி அவ்வாறே விலகினதுமான காட்சிகள் 'திரைக் காட்சிகள் போல்' நம் மனத்தில் குமிழியிடுகின்றன [6]

---

போவாருக்குத் (திருக்கோவிலினுள் ஆதிதிராவிட மக்கள் சட்டப்படி உட்செல்லும் உரிமை பெறாத அக்காலத்துத்) தேர் நிலையிலிருந்தே இறைவன் காட்சியளிக்கத் திருநந்தி தேவரை விலகியிருக்கும்படி கட்டளையிட நந்தி தேவரும் அவ்வாறே விலகியிருக்கும் தலம். திருநாளைப் போவார் திருப்பணியாகக் கோயிலின் மேற்கில் நந்தன் குளம் உள்ளது. ஏயர்கோன் கலிக்காம நாயனாரிடத்தில் 12 வேலி நிலம் கொண்டு மழை பெய்வித்ததை சுந்தரர் பாசுரம் 7·55:2 கூறும். இப்போதுள்ள கோயில் சோழர்கள் திருப்பணியுடன் பிற்காலத் திருத்தங்களும் சேர்ந்துள்ளன.

6. தென்திருப்பேரை நகரில் (நெல்லை மாவட்டம்) பெருமாள் பிள்ளைகள் விளையாட்டைக் காண்பதற்கு கருடனை விலகியிருக்குமாறு கூறினதும், இங்கு சிவபெருமான் நந்தன் தன்னைச் சேவிப்பதற்கு நந்தியை விலகியிருக்குமாறு சொன்னதும் ஒருபுடை ஒப்புடையவை.

திருப்புன்கூர் இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு 'மண்ணிப் படிக்கரை[7] என்ற திருத்தலத்திற்கு வந்து வழிபடு கின்றார் (பதிகம் இல்லை). இங்கிருந்து அன்னியூர்[8] சென்றடைகின்றார். 'மன்னியூரிறை' (1.96) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடி வழிபடுகின்றார்.

நீதி பேணுவீர்
ஆசி யன்னியூர்ச்
சோதி நாமமே
ஓதி யுய்ம்மினே. (3)

என்பது இப்பதிகத்தின் மூன்றாவது பாடல்.

அன்னியூர் இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு குறுக்கை[9] வருகின்றார். இறைவனை வழிபட்டு (பதிகம் இல்லை) பந்தணை நல்லூர்[10] வந்தடைகின்றார். இஃது இரண்டாவது முறை வருகை தந்தது. இறைவனை வழி பட்டுத் (பதிகம் இல்லை) திருமணஞ்சேரி[11] வருகின்றார். 'அயிலாரும்' (2.16) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனைப் போற்றுகின்றார். இதில்,

---

7. மண்ணிப் படிக்கரை (இலுப்பபட்டு): வைத்தீசு வரன் கோயிலிலிருந்து 9 கல் தொலைவு. சுந்தரர் பாடல் மட்டும் பெற்றுள்ள தலம்.

8. அன்னியூர் (பொன்னூர்): நீடூர் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 3 கல் தொலைவு.

9. குறுக்கை வீரட்டம்: நீடூர் இருப்பூர்தி நிலையத் திலிருந்து 5 கல் தொலைவு. மன்மதனை எரித்த வீரட்டம். அப்பர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

10. பந்தணை நல்லூர்: முன்னர் விளக்கப்பட்டது (பாணருடன் பயணம்—காண்க) பக் 46.

11. மணஞ்சேரி (கீழைத் திருமணஞ்சேரி): குத்தாலம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 3 கல் தொலைவு.

எண்ணானை எண்ணமர்சீர் இமையோர் கட்குக்
கண்ணானைக் கண்ணொரு மூன்றும் உடையானை
மண்ணானை மாவயல் சூழ்ந்த மணஞ்சேரிப்
பெண்ணானைப் பேச நின்றார் பெரியோர்களே. (7)

என்பது ஏழாம் பாடல்.

திருமணம் சேரி ஈசனிடம் விடைபெற்றுக் கொண்டு எதிர்கொள் பாடி[12] வருகின்றார். இறைவனைச் சேவித்து (பதிகம் இல்லை) திருத்துருத்தி — வேள்விக்குடி[13], [14] வருகின்றார். இந்த இரு தலங்களையும் இணைத்து 'ஓங்கி மேலூழி' (3.90) என்ற முதற்குறிப்புடைய பதிகம் பாடிச் சேவிக்கின்றார்.

புரிதரு சடையினர் புலியுரி
யரையினர் பொடி யணிந்து
திரிதரு இயல்பினர் திரிபுர
மூன்றையுந் தீவ ளைத்தார்
வரிதரு வனமுலை மங்கையொ
டொருபகல் அமர்ந்த பிரான்
விரிதரு துருத்தியார் இரவிடத்
துறைவர் வேள்விக் குடியே. (7)

என்பது இப்பதிகத்தின் ஏழாவது திருப்பாடல்.

---

12. எதிர்கொள் பாடி (மேலைத் திருமணஞ்சேரி) : குத்தாலம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 3½ கல் தொலைவு. சுந்தரர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

13. துருத்தி (குத்தாலம்): குத்தாலம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. இறைவன் கட்டளைப் படி இங்குள்ள குளத்தில் மூழ்கிய சுந்தரர், தமது உடலுறு பிணி நீங்கி மணிஒளிசேர் திருமேனி ஆகின்றார்.

14. வேள்விக்குடி : குத்தாலத்திலிருந்து 3 கல் தொலைவு.

இவற்றையடுத்து கோடிகா[15] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். 'இன்று நன்று' (2.99) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனை ஏத்துகின்றார். இதில்,

முன்னை நீர்செய் பாவத்தால்
    மூர்த்தி பாதம் சிந்தியா
தின்ன நீர்இ டும்பையில்
    மூழ்கி நீரெ ழும்மினோ
பொன்னை வென்ற கொன்றையான்
    பூதம் பாட ஆடலான்
கொன்ன விலும்வே லியான்
    கோடி காவு சேர்மினே. (5)

என்பது ஐந்தாம் பாடல். ஒவ்வொரு பாடலில் வினைவயத்தால் தொல்லைப்படும் வாழ்க்கையை எடுத்துக் காட்டி இவற்றிலிருந்து விடுதலை பெற வேண்டுமாயின் கோடிகாவினைச் சென்று சேருமாறு ஆற்றுப்படுத்துகின்றார்.

கோடிகா இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு கஞ்சனூர்[16] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். தலத்து

15. கோடிகா (திருக்கோடி காவல்): நாரசிங்கம் பேட்டை இருப்பூர்தி நிலையத்திலிருந்து 1 கல் தொலைவு.

16. கஞ்சனூர்: நாரசிங்கம் பேட்டை இருப்பூர்தி நிலையத்திலிருந்து 1 கல் தொலைவு. கஞ்சன் (பிரமன்) வழிபட்ட தலம். அக்கினி வழிபட்டதைப் பாசுரம் (அப்பர் 6.90:1) கூறும். ஹரத்தாச்சார்ய சுவாமிகள் பழுக்கக் காய்ச்சிய பீடத்தின்மேலமர்ந்து சிவ பரத்வத்தையும் சைவ சமய மேன்மையையும் நிலைநாட்டிப் பல வடமொழி நூல்கள் அருளிச் செய்த தலம். அப்பர் பாடல்கள் மட்டிலும் பெற்ற தலம்.

இறைவனை வழிபட்டு (பதிகம் இல்லை) **மாந்துறை**[17] வருகின்றார் (பதிகம் பாடவில்லை). இது முதல் முறை வருகை புரிந்தது. இறைவனை வழுத்தி **மங்கலக்குடி**[18] வருகின்றார். 'சீரினார் மணியும்' (2.10) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனைப் போற்றுகின்றார்.

> கருங்கை யானையின் ஈருரி
> போர்த்திடு கள்வனார்
> மருங்கெ லாமண மார்பொ
> ழில்சூழ் மங்கலக்குடி
> அரும்பு சேர்மலர்க் கொன்றை
> யினானடி அன்பொடு
> விரும்பி யேத்தவல் லார்வினை
> யாயின வீடுமே. (3)

என்பது இப்பதிகத்தின் மூன்றாவது திருப்பாடல்.

மங்கலக்குடி ஈசனிடம் விடைபெற்றுக் கொண்டு **வியலூர்**[19] வருகின்றார். 'குரவங்கமழ்' (1.13) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடி இத்தலத் திறைவனைச் சேவிக்கின்றார்.

> அடைவாகிய அடியார்தொழ
> அலரோன்தலை யதனில்
> மடவாரிடு பலிவந்துண
> லுடையானவ னிடமாம்

---

17. **மாந்துறை** (வடகரை மாந்துறை) : இலால்குடியிலிருந்து 2 கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற திருத்தலம்.

18. **மங்கலக்குடி** (சூரியனார் கோயில்): ஆடுதுறையிலிருந்து 1½ கல் தொலைவு. சூரியன், பிரமன், காளி, அகத்திய முனிவர் வழிபட்ட தலம் (அப்பர் 5.73:3).

19. **வியலூர்** : கும்பகோணம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 4 கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

கடையார்தர அகிலார்கழை
முத்தந்நிரை சிந்தி
மிடையார்பொழில் புடைசூழ்தரு
விரிநீர்விய லூரே. (4)

என்பது நான்காவது பாடல்.

வியலூர் இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு திருந்து தேவன்குடி[20] வருகின்றார். 'மருந்து வேண்டிலிவை' (3.25) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனைச் சேவிக்கின்றார்.

விண்ணு லாவுந்நெறி
வீடுகாட் டுந்நெறி
மண்ணு லாவுந்நெறி
மயக்கந்தீர்க் குந்நெறி
தெண்ணி லாவெண்மதி
தீண்டுதே வன்குடி
அண்ண லானே றுடை
அடிகள்வே டங்களே. (5)

என்பாது ஐந்தாம் பாடல். திருந்து தேவன் குடி இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு 'இன்னம்பர்'[21] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். 'எண்டிசைக்கும்' (3. 95) என்ற திருப்பதிகம் பாடி இறைவனை ஏத்துகின்றார்.

எண்ணரும் புகழுடை இன்னம்பர் மேவிய
தண்ணருஞ் சடைமுடி யீரே
தண்ணருஞ் சடைமுடி யீருமைச் சார்பவர்
விண்ணவ ரடைவுடை யீரே. (6)

என்பது ஆறாம் பாசுரம்.

---

20. திருந்து தேவன்குடி: திருவிடைமருதூர் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 5 கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற திருத்தலம்.

21. இன்னம்பர் (இன்னம்பூர்): கும்பகோணத்திலிருந்து 4½ கல்தொலைவு.

இன்னம்பர் இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு வடகுரங்காடு துறை[22] வருகின்றார். 'கோங்கமே குரவமே' (3.91) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனை ஏத்துகின்றார்.

கறியு மாமிளகொடு கதலியின்
பழங்களும் கலந்துநுந்தி
எறியு மாகாவிரி வடகரை
யடைகுரங் காடுதுறை
மறியு லாங்கையினர் மலரடி
தொழுதெழ மருவுமுள்ளக்
குறியி னாரவர் மிகக்கூடுவார்
நீடுவா னுலகி னூடே. (4)

என்பது இப்பதிகத்தின் நான்காவது பாடல். இதில் ஏழாவது பாடல் காணப்பெறவில்லை.

வடகுரங்காடுதுறை ஈசனிடம் விடைபெற்றுக் கொண்டு பழனம்[23] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். 'வேதமோதி' (1.67) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனைப் போற்றுகின்றார்.

வேதமோதி வெண்ணூல்பூண்டு
வெள்ளை யெருதேறிப்
பூதஞ்சூழப் பொலிய வருவார்
புலியின் உரிதோலார்

---

22. குரங்காடுதுறை (வட): அய்யம்பேட்டை இருப்பூர்தி நிலையத்திலிருந்து 3 கல் தொலைவு. வாலி பூசித்ததை 3.91:6, 3.91:8 என்ற பாசுரங்கள் கூறும். சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற திருத்தலம்.

23. பழனம்: தஞ்சையிலிருந்து 10 கல் தொலைவு. சப்தஸ்தான தலங்களுள் ஒன்று. காவிரிக் கரையிலுள்ளது. ஐயாற்றிலிருந்து இத்தலம் போகும் வழியில் அப்பூதியடிகள் தொண்டு செய்த திங்களூர் உள்ளது.

ஐயாறப்பனிடம் விடை பெற்றுக் கொண்டு பெரும்புலியூர்[26] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். 'மன்னுமோர் பாகம்' (2.67) என்ற முதற்குறிப்புடைய பதிகம் பாடிப் புலியூர் இறைவனை வழுத்துகின்றார்.

மண்ணுமோர் பாகமுடையார்
மாலுமோர் பாகமுடையார்
விண்ணுமோர் பாகமுடையார்
வேதமுடைய விமலர்
கண்ணுமோர் பாகமுடையார்
கங்கைசடையிற் கரந்தார்
பெண்ணுமோர் பாகமுடையார்
பெரும்புலியூர் பிரியாரே. (1)

என்பது இப்பதிகத்தின் முதல் பாடல்.

பெரும்புலியூர் இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு நெய்த்தானம்[27] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். வந்தவர் 'மையாடிய' (1.15) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடிப் போற்றுகின்றார். இதில்,

பேயாயின பாடப்பெரு
நடமாடிய பெருமான்
வேயாயின தோளிக்கொரு
பாகம்மிக வுடையான்
தாயாகிய உலகங்களை
நிலைபேறுசெய் தலைவன்
நேயாடிய பெருமானிட
நெய்த்தான மெனீரே. (2)

என்பது இரண்டாவது திருப்பாடல்.

---

26. பெரும்புலியூர்: தஞ்சையிலிருந்து 11 கல் தொலைவு; திருவையாற்றிலிருந்து 2 கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

27. நெய்த்தானம் (தில்லைஸ்தானம்): தஞ்சையிலிருந்து 10 கல் தொலைவிலுள்ளது. சப்தஸ்தானத் தலங்களுள் ஒன்று.

நெய்த்தானத்து இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு மழபாடி[28] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். மூன்று திருப்பதிகங்களால் மழபாடி மாணிக்கத்தைச் சேவிக்கின்றார். 'அங்கை யாரழல்' (3.48) என்ற முதற் குறிப்புடையது ஒரு பதிகம். இதில்,

> நீடி னாருலகுக் குயிராய் நின்றான்
> ஆடி னாரெரி கானிடை மாநடம்
> பாடி னாரிசை மாமழ பாடியை
> நாடி னார்க்கில்லை நல்குர வானவே. (6)

என்பது ஆறாம் பாடல். அடுத்த பதிகம் 'களையும் வல்வினை' (2.9) என்ற முதற்குறிப்புடையது.

> காச்சிலாத பொன்னோக்கும்
> கனவயி ரத்திரள்
> ஆச்சிலாத பளிங்கின
> னஞ்சுமுன் னாடினான்
> பேச்சினா லுமக்காவதென்
> பேதைகாள்! பேணுமின்
> வாச்சமா ளிகைச்சூழ்
> மழபாடியை வாழ்த்துமே. (2)

---

28. மழபாடி (திருமழுவாடி): விருத்தாசலம்-திருச்சி இருப்பூர்தி வழியில் புள்ளம்பாடி என்ற நிலையத்திலிருந்து 10 கல் தொலைவு; திருவையாற்றிலிருந்து 4 கல் தொலைவு. (கொள்ளிடத்தைக் கடக்க வேண்டும்). திருமால் வழி பட்டதை 3.28:1 என்ற பாசுரம் கூறும். பங்குனி உத்தரத்தில் திருநந்திதேவர் திருக்கல்யாணத்தைத் திருவையாற்றிலிருந்து ஐயாறப்பன் எழுந்தருளி வந்து நடத்தி வைக்கின்றார். திருநந்திதேவரும் அவரது தேவி யாரும் வெட்டிவேர்ச் சிவிகையில் முன் செல்லப் பின்னணி யில் ஐயாறப்பரும் அறம் வளர்த்த நாயகியும் அழகிய

என்பது இப்பதிகத்தின் இரண்டாவது பாடல். இதன் 11ஆம் பாடலில் இறுதி ஈரடி இல்லை. மூன்றாவது திருப்பதிகம் 'காலையார் வண்டினம்' (3.28) என்ற முதற் குறிப்புடையது.

அந்தணர் வேள்வியும் அருமறைத் துழனியும்
செந்தமிழ்க் கீதமும் சீரினால் வளர்தரப்
பந்தணை மெல்விர லாளொடும் பயில்விடம்
மந்தம்வந் துலவுசீர் மாமழ பாடியே. (3)

என்பது இதன் மூன்றாம் திருப்பாடல்.

மழபாடி ஈசனிடம் விடைபெற்றுக் கொண்டு கானூர்[29] வருகின்றார். வந்தவர் 'வானார்சோதி' (1.73) என்ற செந்தமிழ் மாலையால் கானூர் இறைவனை வழுத்து கின்றார். இதில்,

மூவா வண்ணர் முளைவெண் பிறையர்
முறுவல் செய்திங்கே
பூவார் கொன்றை புனைந்து வந்தார்
பொக்கம் பலபேசிப்
போவார் போல மால்செய் துள்ளம்
புக்க புரிநூலர்
தேவார் சோலைக் கானூர் மேய
தேவ தேவரே. (7)

என்பது ஏழாவது செந்தமிழ் மணங்கொண்ட வாடா நறுமலர்.

---

கண்ணாடிச் சிவிகையில் எழுந்தருளி ஏழூர் வலம் வருவது தான் மிகு புகழ் வாய்ந்த சப்தஸ்தான மகோத்சவம் (ஏழு திருத்தலப் பெருவிழா).

29. கானூர்: பூதலூர் என்ற இருப்பூர்தி நிலையத் திலிருந்து 7 கல் தொலைவு. மண் மூடிப்போன திருக்கோயில் சென்ற நூற்றாண்டில் அகழ்ந்தெடுக்கப்பெற்றது.

காளூர் மேய கண்ணுதலப்பனிடம் விடை பெற்றுக் கொண்டு அன்பிலாலந்துறை[30] என்ற திருத்தலம் அடைகின்றார். 'கணை நீ டெரிமால்' (1.33) என்ற திருப்பதிகம் பாடி இறைவனை ஏத்துகின்றார்.

> பிறையும் அரவும் உறவைத்த முடிமேல்
> நறையுண் டெழுவன்னியும் மன்னு சடையார்
> மறையும் பலவேதிய ரோத ஒலிசென்(று)
> அறையும் புனலன்பி லாலந்துறை யாரே. (4)

என்பது இப்பதிகத்தின் நான்காம் திருப்பாடல்.

அன்பிலாலந்துறையாரிடம் விடைபெற்றுக் கொண்டு மாந்துறை[31] வருகின்றார். 'செம்பொனார்தரு' (2.110) என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ் மாலை புனைந்து மாந்துறை இறைவனை ஏத்துகின்றார்.

> பெருகு சந்தனம் காரகில் பீலியும்
> பெருமரம் நிமிர்ந்துந்திப்
> பொருது காவிரி வடகரை மாந்துறைப்
> புனிதனெம் பெருமானைப்

---

30. அன்பிலாலந்துறை (அன்பில்): இலால்குடி இருப்பூர்தி நிலையத்திலிருந்து 3 கல் தொலைவு. பேருந்து வசதி உண்டு. கொள்ளிடக் கரையிலுள்ள திருத்தலம். ஆற்றைக் கடந்தால் கோயிலடியிலுள்ள அப்பக்குடத்தான் சந்நிதி என்ற வைணவ திவ்விய தேசத்தையடையலாம். 1966-செப்டம்பரில் என் இளைய மகன் இராமகிருஷ்ணனுடன் (அப்போது காரைக்குடியில் 3 ஆம் படிவம் வகுப்பிலிருந்தவன்; இப்போது அக்டோபர் 1985. M. D. படித்து கேரளா பந்தளத்தில் நாயர் கழக மருத்துவமனையில் தலைமை மருத்துவனாகப் பணியாற்றி வருபவன்) அன்பில் பெருமானையும் அப்பக்குடத்தானையும் சேவித்தேன்.

31. மாந்துறை (வடகரை மாந்துறை): 17 ஆம் அடிக் குறிப்பு காண்க.

பரிவி னாலிருந் திரவியும் மதியமும்
 பார்மன்னர் பணிந்தேத்த
மருத வானவர் வழிபடு மலரடி
 வணங்குதல் செய்வோமே. (6)

என்பது ஆறாவது நறுமணம் கமழும் வாடா நறுலர்.

மாந்துறை ஈசனிடம் விடைபெற்றுக் கொண்டு திருப்பாச்சிலாச்சிராமம்[32] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். 'துணிவளர் திங்கள்' (1.44) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ் மாலை புனைந்து தலத்திறைவனை வழிபடுகின்றார்.

கனமலர் கொன்றை அலங்கல் இலங்கக்
 கனல்தரு தூமதிக் கண்ணி
புனமலர் மாலை அணிந்தழ காய
 புனிதர் கொலாம்இவர் என்ன
வனமலி வண்பொழில் சூழ்தரு பாச்சி
 லாச்சிரா மத்துறை கின்ற
மனமலி மைந்தரோ மங்கையை வாட
 மயல்செய்வ தேஇவர் மாண்பே. (4)

என்பது இம்மாலையின் நான்காவது தமிழ்மணம் கமழும் வாடா நறுமலர்.

திருப்பாச்சிலாச்சிராமத்து இறைவனிடம் விடை பெற்றுக் கொண்டு திருப்பைஞ்ஞீலி[33] என்ற திருத்தலத்

32. பாச்சிலாச்சிராமம் (திருவாசி): பிட்சாண்டார் கோயில் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 2½ கல் தொலைவு. சம்பந்தர் கொல்லி மழவன் புதல்வியின் முயலகன் நோயைத் தீர்த்த அற்புதத் தலம். இத்தலத்து நடராசரின் ஊன்றிய திருவடியின்கீழ் முயலகன் இல்லை.

33. பைஞ்ஞீலி: பிட்சாண்டார் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 3 கல் தொலைவு. மணைச்சநல்லூரி (திருச்சி - துறையூர் சாலையில் உள்ளது) லிருந்து எளிதில் போகலாம். அப்பர் சுவாமிகட்கு இறைவன் கட்டமுது கொடுத்த அற்புதத் தலம்.

திற்கு வருகின்றார். 'ஆரிடம் பாடிலர்' (3.14) என்ற திருப்பதிகம் பாடி இறைவனை வழுத்துகின்றார். இதில்,

விழியிலா நகுதலை விளங்கி ளம்பிறை
சுழியிலார் வருபுனல் சூழல் தாங்கினான்
பழியிலார் பரவு பைஞ்ஞீலி பாடலான்
கிழியிலார் கேண்மையைக் கெடுக்க லாகுமே. (5)

என்பது ஐந்தாம் பாடல். பைஞ்ஞீலி பரமனிடம் விடை பெற்றுக் கொண்டு திருஈய்ங்கோய் மலை[34] வருகின்றார். ''வானத் துயர் தண்' (1.70) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ் மாலை தொடுத்து ஈய்ங்கோய் மலையானை வழிபடுகின்றார்.

மறையின் இசையார் நெறிமென் கூந்தல்
  மலையான் மகளோடும்
குறைவெண் பிறையும் புனலும் நிலவும்
  குளிர்புன் சடைதாழப்
பறையும் குழலும் கழலும் ஆர்ப்பப்
  படுகாட் டெரியாடும்
இறைவர் சிறைவண் டறைபூஞ் சாரல்
  ஈய்ங்கோய் மலையாரே. (4)

---

34. ஈய்ங்கோய் மலை (திருவிங்கநாதர் மலை): குழித் தலை என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து 2 கல் தொலைவு (ஆற்றைக் கடக்க வேண்டும்; இப்போது பாலம் உள்ளது). திருச்சி - சேலம் நெடுஞ்சாலையில் முசிறிக்கு மேற்கே 2 கல் தொலைவு. அகத்திய முனிவர் ஈ உருவங் கொண்டு பூசித்த தலம். காலையில் கடம் பந்துறை, கட்டுச்சியில் வாட்போக்கி, மாலையில் இத்தலம் ஆகிய மூன்றையும் கார்த்திகை சோம வாரங்களில் சேவிப்பது இந்நாட்டு மக்களின் புண்ணியச் செயல். சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற திருத்தலம். இத் தலத்து இறைவன்மீது நக்கீர தேவ நாயனார் 'திருவீய்ங் கோய் மலை எழுபது' என்ற பிரபந்தம் பாடியுள்ளார். (பதினோராந் திருமுறையில் சேர்க்கப்பெற்றுள்ளது).

என்பது நான்காவது தமிழ் மணம் கமழும் வாடா நறுமலர். (இங்கிருந்து கொங்கு நாட்டுத் தல வழிபாடு தொடங்குகின்றது. திருச்செங்கோட்டில் தொடங்கி கருவூர்த் திருவானிலையைச் சேவித்தலுடன் நிறைவு பெறுகின்றது— 5 தலங்கள்).[35]

கருவூர்த் திருவானிலை இறைவனிடம் விடை பெற்றுக் கொண்டு வாட்போக்கி[36] (மாணிக்கமலை) என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். இறைவனைச் சேவிக்கின்றார் (பதிகம் இல்லை). சேக்கிழாரின் "மல்கிய மாணிக்க வெற்பு முதலா வணங்கி வந்து" (ஞானசம்பந்தர் 339) என்ற தொடரால் பிள்ளையார் இத்தலத்திற்கு வந்தது உறுதியாகின்றது.

மாணிக்க மலையானிடம் விடை பெற்றுக் கொண்டு **திருப்பராய்த்துறை**[37] வருகின்றார். **'நீறு சேர்வதோர்'** (1,135) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனைச் சேவிக்கின்றார்.

---

35. இந்நூல் — 6-வது கட்டுரை காண்க.

36. **வாட்போக்கி** (இரத்தினகிரி): குழித்தலை இருப்பூர்தி நிலையத்திலிருந்து 5 கல் தொலைவு. உயர்ந்த மலை; கடல் மட்டத்திலிருந்து 1178 அடி உயரமுள்ளது (952 படிகள்). காலையில் கடம்பந்துறை, கட்டுச்சியில் இத்தலம், மாலையில் ஈய்ங்கோய் மலை ஆகிய மூன்றையும் கார்த்திகை சோம வாரங்களில் இந்நாட்டு மக்கள் தரிசிப்பதுண்டு. அப்பர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

37. **பராய்த்துறை** (திருப்பளாத்துறை): திருப்பராய்த்துறை ரோட் இருப்பூர்தி நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. நடையிலேயே திருக்கோயில் செல்லலாம். அகண்ட காவிரிக் கரையிலுள்ள தலம். திருச்சி - கரூர் சாலையில் பேருந்துமூலம் வந்தால் கோயிலருகிலேயே இறங்கலாம். சித்பவானந்த அடிகள் நிறுவிய இராம

விடையும் ஏறுவர்; வெண்பொடிப் பூசுவர்;
சடையிற் கங்கை தரித்தவர்;
படைகொள் வெண்மழு வாளர் பராய்த்துறை
அடைய நின்ற அடிகளே. (7)

என்பது ஏழாவது திருப்பாடல்.

திருப்பராய்த்துறை ஈசனிடம் விடை பெற்றுக் கொண்டு "எழுதிரு வாலந் துறை திருச்செந்துறையே முதலா, வழுவில் பல கோயில்கள் சென்று வணங்கி" (ஞானசம்பந். 342) என்ற தொடரால் 'திருவாலந்துறை, திருச்செந்துறைத்' தலங்கட்கு வந்ததாகச் சேக்கிழார் குறிப்பிடுவர். ஆலந்துறை என்பது 'புள்ள மங்கை ஆலந் துறை'. இது தஞ்சைக் கருகிலுள்ள பசுபதி கோயில் என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. (பதிகம் இல்லை). இதன் பிறகு கற்குடி மலை வந்ததாகச் சேக்கிழார் இதே பாடலில் குறிப்பிடுகின்றார். வழி யிலுள்ள பல தலங்களை ஒதுக்கிவிட்டு ஆலந்துறைக்கு ஏன் சென்றார் என்பதைத் தெரிந்துகொள்ள இயல வில்லை. சேக்கிழார் தவறாகக் குறிப்பிட்டு விட்டாரோ என்று துணியவும் முடியவில்லை. இஃது ஆராய்தற்குரியது. கற்குடி[39]க்குச் சம்பந்தருடன் வருவோம். 'வடந்திகழ் மென்முலையாள்' (1.43) என்ற திருப்பதிகம்பாடி இறை வனை ஏத்துகின்றார். இதில்,

---

கிருஷ்ண தபோவனம், விவேகாநந்த வித்யாவனம் மேல் நிலைப்பள்ளி நன்கு இயங்கி வருகின்றன. அடிகளாரின் கல்வித் தொண்டு பொன்னெழுத்துகளால் பொறிக்கத் தக்கது.

39. கற்குடி (உய்யக் கொண்டான் மலை): திருச்சி டவுன் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 2 கல் தொலைவு. சிறிய மலைமேல் கோயில் உள்ளது.

மானிட மார்தரு கையர்
　　மாமழு வாரும் வலத்தர்
ஊனிடை யார்தலை யோட்டில்
　　உண்கல னாக உகந்தார்
தேனிடை யார்தரு சந்தின்
　　திண்சிறை யால்தினை வித்திக்
கானிடை வேடர் விளைக்கும்
　　கற்குடி மாமலை யாரே. (7)

என்பது ஏழாவது திருப்பாடல்.

கற்குடிப் பெருமானிடம் விடை பெற்றுக் கொண்டு மூக்கீச்சரம்[40] (உறையூர்) வருகின்றார். 'சாந்தம் வெண்ணீ' (2.120) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ் மாலை தொகுத்து இறைவனை வழிபடுகின்றார். இதில்,

வெந்தநீறு மெய்யில்பூசுவர்
　　ஆடுவர் வீங்கிருள்
வந்தெனாரவ் வளைகொள்வதும்
　　இங்கொரு மாயமாம்
அந்தண்மாமான தன்னேரியன்
　　செம்பியன் ஆக்கிய
எந்தைமூக் கீச்சரத்தடிகள்
　　செய்கின்றதோர் ஏதமே. (6)

---

40. மூக்கீச்சரம் (உறையூர்): திருச்சிக் கோட்டை இருப்பூர்தி நிலையத்திலிருந்து 1 கல் தொலைவு. நிலையத் தருகிலிருந்தே நகரப் பேருந்து வசதி உண்டு. சோழ மன்னன் ஏறிச் செல்லும் யானையின் தலையை ஒரு கோழி கொத்தியதால் அம்மன்னன் இவ்விடத்தில் தலைநகர மைத்துக் 'கோழி' என்றே பெயரிட்டான். அரசன் உறைவிடம் உறையூராயிற்று. சங்கக் காலத்திய வரலாற்றுத் தொடர்புடைய பழம்பதி. சம்பந்தர் பாடல் மட்டும் பெற்ற தலம்.

என்பது மாலையின் ஆறாவது வாடாமலர். இஃது அகத் துறையில் அமைந்த திருப்பதிகம்; மகள் பாசுரம். நாயகி நிலையில் இருந்து பேசுகின்றார் பிள்ளையார். தன்னை மயக்கி ஆட்கொண்ட நிலையை விளக்குகின்றார்.

மூக்கீச்சரத் தடிகளிடம் விடை பெற்றுக் கொண்டு திருச்சிராப்பள்ளி[41] வருகின்றார். 'நன்றுடையானை' (1.98) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடி 'சிராப்பள்ளிக் குன்றுடையானை' வழிபடுகின்றார்.

> நன்றுடை யானைத்
> தீயதிலானை நரைவெள்ளே(று)
> ஒன்றுடை யானை யுமையொரு
> பாகம் உடையானைச்

---

41. சிராப்பள்ளி (திரிசிராப்பள்ளி). திருச்சி டவுன் இருப்பூர்தி நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. திரிசிரன் என்ற அரக்கன் வழிபட்டதாலும், ஆதிசேடனுக்கும் வாயு தேவனுக்கும் ஏற்பட்ட சச்சரவில் வாயு திருக்கயிலாயத்தி லிருந்து தூக்கியெறிந்த மூன்று சிகரங்களுள் ஒரு சிகரம் இங்கு வந்து மலையாயினமையாலும் தலப்பெயர் ஏற்பட்ட தென்பது புராண வரலாறு. காளத்தி, சிராப்பள்ளி, திருக்கோணமலை ஆகிய மூன்றும் இதுபற்றித் தென் கயிலை எனப்படும். மலையின் உயரம் 273 அடி; ஏறுவதற்கு 417 அழகான படிகள் உண்டு. மலையின்மேல் இருப்பது உச்சிப் பிள்ளையார் கோயில். சற்றுக் கீழ் இருப்பது தாயுமானவர் கோயில். தாயுமான அடிகளின் வரலாற்றுத் தொடர்புடையது. உச்சிப் பிள்ளையார் கோயிலுக்குப் போகும் வழியில் மகேந்திரப் பல்லவன் எடுப்பித்த குகைக் கோயில் உண்டு. மலை வலம் வரும் வழியிலும் ஒரு குகைக் கோயில் உண்டு. தாயுமான அடிகட்கு உபதேசம் செய்த மௌன குரு இருந்த திருமடம் கோயிலுக்குச் செல்லும் படித்துறையில் உள்ளது. செவ்வந்திப் புராணம் என்ற பெயருடைய தலபுராணம் சைவ எல்லப்ப நாவலர் இயற்றியது.

சென்றடை யாத திருவுடை
யானைச் சிராப்பள்ளிக்
குன்றுடை யானைக் கூறஎன்
உள்ளம் குளிரும்மே. (1)

என்பது இப்பதிகத்தின் முதல் பாடல்.

சிராப்பள்ளிக் குன்றுடையானிடம் விடை பெற்றுக் கொண்டு திரு ஆனைக்கா[42] வருகின்றார். மூன்று திருப் பதிகங்களால் வழிபடுகின்றார். 'மழையார் மிடறா' (2·23) என்ற முதற்குறிப்புடையது ஒரு பதிகம்.

---

42. ஆனைக்கா (ஜம்புகேஸ்வரம்): சீரங்கம் இருப் பூர்தி நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. திருச்சியி லிருந்து நகரப்பேருந்து வசதியுண்டு. பஞ்சபூதங்களுள் இது நீர் அல்லது அப்புத்தலம். காவிரி, கொள்ளிடம் என்ற இரு ஆறுகளும் தெற்கிலும், வடக்கிலும் ஓட, இவ்விரண்டாறுகட்கும் இடைப்பட்ட தீவிலுள்ளது இத் தலம். மூலத்தான மூர்த்தியிருக்கும் இடம் ஆறுகளின் தரைமட்டத்திற்குக் கீழிருப்பதால் எப்போதும் நீர்க் கசிவு இருக்கும். ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுக்கும்போது ஓயாமல் நீரை இறைத்துக் கொண்டே இருக்கவேண்டும். சிலந்தியும் ஆனையும் பூசித்த தலம். உமாதேவியார் பூசித்த தலங்களுள் ஒன்று. நாள்தோறும் அம்மன் கோயில் அருச்சகர் உச்சிக் கால பூசைவேளையில் பெண்ணுடையில் சுவாமி கோயிலில் வழிபாடு செய்கின்றார். பெருவிழாவில் பங்குனி மாதம் சித்திரை நடசத்திரத்தன்று பஞ்சப் பிராகார உற்சவம் மிகுபுகழ் பெற்றது. சோமாஸ்கந்தர் அம்மன் வேடமும், அம்மன் சுவாமி வேடமும் பூண்டு ஐந்து வீதிகளிலும் வலம் வருவார்கள். அம்பிகை அகிலாண் டேசுவரியின் திருவுருவம் அழகும் அருளும் நிரம்பியது. கச்சியப்ப முனிவர் இயற்றிய தல புராணம் இத்தலத்துக்கு உண்டு.

செங்கட் பெயர்கொண்டவன் செம்பியர்கோன்
அங்கட் கருணை பெரிதாயவனே
வெங்கண் விடையாய் எம்வெண் நாவலுளாய்
அங்கத் தயர்வாயினள் ஆயிழையே. (5)

என்பது இதன் ஐந்தாவது பாடல். மற்றொரு பதிகம் 'வானைக்காவில்' (3·53) என்ற முதற் குறிப்புடையது. இதில்,

நாணுமோர்வு சார்வு முன்
நகையுமுட்கு நன்மையும்
பேணுறாத செல்வமும்
பேசநின்ற பெற்றியான்
ஆணும்பெண்ணும் ஆகிய
ஆனைக்காவில் அண்ணலார்
காணும்கண்ணும் மூன்றுடைக்
கறைகொள் மிடறன் அல்லனே. (6)

என்பது ஆறாவது பாடல்.

அடுத்து ஆனைக்காவில் திருக்கயிலாயம், ஆனைக்கா, திருமயேந்திரம், திருவாரூர் ஆகிய நான்கு தலங்களையும் தனித்தனியே வழிபாடு செய்யும் முறையில் அமையுமாறு பாடியுள்ள பதிகம் (3·109) கூடற்சதுக்கமாக அமைந்துள்ளது.[3]

---

3. கூடற்சதுக்கம்: நான்கு தெருக்கள் கூடும் இடம் சதுக்கம். இங்கு நான்கு தலங்கள் ஒன்று கூடிய நிலையில் அந்நான்கு தலங்களிலும் கோயில் கொண்டிருக்கும் பெருமான்களைப் பரவிப் போற்றுவதாக அமைந்துள்ளது காண்க. இவை நான்கும் ஒரே பாடலில் கூடற்சதுக்கம் போன்று அமைந்திருத்தலால் இப்பதிகம் 'கூடற் சதுக்கம்' என்ற பெயர் பெறுகின்றது.

மாலயன் தேடிய மயேந்திரரும்
காலனை உயிர்கொண்ட கயிலையாரும்
வேலைய தோங்கும் வெண்ணாவலாரும்
ஆலையா ரூராதி யானைக்காவே. (3)

என்பது இப்பதிகத்தின் மூன்றாவது பாடல். இதில் மயேந்திரம், கயிலை, ஆரூர், ஆனைக்கா ஆகிய நான்கு தலங்களும் கூடியமைந்து 'கூடற்சதுக்க'மாகியிருத்தலைக் காணலாம். சிலநாட்கள் ஆனைக்காவில் தங்குகின்றார்.

ஆனைக்கா அம்மானிடம் விடை பெற்றுக் கொண்டு தவத்துறை[44] வருகின்றார். தலத்திறைவனை வழிபடுகின்றார் (பதிகம் இல்லை). திருத்தவத்துறை இறைவனிடம் விடை பெற்றுக் கொண்டு 'பாற்றுறை'[45] என்ற தலத்திற்கு வருகின்றார். 'காரார் கொன்றை' (1·56) என்ற முதற்குறிப்பையுடைய திருப்பதிகத்தால் வழிபடுகின்றார்.

மாகந் தோய்மதி சூடி மகிழ்ந்தெனை
தாகம் பொன்னிற மாக்கினார்
பாகம் பெண்ணும் உடையவர் பாற்றுறை
நாகம் பூண்ட நயவரே. (5)

என்பது இப்பதிகத்தின் ஐந்தாவது பாடல். இப்பதிகம் 'மகள் பாசுரமாக' அமைந்துள்ளது. பாற்றுறைப் பரமன் மீது காதல் கொண்ட சம்பந்தர் நாயகி (நாயகி நிலையி

---

44. தவத்துறை (திருத்தவத்துறை): இலால்குடி இருப்பூர்தி நிலையத்திலிருந்து மிக அண்மையில் உள்ளது. இது வைப்புத்தலம். 'பண்டெழுவர் தவத்துறை' (அப்பர் 6·71:11) என்பது அப்பர் தேவாரம். பெ. பு. ஞானசம்பந்தர் 347 பாடலால் இங்கு வந்தது உறுதிப்படுகின்றது.

45. பாற்றுறை: விழுப்புரம் — திருச்சி இருப்பூர்திப் பாதையில் சீரங்கம் நிலையத்திலிருந்து 5 கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற திருத்தலம்.

விருக்கும் சம்பந்தர்) தன் மேனியைப் பொன்னிற மாக்கினார் (பசலை நிறம் அடையச் செய்தார்) என்கின்றார்.

பாற்றுறை ஈசரிடம் விடை பெற்றுக் கொண்டு எறும்பியூர் [46] வருகின்றார். இறைவனை வழிபடுகின்றார் (பதிகம் இல்லை). எறும்பியூர் எம்பெருமானிடம் விடை பெற்றுக் கொண்டு நெடுங்களம்[47] வருகின்றார். 'மறை யுடையாய்' (1·52) என்ற முதற் குறிப்புடைய பதிகம் பாடி இறைவனைச் சேவிக்கின்றார். இதில்,

**விருத்த னாகிப் பால னாகி**
**வேதமோர் நான்குணர்ந்து**
**கருத்த னாகிக் கங்கை யாளைக்**
**கமழ்சடை மேற்கரந்தாய்**
**அருத்த னாய ஆதி தேவ**
**னடியிணை யேபரவும்**
**நிருத்தர் கீத ரிடர்க ளையாய்**
**நெடுங்கள மேயவனே. (6)**

என்பது ஆறாவது பாடல்.

நெடுங்கள மேயவனிடம் விடை பெற்றுக் கொண்டு நியமம் [48] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். 'நியமம்

---

46. எறும்பியூர் (திருவெறும்பூர்): தஞ்சை, திருச்சி இருப்பூர்தி வழியில் திருவெறும்பூர் நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. எறும்பு வழிபட்ட தலம். கோயில் சிறு குன்றின் மேலுள்ளது. அப்பர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

47. நெடுங்களம்: தஞ்சை — திருச்சி இருப்பூர்தி வழியில் சோழகம்பட்டி என்ற நிலையத்திலிருந்து 2 கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

48. நியமம்: திருக்காட்டுப் பள்ளியை யடுத்து நேமம் என வழங்கும் ஊராதல் கூடும். 'சோற்றுத்துறை நியமம் துருத்தியும்' (அப்பர் 6·13:4) என்பது காண்க. இது வைப்புத்தலம்.

போற்றி' (ஞானசம்பந்தர். 349) என்ற தொடரால் இங்கு வந்தது உறுதியாகின்றது. இறைவனை வழிபடுகின்றார் (பதிகம் இல்லை). நியமத்து இறைவனிடம் விடை பெற்றுக் கொண்டு மேலைத் திருக்காட்டுப் பள்ளி[49] வருகின்றார். 'வாருமன்னு முலை' (3·29) என்ற முதற் குறிப்புடைய திருப் பதிகம் பாடி இறைவனை வழுத்துகின்றார்.

வரை யுலாம் சங்தொடு வங்திழி காவிரிக்
கரை யுலாம் இடுமணல் சூழ்ந்தகாட் டுப்பள்ளித்
திரை யுலாங் கங்கையுந் திங்களும் சூடியங்
கரை யுலாங் கோவணத் தடிகள்வே டங்களே. (5)

என்பது ஐந்தாவது பாடல்.

திருகாட்டுப்பள்ளி ஈசனிடம் விடை பெற்றுக் கொண்டு கடைமுடி[50] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். வந்தவர் 'அருத்தனை அறவனை' (1·111) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடி கடைமுடி இறைவனை ஏத்துகின்றார்.

படவரவே ரல்குல் பல்வளைக்கை
மடவரலாளை யோர்பாகம் வைத்துக்
குடதிசை மதியது சூடுசென்னிக்
கடவுள்தன் வளநகர் கடைமுடியே. (6)

என்பது ஆறாவது திருப்பாடல்.

கடைமுடி இறைவனிடம் விடை பெற்றுக்கொண்டு திருவாலம்பொழில்[51] என்ற திருத்தலத்தையடைகின்றார்.

---

49. காட்டுப்பள்ளி (மேலை) : திருக்காட்டுப் பள்ளி, பூதலூர் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 5 கல் தொலைவு. பேருந்து வழியிலுள்ளது.

50. கடைமுடி (கீழூர்) : செம்பொனார் கோயில் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 3 கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலுமே பெற்ற தலம்.

51. ஆலம்பொழில்: தஞ்சையிலிருந்து 7 கல் தொலைவு. சப்தஸ்தானங்களுள் ஒன்றாகிய திருப்பூந்துருத்தியிலிருந்து

இத்தலத்து இறைவனை வணங்கி விட்டு, (பதிகம் இல்லை) அவரிடம் விடைபெற்றுக் கொண்டு திருப்பூந்துருத்தி[52] வருகின்றார். இறைவனை வழிபடுகின்றார் (பதிகம் பாடவில்லை). அடுத்து, கண்டியூர்[53] வருகின்றார். இறைவனை வழிபடுகின்றார் (பதிகம் பாடவில்லை). பூந்துருத்தியிலிருந்து கண்டியூர் வருகின்றார். **'வினவினேன் அறியாமையில்'** (3. 38) என்ற முதற் குறிப்புடைய செந்

---

1 கல் தொலைவு. அப்பர் பாடல் மட்டிலும் பெற்ற திருத்தலம்.

52. **பூந்துருத்தி** (திருப்பூந்துருத்தி): தஞ்சையிலிருந்து 8 கல் தொலைவு. சப்த ஸ்தானத் தலங்களுள் ஒன்று. அப்பர் சுவாமிகள் இங்குத் திருமடம் அமைத்துப் பல பொதுப் பதிகங்கள் அருளினார். அத்திருமடச் சிதைவு இன்றும் உள்ளது. பாண்டிநாட்டில் சைவம் பரப்பித் திரும்பும் வழியில் சம்பந்தர் அப்பர் பெருமானைக் காண இத்திருத்தலத்தருகில் வரும்போது, ஒருவரும் காணாதபடி, முத்துச் சிவிகையைத் தாங்கும் தொண்டர்களோடு அப்பர் உள் நுழைந்து தாங்கி வந்தனர். இதையறிந்தவுடன் சம்பந்தர் கீழ் இழிந்து ஒருவரையொருவர் வணங்கி அளவளாவினர். அப்பர் பாடல் மட்டிலும் பெற்ற திருத்தலம்.

53. **கண்டியூர் வீரட்டம்** : தஞ்சையிலிருந்து திருவையாறு செல்லும் பேருந்து வழியில் 6 கல் தொலைவு. ஆதி காலத்தில் ஐம்முகச் சிவனாரைப்போல் பிரமனுக்கு ஐந்து தலைகள் இருந்தபடியால் பிரமன் சமத்துவம் கொண்டாடிச் செருக்குற்றனன். பற்பல உயிர்கட்குத் துன்பமும் விளைவித்தனன். தேவர்களின் வேண்டுகோட்கிரங்கி அவனது ஐந்தாவது தலையைக் கண்டித்தெறிந்தமையால் கண்டியூர் வீரட்டமாயிற்று. சப்தஸ்தான தலங்களுள் ஒன்று. காவிரிக் கரையிலுள்ள தலம்.

தமிழ் மாலை தொடுத்து வீரட்டானத்திறைவனை வழிபடு கின்றார்.

விரிவிலாதுமைக் கேட்கின்றேன்
 அடிவிரும்பியாட்செய்வீர் விளம்புமின
கரையெலாந்திரை மண்டுகாவிரிக்
 கண்டியூருறை வீரட்டன்
முரவமொந்தை முழவொலிக்க
 முழங்குபேயொடும் கூடிப்போய்ப்
பரவுவானவர்க் காகவார்கடல்
 நஞ்சமுண்ட பரிசதே. (5)

என்பது இம் மாலையின் ஐந்தாவது தமிழ் மணம் கமழும் வாடா நறுமலர்.

கண்டியூர்ப் பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு சோற்றுத்துறை[54] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். 'செப்பநெஞ்சே' (1. 28) என்ற முதற் குறிப்புடைய திருப் பதிகம் பாடி இறைவனை இறைஞ்சுகின்றார்.

செப்ப நெஞ்சே நெறிகொள் சிற்றின்பம்
துப்ப னென்னாது அருளே துணையாக
ஒப்ப ரொப்பர் பெருமான் ஒளிவெண்ணீற்(று)
அப்பர் சோற்றுத்துறை சென்றடை வோமே. (1)

என்பது இதன் முதற் பாசுரம்.

சோற்றுத்துறை எம்பெருமானிடம் விடை பெற்றுக் கொண்டு வேதிகுடி[55] என்ற தலத்தை அடைகின்றார்.

---

54. சோற்றுத்துறை: தஞ்சையிலிருந்து 7½ கல் தொலைவு. பேருந்துவழி. சப்தஸ்தானத் தலங்களுள் ஒன்று. சண்டேசுவர நாயனார் அவதரித்து வழிபட்டு முத்தி அடைந்த தலம்.

55. வேதிகுடி (திருவேதிகுடி) : திட்டை என்ற இருப் பூர்தி நிலையத்திலிருந்து 3 கல் தொலைவு. சப்தஸ்தானத் தலங்களுள் ஒன்று.

'நீறு வரியாடரவோடாமை' (3.78) என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ் மாலை தொடுத்துத் தலத்து இறைவனை வழி படுகின்றார்.

செய்யதிரு மேனிமிசை வெண்பொடி
யணிந்துகரு மானுரிவைபோர்த்து
ஐயமிடு மென்றுமட மங்கையொ
டகந்திரியும் மண்ணலிடமாம்
வையம்விலை மாறிடினும் ஏறுபுகழ்
மிக்கிழி விலாதவகையார்
வெய்யமொழி தண்புலவ ருக்குரை
செயாதஅவர் வேதிகுடியே. (6)

என்பது இம்மாலையின் செந்தமிழ் நறுமணம் கமழும் ஆறாவது வாடா மலர்.

வேதிகுடி இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு வெண்ணி [56] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். 'சடையானைச்' (2. 14) என்ற முதற்குறிப்புடைய திருப் பதிகம் பாடி இறைவனை ஏத்துகின்றார்.

முத்தினை முழுவயிரத் திரள்மா ணிக்கத்
தொத்திணைத் துளக்க மிலாதவி ளக்காய்
வித்தினை விண்ணவர் தாந்தொழும் வெண்ணியில்
அத்தனை அடையிவல் லார்க்கில்லை அல்லலே. (6)

என்பது இப்பதிகத்தின் ஆறாவது பாடல்.

வெண்ணியூர் இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு தென்குடித்திட்டை [57] என்ற தலத்திற்கு வருகின்றார்

---

56. வெண்ணியூர் (கோயில் வெண்ணி) : தஞ்சை-நாகூர் இருப்பூர்தி வழியில் நீடாமங்கலத்துக்கு அடுத்த கோயில் வெண்ணி என்ற நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு.

57. தென்குடித்திட்டை: திட்டை என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து 1 கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

சம்பந்தர் பெருமான். 'முன்னை நான்மறை' (3. 35) என்ற முதற்குறிப்புடைய பதிகம் பாடித் தலத்து இறைவனை வழிபடுகின்றார்.

ஊறினார் ஓசையுள் ஒன்றினார் ஒன்றிமால்
கூறினார் அமர்தரும் குமரவேள் தாதையூர்
ஆறினார் பொய்யகத் தையுணர் வெய்திமெய்
தேறினார் வழிபடுந் தென்குடித் திட்டையே. (7)

என்பது இப்பதிகத்தின் ஆறாவது பாடல்.

தென்குடித்திட்டை ஈசனிடம் விடைபெற்றுக்கொண்டு சக்கரப்பள்ளி[58] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். 'படையினார் வெண்மழு' (3. 27) என்ற திருப்பதிகம் பாடிச் சக்கரப்பள்ளி இறைவனைச் சேவிக்கின்றார்.

பாங்கினார் முப்புரம் பாழ்பட வெஞ்சிலை
வாங்கினார் வானவர் தானவர் வணங்கிட
ஓங்கினார் உமையொரு கூறொடும் ஒலிபுனல்
தாங்கினார் உறைவிடம் சக்கரப் பள்ளியே. (6)

என்பது இப்பதிகத்தின் ஆறாவது பாடல்.

சக்கரப்பள்ளியானிடம் விடைபெற்றுக் கொண்டு புள்ளமங்கை—திருவாலந்துறை[59] வருகின்றார். 'பாலுந்துறு திரளாயின' (1.16) என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ் மாலை புனைந்து புள்ளமங்கைப் பெருமானைச் சேவிக்கின்றார். இதில்,

---

58. சக்கரப்பள்ளி : தஞ்சை-மயிலாடுதுறை இருப்பூர்தி வழியில் அய்யம்பேட்டை நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

59. புள்ளமங்கை ஆலந்துறை (பசுபதி கோயில்) : மயிலாடுதுறை - தஞ்சை இருப்பூர்தி வழியில் பசுபதி கோயில் என்ற நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

மன்னானவன் உலகிற்கொரு
மழையானவன் பிழையில்
பொன்னானவன் முதலானவன்
பொழில்சூழ் புளமங்கை
என்னானவன் இசையானவன்
இளஞாயிறின் சோதி
அன்னானவன் உறையும்மிடம்
ஆலந்துறை யதுவே. (6)

என்பது ஆறாவது தமிழ் மணங்கமழும் நறுமலர்.

புள்ளமங்கை இறைவனிடம் விடை பெற்றுக்கொண்டு சேலூர்[60] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். சேலூர் ஈசனைச் சேவித்துகொண்டு பாலைத்துறை[61] வருகின்றார். தலத்துப் பெருமானை வழிபட்டுக்கொண்டு (பதிகம் இல்லை) நல்லூர்[62] வருகின்றார். நல்லூர் மறையவர்கள் எதிர் கொண்டு சிவபுரச் செம்மலாருக்குப் பெரிய வரவேற்பு நல்குகின்றனர். பிள்ளையார் முத்துச் சிவிகையினின்றிறங்கி அந்தணர் குழாம் முன் செலத் தாமும் பரிசனங்களும் அவர் களைத் தொடர்ந்து செல்லுகின்றார். வரும் வழியில்

---

60. சேலூர் : தேவராயன் பேட்டை - பாபநாசம் வட்டத்திலுள்ளது. இதனைச் சம்பந்தர் வழிபட்டதாகச் சேக்கிழார் பெருமான் குறித்துள்ளார். இது வைப்புத்தலம்.

61. பாலைத்துறை : பாபநாசம் இருப்பூர்தி நிலையத்தி லிருந்து 1 கல் தொலைவு. அப்பர் பெருமான் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

62. நல்லூர் : சுந்தரப் பெருமாள் இருப்பூர்தி நிலை யத்திலிருந்து 2 கல் தொலைவு. அப்பருக்குத் திருவடி தீட்சை தந்த தலம். அமர்நீதி நாயனார் இறைவன் தந்த கோவணத்திற்குப் பதிலாகத் தாமும் புதல்வனும் மனைவியும் தராசேறிக் கோவணக் குவியலோ அர்ப்பணம் செய்த தலம்.

கோபுர வழிபாடு நடைபெறுகின்றது. பின்னர்த் திருக் கோயிலை அடைந்து ஆனந்தக் கண்ணீர் பொழிய அதனை வலம் வருகின்றார். பின்னர் இறைவன் திரு முன்பு சென்று 'கொட்டும் பறை சீராற்' (1.86) என்ற முதற்குறிப்புடைய பதிகம் பாடிப் போற்றுகின்றார்.

எங்கள் பெருமானை இமையோர் தொழுதேத்தும்
நங்கள் பெருமானை நல்லூர் பிரிவில்லாத்
தங்கை தலைக்கேற்றி யாளென் றடிநீழல்
தங்கு மனத்தார்கள் தடுமாற் றறுப்பாரே. (7)

என்பது இப்பதிகத்தின் ஏழாவது பாடல்.

இப்பதியில் ஒரு சில நாட்கள் தங்கி விடுகின்றார். நாடோறும் விமலர்தாள் விருப்புடன் வணங்குகின்றார். இன்னிசைப் பதிகங்களையும் பாடுகின்றார். இங்ஙனம் பாடிய பதிகங்களுள் 'பெண்ணமருந் திருமேனி' (2. 57) என்ற முதற்குறிப்புடையது ஒன்று.

கிணங்க வரும் மூவிலையும் அனலும்
    ஏந்தி நெறிகுழலாள்
அணங்கமரும் பாடலோ டாடல்
    மேவும் அழகினீர்
திணங்கவரும் ஆடரவும் பிறையும்
    சூடித் திருநல்லூர்
மணங்கமழும் கோயிலே கோயி
    லாக மகிழ்ந்தீரே. (5)

என்பது இப்பதிகத்தின் ஐந்தாவது பாடல். இன்னொரு பதிகம் 'வண்டிரிய விண்ட' (3.83) என்ற முதற் குறிப் புடையது.

பொடிகொள்திரு மார்பர்புரி நூலர்புனல்
    பொங்கரவு தங்கும்
முடிகொள்சடை தாழவிடை யேறுமுத
    லானரவ ரிடமாம்

இடிகொள்முழ வோசையெழி லார்செய்தொழி
லாளர்விழ மல்கச்
செடிகொள்வினை யகலமன மினியவர்கள்
சேர்திருநல் லூரே. (5)

என்பது இப்பதிகத்தின் ஐந்தாவது பாடல்.

எப்பொழுதும் ஊர்ப் பெருமக்களும் மறையவர்களும் சூழ்ந்து கொண்டு நற்பொழுது போக்குகின்றனர். பிள்ளையாரும் காலையிலும் மாலையிலும் நல்லூர்ப் பெருமானை வழிபடும் வழக்கத்தை மேற்கொண்டு காலங்கழிக்கின்றனர். அப்பர் பெருமானுக்குத் திருவடி தீட்சை நல்கிய நல்லூர் நாயகன் சண்பை வேந்தரையும் சில நாட்கள் தங்க வைத்து விடுகின்றார். நாமும் தலப் பயணத்தின் முதற் பகுதியை நிறைவு செய்கின்றோம்.

# 6. கொங்கு நாட்டுத் தலவழிபாடு

'கொங்கு நாட்டுத் தல வழிபாடு' என்று தனியாகத் திட்டங் கொண்டு பிள்ளையார் புறப்படவில்லை. சோழ நாட்டுப் பயணத்தின் (மூன்றாவது சுற்று)போது இதனைத் தொடருகின்றார். கொங்கு நாட்டுச் சிவத்தலங்கள் ஏழு. இவற்றுள் திருப்புக்கொளியூர் (அவிநாசி), திருமுருகன் பூண்டி ஆகிய இரண்டு திருத்தலங்கட்கும் காழிப் பிள்ளையார் வரவில்லை. ஏனைய ஐந்து தலங்களையே வழிபட்டதாகத் தெரிகின்றது.

திருஈய்ங்கோய் மலைத் தலத்தை வழிபட்டவுடன் பிள்ளையார் கொடிமாடச் செங்குன்றூர்[1] வருகின்றார்.

---

1. கொடிமாடச் செங்குன்றூர் : (திருச்செங்கோடு) சேலம் - ஈரோடு இருப்பூர்திப் பாதையில் சங்கரி துர்க்கம் என்ற நிலையத்திலிருந்து 6 கல் தொலைவு. பேருந்து வசதி உண்டு. மலை உயரம் 1901 அடி. மலைமேல் கோயில் உள்ளது. அர்த்தநாரீசுவரர் மூலத்தானத் திருவுருவம் சலவைக் கல்லாலாகியது; மிக அழகியது. திருவடியில் நீரூற்று. இப்பெருமான் எழுந்தருள்வது வைகாசித் திருவிழாவில் திருத்தேர் விழாவிற்கு, முருகன் சந்நிதி மிகவும் பெரியது. இந்த முருகனைத் தரிசித்தற்கு ''நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே'' (கந்த. அலங். 90) என்பர் அருணகிரிநாதர். சம்பந்தர்

வந்தவர், 'வெந்த வெண்ணீறணிந்து' (1.107) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடிச் செங்குன்றூர்ப் பெருமானைப் போற்றுகின்றார். இதில்,

ஓங்கிய மூவிலைநற்சூலம்
ஒருகையன் சென்னி
தாங்கிய கங்கையொடு
மதியஞ் சடைக்கணிந்து
கோங்கணவும் பொழில்சூழ்
கொடிமாடச் செங்குன்றூர்வாய்ந்த
பாங்கனதாள் தொழுவார்
வினையாய பற்றறுமே. (6)

என்பது ஆறாவது பாடல். இதன் பிறகு திருநணா[2] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். வந்தவர் 'பந்தார் விரல் மடவாள்' (2.72) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனை ஏத்துகின்றார். எனக்குத் திருமணம் ஆகி மாமனார் வீட்டில் தங்கியிருந்தபோது (1937 - மார்ச்சு என்பதாக நினைவு) என் மனைவியுடன் இங்கு வந்து ஆற்றில் நீராடி பவானியம்மனை வழிபட்டுத் தலத்து இறைவனையும் சேவித்த நினைவு இன்னும் என் மனத்தில் பசுமையாகவே உள்ளது. சம்பந்தர் இங்கு வந்து பாடிய பதிகத்தின்,

---

முன்பனிக் காலத்தில் இங்கெழுந்தருளியபோது உடன் வந்த தொண்டர் குழாம் குளிர்க் காய்ச்சலால் வருந்தின போது திருநீலகண்டப் பதிகம் (1.~~107~~116) பாடி அதனைப் போக்குவித்தனர். சம்பந்தர் பாடல் மட்டும் பெற்ற தலம்.

2. நணா (பவானி): ஈரோட்டிலிருந்து 9 கல் தொலைவு. பேருந்து வசதி உண்டு. காவிரியில் பவானியாறு கூடும் இடம் (கூடுதுறை) நல்ல இயற்கைக் காட்சி. சமுக்காளத் தறி மிகுதி. பவானி சமுக்காளம் பேர் பெற்றது. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

வில்லார் வரையாக மாநாக
நாணாக வேடங்கொண்டு
புல்லார் புரமெரித் தார்க்கிடம்
போனும் புலியுமானும்
அல்லாத சாதிமதம் அங்கழல்மேல்
கைகூப்ப அடியார்கூடிச்
செல்லா வருநெறிக்கே செல்ல
அருள்புரியும் திருநணாவே (6)

என்பது ஆறாவது பாடல்.

**பனிநோய் தீர்த்தல்:** திருநணாவிலிருந்து திரும்பி வந்து கொடிமாடச் செங்குன்றூரில் தங்குகின்றார். அப்பொழுது பனிக்காலமாதலால் அந்நாட்டின் இயல்பின்படி தோன்றுவதாகிய பனியென்னும் சுரநோய் ஆளுடைய பிள்ளையாருடன் வந்த அடியார்களையும் தொடர்ந்து வருத்தியது. இதனையுணர்ந்த சண்பை வேந்தர், "இந்நிலத்தின் இயல்பெனினும், இறைவனடியார்களாகிய நமக்கு எய்தப் பெற்றது" என்று கூறி இறைவனைப் போற்றுகின்றார். உலகினை அழிக்க வந்த நஞ்சைத் தன்னகத் தடக்கி இடர் நீக்கியது இறைவனது திருநீலகண்டம். ஆதலால் "எவ்விடத்தும் அடியார்களைப் பற்றிய இடர்களை நீக்கியருள்வது எம்பிரான் திருநீலகண்டம்" என்று அதன்மீது ஆணைவைத்து, 'அவ்வினைக்கிவ்வினை' (1.116) என்ற முதற் குறிப்பினையுடைய திருநீலகண்டப் பதிகம்[3] பாடிப் பரமனைப் போற்றுகின்றார்.

மறக்கு மனத்தினை மாற்றியெம்
மாவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் றிருந்தடிக் கீழ்ப்
பிழையா வண்ணம்

3. இது பொதுப் பதிகமாகும்.

பறித்த மலர்க்கொடு வந்துமை
ஏத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெறா
திருநீல கண்டம் (6)

என்பது இதன் ஆறாவது பாடல். இப்பதிகத்தில் ஏழாவது பாடல் காணப்பெறவில்லை.

1958-ஆம் ஆண்டு மே மாதம் (என் அன்னையார் சிவப்பேறு அடைந்த ஆண்டு) கோவைக்குக் கம்பராமாயண ஆராய்ச்சிக்காக (4 - நாள் திட்டம்) கம்பன் அடிப்பொடி, மர்ரே கம்பெனி ராஜம் முதலியோருடன் கோவை சென்றிருந்தபொழுது, அடியேனும் கம்பன் அடிப்பொடியும் (காரைக்குடி, சா. கணேசன்) திரும்பும்போது திருச்செங் கோடு வந்தோம். அடியேனுக்கும் அவருக்கும் மலைமேல் செல்ல வேண்டும் என்ற உந்தல் ஏற்பட்டது. இருவரும் மலை ஏறினோம். செங்குத்தான மலை; அப்போது படிக்கட்டுகளும் சரியாக இல்லை. கம்பனடிப் பொடி அடியேனைவிட பத்தாண்டுகள் மூத்தவராயினும் விரைந்து ஏறினார். அடியேனுக்கு அடிக்கடி தளர்ச்சி ஏற்பட்டதால் சற்று மெதுவாகவே ஏறினேன். "என்ன ரெட்டியார்? என்னைவிட இளைஞர். இப்படித் தளர் கின்றீர்களே?" என்று கிண்டல் செய்து கொண்டே வந்தார். மலையேறி முருகனையும், சிவபெருமானையும் சேவித்தோம். இந்த நிகழ்ச்சி இன்றும் அடியேன் மனத்தில் பசுமையாகவே உள்ளது.

நாங்கள் வந்தபோது தேர்த் திருவிழா நடைபெற்றுக் கொண்டு இருந்தது. ஊருக்குள் பெருங்கூட்டம். சிறு சிறு கடைகள் — பொரி உருண்டை, கடலையுருண்டை, குச்சி மிட்டாய்க் கடைகள் எங்குப் பார்த்தாலும் இருந்தன. வெயிற் காலமாதலால் பல தண்ணீர் பந்தல்களும் இருந்தன. கொங்கு வேளாளர்கள் உழைப்பிற்குப் பேர் போனவர்கள். திருவிழாவில் உழைப்பாளர்கள் கூட்டமே

அதிகமாக இருந்தது. 'வெள்ளை வேட்டிக்காரர்கள்' அங்கொருவர் இங்கொருவருமாக இருந்தனர். கணேசன் "என்ன ரெட்டியார், அநாகரிகமான கூட்டமாக இருக்கின்றதே" என்றார். செட்டிநாட்டு நிலையை ஒப்பிட்டதால் ஏற்பட்ட பேச்சு என்பதை அறிந்தேன். "ஆம் ஐயா, உழைப்பாளர்கள் தோற்றத்தில் அப்படித்தான் தென்படுவார்கள். அவர்கள் முகத்தைப் பாருங்கள். உழைப்பையெல்லாம் மறந்து இன்றுதான் ஆனந்தமாக இருக்கிறார்கள்" என்றேன். "உண்மைதான்; உடலுழைப்பைப் பார்க்காதவர்கள் நாம். நீங்கள் கூறுவது முக்காலும் உண்மை," என்று என் மறுமொழியை ஆமோதித்தார். அக் கூட்டத்தில் சிற்றுண்டியோ, காஃபியோ கொள்வதற்கும் மனம் இல்லை. ஏதோ குளிர்பானம் பருகி ஈரோடு வந்து சேர்ந்தோம்; அன்றிரவே திருச்சி வழியாகக் காரைக்குடி திரும்பினோம். ராஜத்தோடு வந்தவர்கள் ஈரோட்டிலிருந்த வண்ணம் சென்னை திரும்பிவிட்டனர்.

ஞானசம்பந்தப் பெருமான் திருச்செங்கோட்டிலிருந்து திருப்பாண்டிக் கொடுமுடிக்கு[4] (கறையூர்) வருகின்றார். 'பெண்ணமர் மேனியினாரும்' (2·69) என்ற திருப்பதிகம் பாடி இறைவனைப் போற்றுகிறார். இதில்,

போகமும் இன்பமு மாகிப்
போற்றியென் பாரவர் தங்கள்
ஆகமு றைவிட மாக
அமர்ந்தவர் கொன்றையி னோடும்

---

4. பாண்டிக் கொடுமுடி (கொடுமுடி): திருச்சி-ஈரோடு இருப்பூர்திப் பாதையில் உள்ள கொடுமுடி என்ற நிலையத்திலிருந்து ¼ கல் தொலைவு. அகண்ட காவிரிக்கரையிலுள்ளது. இசை மேதை கொடுமுடி சுந்தராம்பாள் நினைவு வரும் இப்போது அங்குச் செல்பவர்கட்கு.,

நாகமும் திங்களும் சூடி
நன்னுதல் மங்கைதன் மேனிப்
பாகமு கந்தவர் தாமும்
பாண்டிக் கொடுமுடி யாரே (5)

என்பது ஐந்தாவது பாடல். கொடுமுடியிலிருந்து வெஞ்சமாக் கூடல்[5] வருகின்றார்; இறைவனை வழிபடுகின்றார் (பதிகம் இல்லை). தலத்து இறைவனை வழிபட்டுக் கொண்டு கருவூர்த் திருவானிலை[6]க்கு வருகின்றார். 'தொண்டெலா மலர்' (2·28) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனைப் போற்றுகின்றார். இதில்,

தேவர் திங்களும் பாம்பும் சென்னியில்
மேவர் மும்மதி லெய்த வில்லியர்
காவலர் கருவூ ருளாநிலை
மூவ ராகிய மொய்ம்ப ரல்லரே. (6)

என்பது ஆறாவது திருப்பாடல்.

கருவூர் ஆனிலை வழிபாட்டுடன் கொங்கு நாட்டுத் தலவழிபாடு நிறைவு பெறுகின்றது. பின்னர்ச் சோழ நாட்டுத் திருத்தலப் பயணம் தொடருகின்றது. திருப் பராய்த் துறைக்கு வருகின்றார். இதனைச் சேக்கிழார் பெருமான்,

---

5. வெஞ்சமாக்கூடல்: கரூரிலிருந்து 15கல் தொலைவு. சுந்தரர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

6. கருவூர் ஆனிலை: கரூர் இருப்பூர்தி நிலையத்தி லிருந்து ½ கல் தொலைவு. எறிபத்தர், புகழ்ச்சோழர், கருவூர்த் தேவர் (9-ஆம் திருமுறை) முதலியோர் வரலாறுகள் விளங்கும் தலம். காமதேநு பூசித்தமையால் கோயிலின் பெயர் ஆன் நிலை, ஆனிலை ஆயிற்று. சம்பந்தர் பாடல் மட்டும் பெற்ற தலம்.

பன்னெடுங் குன்றும் படர்பெருங்
　　கானும் பலபதியும்
அந்நிலைத் தானங்கள் ஆயின
　　எல்லாம் அமர்ந்திறைஞ்சி
மன்னு புகலியில் வைதிக
　　வாய்மை மறையவனார்
பொன்னியல் வேணிப் புனிதர்
　　பராய்த்துறை யுட்புகுந்தார்.[7]

என்று காட்டுவர்.

7. பெ. பு. ஞானசம்பந். 340.

# 7. சோழநாட்டுத் திருத்தலப் பெரும் பயணம் (2)

அப்பர் சுவாமிகட்குத் திருவடி தீட்சை செய்தவர் நல்லூர்ப் பெருமான். இதையறிந்துதான் பிள்ளையார் இத் திருத்தலத்தில் சில நாட்கள் தங்கினார் போலும். இத் திருத்தலத்திலிருந்து சோழ நாட்டு இரண்டாம் சுற்றுப் பயணத்தைத் தொடங்குகின்றவர் கருகாவூர்[1] என்ற திருத் தலத்திற்கு வருகின்றார். 'முத்திலங்கு முறுவல்' (3·46) என்ற முதற்குறிப்புடைய பதிகம் பாடி இறைவனை வழுத்து கின்றார்.

மையலின்றி மலர்கொய்து வணங்கிடச்
செய்யவுள்ளம் மிகநல்கிய செல்வத்தர்
கைதன்முல்லை கமழும் கருகாவூரெம்
ஐயர்வண்ணம் மழலும் மழல்வண்ணமே. (5)

என்பது இப்பதிகத்தின் ஐந்தாம் பாடல்.

கருகாவூர் அழகரிடம் விடை பெற்றுக் கொண்டு அவளி வணல்லூர்[2] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார்.

---

1. கருகாவூர் (திருக்களாவூர்): மயிலாடுதுறை — தஞ்சை இருப்பூர்தி வழியில் பாபநாசம் நிலையத்திலிருந்து 4 கல் தொலைவு.

2. அவளிவணல்லூர்: தஞ்சை — நாகூர் இருப்பூர்தி வழியில் கோயில் வெண்ணி என்ற நிலையத்திலிருந்து 5 கல் தொலைவு.

'கொம்பிரிய வண்டுலவு' (3.82) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ் மாலை புனைந்து தலத்துப் பெருமானைச் சேவிக்கின்றார்.

குழலின்வரி வண்டுமுரல் மெல்லியன
 பொன்மலர்கள் கொண்டு
கழலின்மிசை யிண்டைபுனை வார்கடவு
 ளென்றமரர் கூடித்
தொழலும்வழி பாடுமுடை யார்துயரு
 நோயுமில ராவர்
அழலுமழு ஏந்துகையி னாலுறைவ
 தவளிவணல் லூரே. (5)

என்பது இம் மாலையின் தமிழ் மணங்கமழும் ஐந்தாவது வாடா நறுமலர்.

அவளிவணல்லூர் அறிவரியனாய பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு பரிதி நியமம்[3] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். 'விண்கொண்ட தூமதி' (3·104) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ்ப் பாமாலை புனைந்து தலத்துப் பெருமானைச் சேவிக்கின்றார்.

பிறைவளர் செஞ்சடை பின்தயங்கப்
 பெரியமழு வேந்தி
மறையொலி பாடிவெண் ணீறுபூசி
 மனைகள் பலிதேர்வார்
இறைவளை சோர எழில்கவர்ந்த
 இறைவர்க் கிடம்போலும்
பறையொலி சங்கொலி யால்விளங்கும்
 பரிதிந் நியமமே. (7)

---

3. பரிதி நியமம்: தஞ்சை-நாகூர் இருப்பூர்தி வழியில் சாலியமங்கலம் நிலையத்திலிருந்து 8 கல் தொலைவு. தஞ்சையிலிருந்து பட்டுக்கோட்டை செல்லும் பேருந்து வழியில் 10 கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

என்பது இத்திருமாலையின் தமிழ் மணம் கமழும் **ஏழாவது** நறுமலர்.

பரிதி நியமப் பரமனிடம் விடை பெற்றுக் கொண்டு **பூவனூர்**[4] வருகின்றார். பூவனூர் இறைவனை வழிபட்டு (பதிகம் இல்லை) அவரிடம் விடை பெற்றுக் கொண்டு **'ஆவூர்ப் பசுபதீச்சரம்'**[5] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். **'புண்ணியர் பூதியர்'** (1·8) என்ற முதற் குறிப்புடைய திருப் பதிகம் பாடி இறைவனை ஏத்துகின்றார்.

**குற்றமறுத்தார் குணத்திலுள்ளார்**
**கும்பிடுவார்தமக் கன்புசெய்வார்**
**ஒற்றைவிடையினர் நெற்றிக்கண்ணாருறை**
**பதியாகும் செறிகொல் மாடம்**
**சுற்றியவாசலின் மாதர்விழாச்**
**சொற்கவிபாட நிதானநல்கப்**
**பற்றியவகையினர் வாழுமாவூர்ப்**
**பசுபதியீச்சரம் பாடுநாவே.** (6)

என்பது இத்திருப்பதிகத்தின் **ஆறாவது** பாடல். மீண்டும் **நல்லூர்** வருகின்றார். இறைனை வழுத்துகின்றார் (பதிகம் இல்லை).

நல்லூர் இறைவனிடம் விடை பெற்றுக்கொண்டு **திருவலஞ்சுழி**[6] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். **மூன்று**

---

4. **பூவனூர்:** நீடாமங்கலம் இருப்பூர்தி நிலையத்தி லிருந்து **4** கல் தொலைவு. அப்பர் சுவாமிகள் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

5. **ஆவூர்ப் பசுபதீச்சரம்:** தஞ்சை — மயிலாடுதுறை இருப்பூர்தி வழியில் சுந்தரப் பெருமாள் கோயில் நிலையத்தி லிருந்து (சுவாமிமலை நிலையத்திற்கு அடுத்தது) **4 கல்** தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

6. **வலஞ்சுழி** (திருவலஞ்சுழி): சுவாமிமலை என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. வெள்ளைப் பிள்ளையார் சந்நிதி இங்கு மிகு புகழ் வாய்ந்தது.

திருப்பதிகங்கள் பாடி இறைவனைச் சேவிக்கின்றார். 'விண்டெலாம் மலரவ்' (2·2) என்ற முதற் குறிப்புடையது முதற்பதிகம். இதில்,

கந்த மாமலர்ச் சந்தொடு
காரகி லுந்தழீஇ
வந்த நீர்குடை வாரிடம்
தீர்க்கும் வலஞ்சுழி
அந்த நீர்முதல் நீர்நடு
வாமடி கேள்சொலீர்
பந்த நீர்கரு தாதுல
கிற்பலி கொள்வதே. (7)

என்பது ஏழாவது பாடல். அடுத்த பதிகம் 'என்ன புண்ணியஞ்' (2.106) என்ற முதற் குறிப்புடையது.

என்ன புண்ணியஞ் செய்தனை
நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்ன நீர்புரி வினைப்பயன்
இடைமுழு மணித்தர ளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு
வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித்தேத்தியும்
பாடியும் வழிபடு மதனாலே. (1)

என்பது இப்பதிகத்தின் முதல் பாடல். இதனையடுத்த பதிகம் 'பள்ளமதாய படர்சடை' (3·106) என்ற முதற்குறிப்புடையது. இதில்,

கையமரும் மழுநாகம் வீணைகலை
மான்மறி யேந்தி
மெய்யமரும் பொடிப்பூசி வீசுங்குழை
யார்தரு தோடும்
பெயமரும் மரவாட ஆடும்படர்
சடையார்க் கிடமாம்
மையமரும் பொழில்சூழும் வேலிவலஞ்
சுழிமா நகரே. (6)

என்பது ஆறாவது பாடல். இங்கும் சில நாட்கள் தங்கி மணிகண்டரை வழிபடுகின்றார். வலஞ்சுழியில் பிள்ளையார் தங்கினது முதுவேனில் பருவத்தில்.[7]

திருவலஞ்சுழி மணிகண்டப் பெருமானிடம் விடை பெற்றுக்கொண்டு பழையாறை மேற்றளி,[8] சத்திமுற்றம்[9] தலங்கட்கு வந்து அந்தந்தத் தலத்து இறைவர்களை வழி படுகின்றார் (இரண்டிலும் பதிகங்கள் இல்லை). சத்திமுற்றப் பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு திருப்பட்டீச்சரம்[10] கோயிலை வணங்கும் பெருவிருப்புடன் வருகின்றார். முதுவேனில் வெப்பம் தாங்க முடியாத நிலை. இறைவனருள் கிடைக்கின்றது.

**முத்துப்பந்தர் பெறுதல்:** சிவபூதங்கள் வானத்தில் மறைந்து நின்று சம்பந்தர் பெருமான் முடிமீது முத்துப் பந்தரினைப் பிடித்து 'எம்மை விடுத்து அருள் புரிந்தார் பட்டீசர்' என்று இயம்புகின்றன. வெயில் வெப்பம் தணிப்பதற்கு இந்த ஏற்பாட்டினைச் செய்கின்றார் பட்டீச்சரத்தீசர். அவ்வானொலியும் முத்துப்பந்தரும்

---

7. பெ. பு: ஞான சம்பந். 382—389. காண்க.

8. **பழையாறை மேற்றளி** என்பது சோழர் பேரூர். இது வைப்புத்தலம்.

9. **சத்திமுற்றம்** (சத்திமுத்தம்): தஞ்சை—மயிலாடு துறை இருப்பூர்தி வழியில் தாராசுரம் என்ற நிலையத் திலிருந்து 2 கல் தொலைவு. சத்தி சிவத்தை முத்தமிட்ட தலம். இத்தலத்தில் அப்பர் பெருமான் திருவடி தீட்சைக்கு விண்ணப்பித்தார்; அது நல்லூரில் கிடைத்தது. அப்பர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

10. **பட்டீச்சரம்:** தாராசுரம் என்ற இருப்பூர்தி நிலை யத்திலிருந்து 2 கல் தொலைவு. சம்பந்தருக்கு முத்துப்பந்தர் கொடுத்த தலம். சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

விண்ணில் தோன்றக் கண்ட பிள்ளையார், இறைவன் திருவருள் இதுவானால் ஏற்றுக் கொள்ளத் தகுவதே என்று கருதுகின்றார்; நிலமிசைப் பணிகின்றார். விண்ணிலிருந்து இழியும் முத்துப் பந்தரினை அடியார்கள் கைக்கொண்டு அதனை விரித்துப் பிடிக்கின்றனர். ஞானசம்பந்தரும் அவ்வழகிய பந்தரின் நிழலை ஈசன் அடியிணை நீழலெனக் கருதி இனிதமர்ந்து அடியார்கள் புடைசூழத் திருக்கோயிலை அடைகின்றார். தமக்கு இனிய நிழல் தந்துதவிய இறைவனை 'பாடல் மறை' (3·73) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ்ப் பாமாலை புனைந்து சேவிக்கின்றார்.

மருவமுழ வதிரமழ பாடிமலி
  மத்தவிழ வார்க்க அரையார்
பருவமழை பண்கவர்செய் பட்டீசர்
  மேயபடர் புன்ச டையினான்
வெருவமத யானையுரி போர்த்துமையை
  அஞ்சவரு வெள்விடை யினான்
உருவமெரி கழல்கள்தொழ வுள்ளமுடை
  யாரை யடையா வினைகளே. (5)

என்பது இப்பாமாலையின் தமிழ் மணம் கமழும் ஐந்தாவது நறுமலர்.

திருப்பட்டீச்சரத்திறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு பழையாறை வடதளி[11] வருகின்றார். இறைவனை இறைஞ்சுகின்றார் (பதிகம் இல்லை). பழையாறைப் பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு திருக்கருக்குடி[12]

11. பழையாறை வடதளி: தாராசுரம் என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து 1½ கல் தொலைவு. அமர்நீதி நாயனார் வாழ்ந்த தலம். அப்பர் பாடல் மட்டிலும் பெற்ற திருத்தலம்.

12. கருக்குடி (மருதாந்த நல்லூர்): கும்பகோணத்திலிருந்து 2½ கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

என்ற தலத்திற்கு வருகின்றனர். 'நனவிலும்' (3·21) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனைச் சேவிக்கின்றார்.

ஊனுடைப் பிறவியை யறுக்க உன்னுவீர்
கானிடை யாடலான் பயில்க ருக்குடிக்
கோனுயிர்கோயிலை வணங்கி வைகலும்
வானவர் தொழுகழல் வாழ்த்தி வாழ்மினே. (4)

என்பது இப்பதிகத்தின் நான்காவது பாடல்.

கருக்குடிப் பெருமானிடம் விடை பெற்றுக்கொண்டு இரும்பூளை[13] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். ஊரை விழாக்கோலம் பூணச் செய்து, பூரணகும்பத்துடன் திருத்தொண்டர் குழாம் எதிரேற்று வரவேற்கின்றனர். முத்துச் சிவிகையினின்று கீழிறங்கி அண்டர்பிரான் திருக்கோயிலை அடைகின்றார். 'சீரார் கழலே' (2. 36) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடிப் பரமனை வழிபடுகின்றார். இதில்,

சுற்றார்ந் தடியே தொழுவீர் இதுசொல்லீர்
நற்றாழ் குழல்நங்கை யொடுமுட னாகி
எற்றே இரும்பூளை இடங்கொண்ட ஈசன்
புற்றா டரவோ டென்பு பூண்ட பொருளே. (5)

என்பது ஐந்தாவது பாடல்.

இரும்பூளை இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு அரதைப் பெரும்பாழி[14] வருகின்றார். 'பைத்தபாம் போடரைக்'

---

13. இரும்பூளை (ஆலங்குடி): நீடாமங்கலம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 4 கல் தொலைவு. இங்கு தட்சிணா மூர்த்தி சந்நிதி பெரும் புகழ்பெற்றது. வியாழன் அன்று வழிபாடு சிறப்புடையது. தட்சிணாமூர்த்தியே திருத்தேரில் எழுந்து அருள்வார். சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற திருத்தலம்.

14. அரதைப் பெரும்பாழி: (அரித்வார மங்கலம்) கோயில் வெண்ணி என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து

(3. 30) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனை ஏத்துகின்றார்.

புற்றர வம்புலித் தோலரைக் கோவணம்
தற்றிர வின்னட மாடுவர் தாழ்தரு
சுற்றமர் பாரிடந் தொல்கொடி யின்மிசைப்
பெற்றர் கோயில் அரதைப்பெரும் பாழியே. (6)

என்பது இப்பதிகத்தின் ஆறாவது பாடல்.

அரதைப் பெரும்பாழி அண்ணலிடம் விடைபெற்றுக் கொண்டு திருச்சேறை[15] வருகின்றார். இத்தலத்து எம்பெருமான்மீது 'முறியுறு நிறமல்கு' (3. 86) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ் மாலை தொடுத்து வணங்குகின்றார்.

அந்தர முழிதரு திரிபுர
மொருநொடி யளவில்
மந்தர வரிசிலை யதனிடை
யரவரி வாளியால்
வெந்தழி தரவெய்த விடலையர்
விடமணி மிடறினர்
செந்தழல் நிறமுடை யடிகள்தம்
வளநகர் சேறையே. (5)

என்பது இத்திருமாலையின் ஐந்தாவது தமிழ் மணங்கமழும் நறுமலர்.

---

4 கல் தொலைவு. வராக அவதார மூர்த்தியின் கொம்பை முறித்துச் சிவபெருமான் தமது அணிகலன்களுள் ஒன்றாக்கிய தலம். சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற திருத்தலம்.

15. சேறை (உடையார் கோயில்): கும்பகோணத்திலிருந்து 8 கல் தொலைவு. பேருந்து வழியில் உள்ளது. இங்கு சாரநாதப் பெருமாள் கோயிலும் உள்ளது. இந்த சாரநாதப் பெருமாளை வழிபட வந்தபோது (1968) இத் திருக்கோயிலுக்கும் வந்தேன்.

திருச்சேறைப் பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு 'நாலூர் மயானம்'[16] என்ற திருத்தலம் வருகின்றார். 'பாலூரு மலைப் பாம்பும்' (2. 46) என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ் பாமாலையால் வழுத்துகின்றார். இம் மாலையில்,

> கண்ணார் நுதலான் கனலா டிடமிகப்
> பண்ணார் மறைபாடி யாடும் பரஞ்சோதி
> நண்ணார் புரமெய்தான் நாலூர் மயானத்தை
> நண்ணா தவரெல்லாம் நண்ணாதார்
> நன்னெறியே. (6)

என்பது தமிழ் மணங்கமழும் ஆறாவது வாடா நறுமலர். இத் திருப்பதிகத்தின் பாடல்தோறும் ஈற்றடியில் ஒரு நல்வாசகத்தை நவின்றுள்ளமை யறிந்து மகிழத் தக்கது.

நாலூர் மயானத் திறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு குடவாயில்[17] என்ற திருத்தலத்தை அணைகின்றார். இரண்டு திருப்பதிகங்களால் வழிபடுகின்றார். 'திகழுந் திருமாலொடு' (2. 22) என்ற முதற்குறிப்புடையது முதற் பதிகம்.

> அலைசேர் புனலன் னனலன் னமலன்
> தலைசேர் பலியன் சதுரன் விதிரும்
> கொலைசேர் படையன் குடவா யில்தனில்
> நிலைசேர் பெருங்கோ யில்நிலா யவனே. (6)

---

16. நாலூர் மயானம்: கும்பகோணத்திலிருந்து 8½ கல் தொலைவு. கொடவாசல் பேருந்து வழியில் உள்ளது. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

17. குடவாயில் (கொடவாசல்): தஞ்சை - நாகூர் இருப்பூர்தி வழியில் கொரடாச்சேரி நிலையத்திலிருந்து 7 கல் தொலைவு. கும்பகோணத்திலிருந்து திருவாரூர் செல்லும் பேருந்து வழியிலுள்ளது; சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

என்பது இத்திருப்பதிகத்தின் ஆறாவது அருமலர். 'கலைவாழு மங்கையார்' (2. 58) என்ற முதற்குறிப்புடையது இரண்டாவது பதிகம்.

கழலார்பூம் பாதத்தீர் ஓதக்
  கடலில் விடமுண்டன்(று)
அழலாருங் கண்டத்தீர் அண்டர்
  போற்றும் அளவினீர்
குழலார வண்டினங்கள் கீதத்
  தொலிசெய் குடவாயில்
நிழலார்ந்த கோயிலே கோயி
  லாக நிகழ்ந்தீரே. (3)

என்பது இதன் மூன்றாவது பாடல்.

குடவாயில் பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு திருநறையூர் சித்தீச்சரம்[18] என்ற தலத்திற்கு எழுந்தருள்கின்றார் காழிப்பிள்ளையார். மூன்று திருப்பதிகங்களால் வழிபடுகின்றார். 'பிறைகொள் சடையர்' (1. 71) என்ற முதற்குறிப்புடையது முதற்பதிகம்.

நீரார் முடியர் கறைகொள் கண்டர்
  மறைகள் நிறைநாவர்
பாரார் புகழால் பத்தர் சித்தர்
  பாடி ஆடவே
தேரார் வீதி முழவார் விழவின்
  ஒலியுந் திசைசெல்லச்
சீரார் கோலம் பொலியு நறையூர்ச்
  சித்தீச் சரத்தாரே. (5)

---

18. நறையூர்ச் சித்தீச்சரம்: கும்பகோணத்திலிருந்து 5 கல் தொலைவு. நாச்சியார் கோயில் செல்லும் பேருந்து வழியில் உள்ளது. மங்கை மன்னன் பாடி நாச்சியாரையும் சேவித்து சித்தீச்வரத்து ஈசனையும் வழிபடலாம். 1968-ல் நறையூர்ப் பெருமானை வழிபட்டபோது இந்த இறைவனையும்வழிபட்டேன்.

என்பது இப்பதிகத்தின் ஐந்தாவது பாடல். 'ஊருலாவுபலி' (1. 29) என்ற முதற்குறிப்புடையது இரண்டாவது பதிகம்.

உம்ப ராலும் உலகின் னவராலும்
தம்பெ ருமையளத் தற்கரி யானூர்
நண்பு லாவு மறையோர் நறையூரில்
செம்பொன் சித்தீச் சரமே தெளிநெஞ்சே. (5)

என்பது இதன் ஐந்தாவது திருப்பாடல். 'நேரியனாகுமல்லன்' (2.87) என்ற முதற்குறிப்புடையது மூன்றாவது பதிகம். இதில்,

ஒளிர்தரு கின்றமேனி உருவெங்கும் மங்க
மாவையார ஆடலரவம்
மிளிர்தரு கையிலங்க அனலேந்தி யாடும்விகிர்தன்
விடங்கொள் மிடறன்
துளிர்தரு சோலையாலை தொழில்மேவ வேத
மெழிலார வென்றியருளும்
நளிர்மதி சேருமாட மடவர்களாரு நறையூரின்
நம்ப னவனே. (7)

என்பது ஏழாவது பாடல்.

சித்தீச்வரத்திறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு அரிசிற்கரைப்புத்தூர்[19] வந்தடைகின்றார். 'மின்னுஞ்சடை மேவின' (2.63) என்னும் பதிகம் பாடி இறைவனைப் போற்றுகின்றார்.

---

19. அரிசிற்கரைப் புத்தூர் (அழகார் புத்தூர்) : கும்பகோணத்திலிருந்து 4 கல் தொலைவு. தளர் வெய்திய கிழப்பருவத்திலும் நாள்தோறும் தவிராது முப்போதும் திருமேனி தீண்டிப் பூசிக்கும் புகழ்த்துணை நாயனார் திரு முழுக்காட்டும்போது, ஒருநாள் குடம் நழுவிச் சிவ லிங்கத்தின் மேல் விழுந்து விடுகின்றது. இந்த அபராதத் திற்கு மிகமிக அஞ்சிய நாயனாருக்கு இறைவன் அபயம் அளித்து ஓய்வு கொடுக்கின்றார். அவர் உணவுக்கு

வள்ளி முலைதோய் குமரன்
தாதை வான்தோயும்
வெள்ளி மலைபோல் விடையொன்
றுடையான் மேவுமூர்
தெள்ளி வருநீர் அரிசில்
தென்பாற் சிறைவண்டும்
புள்ளும் மலிபூம் பொய்கை
சூழ்ந்த புத்தூரே. (6)

என்பது இப்பதிகத்தின் ஆறாவது பாடல்.

அரிசிற்கரைப் புத்தூர் இறைவனிடம் விடை பெற்றுக் கொண்டு சிவபுரம்[20] வந்தணைகின்றார். மூன்று பதிகங்களால் சிவபுரத்திறைவனை வழுத்துகின்றார். 'புவம்வளி கனல்' (1.21) என்ற முதற்குறிப்புடையது முதற்பதிகம்.

சுருதிகள் பலநல முதல்கலை துகளறு
வகைபயில் வொடுமிகு
உருவிய லுலகவை புகழ்தர வழியொழு
குமெயுறு பொறியொழி
அருதவ முயல்பவர் தனதடி யடைவகை
நினையா னுறைபதி
திருவளர் சிவபுர நினைபவர் திகழ்குல
னிலனிடை நிகழுமே. (6)

என்பது இத்திருப்பதிகத்தின் ஆறாவது பாடல். 'இன்குரல் இசை கெழும்' (1.112) என்ற முதற்குறிப்புடையது இரண்டாவது பதிகம்.

---

நாடோறும் பொற்காசு கொடுத்த வரலாற்றை 2.63:7 (சம்பந்தர்) என்ற பாசுரமும், 7.9:6 (சுந்தரர்) என்ற பாசுரமும் கூறும்.

20. சிவபுரம் : கும்பகோணத்திலிருந்து 1½ கல் தொலைவு. திருமால் வராக உருவில் பூசித்ததை 1.21:7, 6.87:9 (அப்பர்) பாசுரங்கள் கூறும்.

ஆவிலைந் தமர்ந்தவன் அரிவையொடு
மேவிநன் கிருந்ததொர் வியன்நகர்தான
பூவில்வண் டமர்தரு பொய்கையன்னச்
சேவல்தன் பெடைபுல்கு சிவபுரமே. (7)

என்பது இதன் ஏழாவது பாடல். 'கலை மலி யகலல்குல்' (1.125) என்ற முதற்குறிப்புடையது மூன்றாவது பதிகம். இதில்,

முதிர்சடை யிளமதி நதிபுனல் பதிவுசெய்
ததிர்கழ லொலிசெய வருநட நவில்பவன்
எதிர்பவர் புரமெய்த இணையிலி யணைபதி
சதிர்பெறு முளமுடை யவர்சிவ புரமே. (6)

என்பது ஆறாவது பாடல்.

சிவபுரத்துப் பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு குடமூக்கு[21] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். 'அரவிரி கோடல்' (3.59) என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ்ப் பாமாலை புனைந்து கும்பேசுவரரை வழுத்துகின்றார்.

---

21. குடமூக்கு (கும்பேசுவரர் கோயில்) : கும்பகோணம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 1 கல் தொலைவு. பன்னிரண்டு ஆண்டுகட்கொருமுறை நடைபெறும் மகாமகத்தில் (மாமாங்கம் என்று உலக வழக்கிலுள்ள பெரு விழாவில்) கும்பேசுவரர் வெள்ளிக் காளை வாகனத்தில் பஞ்ச மூர்த்திகளோடு எழுந்தருளி வந்து மகாமகக் குளக் கரையில் தீர்த்தம் கொடுப்பர். அப்பொழுது பல இலட்சக் கணக்கான மக்கள் குளத்துள் முழுவதும் நின்று மூழ்கிச் சேவிப்பர். குளத்தில் நீர் முழுமையும் பல நாட்களாகப் பெரிய எஞ்சின்களால் இறைக்கப்பட்டு முழங்கால் அளவே நீர் இருக்கும்; சேறு ஏற்படாமல் புதுமணல் பரப்பப் பெற்றிருக்கும். இக்குள நீரில் மூழ்குவதால் இந்தியாவிலுள்ள கங்கை, யமுனை, கோதாவரி, கிருஷ்ணை, பெண்ணை, தண்பொருநை, குமரி முதலிய எல்லாத் தீர்த்தங்களிலும் முழுகும் பலன் கிடைக்கும் என்பது புராண வரலாறு. இதன்

கழைவளர் கவ்வைமுத்தம்
 கமழ்காவிரி யாற்றயலே
தழைவளர் மாவின்நல்ல
 பலவின்கனிகள் தயங்கும்
குழைவளர் சோலைசூழ்ந்த
 குழகன்குட மூக்கிடமா
இழைவளர் மங்கையோடும்
 இருந்தானவன் எம்மிறையே. (6)

என்பது இத்திருமாலையின் ஆறாவது நறுமணங் கமழும் வாடாமலர்.

குடமூக்கு இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு **குடந்தைக் கீழ்க் கோட்டம்**[22] வருகின்றார். நாகேசுவரனை வழிபடுகின்றார் (பதிகம் இல்லை). நாகேசுவரனிடம் விடைபெற்றுக் கொண்டு **குடந்தைக் காரோணம்**[23] வரு

---

சுருக்கம் 5.22:4, 5.22:8 என்ற அப்பர் பாசுரங்களிலும் கூறப் பெறுகின்றது. 1981-ல் மகாமகம் வந்தது. நானும் என் மனைவியும் மகாமகக் குளத்தில் மூழ்கிப் பிறவிப் பயன் பெற்றோம்.

22. **குடந்தைக் கீழ்க்கோட்டம்** (நாகேசுவரன் கோயில்): கும்பகோணம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. ஊர் நடுவேயுள்ள பெரிய கோயில்; சித்திரை மாதம் 3 நாட்கள் (11, 12, 13-ம் நாட்கள்) சூரிய கிரணங்கள் மூலத்தானத்திலுள்ள மூர்த்தியின் மேல் படுகின்றன. இதையே சூரிய பூசை என்பது மரபு. அப்பரின் 6.75:1 என்ற தேவாரம் இதைக் குறிப்பிடுகின்றது. அப்பர் தேவாரம் மட்டிலும் பெற்ற தலம்.

23. **குடந்தைக் காரோணம்** (காசிவிசுவநாதர் கோயில்): கும்பகோணம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. மகாமகக் குளத்தின் வடகரையில் உள்ளது. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம். இந்தக் கோவிலில் சில மணி நேரம் தங்கியிருந்தோம்; மகாமக விழாக் காட்சிகளைக் கண்டு களித்தோம்.

கின்றார். 'வாரார் கொங்கை' (1.72) என்ற முதற்குறிப் புடைய செந்தமிழ்ப் பாமாலை பாடிக் காசிவிசுவநாதரை வழுத்துகின்றார் காழிப்பிள்ளையார்.

பூவார் பொய்கை யலர்தாமரை
செங்கழுநீர் புறவெல்லாம்
தேவார் சிந்தை யந்தணாளர்
சீரால் அடிபோற்றக்
கூவார் குயில்கள் ஆலும்மயில்கள்
இன்சொற் கிளிப்பிள்ளை
காவார் பொழில்சூழ்ந் தழகார்குடந்தை
காரோ ணத்தாரே. (6)

என்பது இப்பாமாலையின் தமிழ் மணங்கமழும் ஆறாவது வாடா நறுமலர்.

காசிவிசுவநாதரிடம் விடைபெற்றுக் கொண்டு நாகேச்சரம்[24] வருகின்றார். வந்தவர் இரண்டு பதிகங்களால் தலத்துப் பெருமானை வழிபடுகின்றார். 'பொன்நேர்தரு' (2.24) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் முதலாவது. இதில்,

கலைமான் மறியும் கனலும் மழுவும்
நிலையா கியகை யினனே நிகழும்
நலமா கியநா கேச்சர நகருள்
தலைவா எனவல் வினைதா னறுமே. (5)

---

24. நாகேச்சரம் (திருநாகேஸ்வரம்): கும்பகோணத் தருகிலுள்ள திருநாகேஸ்வரம் என்ற இருப்பூர்தி நிலையத் திலிருந்து 1 கல் தொலைவு. கும்பகோணத்திலிருந்து பேருந்து மூலம் வந்து திரும்புதலே சிறந்தது. சேக்கிழார் அடிகள் பெரிதும் இத்தலத்தில் ஈடுபட்டவர். தாம் பிறந்து வளர்ந்த குன்றத்தூரில் தாம் எடுப்பித்த திருக்கோயிலுக்கு திருநாகேஸ்வரம் என்றே பெயரிட்டனர். சந்திரன், சூரியன், ஐந்தலை நாகம் பூசித்ததை அப்பர் தேவாரம் 5.52:4 என்ற பாசுரம் கூறும். மூவர் தேவாரமும் பெற்ற தலம்.

என்பது ஐந்தாவது பாடல். அடுத்த பாமாலை 'தழை கொள் சந்தும்' (2.119) என்ற முதற் குறிப்புடையது.

வம்புநாறும் மலரும்மலைப்
பண்டமும் கொண்டுநீர்
பைம்பொன்வாரிக் கொழிக்கும்
பழங்காவிரித் தென்கரை
நம்பன்நாளும் அமர்கின்ற
நாகேச்சர நண்ணுவார்
உம்பர்வானோர் தொழச்சென்
றுடனாவது முண்மையே. (5)

என்பது இந்தப் பதிகத்தில் இஃது ஐந்தாவது பாடல்.

நாகேச்சர நக்கபிரானிடம் விடைபெற்றுக் கொண்டு திருவிடை மருதூர்[25] என்ற திருத்தலம் வருகின்றார். இத்தலத்துப் பெருமானை ஆறு பதிகங்களால் வழிபடு கின்றார் காழிப் பிள்ளையார். பதிகம்-1; 'ஓடேகலன்' (1.32) என்ற முதற் குறிப்புடையது. இதில்,

வன்புற்றின் நாகமசைந் தழகாக
என்பிற்பல மாலையும்பூண் டெருதேறி
அன்பிற்பிரி யாதவளோடு முடனாய்
இன்புற்றிருந் தான்றனிடை மருதீதோ. (6)

என்பது ஆறாவது திருப்பாடல்.

பதிகம்-2: இப்பதிகம் 'தோடொர்காதினன்' (1.95) என்ற முதற் குறிப்புடைய திருவிருக்குக் குறள் பதிகமாகும்.

---

25. இடைமருதூர் (திருவிடைமருதூர்): மயிலாடுதுறை-தஞ்சை இருப்பூர்தி வழியில் திருவிடமருதூர் நிலையத் திற்கு மிக அருகில் உள்ளது. வரகுணபாண்டியன் பெரும் புகழ் வரலாற்றுத் தொடர்புடையது. பட்டினத்தடிகள் வழிபட்ட தலம். அவர் அருளிய மும்மணிக் கோவை பெற்றது, இங்குத் தைப்பூசத்தில் காவிரியில் நீராடுதல் சிறந்தது. (பாசுரம் 2.56:5)

கழலும் சிலம்பார்க்கும்
எழிலார் மருதரைத்
தொழலே பேணுவார்க்(கு)
உழலும் வினைபோமே. (6)

என்பது இதன் ஆறாவது பாடலாகும்.

பதிகம்-3: இது 'மருந்தவன் வானவன்' (1.110) என்ற முதற் குறிப்புடையது. இதில்,

நிறையவன் புனலொடு மதியும் வைத்த
பொறையவன் புகழவன் புகழ நின்ற
மறையவன் மறிகடல் நஞ்சை யுண்ட
இறையவன் வளநகர் இடைமருதே (6)

என்பது ஆறாவது பாடல்.

பதிகம்-4: 'நடைமருதிரிபுரம்' (1.121) என்ற முதற் குறிப்புடையது இது.

வருநல மயிலன மடநடை மலைமகள்
பெருநல முலையிணை பிணைசெய்த பெருமான்
செருநல மதிலெய்த சிவனுறை செழுநகர்
இருநல புகழ்மல்கு மிடைமடை மருதே. (5)

என்பது இதன் ஐந்தாவது பாடல்.

பதிகம்-5: இந்தப் பதிகம் 'விரிபுலியுரி' (1.122) என்ற முதற் குறிப்பினையுடையது.

சலசல சொரிபுனல் சடையினர் மலைமகள்
நிலவிய உடலினர் நிறைமறை மொழியினர்
இலரென் விடுபலி யவரிடை மருதினை
வலமிட வுடல்நலி விலதுள வினையே. (3)

என்ற இப்பாடல் பதிகத்தின் மூன்றாவதாகும்.

பதிகம்-6: 'பொங்குநூல் மார்பினீர்' (2.56) என்ற முதற் குறிப்புடையது இப்பதிகம்.

புனமல்கு கொன்றையீர்
புலியின் அதளீர் பொலிவார்ந்த
சினமல்கு மால்விடையீர்
செய்யீர்கரிய கண்டத்தீர்
இனமல்கு நான்மறையோர்
ஏத்துஞ்சீர்கொள் இடைமருதில்
கனமல்கு கோயிலே
கோயிலாகக் கலந்தீரே. (7)

என்பது இப்பதிகத்தின் ஏழாவது திருப்பாடலாகும்.

இடைமருதூர் ஈசனிடம் விடைபெற்றுக்கொண்டு (தென்) குரங்காடுதுறை[26] என்ற தலத்திற்கு வருகின்றார். 'பரவக் கெடும் வல்வினை' (2.35) என்ற முதற் குறிப்பினை யுடைய திருப்பதிகத்தால் இத்தலத்து இறைவனை ஏத்து கின்றார்.

விழிக்குந் நுதன்மேலொரு
வெண்பிறை சூடித்
தெழிக்கும் புறங்காட்டிடைச்
சேர்ந்தெரி யாடிப்
பழிக்கும் பரிசே
பலிதேர்ந் தவனூர்பொன்
கொழிக்கும் புனல்சூழ்
குரங்காடு துறையே.

என்பது இப்பதிகத்தின் நான்காவது திருப்பாடலாகும்.

---

26. குரங்காடுதுறை (தென்): ஆடுதுறை இருப்பூர்தி நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. காவிரியாற்றின் தென்கரையிலிருப்பதால் இது தென் குரங்காடுதுறையா யிற்று. வடகுரங்காடுதுறைக்கு வடகிழக்கே உள்ளது இத் தலம். சுக்கிரீவன் வழிபட்ட தலம்.

**உலவாக்கிழிபெறுதல்:** பிள்ளையார் குரங்காடுதுறைப் பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு **திருவாவடுதுறை**[27] வருகின்றார். தொண்டர் குழாம் எதிர் சென்று வரவேற்பு நல்குகின்றது. சண்பை வேந்தர் நித்திலச் சிவிகையினின்று இறங்கித் திருக்கோயிலின் முன் செல்கின்றார். கோபுரத்தை இறைஞ்சி திருக்கோயிலை வலம் வந்து 'ஆவடுதுறை ஆர் அமுதை' வழிபடுகின்றார். பின்னர் அப்பதியிலுள்ள ஒரு திரு மடத்தில் எழுந்தருளுகின்றார். இந்நிலையில் பிள்ளை யாரின் திருத் தந்தையார் சீகாழியினின்றும் போந்து தாம் வேள்வி செய்தற்குரிய காலம் அணுகியதெனத் தெரிவித்து அதற்குரிய பொருள் வேண்டுமெனத் தன் அருமை மைந்த னிடம் கூறுகின்றார். அவரது வேண்டுகோட் கிணங்க பிள்ளையார் ஆவடுதுறை மாசிலாமணி ஈசரின் திரு முன்பு எய்தி "நீள்நிதி வேண்டினார்க்கு ஈவதொரு பொருளையும் உடையேனல்லேன். நின் திருவடி துணையன்றி மற்றொன் றையும் கனவிலும் அறியேன்" எனக்கூறி, இறைவனது பேரருளை வேண்டும் நிலையில் **'இடரினும் தளரினும்'** (3.4) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனை வழுத்துகின்றார். இதில்,

> **இடரினும் தளரினும் எனதுறுநோய்**
> **தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்**
> **கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை**
> **மிடறினில் அடக்கிய வேதியனே.**

---

27. **ஆவடுதுறை** (திருவாவடுதுறை): நாரசிங்கன் பேட்டை என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. திருமூலர் திருமந்திரம் அருளிய திருத்தலம். சம்பந்தர் தமது தந்தையார் வேள்வி செய்தற் பொருட்டு இறைவனைப் பாடி 1000 பொன் பெற்று அதைக் கொடுத் ததை அப்பர் தேவாரம் 4.56:1 கூறும். திருவிசைப்பா பாடிய **திருமாளிகைத்தேவர்** தொடர்பு இத்தலத்திற்குண்டு. திருவாவடுதுறை யாதீனத் தலைமைத் திருமடம் இங்கு உள்ளது.

இதுவோ எமையாளுமா
நீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள்
ஆவடுதுறை யரனே. (1)

என்பது நாலடி வைப்பாகிய இப்பதிகத்தின் முதற் பாடல். இவ்வாறு பொருளை விரும்பிப் போற்றிய பிள்ளையாரின் விருப்பத்தை நிறைவேற்றக் கருதிய இறைவனது திருவருளால் சிவபூதம் ஒன்று வந்து தோன்றுகின்றது. 1000 பொன்னடங்கிய பொற்கிழியொன்றை இறைவன் சந்நிதியிலுள்ள பீடத்தின்மேல் வைத்து "இப்பொற்கிழியானது எடுக்க எடுக்கக் குறையாத உலவாக் கிழி. இறையருளால் உமக்கு அளிக்கப் பெற்றது" என்று கூறி மறைந்து விடுகின்றது.

ஆவடுதுறை மாசிலாமணி யீசர் அருளிய உலவாக் கிழியினைத் தலைமேற் கொண்டு போற்றிய சண்பை வேந்தர் அப்பொன் முடிப்பினைத் தந்தையார் திருக்கையிற் கொடுத்து, "முழு முதற் பொருளாகிய சிவபெருமான் ஒருவனையே முதல்வனாகக் கொண்டு பண்டை மறை முறைப்படி செய்தற்குரிய நல்ல வேள்விகளை நீவிர் செய்தற்கு மட்டுமன்றி, வேணுபுரத்திலுள்ள வேதியர் அனைவரும் செய்தற்கும் வேண்டும் பொன்களை மேன்மேலும் தந்து வளர்வது இவ்வுலவாக்கிழி" என்று கூறித் தந்தையாருக்கு விடை கொடுக்கின்றார். அவரும் அக்கிழியுடன் சீகாழிப் பதிக்குத் திரும்புகின்றார்.

பிள்ளையார் பொன் வேண்டிப் பாடிய இத்திருப்பதிகம் ஆவடுதுறை இறைவனை வேண்டும் நிலையில் அமைந்துளது.

இதுவோ எமையாளுமா
நீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோ வுனதின்னருள்
ஆவடுதுறை யானே.

*என்ற தொடர் பாடல்தோறும் நாலடிமேல் வைப்பாக இடம் பெற்றிருப்பதாலும், இதன் திருக்கடைக் காப்பில் 'விலையுடை யிருந்தமிழ் மாலை' எனப் பிள்ளையார் இத் திருப்பதிகத்தைக் குறிப்பிடுதலாலும் இப்பதிகம் ஆவடுதுறை இறைவனை நோக்கிப் பாடப் பெற்றது என்பது தெளிவாகின்றது. பிள்ளையாருக்குப் பொற்கிழியளித்த அற்புத நிகழ்ச்சியினை,*

**மாயிரு ஞால மெல்லாம்**
**மலரடி வணங்கும் போலும்**
**பாயிரு கங்கை யாளைப்**
**படர்சடை வைப்பர் போலும்**
**காயிரும் பொழில்கள் சூழ்ந்த**
**கழுமல வூரர்க்கம்பொன்**
**ஆயிரம் கொடுப்பர் போலும்**
**ஆவடு துறைய னாரே.** (4.56:1)

*என்று பிள்ளையாரின் கெழுதகை நண்பராகிய அப்பர் பெருமானும் மேற்காட்டிய திருநேரிசையில் போற்றிப் புகழ்ந்துள்ளமை ஈண்டு கருதத்தக்கது.*

*ஆவடுதுறை அப்பரிடம் விடைபெற்றுக் கொண்டு பிள்ளையார்* **கோழம்பம்**[28] *என்ற திருத்தலம் அடைகின்றார்.* **"நீற்றானை நீள்சடை"** (2.13) *என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி வழிபடுகின்றார்.*

**சொல்லானைச் சுடுகணையாற்**
**புரமூன் றெய்த**
**வில்லானை வேதமும்**
**வேள்வியு மானானைக்**

---

28. **கோழம்பம்** : *நரசிங்கம் பேட்டை இருப்பூர்தி நிலையத்திலிருந்து 2 கல் தொலைவு.*

கொல்லானை யுரியானைக்
　　கோழம்பம் மேவிய
நல்லானை யேத்து
　　மினும்மிடர் நையவே. (7)

என்பது இப்பதிகத்தின் ஏழாவது திருப்பாடல்.

கோழம்பத் திறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு வைகன் மாடக் கோயில்[29] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். 'துளை மதியுடைமறி' (3.18) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனை வழுத்துகின்றார்.

கொம்பியல் கோதைமுன் அஞ்சக் குஞ்சரத்
தும்பிய துரிசெய்த துங்கர் தங்கிடம்
வம்பியல் சோலைசூழ் வைகல் மேற்றிசைச்
செம்பியன் கோச்செங்க ணான்செய் கோயிலே. (4)

என்பது இத்திருப்பதிகத்தின் நான்காவது பாடல்.

வைகல் இறைவனிடம் விடை பெற்றுக் கொண்டு திருநல்லம்[30] வருகின்றார். 'கல்லால் நிழல்மேய' (1.85) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனை ஏத்துகின்றார்.

வாசம் மலர்மல்கு மலையான் மகளோடும்
பூசுஞ் சுடுநீறு புனைந்தான் விரிகொன்றை
ஈசன் எனவுள்கி யெழுவர் வினைகட்கு
நாசன் நமையாள்வான் நல்ல நகரானே. (5)

என்பது இத்திருப்பதிகத்தின் ஆறாவது திருப்பாடல்.

---

29. வைகன் மாடக் கோயில் (வைகல்) : ஆடுதுறை இருப்பூர்தி நிலையத்திலிருந்து 4 கல் தொலைவு. கோச்செங்கட் சோழன் கட்டிய 70 மாடக் கோயில்களுள் ஒன்று. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

30. நல்லம் (கோனேரி ராஜபுரம்) : ஆடுதுறை இருப்பூர்தி நிலையத்திலிருந்து 5 கல் தொலைவு. திருவிசைப்பா பாடிய கண்டராதித்தர், அவர் தேவியாகிய செம்பியன் மகாதேவியார் ஆகிய இருவர் திருவுருவம் கோயில் கல்வெட்டின் கீழ் உள்ளது.

நல்லத்து நம்பனிடம் விடை பெற்றுக் கொண்டு சிறுகுடி[31] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். 'திடமலி' (3.97) என்ற திருப்பதிகம் பாடி இறைவனை ஏத்துகின்றார். இதில்,

செற்றினின் மலிபுனற் சிறுகுடி மேவிய
பெற்றிகொள் பிறைமுடி யீரே
பெற்றிகொள் பிறைமுடி யீருமைப் பேணிநஞ்
சற்றவ ரருவினை யிலரே. (5)

என்பது ஐந்தாவது திருப்பாடல்.

சிறுகுடிச் செம்மலிடம் விடைபெற்றுக் கொண்டு அழுந்தூர் மாடக் கோயில்[32] வருகின்றார். 'தொழுமாறு வல்லார்' (2.20) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி தலத்து இறைவனை வழுத்துகின்றார்.

அலையார் புனல்சூழ் அழுந்தைப் பெருமான்
நிலையார் மறியுந் நிறைவெண் மழுவும்
இலையார் படையும் இவையேந்து செல்வ
நிலையா வதுகொள் கெனநீ நினையே. (5)

என்பது இப்பதிகத்தின் ஐந்தாவது பாடல்.

---

31. சிறுகுடி: பேரளம் என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து 5 கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற திருத்தலம்.

32. அழுந்தூர்: தேரழுந்தூர் என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. ஒரே வீதியின் ஒரு முனையில் இத்தலமும், எதிர் முனையில் மங்களாசாசனம் பெற்ற திருமால் தலமும் உள்ளன. கவிச் சக்கரவர்த்தி கம்பர் வீடு இருந்த இடம் என்னும் கம்பர்மேடு ஒன்றும் இங்குண்டு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

அழுந்தூர் அண்ணலிடம் விடை பெற்றுக் கொண்டு **திருத்துருத்தி**[33] என்ற திருத்தலத்தை அடைகின்றார் திருஞான சம்பந்தர். **'வரைத்தலைப் பசும்பொன்'.** (2.98) என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ்ப் பாமாலை பாடி இறைவனை வழுத்துகின்றார்.

**துறக்குமா சொலப்படாய்**
**துருத்தியாய் திருந்தடி**
**மறக்குமா றிலாத என்னை**
**மையல்செய்தி மண்ணின்மேல்**
**பிறக்குமாறு காட்டினாய்**
**பிணிப்படு உடம்புவிட்(டு)**
**இறக்குமாறு காட்டினாய்க்**
**கிழுக்குகின்ற தென்னையே.** (5)

என்பது இத்திருமாலையின் **ஐந்தாவது** தமிழ் மணங் கமழும் வாடாநறுமலர்.

திருத்துருத்திப் பெருமானிடம் விடைபெற்றுக்கொண்டு **மூவலூர்**[34] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். இறைவனை வழிபடுகின்றார் (பதிகம் இல்லை). மூவலூரரை விட்டு **மயிலாடு துறை**[35] வருகின்றார். **இரண்டு** பதிகங்களால் தலத்து இறைவனை வழிபடுகின்றார்.

---

33. **துருத்தி** (குத்தாலம்): குத்தாலம் என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. இறைவன் கட்டளைப் படி இங்குள்ள குளத்தில் மூழ்கிய சுந்தரர் தமது உடற் பிணி நீங்கி மணி ஒளி சேர் திருமேனியராகின்றார்.

34. **மூவலூர்:** மயிலாடுதுறைக்கு அருகிலுள்ளது. இது வைப்புத்தலம். 'மூவலூர் முக்கண்ணனூர் காண்மினே' (அப்பர் தேவாரம். 5.65 : 8).

35. **மயிலாடுதுறை** (மாயூரம்): மயிலாடு துறை டவுன் இருப்பூர்தி நிலையத்திலிருந்து ¼ கல் தொலைவு. இருப்பூர்தி சந்திப்பிலிருந்து பேருந்து மூலமும் செல்லலாம்.

'கரவின்றிநன்' (1.38) என்ற முதற்குறிப்புடையது முதற் பதிகம். இதில்,

ஊனத்திருள் நீங்கிட வேண்டில்
ஞானப்பொருள் கொண்டடி பேணும்
தேனொத் தினியா னமருஞ்சேர்
வானம் மயிலாடு துறையே. (3)

என்பது மூன்றாவது பாடல். 'ஏனவெயிறாடாவோ' (3.70) என்ற முதற்குறிப்புடையது இரண்டாவது பதிகம்.

கடந்திகழ் கருங்களி றுரித்துமையும்
அஞ்சமிக நோக்கரியராய்
விடந்திகழு மூவிலைநல் வேலுடைய
வேதியர் விரும்புமிடமாம்
தொடர்ந்தொளிர் கிடந்ததொரு சோதிமிகு
தொண்டையெழில் கொண்டதுவர்வாய்
மடந்தையர் குடைந்தபுனல் வாசமிக
நாறுமயி லாடுதுறையே. (6)

என்பது இப்பதிகத்தின் ஆறாவது பாடல்.

மயிலாடுதுறை இறைவனிடம் விடைபெற்றுக்கொண்டு செம்பொன்பள்ளி[36] என்ற திருத்தலம் அடைகின்றார். 'மருவார்குழலி' (1.25) என்ற முதற்குறிப்புடைய பதிகம் பாடி இறைவனை வழிபடுகின்றார்.

---

உமையம்மை மயில் உருவில் இறைவனை வழிபட்ட தலம். காவிரியாற்றின் தென்கரையிலுள்ளது. ஐப்பசி மாதம் முழுவதும் இங்குக் காவிரியில் துலாமுழுக்கு. கடைமுழுக்கு புகழ் வாய்ந்தது. கார்த்திகை மாதம் முதல் நாள் அன்று முடவன் முழுக்கு.

36. செம்பொன் பள்ளி (செம்பொனார் கோயில்): மயிலாடுதுறை—தரங்கம்பாடி இருப்பூர்தி வழியில் செம் பொனார் கோயில் என்ற நிலையத்திலிருந்து சிறிது தொலைவில் உள்ளது.

மலையான் மகளோ டுடனாய் மதிளெய்த
சிலையார் செம்பொன் பள்ளி யானையே
இலையார் மலர்கொண் டெல்லி நண்பகல்
நிலையாய் வணங்க நில்லா வினைகளே. (5)

என்பது இத்திருப்பதிகத்தின் ஐந்தாவது பாடல்.

செம்பொன் பள்ளி இறைவனிடம் விடை பெற்றுக் கொண்டு விளநகர்[37] என்ற திருத்தலத்தை அடைகின்றார். 'ஒளிறிளம்பிறை' (2·78) என்ற முதற் குறிப்புடைய திருப் பதிகம் பாடி இறைவனை வழுத்துகின்றார்.

தேவ ரும்மம ரர்களும் திசைகள்
 மேலுள தெய்வமும்
யாவ ரும்மறி யாததோ ரமைதி
 யாற்றழ லுருவினார்
மூவ ரும்மிவ ரென்னவும் முதல்வ
 ரும்மிவ ரென்னவும்
மேவ ரும்பொரு ளாயினார் மேய
 துவிள நகரதே. (6)

என்பது இப் பதிகத்தின் ஆறாவது பாடல்.

விளநகர் பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு 'பறியலூர் வீரட்டம்' [38] என்ற திருத்தலம் அணைகின்றார். ''கருத்தன் கடவுள்'' (1·134) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனை ஏத்துகின்றார்.

---

37. விளநகர்: மயிலாடு துறையிலிருந்து 4 கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

38. பறியலூர் வீரட்டம் (பறசலூர்): செம்பொனார் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 1½ கல் தொலைவு. தக்கன் வேள்வி தகர்த்த வீரட்டம். அவ்வேள்விக்கு வந்த வானோர் குற்றத்தைப் பறித்தமையால் பறியலூர் ஆயிற்று. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

பிறப்பாதி யில்லான் பிறப்பார் பிறப்புச்
செறப்பாதி யந்தஞ் செலச்செய்யும் தேசன்
சிறப்பா டுடையார் திருப்பறிய லூரில்
விறற்பா ரிடஞ்சூழ வீரட்டத் தானே. (4)

என்பது இப்பதிகத்தின் நான்காவது பாடல்.

பறியலூர் வீரட்டப் பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு திருவேட்டக்குடி[39] என்ற திருத்தலம் அடைகின்றார். 'வண்டிறைக்கும்' (3·66) என்ற முதற் குறிப்பை யுடைய செந்தமிழ்ப் பாமாலையைப் பாடித் தலத்து இறைவனை வழுத்துகின்றார்.

பானிலவும் பங்கயத்துப்
பைங்கானல் வெண்குருகு
கானிலவும் மலர்ப்பொய்கைக்
கைதல்சூழ் கழிக்கானல்
மானின்விழி மலைமகளோ
டொருபாகம் பிரிவரியார்
தேனிலவு மலர்ச்சோலைத்
திருவேட்டக் குடியாரே. (7)

என்பது இத்திருமாலையின் ஏழாவது தமிழ் மணம் கமழும் வாடா நறுமலர்.

யாழ்முரி பாடியது: திருவேட்டக்குடி இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு திருத்தருமபுரம்[40] அடைகின்றார். தருமபுரம் திருநீலகண்டப் பெரும்பாணருடைய

---

39. வேட்டக்குடி: காரைக்காலிலிருந்து 5½ கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற திருத்தலம்.

40. தருமபுரம்: காரைக்காலிலிருந்து 1கல் தொலைவு. சம்பந்தர் யாழ்முரி பாடிய அற்புதத் தலம். சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

அன்னையார் பிறந்த ஊர். பாணருடைய வேண்டுகோட் கிணங்கியே இத்தலத்துக்கு வருகின்றார். யாழ்ப்பாணரு டைய சுற்றத்தார்கள் திருஞான சம்பந்தரை எதிர்கொண்டு போற்றுகின்றனர். பெரும்பாணரும் தாம் பிள்ளையார் திரு வாய் மலர்ந்தருளிய திருப்பதிகங்களை யாழில் வாசிக்கும் பேறு பெற்றமையைத் தம் சுற்றத்தாருக்கு எடுத்துரைக் கின்றார். தம் உறவினர்கள் தாம் பெற்ற பேற்றினைக் கண்டு மகிழ்வார்கள் என்றுதான் தெரிவித்தார். இதனைக் கேட்ட பாணரின் சுற்றத்தார்கள் "நீவிர் திருப்பதிகத்தை யாழிலிட்டுத் தக்க முறையில் வாசிப்பதனால் அதன் இசை யாண்டும் பரவுவதாயிற்று" எனப் பாணரை நோக்கி முகமன் உரைக்கின்றனர். உண்மையில், பாணர் குலத்த வர்கள் தமது இசை மரபைப்பற்றிப் பெருமை கொள்ப வர்கள். இசைவாணர்கள் — ஏன் கலைஞர்களுமே — தம் மரபைப் பற்றிப் பெருமை கொள்பவர்கள். நாதஸ்வரக் கலைஞர்கள் தம் மரபில் உள்ளவர்களால்தான் கர்நாடக சங்கீதம் வழிவழியாக மரபு கெடாமல் காப்பாற்றப் படுகின்றதென்ற கருத்தினைக் கொண்டிருப்பதை நாம் பார்க்கவில்லையா?

தம் உறவினர்கள் கூறியதைக் கேட்ட பெரும்பாணர் அதிர்ச்சியடைகின்றார். இறையருளால் பெறற்கரிய இசை ஞானத்தைப் பெற்ற பிள்ளையாரின் பாடல்கள், கேவலம் தம் யாழின் மூலமாகப் பெருமையடைந்தன என்ற சொற்களை உண்மைத் தொண்டராகிய அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஞானசம்பந்தரைப் பணிந்து திருப்பதிகத்தின் இசை அளவிலடங்காத் தன்மைய தென்பதனைத் தம் சுற்றத்தாரும் பிறரும் அறிந்து கொள்ளும்படி பாடியருளுமாறு வேண்டுகின்றார். அவரது வேண்டுகோட்கிணங்க திருப்பதிகத்தின் இசை உலகர் கண்டத்திலும் கருவியிலும் அடங்காத வண்ணம் 'மாதர் மடப்பிடியும்' (1·136) என்ற முதற் குறிப்புடைய திருப்

பதிகத்தைப் பாடித் தருமபுரத்து இறைவனைப் போற்று கின்றார்.

மாதர் மடப்பிடியும் மடஅன்னமும் அன்னதோர்
நடையுடைம் மலைமகள் துணையென மகிழ்வர்
பூத இனப்படை நின்றிசைபாடவும் ஆடுவர்
அவர்படர் சடைநெடு முடியதொர் புனலர்
வேத மொடேழிசை பாடுவராழ்கடல் வெண்டிரை
யிரைந்துரை கரைபொருது விம்மிநின்றயலே
தாத விழ்புன்னை தயங்குமலர்ச் சிறை வண்டறை
யெழில்பொழில் குயில்பயில் தருமபுரம்
பதியே. (1)

என்பது இப்பதிகத்தின் முதற் பாடல்.

இந்தப் பதிகப் பாடல்களில் மடக்கி மடக்கி வரும் சொற்கோவையைப் பலவித தாளங்களில், பற்பல காலப் பிரமாணங்களில், பாடி முடிக்கின்றார். அதன் பின்னர் பெரும்பாணர் அந்தப் பதிகத்தைத் தமது யாழில் அமைத்துப் பாட முயல்கின்றார். யாழ் என்பது இருபத் திரண்டு நரம்பு கொண்ட ஓர் இசைக் கருவி; மெட்டு இல்லாத கருவி. இந்தக் கருவியில் ஒவ்வொரு நரம்பாக இசைக்கேற்ப நரம்புகளை மீட்டித்தான் வாசிக்கமுடியும்! சம்பந்தர் பாடிய முறையில் யாழ்ப்பாணர் இந்தப் புதிய பதிகத்தை வாசிக்க முயன்றபோது அது யாழ் நரம்புகளில் அடங்கவில்லை. அவரது முயற்சிகள் யாவும் பலிக்க வில்லை. இதைக் காணும் பாணரின் சுற்றத்தார்களுக்கு அப்போதுதான் பிள்ளையாரின் இசை ஞானம் புரிகின்றது. பெரும்பாணர் பரிவும், நடுக்கமும், நாணமும் உற்று பிள்ளையார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, "இந்த யாழைத் தொட்டு வாசித்ததனால்தானே இந்த அவமானம் எனக்கு வந்தது?" என்று சொல்லித் தம் கையிலுள்ள யாழை நிலத்தில் அறைந்து உடைக்க ஓங்கு கின்றார். பிள்ளையார் அதனைத் தடுத்தருளி, யாழைத்

தம் கையில் வாங்கிக் கொண்டு, "ஐயரே, நீவிர் யாழை முறிக்கப் புகுதல் முறையா? சிவபெருமானின் திருவருட் பெருமையெல்லாம் இக்கருவியில் அடங்க முடியுமா? சிந்தையால் அளவு படாப் பதிக இசை செயலளவில் எய்தாது. ஆகவே நீவிர் இந்த யாழினைக் கொண்டே இறைவனின் திருப்பதிக இசையினை வந்தவாறு பாடி வாசிப்பீராக" என்று கூறித் தம் கையிலுள்ள யாழினைப் பாணர் கையில் திரும்பக் கொடுத்தருளுகின்றார். இந்தப் பதிகம் 'வியாழக் குறிஞ்சி' என்ற பண்ணிலுள்ளது. ஆனால் இதுவே ஒரு யாழை முறிக்கக் காரணமாயிருந் தமையால் "யாழ்முரி[41]" என்ற பெயரைப் பெறுகின்றது. தருமபுரத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனும் 'யாழ்முரி நாதர்' என்ற பெயரைப் பெறுகின்றார். யாழ்ப்பாணரும் அதனைப் பெற்றுக் கொண்டு என்றும்போல் தமக்குரிய இசைத் தொண்டினை மேற்கொள்ளுகின்றார்.

---

41. **யாழ்முரி :** முரி என்பது ஓரடியில் தொடங்கிய யாப்பியலையும் இசை நடையையும் அவ்வடியிலே முரித்து மாற்றி மற்றொரு யாப்பியலும் இசை நடையும் அமையப் பாடப் பெறுவதாகிய இசைப்பாட்டு. இதனை 'முரிவரி' என்றும் கூறுவதுண்டு. இதன் இலக்கணத்தை,

> **எடுத்த இயலும் இசையும் தம்மின்**
> **முரித்துப் பாடுதல் முரியெனப் படுமே.**

என்ற சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர் காட்டிய மேற்கோள் சூத்திரத்தால் நன்குணரலாம். இங்ஙனம் விரைவில் முரிந்து மாறும் இயலிசை நடையமைந்த வரிப் பாடலை யாழ் முதலிய இசைக் கருவிகளில் வாசித்துக் காட்டுதல் இயலாதாகலின், முரியாகிய இந்த இசைப் பாடலை 'யாழ்முரி' என்ற பெயரால் வழங்குதலும் உண்டு.

பிள்ளையார் தருமபுரத்தில் சில நாள் தங்கியிருந்து திருநள்ளாறு[42] என்ற திருத்தலம் வருகின்றார். இரண்டு பதிகங்களால் நள்ளாற்றிறைவனைப் போற்றுகின்றார். இந்த இரண்டு பதிகங்களையும் யாழிலிட்டு வாசித்து அனைவரையும் மகிழ்விக்கின்றார் யாழ்ப்பாணர். 'போக மார்ந்த பூண் முலையாள்' (1.49) என்ற முதற் குறிப்புடையது முதற் பதிகம்.

போகமார்த்த பூண்முலையாள்
    தன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்
    வெள்ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன்
    கோவண ஆடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான்
    மேயது நள்ளாறே. (1)

என்பது இப்பதிகத்தின் முதற்பாடல். இப்பதிகம்தான் மதுரையில் அனல்வாதம் நடைபெற்றபோது சம்பந்தரால் நெருப்பில் இடப்பெற்றது. இது எரியாமல் பச்சென்றிருந்த படியால் 'பச்சைப் பதிகம்' என்ற பெயர் பெற்றது.

அடுத்த பதிகம் 'ஏடுமலி கொன்றை' (2.33) என்ற முதற் குறிப்புடையது.

---

42. நள்ளாறு: நள்ளாறு இருப்பூர்தி நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. சப்தவிடங்கங்களுள் இங்கு நகர விடங்கர்; உன்மத்த நடனம். நளன் பூசித்து கலி நீங்கப் பெற்ற திருத்தலம். கோயிலுக்குப் போகும் வழியில் ஒரு பக்கம் சனி பகவான் உருவம் உள்ளது. சனிப் பெயர்ச்சி விழா மிகு புகழ் பெற்றது. தங்கக் காக்கை வாகனத்தில் இவர் உலா வருவது கண் கொள்ளாக் காட்சி.

நீதியர் நெடுந்தகையர் நீள்மலையர் பாவை
பாதியர் பராபரர் பரம்பரர் இருக்கை
வேதியர்கள் வேள்வி யொழியாது மறைநாளும்
ஓதியரன் நாமமும் உணர்ந்திடு நள்ளாறே. (7)

என்பது இப்பதிகத்தின் ஏழாவது பாடல். இப்பதிகங்கள் இரண்டும் முதல் முறை எழுந்தருளியபோது பாடியவை.

நள்ளாற்று நக்கபிரானிடம் விடைபெற்றுக் கொண்டு **சாத்தமங்கை**[43] வருகின்றார். **நீல நக்கநாயனார்** பிள்ளையாரை எதிர் கொண்டழைத்துப் பிள்ளையாருக்கும் திருநீலகண்ட யாழ்ப்பாணர் முதலாக அவருடன் வந்த அடியார்களுக்கும் தம் மனையில் திருவமுதமைத்து உபசரித்துப் போற்றுகின்றார். பின்னர் பிள்ளையார் சாத்தமங்கையிலுள்ள அயவந்தி என்ற திருக்கோயிலுக்குச் சென்று 'திருமலர்க் கொன்றைமாலை' (3.58) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ்ப் பாமாலை புனைந்து இறைவனைப் போற்றுகின்றார்.

வேதமாய் வேள்வி யாகி
விளங்கும்பொருள் வீட தாகிச்
சோதியாய் மங்கை பாகந்
நிலைதான சொல்லலாவ தொன்றே
சாதியால் மிக்க சீராற்
றகுவார்தொழும் சாத்தமங்கை
ஆதியாய் நின்ற பெம்மான்
அயவந்தி அமர்ந்தவனே. (6)

என்பது இப்பதிகத்தின் ஆறாவது பாடல். இப்பதிகத்தில் 'சாத்தமங்கை அடிகள் நக்கன் பரவ அவந்தி யமர்ந்தவனே' (2) 'நிறைவினார் நீல நக்கன் நெடுமாநகரென்று

43. சாத்தமங்கை (சீயாத்தமங்கை) : நன்னிலத்திலிருந்து 7 கல் தொலைவு. பேருந்து வழியில் திருப்புகலூர் உள்ளது. திருநீலநக்கநாயனார் தொண்டு புரிந்த தலம். சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

தொண்டர், அறையுமூர் சாத்தமங்கை' (11) என வரும் தொடர்களால் சிறப்பித்துள்ளார். சில நாட்கள் இப் பதியில் தங்கியும் இருக்கின்றார்.

சாத்தமங்கைப் பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு நாகைக் காரோணம்[44] வருகின்றார். இரண்டு திருப்பதிகங்களால் இறைவனை ஏத்துகின்றார். 'புனையும் விரிகொன்றை' (1.84) என்ற முதற்குறிப்புடையது ஒரு பதிகம். இதில்,

> ஆணும் பெண்ணுமாய் அடியார்க் கருளநல்கிச்
> சேணின் றவர்க்கினஞ் சிந்தை செயவல்லான்
> பேணி வழிபாடு பிரியாதெழுந் தொண்டர்
> காணும் கடல்நாகைக் காரோ ணத்தானே. (5)

என்பது ஐந்தாவது திருப்பாடல். மற்றோர் பதிகம் 'கூனற்றிங்கட் குறுங்கண்ணி' (2.116) என்ற முதற்குறிப் புடையது. இந்தச் செந்தமிழ்ப் பாமாலையில்,

> விடைய தேறிவ் விடவர
> வசைத்தவ் விகிர்தரவர்
> படைகொள் பூதம் பலபாட
> ஆடும் பரமாயவர்
> உடைகொள் வேங்கை யுரிதோ
> லுடையார்க் கிடமாவது
> கடைகொள் செல்வங் கழிசூழ்
> கடல்நாகைக் காரோணமே. (6)

என்பது ஆறாவது வாடா நறுமலர்.

---

44. நாகைக் காரோணம் (நாகபட்டணம்) : நாகப் பட்டணம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. ஒரு முனிவரை காயத்தோடு (உடலோடு) வானுலகுக்கு ஆரோஹணம் செய்யும்படி இறைவன் அருளியதால் காயாரோஹணம் என்பது மருவிக் காரோணம் எனத் தலப் பெயருட் சேர்ந்தது. அதிபத்த நாயனார் அவதரித்துப்

திருநாகையாரிடம் விடைபெற்றுக் கொண்டு சிக்கல்[45] வருகின்றார். 'வானுலாவும்' (2.8) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனை வழுத்துகின்றார். இதில்,

> வானுலாவும் மதிவந்
> துலாவும் மதில்மாளிகை
> தேனுலாவும் மலர்ச்சோலை
> மல்குந்திகழ் சிக்கலுள்
> வேனல்வேளை விழித்திட்ட
> வெண்ணெய்ப் பெருமானடி
> ஞானமாக நினைவார்
> வினையாயின நையுமே. (1)

என்பது முதல் பாடல்.

சிக்கல் வெண்ணெய்ப் பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு கீழ்வேளூர்[46] வருகின்றார். 'மின்னுலாவிய சடை

---

பொன் மீனைச் சிவார்ப்பணம் செய்து முத்தி பெற்ற தலம். சுந்தரர் பொன் பெற்ற தலங்களுள் ஒன்று. சப்தவிடங்கங்களுள் இங்கு சுந்தரவிடங்கர். பாராவாரதரங்க நடனம்.

45. சிக்கல் : தஞ்சை — நாகூர் இருப்பூர்தி வழியில் சிக்கல் நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. வெண்ணெய் லிங்கம் சிக்கிக் கொண்டதால் தலப் பெயர். கட்டுமலைக் கோயில். முருகப் பெருமான் சிங்காரவேலர். கந்தர்சஷ்டி விழாவில் 5ஆம் நாள் வேல் பெறுவதும் 6ஆம் நாள் மேஷ வாகனத்தின் மீதேறிச் சூரனைச் சங்கரிப்பதும் மிகுபுகழ் வாய்ந்த விழாக்கள். சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

46 கீழ்வேளூர்: கீழ்வேளூர் இருப்பூர்தி நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. கட்டுமலைக் கோயில். முருகன் பூசித்த தலங்களுள் ஒன்று.

யினர்' (2.105) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடித் தலத்துப் பெருமானை வழிபடுகின்றார்.

கொத்துலாவிய குழல்திகழ் சடையனைக்
கூத்தனை மகிழ்ந்துள்கித்
தொத்துலாவிய நூலணி மார்பினர்
தொழுதெழு கீழ்வேளூர்ப்
பித்துலாவிய பத்தர்கள் பேணிய
பெருந்திருக் கோயில்மன்னும்
முத்துலாவிய வித்தினை யேத்துமின்
முடுகிய இடர்போமே. (6)

என்பது திருப்பதிக மாலையில் ஆறாவது வாடா நறுமலர்.

கீழ்வேளூர் இறைவனிடம் விடை பெற்றுக் கொண்டு செங்காட்டங்குடி[47] வருகின்றார் பிள்ளையார். மன்னவர்க்குப் படைத்தலைவராய்ச் சென்று வாதாபி நகரத்தை அழித்த பரஞ்சோதியாராகிய சிறுத்தொண்ட நாயனார் பிள்ளையாரை எதிர் கொண்டு போற்றுகின்றார். பிள்ளையாரும் அவருடன் அளவளாவிக் கணபதீச்சரம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளிய பெருமானைப்

---

47. செங்காட்டங்குடி (திருச்செங்காட்டங்குடி): நன்னிலம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 6 கல் தொலைவு. வழியில் திருப்புகலூர், இராமனதீச்சரம், திருக்கண்ணபுரம் (திருமால் தலம்) உள்ளன. சிறுத்தொண்ட நாயனார் பிள்ளைக்கறி அளித்த அற்புதத் தலம். இந்த அற்புதம் 'அமுது படையல் உற்சவம்' என்று சித்திரைத் திங்கள் பரணியன்று மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. உத்திராபதி சுவாமி திருஎழுச்சி, அவர் தங்கியிருந்த திருஆத்திரமரம் முதலியன காணலாம். சிறுத்தொண்டர் வாதாபிப் போர் வென்று கொணர்ந்த கணபதி பூசித்ததால் கோயில் பெயர் கணபதீச்சரம் ஆயிற்று. எல்லாப் பாடல்களிலும் சிறுத்தொண்டரையும் போற்றுகின்றார்.

பணிந்து 'பைங்கோட்டு மலர்ப்புன்னை' (3.63) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ்ப் பாமாலை பாடி இறைவனை வழுத்துகின்றார்.

குறைக்கொண்டா ரிடர்தீர்த்தல்
கடனன்றே குளிர்பொய்கைத்
துறைக்கெண்டை கவர்குருகே!
துணைபிரியா மடநாராய்!
கறைக்கண்டன் பிறைச்சென்னிக்
கணபதீச்சர மேய
சிறுத்தொண்டன் பெருமான்சீர்
அருளொருநாள் பெறலாமே (6)

என்பது இப்பாமாலையின் நறுமணம் மிக்க ஆறாவது வாடாமலர். இந்தப் பதிகம் அகத்துறையால் அமைந்தது. செங்காட்டங்குடி எம்மான்மீது காதல் கொண்ட நாயகி நிலையில் தம்மை நிறுத்திப் பறவையினங்களைத் தூது விடுவதாக அமைந்துள்ளது இப்பதிகம். வைணவ சம்பிர தாயப்படி சொன்னால் ஞானசம்பந்தர் நாயகி செங் காட்டங்குடிப் பெருமான்மீது தான் கொண்ட காதலைப் பறவை இனங்கட்குச் சொல்லித் தூது அனுப்புகின்றாள் எனலாம்.

**விடந்தீர்த்தல்:** செங்காட்டங்குடிப் பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு திருமருகல்[48] வருகின்றார்; இறைவனை வழிபட்டு அத்தலத்தில் அமர்கின்றார். இத்தலம் காழிப்பிள்ளையாரின் அற்புத நிகழ்ச்சியொன்றி

48. மருகல் (திருமருகல்): நன்னிலத்திலிருந்து 7 கல் தொலைவிலுள்ளது. விடந்தீண்டிய செட்டிப்பிள்ளையை உயிர்ப்பித்து அவனுடன் வந்த பெண்ணை அவனுக்கே சம்பந்தர் மணம் முடித்து வைத்த அற்புதத் தலம். மருகல் என்பது வாழை; வாழைதான் தலவிருட்சம். ஆனால் இது கல் வாழை; சுவாமிக்கு நிவேதனம் செய்யலாம்; யாரும் சாப்பிடக்கூடாது. கோயில், மாடக்கோயில்.

னால்தான் மிகு புகழ் பெற்றதாக வரலாறு. அந்நாளில் (சம்பந்தர் அங்கிருந்தபோது) திருக்கோயிலருகிலுள்ள திருமடத்தில் அரவு தீண்டி இறந்து விடுகின்றான் யாரோ ஓர் இளைஞன். இந்நிலையில் அவனுடன் வந்த கன்னிப் பெண் அவனைத் தீண்டவும் மாட்டாதவளாய் அழுதரற்று கின்றாள். இவ்வழுகுரலைக் கேட்ட ஊரவர் சிலர் விடந் தீர்க்கும் மந்திரவல்லாரை அழைத்து வந்து மந்திரித்துப் பார்த்தும் விடம் இறங்கவில்லை. ஆகவே அத்தலத்து இறைவனை நினைந்து அரற்றுகின்றாள்.

இந்த அழுகையொலி வைகறைப் பொழுதில் மருகற் பெருமானை வழிபடவந்த பிள்ளையாரின் திருச் செவியில் அணைகின்றது. அவரும் அவள் தங்கியிருந்த திருமடத்தை அடைந்து அவளை நோக்கி, "பெண்ணே, நீ அஞ்சற்க. நின் இடுக்கண் இதுவெனக் கூறுக" என்று பணிக் கின்றார். இவ்வாறுதல் மொழிகேட்ட அக் கன்னிப் பெண், பிள்ளையார் திருவடிகளில் வீழ்ந்து கண்ணீர் சொரிய தன் வரலாற்றைக் கூறுகின்றாள்: "அருளுடையீர், என் தந்தை தாமன் என்பவர் வைப்பூரைச் சேர்ந்தவர். இப்போது அரவு தீண்டி ஆருயிர் நீங்கிய இவர் எந்தையின் மருகர்; எந்தைக்கு என்னுடன் பெண்பிள்ளைகள் எழுவர்; அவர்களுள் மூத்தபெண்ணை இவருக்குத் தருவதாக உறுதி கூறிய எந்தையார் சொல் தவறி பொருள் நசையால் பிறர் ஒருவருக்கு மணம் முடித்தனர். என்னை யொழிந்த ஏனைய மகளிரும் இவ்வாறே ஒரொருவராகப் பிறருக்கே மணம் செய்யப்பெற்றனர். எந்தையை நம்பித் தளர்வுறும் இவருக்காகப் பரிவுற்ற நான் உறவினர் ஒருவரும் அறியாத படி இவருடன் இல்லத்தை விட்டு வெளியேறினேன். இவரும் இங்கு அரவு தீண்டியதால் இறந்தார். என் செய்வேன் பாவியேன்? துன்பத்திற்குத் துணையாவார் ஒரு வருமின்றித் தவிக்கின்றேன். இந்நிலையில் சுற்றத்தவர் போல் இங்குத் தோன்றி என்துயர் நீங்க அருள் செய்தீர்" என்று போற்றி நிற்கின்றாள்.

இத்துயரச் செய்தியைக் கேட்டு நெஞ்சகலங்கிய காழிப்பிள்ளையார், ''அஞ்சற்க. உனக்கு எல்லாம் நன்மையாகவே முடியும்'' என்று சொல்லி, திருமருகலில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் பெருமானைப் பணிந்து ''சடையாய் எனுமால்'' (2. 18) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனை வழிபடுகின்றார்.

சடையாய் எனுமால்; சரண்நீ எனுமால்;
விடையாய் எனுமால்; வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே. (1)

என்பது இப்பதிகத்தின் முதற்பாடல். ''பெருமானே, இந்த ஒள்ளிழையாள் உளம் மலிந்து வருந்துதல் அருட்கடலாகிய நினது திருவுள்ளத்திற்குத் தகுவதாமோ?'' என முறையிடுகின்றார். இன்னொரு பாடல் (7) இது:

வழுவாள் பெருமான் கழல்வாழ் கவெனா
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவா ளுடையாய் மருகற் பெருமான்
தொழுவாள் இவளைத் துயராக் கினையே.

இதில் இக்கன்னிப் பெண்ணின் நிலையை எடுத்துக் கூறுகின்றார்.

இந்நிலையில் அரவு தீண்டப் பெற்ற இளைஞன் விடந் தீர்ந்து உயிர் பெற்றெழுகின்றான். இதனைக் காணும் அடியார் கூட்டம் வாழ்த்துகின்றது. கன்னியும் இளைஞனும் பிள்ளையார் திருவடிகளில் வீழ்ந்து பணி கின்றனர். புகலிப் பெருமானும் அவர்கட்கு மணம் புணரும் பெருவாழ்வை வகுத்தருளிப் பெருமை அடைகின்றார். இத்திருப்பதிகமும் அகத்துறையில் அமைந்துள்ளது. மருகற் பெருமானைக் 'காதலித்த மங்கையொருத்தியின்

ஆற்றாமை கூறிச் செவிலி இரங்குதல்' என்னும் துறையில் அமைந்துள்ளது. அருளாசிரியர்களின் அருளிச் செயல்கள் யாவும் மந்திரங்களாதலின், வணிக இளைஞன் உயிர் பெற்றெழுகின்றான் என்று கொள்வது ஏற்புடைத்து.

திருமருகலில் பிள்ளையார் தங்கியிருக்கும் பொழுது சிறுத்தொண்ட நாயனார் அங்கு வந்து திருச் செங்காட்டங் குடிக்கு எழுந்தருளுமாறு வேண்டிக் கொள்ளுகின்றார். பிள்ளையாரும் மருகற் பெருமானை வணங்கி விடைபெறச் செல்லுகின்றார். அப்பொழுது, செங்காட்டங்குடியில் கணபதீச் சரத்தில் வீற்றிருந்தருளும் திருக்கோலத்தை மருகற் பெருமான் பிள்ளையாருக்குக் காட்டியருளு கின்றார். அது கண்ட பிள்ளையார் '**அங்கமும் வேதமும்**' (1. 6) என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ்ப் பாமாலை புனைந்து மருகற் பெருமானை வழுத்துகின்றார்.

**பாடல்முழவும் விழவுமோவாப்**
**பன்மறையோர் அவர்தாம்பரவ**
**மாடநெடுங்கொடி விண்தடவு**
**மருகல்நிலாவிய மைந்தசொல்லாய் :**
**சேடகமாமலர்ச் சோலைசூழ்ந்த**
**சீர்கொள்செங் காட்டங்குடியதனுள்**
**காடகமேயிட மாகஆடுங்**
**கணபதி யீச்சரங் காமுறவே.** (5)

என்பது இத்திருமாலையில் தமிழ் மணம் கமழும் ஐந்தாவது வாடா நறுமலர்.

பின்னர், தம்மை வரவேற்க வந்த சிறுத்தொண்ட நாயனாருடன் செங்காட்டங்குடிக்கு எழுந்தருளுகின்றார் பிள்ளையார். இந்த முறையில் பிள்ளையார் செங்காட்டங் குடிப் பெருமானை '**நறை கொண்ட மலர்**' (1-61) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகத்தைப் பாடிச் சேவிக் கின்றார்.

நுண்ணியான் மிகப்பெரியான்
　　ஓவுளார் வாயுளான்
தண்ணியான் வெய்யானந்
　　தலைமேலான் மனத்துளான்
திண்ணியான் செங்காட்டங்
　　குடியான் செஞ்சடைமதியக்
கண்ணியான் கண்ணுதலான்
　　கணபதீச் சரத்தானே. (7)

என்பது இப்பதிகத்தின் ஏழாவது திருப்பாடல். இத்திருத் தலத்தில் சில நாட்கள் தங்கியிருக்கின்றார்.

பின்னர்த் திருப்புகலூர் செல்லத் திருவுள்ளங் கொள்ளுகின்றார். செங்காட்டங்குடி ஈசனிடமும் சிறுத் தொண்ட நாயனாரிடமும் விடைபெற்றுக்கொண்டு புகலூர் நோக்கி வரும்போது இராமனதீச்சரம்[49] என்ற திருத்தலத்தை வழிபடுகின்றார்.[50] 'சங்கொளிர் முன்கையர்' (1-115) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடித் தலத்திறைவனைப் பணிகின்றார்.

சரிகுழல் இலங்கிய தையல் காணும்
பெரியவன் காளிதன் பெரிய கூத்தை
அரியவன் ஆடலோன் அங்கை யேந்தும்
எரியவன் இராம னதீச் சரமே. (6)

என்பது இப்பதிகத்தின் ஆறாவது திருப்பாடல்.

---

49. இராமன தீச்சரம்: நன்னிலத்திலிருந்து 5½ கல் தொலைவு. திருப்புகலூரிலிருந்து முடிகொண்டான் ஆற்றைக் கடந்து திருக்கண்ணபுரம் என்ற திருமால் தலம் போகும் வழியில் உள்ளது. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

50. "நீரின் மலிந்த சடையர் மேவி
　　நிகழும் பதிகள் பல பணிந்து"
　　　　(ஞானசம்பந்தர் 488)

இராமனதீச்சரத்துப் பெருமானிடம் விடைப் பெற்றுக் கொண்டு **புகலூர்** எல்லையை வந்தடைகின்றார். பிள்ளையார் வருகையைக் கேள்வியுற்ற முருக நாயனார் அடியார்களுடன் ஊருக்குப் புறம்பே சென்று சண்பை வேந்தரை வரவேற்கின்றார். திருப்புகலூரை அடைந்த பிள்ளையார் திருக்கோயிலில் புகுந்து **'வெங்கள் விம்மு'** (2-115) என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ்ப் பாமாலை பாடித் திருப்புகலூர் இறைவனை வழிபடுகின்றார். இப் பாமாலையில்,

**வாழ்ந்தநாளும் இனிவாழும்**
**நாளும் இவையறிதிரேல்**
**வீழ்ந்தநாள்எம் பெருமானை**
**யேத்தாவிதி யில்லீர்காள்**
**போழ்ந்ததிங்கட் புரிசடையி**
**னான்றன் புகலூரையே**
**சூழ்ந்தஉள்ளம் உடையீர்கள்**
**உங்கள்துயர் தீருமே.** (2)

என்பது தமிழ் மணம் கமழும் இரண்டாவது வாடா நறுமலர். பின்னர் முருக நாயனார் திருமடத்தில் அமர்ந்தருளுகின்றார். இந்த நாளில்தான் திருவாரூரிலிருந்து நாவுக்கரசர் பெருமான் திருப்புகலூருக்கு எழுந்தருளுகின்றார். இதற்கு மேல் நடைபெறும் நிகழ்ச்சிகளை அடுத்துக் காண்போம்.

---

என்ற தொடரால் வழியிலுள்ள 'இராமன தீச்சரம்' வழி பட்டதாகக் கொள்ளப் பெற்றது. சேக்கிழார் குறிப்பிடாத தலங்களையெல்லாம் இப்படித்தான் கொள்ளவேண்டும்.

# 8. அப்பர் பெருமானுடன் தலவழிபாடு

**கா**ழிப்பிள்ளையார் தமது சோழ நாட்டுத் திருத்தலப் பயணத்தை ஒரு நிலையில் ஒருவாறு முடித்துக்கொண்டு **திருப்புகலூரை**[1] அடைகின்றார். இத்தலத்து எம்பெருமானை நெக்குருகு சிந்தையுடன் நேர் நின்று துதித்தருளி முருக நாயனார் திருமடத்தில் அமர்கின்றார். அங்கு அமர்ந் திருக்கும் நாளில் புகலூர் வர்த்தமானீச்சரத் திருக் **கோயிலை**[2] வழிபட்டு **'பட்டம் பால்நிற மதியம்'** (2.92) என்ற முதற்குறிப்புடைய பதிகம் பாடுகின்றார். இப்பதிகத்தில்,

---

1. **'புகலூர்'** (திருப்புகலூர்): நன்னிலத்திலிருந்து 4 கல் தொலைவு. பேருந்து வசதி உண்டு. கோயிலைச் சுற்றி நாற்புறமும் திருக்குளம் அகழ்போலுள்ளது. கோயிலுக்குப் போக மட்டும் ஒரு வழி உண்டு. சுந்தரர் தலையணையாக வைத்துறங்கிய செங்கற்களை பொன்னாக்கி அவருக்களித்த அற்புதத் தலம். அப்பர் சுவாமிகள் முத்தியடைந்த தலம். இறைவன் சிறிது சாய்ந்துள்ளபடியால் கோணப்பிரான் (அப்பர் 4.105:10) என்று கூறப்பெறுகின்றார். அவருக்குச் சித்திரைச் சதயத்தை முடிவாகக் கொண்ட 10 நாள் விழாவில் சூலைநோய் நீங்கியது முதல் முத்தி அடைந்த வரை வரலாற்றுப் பகுதிகள் காட்டப் பெறுகின்றன.

2. **புகலூர் வர்த்தமானீச்சரம்** : இது கோணப்பிரான் சந்நிதிக்குச் சற்று வடக்குப் பக்கத்தில் உள்ளது. முருக நாயனார் திருவுருவம் இங்குள்ளது.

தென்சொல் விஞ்சமர் வடசொல்
திசைமொழி யெழில்நரம் பெடுத்துத்
துஞ்சு நெஞ்சிருள் நீங்கத்
தொழுதெழு தொல்புக லூரில்
அஞ்ச னம்பிதிர்ந் தனைய
அலைகடல் கடையவன் றெழுந்த
வஞ்ச நஞ்சணி கண்டர்
வர்த்தமா னீச்சரத் தாரே. (7)

என்பது ஏழாம் பாடல். இப்பதிகத்தில் முருகநாயனார் மலர்களைச் சாத்தி வழிபட்ட திருத்தொண்டினைக்

'குறிபறிமுருகன் செய்கோலம்' (3)

என்றும்,

'முருகன் முப்போதுஞ் செய்
முடிமேல் வாசமா மலருடையார்' (5)

எனவும் வரும்தொடர்களால் சிறப்பிக்கின்றார்.

இந்நிலையில் நாவுக்கரசர் திருவாரூர்ப் புற்றிடங் கொண்ட பெருமானைப் போற்றிப் புகலூர் வருகின்றார். அரசரது வருகையை உணர்ந்த பிள்ளையார் அடியார் குழுவுடன் அவரை எதிர்கொண்டழைக்கின்றார். இருவரும் முருக நாயனார் திருமடத்தில் அளவளாவியிருக்கின்றனர். பிள்ளையார் அரசரை நோக்கி, "அப்பரை இங்கு சந்திக்கப் பெறும் பேரருளுடையோம் யாம். ஆரூரை எப்பரிசால் தொழுதுய்ந்தது?" என வினவுகின்றார். நாவுக்கரசர் தாம் திருவாரூரில் கண்ட திருவாதிரைத் திருவிழாவின் சிறப்பினை 'முத்துவிதானம்' (4-21) என்ற திருப்பதிகத்தால் விரித்துரைக்கின்றார்.

நணியார் சேயார் நல்லார்
தீயார் நாடோறும்
பிணிதான் தீரும் என்று
பிறங்கிக் கிடப்பாரும்

மணியே பொன்னே மைந்தா
மணாளா என்பார்கட்
கணியான் ஆரூர் ஆதிரை
நாளால் அது வண்ணம். (2)

துன்பம் நும்மைத் தொழாத
நாள்கள் என்பாரும்
இன்பம் நும்மை ஏத்தும்
நாள்கள் என்பாரும்
நும்பின் எம்மை நுழையப்
பணியே என்பாரும்
அன்ப னாரூர் ஆதிரை
நாளால் அது வண்ணம். (9)

என்பவை 2 ஆம் 9-ஆம் பாடல்கள். ஒவ்வொரு பாடலும் 'ஆதிரை நாளால் அது வண்ணம்' என்று முடிகின்றது.

அப்பர் பெருமான் கூறியதைக் கேட்டுத் திருவாரூர்ப் பெருமானைத் தொழுது ஏத்த விரும்புகின்றார் பிள்ளையார். "ஆரூரை வழிபட்டு மீண்டு வந்து உம்முடன் சேர்வேன்" என்று கூறி அவரது இசைவு பெற்றுப் புறப்படுகின்றார். இதனைப் பிள்ளையாரின் திருத்தலப் பயணத்தின் நான்காவது சுற்றாகக் கொள்ளலாம். வழியில் 'விற்குடி வீரட்டானத்தை'[3] 'வடிகொள்மேனியர்' (2.108) என்ற முதற் குறிப்புடைய பதிகத்தால் சேவிக்கின்றார். இதில்,

---

3. விற்குடி வீரட்டம் (விற்குடி): மாயூரம் -காரைக்குடி இருப்பூர்தி வழியில் விற்குடி என்ற நிலையத்திலிருந்து 1½ கல் தொலைவு. சலந்தராசுரனைச் சங்கரித்த வீரட்டம். சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

கரிய கண்டத்தார் வெளிய வெண்பொடி
அணிமார்பினர் வலங்கையில்
எரியர்புன்சடை இடம்பெறக்
காட்டகத்தாடிய வேடத்தர்
விரியுமாமலர்ப் பொய்கைசூழ்
மதுமலிவிற்குடி வீரட்டம்
பிரிவிலாதவர் பெருந்தவத்
தோரெனப் பேணுவருலகத்தே. (3)

என்பது மூன்றாவது திருப்பாடல்.

விற்குடி வீரட்டானத் திறைவரிடம் விடைபெற்றுக் கொண்டு 'பாடலன் நான்மறை' (1.105) என்ற பதிகம் பாடிக் கொண்டு திருவாரூர்[4] எல்லையை அடைகின்றார். இதில்,

---

4. ஆரூர் (திருவாரூர்): திருவாரூர் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 1 கல் தொலைவு. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றாலும் சிறந்தது. மூர்த்தி-புற்றிடங் கொண்டார், வன்மீகநாதர், திருமூலட்டானநாதர். பிருதிவி தலமாகக் கருதுவதுண்டு. தியாகராஜ சுவாமி சந்நிதி புகழ் வாய்ந்தது. மூலட்டானத்தின் பெயர் ''பூங்கோயில்''. ஆரூர்கோயில் 5 வேலி பரப்புள்ளது. தலமும் மூர்த்திக்கு ஒத்த சிறப்புடையது. ஆரூர் அண்ணல் சுந்தரருக்கு உதவிய செயல்கள் புகழ் வாய்ந்தவை. ஏயர்கோன் கலிக்காமர், காடவர்கோன், கழற்சிங்கர், செருந்துணையார், நமிநந்தியடிகள், விறல் மிண்டர் முதலிய நாயன்மார்கள் வாழ்க்கை தொடர்புடைய தலம். ஆற்றில் இட்டு குளத்தில் எடுத்த வரலாறு அற்புதம்; ஏழு திருமுறைகளிலும் மிகுதியான பாசுரங்கள் இத்தலத்திற்கே உண்டு. (ஆரூர், கச்சி ஏகம்பம், மறைக்காடு ஆகிய மூன்று தலங்கட்கே ஏழு திருமுறைகளிலும் பதிகங்கள் உண்டு. சீகாழிக்கு மிகுதியான பதிக எண்ணிக்கை 71 இருப்பினும் ஆறாம் திருமுறையில் ஒரு பாசுரம் கூட இல்லை.

உள்ளமோ ரிச்சையினா லுகந்தேத்தித்
தொழுமின் தொண்டீர் மெய்யே
கள்ளமொ ழிந்திடுமின் காவாதிருப்பொழுதும்
வெள்ளமோர் வார்சடைமேற் கரந்திட்ட
வெள் ளேற்றான் மேய
அல்ல லகன்கழனி யாரூர் அடைவோமே. (2)

என்பது இரண்டாவது பாடல். திருவாரூர் நகரமக்கள் அவரை எதிர்கொண்டு போற்றுகின்றனர்.[5] திருவாரூர் எல்லையில் சிவிகையினின்று இறங்கிச் 'சித்தம் தெளிவீர் காள்' (1.91) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகத்தைப் பாடி மலர்தூவி வழிபடுகின்றார்.

சித்தம் தெளிவீர்காள்
அத்தன் ஆரூரைப்
பத்தி மலர்தூவ
முத்தி யாகுமே. (1)

பிறவி யறுப்பீர்காள்
அறவ னாரூரைப்
மறவா தேத்துமின்
துறவி யாகுமே. (2)

என்பவை இப்பதிகத்தின் முதலிரண்டு பாடல்கள். தம்மை எதிர் கொள்ள வந்த தொண்டர்களை நோக்கி, 'அந்தமாயுலகாதியும்' (3.45) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடுகின்றார். இதில்,

மறையின் மாமுனிவன் மருவார்புரம்
இறையின் மாத்திரையில் லெரியூட்டினான்
சிறைவண்டார் பொழில்சூழ் திருஆரூரெம்
இறைவன் றானெனை யேன்றுகொளும் கொலோ(3)

என்பது மூன்றாவது பாடல். ஒவ்வொரு பாடலிலும் 'எந்தை தானெனையேன்று கொளும் கொலோ?' என

5. பெ. பு: ஞானசம்பந் 493.

ஆரா அன்பினால் வினவித் திருக்கோயில் முன்னுள்ள தேவாசிரிய மண்டபத்தை இறைஞ்சுகின்றார்.

பூங்கோயிலினுட் புகுந்து புற்றிடங்கொண்ட பெருமானைப் போற்றி நிலமுறப் பன்முறை பணிகின்றார். அங்கு 'அரனெறி' என்னும் திருக்கோயிலில் அமர்ந்த பெருமானைப் பணிந்து மகிழ்கின்றார்.[6] 'பருக்கையானை' (2.101) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி பிற திருப்பதிகளின் எல்லையைச் சார்கின்றார். இதில்,

கள்ளநெஞ்ச வஞ்சகக்
கருத்தைவிட் டருத்தியோ
டுள்ளமொன்றி யுள்குவார்
உளத்துளான் உகந்தவூர்
துள்ளிவாளை பாய்வயற்
சுரும்புலாவு நெய்தல்வாய்
அள்ளல் நாரை யாரல்வாரும்
அந்தண் ஆரூர் என்பதே. (6)

என்பது ஆறாவது பாடல்.

அடுத்து 'வலிவலம்'[7] என்ற திருப்பதிக்கு வருகின்றார். இரண்டு பதிகங்களால் இத்தலத்துப் பெருமானைச் சேவிக்கின்றார். 'ஒல்லையாறி' (1.50) என்பது முதற் பதிகம்.

மெய்யராகிப் பொய்யைநீக்கி
வேதனை யைத்துறந்து
செய்யரானார் சிந்தையானே
தேவர்குலக் கொழுந்தே

6. பெ. பு. ஞானசம்பந். 499.

7. வலிவலம்: மயிலாடுதுறை-காரைக்குடி இருப்பூர்தி வழியில் மாவூர்ரோட்டிலிருந்து 5½ கல் தொலைவு. கட்டு மலைக்கோயில்; சுற்றிலும் அகழ். மூவர் பாடலும் இதற்கு உண்டு.

நைவனாயேன் உன்றன்நாமம்
நாளும்நவிற்று கின்றேன்
வையம்முன்னே வந்துநல்காய்
வலிவல மேயவனே. (4)

என்பது இப்பதிகத்தின் நான்காம் பாடல். எல்லாப்பாடல் களையும் படித்து உள்ளத்தை உருகச் செய்யலாம். 'பூவியல் புரிகுழல்' (1.123) என்ற முதற்குறிப்புடையது அடுத்த பதிகம்.

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே. (5)

என்பது இப்பதிகத்தின் ஐந்தாவது பாடல்.

வலிவலத் திறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு கோளிலி[8] என்ற தலத்திற்கு வருகின்றார். 'நளாய போகாமே' (1.62) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடிக் கோளிலிப் பெருமானைப் போற்றுகின்றார். இதில்,

வந்தமண லாலிலிங்க
மண்ணியின்கட் பாலாட்டும்.
சிந்தைசெய்வோன் தன்கருமந்
தேர்ந்துசிதைப் பான்வருமத்

8. கோளிலி (திருக்குவளை): மாயூரம் - காரைக்குடி இருப்பூர்தி வழியிலுள்ள திருநெல்லிக்காவல் நிலையத்தி லிருந்து 6 கல் தொலைவு. சப்த விடங்கங்களுள் இங்குள்ளவர் அவனிவிடங்கர்; நடனம், பிருங்க நடனம். குண்டையூரில் பெற்ற நெல்லைத் திருவாரூருக்கு எடுத்துச் செல்ல ஆள் வேண்டிப் பதிகம் பாடிச் சுந்தரர் பூதகணங்களால் ஆரூருக்குக் கொண்டு சேர்த்த அற்புதம் நிகழ்ந்த தலம்.

தந்தைதனைச் சாடுதலும்
சண்டீசன் என்றருளிக்
கொந்தணவு மலர் கொடுத்தான்
கோளிலியெம் பெருமானே. (4)

என்பது நான்காம் பாடல். இதில் சண்டேசுவரரின் வரலாற்றுக் குறிப்பு அடங்கியிருப்பதைக் கண்டு மகிழலாம்.

பின்னர் மீண்டும் திருவாரூரை யடைந்து இறைவனை வணங்கியிருக்கின்றார். பின்னர்த் திருநாவுக்கரசரின் பேரன்பின் திறத்தை நினைந்து திருப்புகலூர் தொழப் புறப்படுகின்றார். ஆரூரின் புறத்தே வருபவர், அத் திருப்பதியை விட்டுப் பிரியமுடியாத நிலையில் அதனையே நோக்கி நிற்கின்றார். பின்னர் **'பவனமாய்ச் சோடையாய்'** (2.79) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகத்தைப் பாடிக் கை கூப்பித் தொழுகின்றார்.[9] இதில்,

தந்தையார் போயினார் தாயரும் போயினார்
தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார்
பார்க்கின்றார் கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற் கேமனம்
வைத்தியா லேழை நெஞ்சே!
அந்தணாரூர் தொழுதுய்யலா மையல் கொண்டு
அஞ்சேல் நெஞ்சே. (2)

என்பது இரண்டாம் பாடல். எல்லாப் பாடல்களும் படித்து அநுபவிக்க வேண்டியவை.

---

குண்டையூர் இங்கிருந்து ¾ கல் தொலைவிலுள்ளது. குண்டையூரிலிருந்து திருவாரூர் சுமார் 16 கல் தொலைவு.

9. பெ. பு. ஞானசம்பந். 518.

பின்னர் மனத்தை ஒருவாறு தேற்றிக் கொண்டு திருப்பனையூர்[10] வருகின்றார். பனையூர்ப் பெருமான்மீது 'அரவச் சடைமேல்' (1.37) என்ற முதற்குறிப்புடைய பதிகம் பாடிப் போற்றுகின்றார். இதில்,

இடியார் கடல்நஞ் சமுதுண்டு
பொடியா டியமேனி யினானூர்
அடியார் தொழமன் னவரேத்தப்
படியார் பணியும் பனையூரே. (4)

என்பது நான்காவது பாடல். அடுத்து திருப்புகலூர் வந்தடைந்து நாவுக்கரசர் முருக நாயனார் முதலிய அடியார்கள் சூழ பிள்ளையாரை எதிர் கொண்டழைக் கின்றார். சம்பந்தர் முருக நாயனார் திருமடத்தில் நீலநக்கர், சிறுத்தொண்டர் முதலிய அடியார்களும் அளவளாவி அமர்ந்திருக்கின்றார். இந்தச் சிறு பயணத்தில் சோழநாட்டு எட்டுத் தலங்களின் சேவை நிறைவு பெற்று விடுகின்றது.

**அரசருடன் பயணம்:** பிள்ளையாரும் அரசரும் சில திருப்பதிகளைச் சேவிக்க எண்ணி புகலூரிலிருந்து புறப்படு கின்றனர். புறப்படுவதற்கு முன் 'குறி கலந்த இசை' (1.2) என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ்ப் பாமாலையால் புகலூர்ப் பெருமானை வழிபடுகின்றார் அடியார் களுடன்.[11] இதில்,

செய்யமேனி வெளியபொடிப்
பூசுவர்சேரும் அடியார்மேல்
பையநின்ற வினைபாற்றுவர்
போற்றிசைத்தென்றும் பணிவாரை

---

10. பனையூர்: மயிலாடுதுறை-காரைக்குடி இருப்பூர்தி வழியில் நன்னிலத்திலிருந்து 1½கல் தொலைவு.

11. பெ.பு. ஞானசம்பந். 524.

மெய்யநின்ற பெருமானுறையும்
இடம்என்ப ரருள்பேணிப்
பொய்யிலாத மனத்தார்பிரியாது
பொருந்தும் புகலூரே. (5)

என்பது ஐந்தாவது பாடல். சிறுத்தொண்டரும் நீலநக்கரும் விடைபெற்றுத் தத்தம் ஊருக்குச் செல்கின்றனர்.

பிள்ளையாரும் நாவுக்கரசரும் புகலூர்ப் பெருமானைத் தொழுது புறப்படும்பொழுது நாவேந்தரைப் பிரிய மனமில்லாத சண்பை வேந்தர் முத்துச் சிவிகைப் பின்வரத் தாமும் நடந்து செல்லுகின்றார். அப்பொழுது நாவேந்தர் காழி வேந்தரை நோக்கி, "சிவபெருமான் நுமக்களித்த முத்துச் சிவிகையில் எழுந்தருள்வீராக" எனப் பணிக்கின்றார். இதனைக் கேட்ட சண்பை வேந்தர் "இறைவன் திருவருள் அவ்வாறாயின், நீவிர் செல்லுமிடத்திற்கு அடியேனும் அடியார்களுடன் வரக் கருதுகின்றேன்" என்று கூற, அப்பரும் அதற்கிசைந்து முன்னே செல்லுகின்றார். காழி வேந்தரும் பரிசனங்களும் பின்னே தொடர்கின்றனர்.

முதலில் அம்பர் மாகாளத்தை[12] அடைகின்றனர். தலத்துப் பெருமானை மூன்று திருப்பதிகங்களால் சேவிக்கின்றார். 'அடையார் புறம் மூன்றும்' (1·83) என்பது முதல் திருப்பதிகம். இதில்,

---

12. அம்பர் மாகாளம் (திருமாளம்) : மயிலாடுதுறை - காரைக்குடி இருப்பூர்தி வழியில் பூந்தோட்டம் என்னும் நிலையத்திலிருந்து 1 கல் தொலைவு. அம்பன், அம்பரன் என்ற அசுரர்கள் வாழ்ந்த தலம். அவர்கள் பலத்தைக் காளிதேவி அடக்கினாள். அதன் காரணமாக அம்பர் என்றும், காளம் என்ற பாம்பு பூசித்த காரணத்தால் காளம் என்றும் பெயர் பெற்று இரண்டும் சேர்ந்து அம்பர் மாகாளம் ஆயிற்று. இங்கு வைகாசி ஆயிலியத்தன்று சோமயாஜியாகம் என்ற உற்சவம் அரனும் உமையும் புலையன்—புலைச்சி உருவில் யாகசாலைக் கெழுந்தருளி

பண்டாழ் கடல்நஞ்சை உண்டு களிமாந்தி
வண்டார் பொழிலம்பர் மாகாளம் மேய
விண்டார் புரம்வேவ மேருச் சிலையாகக்
கொண்டான் கழலேத்தக் குறுகா குற்றம்மே. (6)

என்பது ஆறாவது பாடல். 'புல்கு பொன்னிறம்' (2·103) என்ற முதற்குறிப்புடைய பதிகம் அடுத்தது. இதில்,

குணங்கள் கூறியும் குற்றங்கள்
பரவியும் குரைகழல் அடிசேரக்
கணங்கள் பாடவும் கண்டவர்
பரவவும் கருத்தறிந் தவர்மேய
மணங்கொள் பூம்பொழில் அரிசிலின்
வடகரை வருபுனல் மாகாளம்
வணங்கும் உள்ளமோ டணையவல்
லார்களை வல்வினை அடையாவே. (3)

என்பது மூன்றாவது பாடல். இப்பதிகத்தை அடுத்தது 'பாடியுளார் விடையினர்' (3·93) என்ற முதற்குறிப்புடைய பதிகமாகும்.

பரவின அடியவர் படுதுயர்
கெடுப்பவர் பரிவி லார்பால்
கரவினர் கனலன வுருவினர்
படுதலைப் பலிகொ டேகும்
இரவினர் பகலெரி கானிடை
யாடிய வேடர் பூணும்
அரவின ரரிவையோ டிருப்பிடம்
அம்பர்மா காளந் தானே. (3)

என்பது மூன்றாவது பாடல்.

---

அவிர்ப்பாகம் ஏற்கும் முறையில் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. பெரியபுராணத்துள் இது கூறப்பெறவில்லை. ''காளியேத்தும் அம்பர் மாகாளம்'' (3·93:6) என்றபடி காளி வழிபட்ட தலம்; சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

அம்பர் மாகாளத்திறைவனிடம் விடை பெற்றுக் கொண்டு அண்மையிலுள்ள 'அம்பர்ப் பெருந்திருக்கோயில்'[13] வருகின்றார். இங்கே கோச்செங்கணான் கட்டிய திருவம்பர்ப் பெருங்கோயிலைப் பாடிப் போற்றுகின்றார். இங்குப் பாடிய திருப்பதிகம் 'எரிதர அனல் கையில்' (3·19) என்ற முதற்குறிப்புடையது. இதில்,

> மறைபுனை பாடலர் சுடர்கை மல்கவோர்
> பிறைபுனை சடைமுடி பெயர ஆடுவர்
> அறைபுனல் நிறைவயல் அம்பர் மாநகர்
> இறைபுனை யெழில்வளர் இடமதென்பரே. (3)

என்பது மூன்றாவது பாடல்.

அடுத்து திருக்கோட்டாறு[14] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். இரண்டு பதிகங்களால் தலத்திறைவனைப் போற்றுகின்றார். 'கருந்தடங்கண்ணி' (2·52) என்பது முதற்குறிப்புடைய முதற்பதிகம். இதில்,

---

13. அம்பர் பெருந் திருக்கோயில் (அம்பல் கோயில்) : பூந்தோட்டத்திலிருந்து 2 கல் தொலைவு. கோச்செங்கட் சோழ நாயனார் எடுப்பித்த 'எண்தோள் முக்கண் ஈசற்கு எழில் மாடம்' எழுபதுள் இதுவும் ஒன்று. செயற்கையாலான கட்டு மலை மேல், யானை உள் நுழையாதபடிச் சிறு வாயில் வைத்துக் கட்டப்பெறும் இவ்வகைக் கோயிலுக்கு மாடக்கோயில், பெருங் கோயில் என்று பெயர். சோமாசி மாறநாயனார் தமது மறையோர் குலத்திற்கேற்ப நாடோறும் முத்தீ வளர்த்து வழிபட்டு முத்தி பெற்ற தலம். சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

14. கோட்டாறு : பேரளம்—காரைக்கால் இருப்பூர்தி வழியில் உள்ள பத்தக்குடியிலிருந்து 2½ கல் தொலைவு. யானை பூசித்ததை 2·52:2 பாடல் கூறும். சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

அம்பின் நேர்விழி மங்கை மார்பலர்
    ஆட கம்பெறு மாட மாளிகைக்
கொம்பி னேர்துகி லின்கொடி
    யாடுகோட் டாற்றில்
நம்ப னேநட னேந லந்திகழ்
    நாதனே என்று காதல் செய்தவர்
தம்பின் நேர்ந்தறி யார்தடு
    மாற்றவல் வினையே. (4)

என்பது நான்காவது பாடல். 'வேதியன்' (3·12) என்ற முதற் குறிப்புடையது அடுத்த பதிகம். இதில்,

பந்தமரும் விரல்மங்கை
    நல்லாளொரு பாகமா
வெந்தமரும் பொடிப்பூச
    வல்லவிகிர் தன்மிகும்
கொந்தமரும் மலர்ச்சோலை
    சூழ்ந்ததிருக் கோட்டாற்றுள்
அந்தணனை நினைந்தேத்த
    வல்லார்க்கில்லை அல்லலே. (6)

என்பது ஆறாவது பாடல்.

இந்நிலையில் குங்கிலியக் கலிய நாயனார் எதிர் கொண்டு வரவேற்க திருக்கடவூர் வீரட்டத்தை[15] அடைகின்றார். 'மார்க்கண்டனுக்காகக் காலனைக் காலால் உதைத்த வீரட்டப் பெருமானை, 'சடையுடையானும்' (3·8) என்ற திருப்பதிகம் பாடிப் போற்றுகின்றார்.

---

15. கடவூர் வீரட்டம் : மயிலாடுதுறை-தரங்கம்பாடி இருப்பூர்தி வழியில் திருக்கடையூர் என்ற நிலையத்திலிருந்து ¼ கல் தொலைவு. மார்க்கண்டன் வரலாறு பெற்ற தலம். அமிர்தகடமே சிவலிங்கமாயிருத்தலின் அமிர்தகடேசுவரர் என்பது இறைவன் திருநாமம்; இறைவி அபிராமி. கால சம்ஹார மூர்த்தி சந்நிதி தெற்கு நோக்கியது. குங்கிலியக்

செவ்வழலாய் நிலனாகி
நின்றசிவ மூர்த்தியும்
முவ்வழல்நான் மறையைந்தும்
ஆயமுனி கேள்வனும்
கவ்வழல்வாய்க் கதநாக
மார்த்தான் கடவூர்தனுள்
வெவ்வழ லேந்துகை
வீரட்டானத் தரனல்லனே. (7)

என்பது ஏழாவது பாடல்.

வீரட்டானப் பெருமானிடம் விடை பெற்றுக்கொண்டு கடவூர் மயானத்திற்கு[16] வருகின்றார் காழிப்பிள்ளையார். 'வரிய மறையார்' (2.80) என்ற குறிப்புடைய திருப் பதிகத்தைப் பாடிப் போற்றுகின்றார். இதில்,

வெள்ளை யெருத்தின் மிசையார்
விரிதோடொரு காதிலங்கத்
துள்ளு மிளமான் மறியார்சுடர்
பொற்சடைகள் துலங்கக்

---

கலிய நாயனாரும், காரி நாயனாரும் தொண்டு செய்து முத்தி அடைந்த தலம். 'திருக்களிற்றுப் படியார்' இயற்றிய உய்ய வந்த தேவநாயனார் அவதரித்த தலம். அபிராமி பட்டர், அபிராமியந்தாதி பாடி அமாவாசையில் முழு மதியம் காட்டிய அற்புதத் தலம். சித்திரைப் பெருவிழாவில் 6ஆம் நாள் கால சம்ஹார உற்சவம் புகழ் பெற்றது. கார்த்திகை சோமவாரம் தோறும் 1008 சங்காபிடேகமும் புகழ் மிக்கது. கால சம்ஹார மூர்த்தியின் அருள் பெறு வதற்கு அன்பர்கள் தம் 60 ஆண்டு நிறைவை இத்தலத்தில் ஆயுள் ஹோமம் முதலியன செய்து கொண்டாடுவதுண்டு. அஷ்ட வீரட்டானங்களுள் இதுவும் ஒன்று.

16. கடவூர் மயானம் (திருமெய்ஞ்ஞானம்) ; திருக் கடையூர் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 1½ கல் தொலைவு. பிரம தேவனை நீறாக்கிய மயானம்.

கள்ள நகுவெண்டலையர் கடவூர்
மயான மமர்ந்தார்
பிள்ளை மதியமு டையார்
அவரெம் பெருமானடிகளே. (5)

என்பது ஐந்தாவது பாடல்.

இதனையடுத்து திருவாக்கூர்[17] வருகின்றார். 'அக்கிருந்த ஆரமும்' (2.42) என்ற திருப்பதிகத்தால் ஆக்கூர் அமர்ந்த இறைவனைச் சேவிக்கின்றார்.

பண்ணொளிசேர் நான்மறையான்
பாடலினோ டாடலினான்
கண்ணொளிசேர் நெற்றியினான்
காதலித்த தொல்கோயில்
விண்ணொளிசேர் மாமதியந்
தீண்டியகால் வெண்மாடம்
தண்ணொளிசேர் ஆக்கூரில்
தான்தோன்றி மாடமே. (6)

என்பது இப்பதிகத்தின் ஆறாவது பாடல். ஆக்கூரிலிருந்து திருமீயச்சூர்[18] வருகின்றார். 'காய்ச்செவ்விக்' (2.62) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகத்தால் இறைவனைப் போற்றுகின்றார். இதில்,

---

17. ஆக்கூர்: மயிலாடுதுறை - தரங்கம்பாடி இருப்பூர்தி வழியில் ஆக்கூர் நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. சிறப்புலி நாயனார் தலம். ஆலயம் பெயர் தான்றோன்றி மாடம் (தான் தோன்றி - சுயம்பு). இத்தலத்து வேளாளர் வள்ளண்மையை (2.42:3) பாசுரம் கூறும்.

18. மீயச்சூர்: மயிலாடுதுறை - காரைக்குடி இருப்பூர்தி வழியில் பேரளம் என்ற நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. தேவியார் திருக்கோலம் அமர்ந்த கோலமாய் மிக அழகு நிரம்பியது.

விடையார் கொடியார் சடைமேல்
　　விளங்கும் பிறைவேடம்
படையார் பூதஞ் சூழப்
　　பாட லாடலார்
பெடையார் வரிவண்டணையும்
　　பிணைசேர் கொன்றையார்
விடையார் நடையொன் றுடையார்
　　மீயச் சூராரே. (5)

என்பது ஐந்தாவது பாடல்.

மீயச்சூர் இறைவனிடம் விடை பெற்றுக்கொண்டு பாம்புரம்[19] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். 'சீரணி திகழ்தரு' (1.41) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனை ஏத்துகின்றார். இதில்,

ஓதிநன் குணர்வார்க் குணர்வுடை ஒருவர்
　　ஒளிதிகழ் உருவஞ்சேர் ஒருவர்
மாதினை இடமா வைத்தஎம் வள்ளல்
　　மான்மறி ஏந்திய மைந்தர்
ஆதிநீ யருளென் றமரர்கள் பணிய
　　அலைகடல் கடையவென் றெழுந்த
பாதிவெண் பிறைசடை வைத்தஎம் பரமர்
　　பாம்புர நன்னக ராரே. (6)

என்பது ஆறாவது பாடல்.

பாம்புரத்திலிருந்து திருவீழிமிழலை[20] வருகின்றார். இங்கு பல நாட்கள் தங்குகின்றார். இங்கு பல சிறப்பான

---

19. பாம்புரம் (திருப்பாம்புரம்): மயிலாடுதுறை — காரைக்குடி இருப்பூர்தி வழியில் பேரளம் நிலையத்தி லிருந்து 4½ கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

20. வீழிமிழலை (திருவீழிமிழலை): மயிலாடுதுறை - காரைக்குடி இருப்பூர்தி வழியில் பூந்தோட்டம் என்ற நிலையத்திலிருந்து 7 கல் தொலைவு. சக்கராயுதம் பெறு

நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. (இதனை அடுத்த கட்டுரையில் விரிவாகக் காண்போம்). திருவீழி மிழலையில் தங்கியிருந்த நாட்களில் இரண்டு தலங்களை வழிபடுகின்றார்.

ஒரு நாள் 'பேணு பெருந்துறை'[21] என்ற தலத்திற்கு வருகின்றார். 'பைம்மா நாகம்' (1.42) என்ற முதற் குறிப்புடைய பதிகம் பாடி இறைவனைச் சேவிக்கின்றார்.

> **நிலனொடு வானும் நீரொடு தீயும்**
> **வாயுவு மாகியோ ரைந்து**
> **புலனொடு வென்று பொய்ம்மைகள் தீர்த்த**
> **புண்ணியர் வெண்பொடிப் பூசி**
> **நலனொடு தீங்கும் தானல தின்றி**
> **நன்கெழு சிந்தைய ராகி**
> **மலனொடு மாசும் இல்லவர் வாழும்**
> **மல்கு பெருந்துறை யாரே.** (4)

---

வதற்காகத் திருமால் நாடோறும் இத்தலத் திறைவனை 1000 தாமரை மலர்களைக் கொண்டு அருச்சித்துவர, ஒரு நாள் ஒரு மலர் குறையத் திருமால் தனது கண்ணையே எடுத்து அருச்சனையை முடித்ததை (4.64:8) பாசுரம் கூறும். திருமால் விண்ணிலிருந்து கொணர்ந்த விமானமே கோயிலாயிற்று என்பதை (3.119:7) பாசுரம் கூறும். மூலத் தான இலிங்கமூர்த்தியின் பின்புறம் பார்வதி - பரமேசுவரர் திருமணக் கோலம் உள்ளது. பஞ்சம் வந்தபோது அப்பருக்கும், சம்பந்தருக்கும் (அடியார்கட் கமுதளிக்க) இறைவன் படிக்காசு அளித்ததை (7.88:8) பாசுரம் கூறும். இக்காசுகளுள் அப்பருக்களித்த காசு சுலபமாக மாறிற்று; சம்பந்தருக்களித்த காசு வாசியுள்ளதாக இருந்து. சம்பந்தர் வாசி தீரவே என்ற பதிகம் பாடிப் பிறகு (1.92) வாசியிலாக் காசு பெற்றார்.

21. பேணு பெருந்துறை (திருப்பந்துறை): கும்பகோணத்திலிருந்து 6 கல் தொலைவு. பேருந்து வசதி உண்டு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

என்பது நான்காம் பாடல். மற்றொரு நாள் 'திலதைப்பதி முற்றம்' [22] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். 'பொடிகள் பூசிய' (2.118) என்ற செந்தமிழ் மாலையால் தலத்துப் பெருமானை வழுத்துகின்றார்.

புரவியேழும் மணிபூண்
டியங்குங் கொடித்தேரினான்
பரவிநின்று வழிபாடு
செய்யும் பரமேட்டியூர்
விரவிஞாழல் விரிகோங்கு
வேங்கை சுரபுன்னைகள்
மரவமவ்வல் மலருந்தி
லதைம்மதி முத்தமே. (6)

என்பது இம்மாலையில் ஆறாவது மலர். பின்னர் திருவீழி மிழலைக்கே திரும்பி விடுகின்றார்.[23]

திருவீழி மிழலை நாதனிடம் விடைபெற்றுக் கொண்டு 'திருவாஞ்சியம்'[24] வருகின்றார். 'வன்னி கொன்றை' (2.7) என்ற முதற் குறிப்புடைய சொல்மாலையைச் சாத்திச் சேவிக்கின்றார் தலத்து இறைவனை.

மேவி லொன்றர் விரிவுற்ற
இரண்டினர் மூன்றுமாய்
நாவின் நாலருடல் அஞ்சினர்
ஆறுஏழ் ஓசையர்

---

22. திலதைப்பதி (செதலைப்பதி, திலதர்ப்பணபுரி): பூந்தோட்டம் என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து 1½ கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

23. திருவீழி மிழலை விசேட நிகழ்ச்சிகள் அடுத்த கட்டுரையில் (கட்டுரை—9) விரிவாக விளக்கப்படுகின்றது.

24. வாஞ்சியம் (ஸ்ரீ வாஞ்சியம்): நன்னிலத்திலிருந்து 6 கல் தொலைவு. திருமால் ஸ்ரீ என்னும் இலக்குமியை வாஞ்சித்துச் சிவபூசை செய்து பெற்றமையால் ஸ்ரீவாஞ்சியம் ஆயிற்று. காசிக்கு நிகர் எனப்படும் தலங்களுள் ஒன்று.

தேவில் எட்டர் திருவாஞ்சிய
மேவிய செல்வனார்
பாவந் தீர்ப்பர் பழிபோக்குவர்
தம்மடி யார்கட்கே. (3)

என்பது மூன்றாவது வாடா நறுமலர்.

திருவாஞ்சியத்திலிருந்து தலையாலங்காடு[25] வருகின்றார். இறைவனைச் சேவிக்கின்றார் (பதிகம் இல்லை) தலையாலங்காட்டிலிருந்து பெருவேளூர்[26] வருகின்றார். 'அண்ணாவுங் கழுக்குன்றம்' (3.64) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி தலத்து இறைவனைப் போற்றுகின்றார். இதில்,

இறைக் கொண்ட வளையாளோடு
இருகூறாய் ஒருகூறு
மறைக்கண்டத் திறைநாவர்
மதிலெய்த சிலைவலவர்
கறைக்கொண்ட மிடருடையர்
கனல்கிளரும் சடைமுடிமேல்
பிறைக்கொண்ட பெருமானார்
பெருவேளூர் பிரியாரே. (4)

என்பது நான்காவது திருப்பாடல். பெருவேளூரிலிருந்து தனிச் சாத்தங்குடி[27] வருகின்றார். தலத்துப் பெருமானைச் சேவிக்கின்றார். (பதிகம் இல்லை.) சாத்தங்குடியிலிருந்து கரவீரம்[28] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். 'அரியும்

---

25. தலையாலங்காடு : தஞ்சை - நாகூர் இருப்பூர்தி வழியில் கொரடாச்சேரியிலிருந்து 6 கல் தொலைவு.

26. பெருவேளூர் (காட்டூர் அய்யம் பேட்டை): கொரடாச்சேரியிலிருந்து 8½ கல் தொலைவு.

27. இத்திருத்தலத்தைப்பற்றி அறிந்து கொள்ளத் தக்க ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

28. கரவீரம் (கரையபுரம்) : திருவாரூர்க்கருகிலுள்ள குழிக்கரை என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து 4 கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

நம்வினை' (1.58) என்ற முதற்குறிப் புடைய திருப்பதிகம் பாடி இறைவனை ஏத்துகின்றார்.

பறையு நம்வினையுள்ளன பாழ்பட
மறையு மாமணிபோற் கண்டம்
கறையவன் திகழும் கரவீரத்தெம்
இறைய வன்கழல் ஏத்தவே. (4)

என்பது இப்பதிகத்தின் நான்காவது பாடல்.

கரவீரத்தெம்பெருமானிடம் விடை பெற்றுக் கொண்டு காழி வேந்தர் விளமர்[29] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். வந்தவர் 'மத்தக மணிபெற' (3.88) என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ் மாலை சாத்தித் தலத்திறைவனை வழிபடு கின்றார். இதில்,

மனைகள்தொ றிடுபலி யதுகொள்வர்
மதிபொதி சடையினர்
கனைகட லடுவிட மமுதுசெய்
கறையணி மிடறினர்
முனைகெட வருமதி ளெரிசெய்த
வவர்கழல் பரவுவார்
வினைகெட அருள்புரி தொழிலினர்
செழுநகர் விளமரே. (6)

என்பது ஆறாவது தமிழ் மணங்கமழும் வாடா நறுமலர். விளமரிலிருந்து திருவாரூர் வருகின்றார்; புற்றிடங்கொண்ட பெருமானை வழிபடுகின்றார் (பதிகம் இல்லை).

ஆரூர்ப் பெருமானிடம் விடை பெற்றுக் கொண்டு காறாயில்[30] என்ற திருத்தலத்திற்கு எழுந்தருளுகின்றார்.

---

29. விளமர் : திருவாரூரிலிருந்து 2 கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

30. காறாயில் (திருக்காறை வாசல்) : மயிலாடுதுறை-காரைக்குடி இருப்பூர்தி வழியில் மாவூர்ரோடு என்ற நிலை

'நீரானே நீள்சடை' (2.15) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனை வழுத்துகின்றார். இதில்,

கலையானே கலைமலி
செம்பொற் கயிலாய
மலையானே மலைபவர்மும்
மதில்மாய் வித்த
சிலையானே சீர்திகழும்
திருக்கா றாயில்
நிலையானே யென்பவர்மேல்
வினைநில் லாவே. (5)

என்பது ஐந்தாவது பாடல்.

திருக்காறாயில் இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு தேவூர்[31] வருகின்றார். இரண்டு பதிகங்களால் தேவூர் தேவைச் சேவிக்கின்றார். 'பண்ணிலாவிய' (2 82) என்ற முதற்குறிப்புடையது ஒரு பதிகம். இதில்,

பொங்கு பூண்முலைப் புரிகுழல்
வரிவளைப் பொருப்பின்
மங்கை பங்கினன் கங்கையை
வளர்சடை வைத்தான்
திங்கள் சூடிய தீநிறக்
கடவுள்தென் தேவூர்
அங்க ணன்றனை யடைந்தனம்
அல்லலொன் றிலமே. (6)

---

யத்திலிருந்து 3 கல் தொலைவு. சப்தவிடங்கங்களுள் ஒன்று. ஆதிவிடங்கர்; குக்குட நடனம்; சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

31. தேவூர் : தஞ்சை-நாகூர் இருப்பூர்தி வழியில் கீழ் வேளூர் நிலையத்திலிருந்து 2 கல் தொலைவு. கட்டு மலைக் கோயில். சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

என்பது ஆறாவது தமிழ் மலர். அடுத்த பதிகம் 'காடுபயில் வீடு' (3.74) என்ற முதற்குறிப்புடையது.

கன்றியெழ வென்றிநிகழ் துன்றுபுர
மன்றவிய நின்று நகைசெய்
என்றனது சென்றுநிலை யெந்தைதன
தந்தையம ரின்ப நகர்தான்
முன்றின்மிசை நின்றபல வின்கனிகள்
தின்றுகற வைக்குரு ளைகள்
சென்றிசைய நின்றுதுளி யொன்றவிளை
யாடிவளர் தேவூ ரதுவே. (7)

என்பது இப்பதிகத்தின் ஏழாவது திருப்பாடல்.

தேவூர்த்தேவனிடம் விடைபெற்றுக் கொண்டு நெல்லிக்கா[32] வருகின்றார். 'அறத்தாலுயர்' (2-19) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனை வழுத்து கின்றார்.

பிறைதான் சடைசேர்த்திய எந்தை பெம்மான்
இறைதான் இறவாக் கயிலை மலையான்
மறைதான் புனலொண் மதிமல்கு சென்னி
நிறைதான் நெல்லிக் காவுள் நிலாயவனே. (7)

என்பது ஏழாவது திருப்பாடல்.

நெல்லிக்காவுள் நிலாயவனிடம் விடை பெற்றுக் கொண்டு கைச்சினம்[33] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார்

---

32. நெல்லிக்கா (திருநெல்லிக்காவல்): மயிலாடுதுறை-காரைக்குடி இருப்பூர்தி வழியில் திருநெல்லிக்காவல் என்ற நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. தீபாவளி முதல் ஏழு நாளும் மாசி 18ஆம் நாள் முதல் ஏழுநாளும் பகலவன் மறையும்போது கதிர்கள் மூலத்தான மூர்த்தியின்மீது விழுகின்ற சூரிய பூசைத்தலம். சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

33. கைச்சினம் (கச்சினம்): மயிலாடு துறை-காரைக்குடி இருப்பூர்தி வழியிலுள்ள ஆலத்தம்பாடி

திருஞானசம்பந்தர். 'தையலோர் கூறுடையான்' (2.45) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனை ஏத்துகின்றார். இதில்,

> விடமல்கு கண்டத்தான்
> வளையோர் கூறுடையான்
> படமல்கு பாம்பரையான்
> பற்றாதார் புரமெரித்தான்
> நடமல்கு மாடலினான்
> நான்மறையோர் பாடலினான்
> கடமல்கு மாவுரியான்
> உறைகோயில் கைச்சினமே. (2)

என்பது இரண்டாவது தமிழ் மணங்கமழும் வாடாநறுமலர்.

கைச்சினத்தீசனிடம் விடைபெற்றுக் கொண்டு தெங்கூர்[34] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார் சண்பை வேந்தர். 'புரைசெய் வல்வினை' (2.93) என்ற திருப்பதிகம் பாடி இறைவனைச் சேவிக்கின்றார்.

> சித்தந் தன்னடி நினைவார்
> செடிபடு கொடுவினை தீர்க்கும்
> கொத்தின் தாழ்சடை முடிமேல்
> கோளயிற் றரவொடு பிறையன்
> பத்தர் தாம்பணிந் தேத்தும்
> பரம்பரன் பைம்புனல் பதித்த
> வித்தன் தாழ்பொழில் தெங்கூர்
> வெள்ளியங் குன்றமர்ந் தாரே. (2)

என்பது இத்திருப்பதிகத்தின் இரண்டாவது பாடல்.

---

(மணலிக்கு அடுத்தது) என்ற நிலையத்திலிருந்து 1 கல் தொலைவு. இந்திரன் பூசித்த கைவிரற்குடி (கைச்சின்னம்) இலிங்கத்திற் காணப்படுகின்றது. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற திருத்தலம்.

34. தெங்கூர்: திருநெல்லிக்காவல் இருப்பூர்தி நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

தெங்கூர் தேவனிடம் விடைபெற்றுக் கொண்டு **கொள்ளிக்காடு**[35] என்ற திருத்தலம் அடைகின்றார். **'நிணம்படு சுடலையின்'** (3.16) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி கொள்ளிக் காட்டிறைவனைச் சேவிக்கின்றார்.

> **வாரணி வனமுலை மங்கை யாளொடும்**
> **சீரணி திருவுருத் திகழ்ந்த சென்னியர்**
> **நாரணி சிலைதனால் நணுக லாரெயில்**
> **கூரெரி கொளுவினர் கொள்ளிக் காடரே** (5)

என்பது **ஐந்தாவது** பாடல்.

கொள்ளிக்காட்டு இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு **கோட்டூர்**[36] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். **'நீலமார்தரு கண்டனே'** (2.109) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனைச் சேவிக்கின்றார்.

> **துன்று வார்சடைத் தூமதி**
> **மத்தமும் துன்னெருக்கார் வன்னி**
> **பொன்றி னார்தலைக் கலனொடு**
> **பரிகலம் புலியுரி யுடையாடை**
> **கொன்றை பொன்னென மலர்தரு**
> **கோட்டூர்நற் கொழுந்தேஎன் றெழுவாரை**
> **என்று மேத்துவார்க் கிடரிலை**
> **கேடிலை ஏதம்வந் தடையாவே.** (6)

என்பது **இப்பதிகத்தின் ஆறாவது** திருப்பாடல்.

---

35. **கொள்ளிக்காடு :** மயிலாடுதுறை - காரைக்குடி இருப்பூர்தி வழியில் ஆலத்தம்பாடி (மணலியருகில்) நிலையத்திலிருந்து 4 கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற திருத்தலம்.

36. **கோட்டூர் :** நீடாமங்கலம்-மன்னார்குடியிலிருந்து 10 கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

'கோட்டூர் நற்கொழுந்திடம்' விடை பெற்றுக்கொண்டு வெண்டுறை[37] என்ற திருத்தலத்திற்கு வந்தருள்கின்றார் வேணுபுரத்தார். 'ஆதியனாதிரையன்' (3.61) என்ற செந்தமிழ் மாலை புனைந்து வெண்டுறை யீசனைச் சேவிக்கின்றார்.

ஊழிகளாய் உலகாய்
ஒருவர்க்கும் உணர்வரியான்
பேரிளவெண் மதியும்புனலும்
மணிபுன் சடையான்
யாழின்மொழி யுமையாள்
வெருவவ்வெழில் வெண்மருப்பின்
வேழமு ரித்தபிரான்
விரும்புமிடம் வெண்டுறையே. (6)

என்பது இம்மாலையின் ஆறாவது நறுமலர்.

வெண்டுறை இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு தண்டலை நீணெறி[38] என்ற திருத்தலத்திற்கு எழுந்தருள்கின்றார். 'விரும்பும் திங்களும்' (3.50) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனைச் சேவிக்கின்றார். இதில்,

---

37. வெண்டுறை (திருவண்டுதுறை): மன்னார்குடியிலிருந்து 6 கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற திருத்தலம்.

38. தண்டலை நீணெறி (தண்டலைச்சேரி): மயிலாடுதுறை-காரைக்குடி இருப்பூர்தி வழியில் திருத்துறைப்பூண்டி நிலையத்திலிருந்து $2\frac{1}{2}$ கல் தொலைவு. இத்தலத்திறைவனுக்கு $\frac{1}{2}$ கல் தொலைவிலுள்ள கணமங்கலத்திலிருந்து அரிவாட்டாய நாயனார் மாடுவடு செங்கீரை செந்நெல் அமுது முதலியன நிவேத்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒருநாள் அவை கமரில் வழுக்கி விழத் தாம் கழுத்தை அரிய முற்பட்டபோது,

**பரந்த நீலப் படரெரி வல்விடம்**
**கரந்த கண்டத்தி னான்கரு தும்மிடம்**
**சிவந்த பொன்னும் செழுந்தர ளங்களும்**
**நிவந்த தண்டலை நீணெறி காண்மினே. (3)**

என்பது மூன்றாவது திருப்பாடல். இப்பதிகத்தில் 5,6,7 ஆம் பாடல்கள் காணப்பெறவில்லை.

தண்டலை நீணெறிப் பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு திருக்களர்[39] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார் காழிப் பிள்ளையார். '**நீருளார்கயல்**' (2.51) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ்ப் பதிகம் பாடி திருக்களர் இறைவனைச் சேவிக்கின்றார்.

**கோல மாமயி லாலக் கொண்டல்கள்**
**சேர்பொழிற் குலவும் வயலிடைச்**
**சேலி ளங்கயலார் புனல்சூழ்ந்த திருக்களருள்**
**நீல மேவிய கண்டனே நிமிர்**
**புன்சடைப் பெருமா னெனப்பொலி**
**ஆல நீழலுளா யடைந்தார்க் கருளாயே. (6)**

என்பது இச் செந்தமிழ் மாலையில் **ஆறாவது** வாடா நறுமலர்.

திருக்களர் இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு '**திருச்சிற்றேமம்**'[40] என்ற திருத்தலத்திற்கு எழுந்தருள்

---

கமரில் இறைவன் கை தோன்றி அவர் கழுத்தை அரிவதைத் தடுத்து அவருக்கு முத்தி அளித்த தலம். சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்றது.

39. **களர்** (திருக்களர், பாரிஜாதவனம்): மயிலாடு துறை-காரைக்குடி இருப்பூர்தி வழியில் திருத்துறைப் பூண்டி நிலையத்திலிருந்து 4½கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற திருத்தலம்.

40 **சிற்றேமம்** (சிற்றாய்மூர், சிற்றாம்பூர்): மயிலாடு துறை-காரைக்குடி இருப்பூர்தி வழியில் ஆலத்தம்பாடி

கின்றார். 'நிறைவெண்டிங்கள்' (3.42) என்ற செந்தமிழ் மாலை புனைந்து தலத் திறைவனை வழிபடுகின்றார். இதில்,

பனிவெண் டிங்கள் வாண்முக
மாதர் பாடப் பல்சடைக்
குனிவெண் டிங்கள் சூடியோ
ராடல் மேய கொள்கையான்
தனிவெள் விடையன் புள்ளினத்
தாமஞ் சூழ்சிற் றேமத்தான்
முனிவு மூப்பு நீக்கிய
முக்கண் மூர்த்தி யல்லனே. (6)

என்பது தமிழ்மணம் மிக்க ஆறாவது வாடா நன்மலர்.

சிற்றேமத்திலிருந்து ஆளுடைய பிள்ளையாரும் ஆளுடைய அடிகளும் அடியார்கள் கூட்டத்துடன் திருமறைக் காட்டெல்லையை[41] அடைகின்றனர். திருமறைக் காட்டுப் பெருமக்களும் அடியார்களும் இவர்கள் வருகையை அறிந்து ஊரைக் கமுகு, வாழை மரங்களாலும் தோரணங் களாலும் அலங்கரித்து குடந்தீபங்கள் வார்முரசம் முதலிய மங்கலநாதங்கள் மல்க எதிர்கொண்டு வரவேற் கின்றனர். இருபெரு மக்களும் மறைக் காட்டுத் தொல்லை மூதூர் புகுந்தபோது 'அரஹர' என்று மாதவர்களும்

---

நிலையத்திலிருந்து 4 கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

41. **மறைக்காடு** (வேதாரண்யம்): சப்தவிடங்கங் களுள் ஒன்று. புவனி விடங்கர்; ஹம்ஸபாத நடனம். வேதங்கள் பூசித்து மூடிவிட்டுப் போயிருந்த கதவுகளைப் பதிகம் பாடி அப்பர் திறக்கவும் சம்பந்தர் மூடவும் செய்த அற்புதத் தலம். தேவாரம் வேதத்திற்குத் தாழ்ந்ததல்ல என்பதைக் கட்புலனாக உலகுக்கு அறிவித்த தலம். மேலைக் கோபுரவாயிலுக் கெதிரிலுள்ள விநாயகர் சந்நிதி மிகு புகழ் வாய்ந்தது.

மறையவர்களும் எடுத்த ஓசை இரு விசும்பும் திசை யெட்டும் பொங்கி எழுகின்றது.

**மறைக்கதவம் திறத்தலும் அடைத்தலும் :** இருபெரு மக்களும் திருமறைக் காட்டுத் திருக்கோயிலை வலஞ் செய்து கோபுரத்துள் நுழைந்து முன்றில் வாயிலை அணுகு கின்றனர். முன்னாளில் அருமறைகள் சிவபெருமானை வழிபட்டு திருக்காப்பிடப்பெற்ற திருக்கதவை அம்மறை களை அன்புடன் ஓதும் அடியார்கள் ஒருவரும் திறக் காததால் அவ்வாயில் அடைக்கப்பட்டே இருப்பதையும், அன்பர்கள் வேறோர் பக்கம் வாயில் அமைத்து அவ்வழியே வழிபாடு செய்து வருவதையும் அடியார்கள் மூலம் அறிகின்றனர். காழிப் பிள்ளையார் சொல்வேந்தரை நோக்கி, "அப்பரே, மறைக் காட்டுப் பெருமானை எப்படியும் இவ்வழியாகச் சென்று நாம் வழிபடுதல் சிறப்பு; இத்திருக் கதவு 'திறக்கும்படி' நீரே செந்தமிழ்ப்பதிகம் பாடியருளுவீர்" என வேண்ட, அவரும் பிள்ளையாரின் திருவுளக் குறிப்பிற்கிசைந்து "பண்ணினேர் மொழியாள்" (5.10) என்று எடுத்து,

**கண்ணி னாலுமைக் காணக் கதவினை**
**திண்ண மாகத் திறந்தருள செய்மினே,** (I)

என்று பாடிப் போற்றுகின்றார். பாடல்களின் பொருட் சுவையினைத் துய்க்க விரும்பிய மறைக்காட்டு இறைவன் பதிகம் முடியுமளவும் திருக்கதவைத் திருக்காப்பு நீக்கத் தாழ்ந்தருளுகின்றார்; இதுகண்டு வருத்தமுற்ற அப்பர் பெருமான்,

**அரக்க னைவிர லால்அடர்த் திட்டநீர்**
**இரக்க மொன்றிலீர் எம்பெரு மானிரே.** (II)

என்ற இறுதிப் பாடலைப் பாடியதும் கதவின் திருக்காப்பு நீங்கித் திறந்துகொள்ளுகின்றது.

இருபெருமக்களும் அளவிலா மகிழ்ச்சியடைந்து அடியார்களுடன் திருக்கோயிலில் புகுந்து இறைவன்

திருமுன்னர் வீழ்ந்திறைஞ்சி செந்தமிழ் மாலைகள் சாத்திப் போற்றுகின்றனர். மறைக்காட்டு மணாளரை வழிபட்டு வெளியே வந்தபின் அரசர் பிள்ளையாரை நோக்கி, "இத் திருக்கதவம் அடைக்கவும் திறக்கவும் அமையும்படி பாடியருளுவீர்" என வேண்டுகின்றார். பிள்ளையாரும் 'சதுரம் மறை' (2-37) என்ற முதற்குறிப்புடைய திருப் பதிகத்தின்,

சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய்க எனக்குன்
கதவந் திருக்காப்புக் கொள்ளும் கருத்தாலே. (1)

என்ற முதற்பாடலைப் பாடியவுடன் திருக்கதவு மூடிக் கொள்ளுகின்றது. இதனைக் கண்ட அரசரும் அடியார் களும் இறைவன் திருவருட்டிறத்தை வியந்து போற்று கின்றனர். பிள்ளையார் இத் திருப்பதிகத்தின் ஏனைய பாடல்களையும் பாடித் திருக்கடைக் காப்புச் சாத்து கின்றார். பின்னர் இருபெருங்குரவர்களும் அடியார் களுடன் அங்குள்ள திருமடத்தில் தங்குகின்றனர்.

**வாய்மூர் இறைவன் ஆடல் காட்டல் :** அருமறைகளால் மூடப்பெற்ற கதவு தம்மால் அரிதில் திறக்கப் பெற்றதும், பிள்ளையாரால் எளிதில் அடைக்கப் பெற்றதுமாகிய இரு நிகழ்ச்சிகளையும் எண்ணுகின்றார் நாவுக்கரசர். தாம் இறைவன் திருக்குறிப்பறியாது திறக்கப் புகுந்தது தவறெனக் கருதிய உள்ளத்தினராய்த் திருமடத்தின் ஒருபால் துயில் கொண்டிருக்கும்போது சிவபெருமான் சைவ வேடத்துடன் அரசர் முன் தோன்றுகின்றார். "நாம் திருவாய்மூரில்[42] இருப்போம். எம்மைப் பின்தொடர்ந்து

---

42. வாய்மூர் : மயிலாடுதுறை - காரைக்குடி இருப் பூர்திவழியில் திருநெல்லிக்கா என்ற நிலையத்திலிருந்து 8 கல் தொலைவு. அப்பருக்கு வருமாறு இறைவன் கட்டளை

வருக'' எனக் கூறிப் போகின்றார். அவரைக் கண்ட பொழுதே அவர்பால் ஈர்க்கப்பெற்று தலைமேல் கூப்பிய கையினராய பேரார்வத்துடன் அவரைப் பின்தொடர் கின்றார். இங்ஙனம் சொல்வேந்தரை இட்டுச் சென்ற இறைவன், அண்மையில் இருப்பவர்போல் காட்டி நெடுந் தூரம் சென்று வழியிடையே மறைந்தருளுகின்றார்.

இந்நிலையில், திருமறைக்காட்டில் திருமடத்தில் தங்கி யிருந்த காழிப்பிள்ளையார் நாவுக்கரசரைக் காணாமல் ''அவர் திருவாய்மூருக்கு ஏகினார்'' என்று அடியார்கள் மூலம் அறிந்து அவரைத் தேடிக்கொண்டு திருவாய்மூரை நாடுகின்றார். வழியிடையே தம்மை இட்டுப் போந்த இறைவனைக் காணாது வருத்தமுற்ற நாவுக்கரசர், தம்மைத் தேடிவரும் ஞானக் கன்றைக் கண்டு மகிழ் கின்றார். ''திருவருட் குறிப்பினையறியாது கதவினைத் திறக்க முற்பட்ட என்னைப் போலின்றி தொண்டின் நிலைமை நன்கு செறியப்பாடி அடைப்பித்த ஞானக்கன்று இதோ வந்து நிற்கின்றார். வாய்மூர்ப் பெருமான் என்னை யன்றி இவரையும் மறைந்து நிற்கவல்லரோ?'' என வினவும் முறையில்,

**திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்**
**உறைப்புப் பாடி அடைப்பித்தார் உங்நின்றார்**
**மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்**
**பிழைகொள் செஞ்சடை யாரிவர் பித்தரே.** (5·50:8)

என்ற திருக்குறுந்தொகையைப் பாடிப் போற்றுகின்றார். அப்போது வாய்மூர் அடிகள் பிள்ளையாருக்கு எதிரில் தோன்றி ஆடல்காட்டி அருள் புரிகின்றார். பிள்ளையார் தாம் கண்ட அற்புதத் தெய்வக் காட்சியைத் 'தளரிள

---

யிட, அவர் சென்று தரிசித்ததை 5·50:1, 5·50:2 என்ற பாசுரங்கள் கூறும். சப்தவிடங்கங்களுள் இங்குக் கமல நடனம் புரியும் நீலவிடங்கர் உள்ளார்.

வளரென' (2-111) என்ற பதிகத்தால் போற்றித் தாம் கண்ட காட்சியை நாவேந்தருக்கும் காட்டி மகிழ்கின்றார்.

> தளிரிள வளரென வுமையாடத்
> தாளமிடவோர் கழல்வீசிக்
> கிளரிள மணியர வரையார்த்
> தாடும்வேடக் கிறிமையார்
> விளரிள முலையவர்க் கருள்நல்கி
> வெண்ணீறணிந்தோர் சென்னி
> வளரிள மதியமொ டிவராணீர்
> வாய்மூரடிகள் வருவாரே. (1)

என்பது இதன் முதற்பாடல். இப்பதிகத்துப் பாடல் தோறும் நண்பராகிய அப்பரடிகளை 'இவர்' எனச் சுட்டிக் காட்டி "இவரை ஆட்கொள்ளும் நீர்மையையுடைய திருவாய்மூர் இறைவன் இதோ வருகின்றார்" என்ற பொருளமைய "இவர் ஆளநீர் வாய்மூரடிகள் வருவாரே" எனப் பிள்ளையார் குறிப்பிட்டுப் போற்றியுள்ளமை கருதத் தக்கது. இதனால் பிள்ளையார் வாய்மூரடிகள் தமக்குக் காட்டிய ஆடற்கோலத்தை நாவுக்கரசர்க்குக் காட்டிய செய்தி நன்கு புலனாதல் காணலாம். இருபெருமக்களும் திருவாய்மூரில் சில நாட்கள் தங்கிப் பெருமானைப் போற்றி மீண்டும் திருமறைக்காட்டினை அடைந்து திருமடத்தில் அமர்கின்றனர்.

வேதவனத்தில் தங்கியிருக்கும்போது பிள்ளையார், 'பொங்கு வெண்மணற்' (2-91) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி மறைக்காட்டிறைவனைப் போற்று கின்றார். இதில்,

> நாகந்தான் கயிறாக
> நளிர்வரையதற்கு மத்தாகப்
> பாகந்தேவ ரோடசுரர்
> படுகட லளறெழக்கடைய

வேகநஞ்செழ ஆங்கேவெரு
　　வொடுமிரிந் தெங்குமோட
ஆகந்தன்னில் வைத்தமிர்த
　　மாக்குவித்தான் மறைக்காடே. (7)

என்பது ஏழாவது பாடல். அடுத்த பதிகம் "சிலைதனை நடுவிடை' (1.22) என்ற முதற் குறிப்பினையுடைய சந்தப் பதிகமாகும்.

கதிமலி களிறது பிளிறிட
　　உரிசெய்த அதிகுண னுயர்பசு
பதியதன் மிசைவரு பசுபதி
　　பலகலை யவைமுறை முறையுணர்
விதியறி தருநெறி யமர்முனி
　　கணனொடு மிகுதவ முயல்தரு
மதிநிபு ணர்கள்வழி படவளர்
　　மறைவன மமர்தரு பரமனே. (5)

என்பது இபபதிகத்தின் ஐந்தாவது பாடலாகும்.

'கற்பொலிசுரத்தினெரி' (3.76) என்ற முதற் குறிப் பினையுடையதும் வேதவனம்பற்றிய பதிகமாகும்; இதுவும் ஒருவகை சந்தப் பதிகமே. இதில்,

மாலைமதி வாளரவு கொன்றைமலர்
　　துன்றுசடை நின்று சுழலக்
காலையி லெழுந்தகதிர் தாரகை
　　மடங்கஅனல் ஆடு மரனூர்
சோலையின் மரங்கள்தொறும் மிண்டியின
　　வண்டுமது வுண்டி சைசெய
வேலையொலி சங்குதிரை வங்கசுற
　　வங்கொணரும் வேத வனமே. (6)

என்பது ஆறாம் பாடல். இங்ஙனம் வேதவனத்தில் தங்கி யிருக்கும் நாட்களில்தான் பாண்டி நாட்டிலிருந்து பிள்ளையாருக்கு அழைப்பு வருகின்றது. பிள்ளையாரும் மதுரைக்கு எழுந்தருள விரும்பி அப்பர் பெருமானுடன் கலந்து யோசித்து தாம் மட்டிலும் போக முடிவு செய் கின்றார்.

சம்பந்தர் திருவீழிமிழலையில் எழுந்தருளியிருக்கும் போது அவரைச் சேவிக்க விரும்பிய காழி நகர மக்கள் திருவீழிமிழலைக்கு வந்து ஞானக்கன்றைச் சேவித்து தங்களுடன் காழியம்பதிக்கு எழுந்தருளுமாறு வேண்டுகின்றனர். அவர்களது விருப்பத்தை யுணர்ந்த பிள்ளையார் ''இன்று கழித்து நாளை வீழிமிழலையான் அருளால் பெற்றுப் புறப் படுவோம்'' என்று கூறுகின்றார். அன்றிரவு திருக்கண் வளர்ந்திருக்கும்போது வீழிமிழலைப் பெருமான் பிள்ளையாருக்குக் கனவில் தோன்றி ''யாம் திருத்தோணி புரத்தில் எழுந்தருளியிருக்கும் வண்ணத்தை நீ இன்று மிழலையிற் காண்பாய்'' என அருள் செய்து மறைகின்றார். துயில் நீங்கி விழிப்புற்றெழுந்த சிவக்கன்று கைகளைத் தலைமேல் கூப்பி இறைஞ்சித் திருவீழிமிழலைத் திருக் கோயிலிற் புகுந்து விண்ணிழி விமானத்தின் கண்ணே திருத் தோணிபுரத் திருக்கோலத்தைக் கண்டு மகிழ்கின்றார். 'மையமரும் பூங்குழல்' (1.4) என்ற திருப்பதிகத்தைப் பாடிப் போற்றுகின்றார் வேதவாயர்.

கழல்மல்கு பந்தொ டம்மானைமுற்றில்
 கற்றவர் சிற்றிடைக் கன்னிமார்கள்
பொழில்மல்கு கிள்ளையைச் சொற்பயிற்றும்
 புகலி நிலாவிய புண்ணியனே
எழில்மலரோன் சிரமேந்தி உண்டோர்
 இன்புறுசெல்வ மிதென்கொல் சொல்லாய்
மிழலையுள் வேதியர் ஏத்திவாழ்த்த
 விண்ணிலி கோயில் விரும்பியதே. (2)

என்பது இப்பதிகத்தின் இரண்டாவது பாடல். இத் திருப்பதி கத்தின் பாடல் தோறும் ''புகலி நிலாவிய புண்ணியனே, மிழலை விண்ணிலி கோயில் விரும்பியது என்கொல்?'' என இறைவனை நோக்கி வினவிப் போற்றுகின்றார். ஒன்பதாம் திருப்பாடலில்,

' எறிமழுவோ டிளமான் கையின்றி
 யிருந்தபிரான் இதுஎன்கொல் சொல்லாய்? '

எனவரும் தொடரால் மானும் மழுவும் கைகொள்ளாது வீற்றிருந்தருளும் தோணியப்பரின் திருவுருவத்தை வீழி மிழலையில் கண்ட அற்புத நிகழ்ச்சியை நாமும் மனத் திரையில் கண்டு மகிழ்கின்றோம். ஞானக்கன்று வாழ்ந்த காலத்தில் அவரோடிருந்து இக்காட்சியைக் காணும் உணர் வினைப் பெற்று மகிழ்கின்றோம். இப்பதிகம் பன்முறை படித்து அநுபவிக்கக் கூடியது.

வாசிதீரக் காசுபெறுதல் : தம்மைக் காண வந்த காழி மறையவர்களிடம் தாம் தோணிபுரத்துப் பெருமானை மிழலையில் கண்ட செய்தியைக் கூறி அவர்களைச் சிரபுர மாநகர் திரும்புமாறு பணித்து அரசருடன் வீழிமிழலையில் தங்கியிருக்கின்றார். நாடோறும் பிள்ளையாரும் அரசும் திருவீழிமிழலை மேவிய செல்வம் பாதம் தொண்டர் களுடன் பரவும் நியதியை மேற் கொண்டிருக்கின்றார்; இக் காலத்தில் பல திருப்பதிகங்களைப் பாடி மிழலை மேவிய பெருமானைப் போற்றுகின்றார். இங்ஙனம் பாடியருளிய வற்றில் இரண்டு பதிகங்களைக் காண்போம்.

'தடநிலவிய' (1.20) என்ற முதற்குறிப்புடைய சந்தத் திருப்பதிகம் ஒன்று. இதில்,

அணிபெறு வடமர நிழலினி
　　லமர்வொடு மடியிணை இருவர்கள்
பணிதர அறநெறி மறையொடு
　　மருளிய பரனுறை விடமொளி
மணிபொரு வருமர கதநில
　　மலிபுன லணைதரு வயலணி
திணிபொழில் தருமண மதுநுக
　　ர றுபத முரல்திரு மிழலையே. (5)

என்பது ஐந்தாவது திருப்பாடல். அடுத்தபதிகம் 'இரும்பொன்' (1.82) என்ற முதற்குறிப்பினையுடையது.

மாலா யிரங்கொண்டு மலர்கண் ணிடஆழி
ஏலா வலயத்தோ டீந்தா னுறைகோயில்
சேலா கியபொய்கைச் செழுநீர்க் கமலங்கள்
மேலா லெரிகாட்டும் வீழி மிழலையே. (6)

என்பது ஆறாம் பாடல்.

இருபெரும் சமய குரவர்கள் திருவீழிமிழலையில் தங்கியிருந்த காலத்தில் மழையின்மையால் பஞ்சம் நேரிடுகின்றது. உயிர்களெல்லாம் பசியால் வருத்த முறுகின்றன. சிவனடியார்களை மட்டிலும் இப் பசி விட்டு விடுமா? சிவனடியார்கள் பசியால் அல்லல் படும் நிலையை சம்பந்தரும் நாவரசரும் கண்டு "கண்ணுதலோன் திருநீற்றுச் சார்வினோர்க்குங் கவலை வருமோ?" என்று சிந்தித்து சிவபெருமானின் திருக் கழல்களை நினைந்த வண்ணம் துயில்கின்றனர். இந்நிலையில் வீழிமிழலைப் பெருமான் அவர்கள் கனவிலும் தோன்றி, "நீங்கள் கால நிலைமையால் மனத்தில் வாட்டமடைந்துள்ளீர். ஆயினும் உங்களை வழிபடும் அடியார்களின் துயரினை நீக்கும் பொருட்டு இப்பஞ்சம் நீங்கும் அளவும் நாம் நாள்தோறும் இத் திருக்கோயிலின் கிழக்குப் பீடத்திலும் மேற்குப் பீடத்திலும் ஒவ்வொரு பொற்காசு நுமக்குத் தருகின்றோம். பஞ்சம் நீங்கியபின் அக் காசு நுமக்குக் கிடைக்காது" என்று சொல்லி மறைந்தருள்கின்றார். ஆளுடைய பிள்ளையார் துயில் உணர்ந்தெழுந்து இறைவனருளைப் போற்றித் திருநாவுக்கரசருடன் திருக்கோயிலிற் புகுந்தபோது கிழக்குப் பீடத்தில் பொற்காசு இருத்தலைக் காண்கின்றார். வியப்படைந்து திருவருளைத் தொழுகின்றார். அக்காசினை எடுத்துக்கொண்டு, "இறைவனடியாரானார் யாவரும் வந்து உண்பார்களாக" என்று இரண்டு வேளைகளிலும் பறைசாற்றி அறிவிக்கின்றார். அங்ஙனமே, அவர் திருமடத்தில் வரும் அடியார் அனைவருக்கும் திருவமுது அளிக்கப் பெறுகின்றது. நாவுக்கரசரும் மேற்குப் பீடத்தில் வைக்கப்பெறும் காசினை எடுத்து அவ்வாறே சிவனடியார்களுக்கு நாடோறும் திருவமுது அளித்து வருகின்றார்.

இவ்வாறு அமுது அளித்து வருங்கால் சம்பந்தர் மடத்தில் அடியார்கள் திருவமுது செய்தற்குக் காலம் தாழ்கின்றது. அஃதுணர்ந்த சண்பை வேந்தர் அமுதளிப்பதற்குத் தம்மிடத்தில் காலந் தாழ்ப்பதற்குரிய காரணம் என்னவெனக் கேட்கின்றார். திருவமுது ஆக்குவோர் பிள்ளையாரைப் பணிந்து தாங்கள் இறைவன்பாற் பெறும் படிக்காசைப் பெற்றுப் பண்டம் வாங்குவதற்குக் கொண்டு சென்றால் அதற்கு வட்டம் கேட்கின்றனர் என்றும், நாவுக்கரசர் பெற்ற காசை வட்டமின்றி ஏற்றுக்கொள்கின்றனர் என்றும் கூறி, இதுவே காலம் தாழ்த்தற்குக் காரணம் எனத் தெளிகின்றனர். இதனையுணர்ந்த பிள்ளையார், "அப்பர் பெருமான் கைத் தொண்டு செய்தலால் அவர் பெறும் படிக்காசு வட்டமின்றி ஏற்றுக் கொள்ளப் பெறுகின்றது" எனச் சிந்தித்து அறிகின்றார். "இனி வரும் நாட்களில் தருங் காசு வாசி தீரும்படி இறைவனைப் பாடிப் போற்றுவேன்" எனத் திருவுளங் கொள்ளுகின்றார். மறுநாட் காலையில் வீழிமிழலை இறைவனைப் பணிந்து "வாசி தீரவே" (1.92) என்று பதிகம் பாடிப் போற்றுகின்றார். இதில்,

> **வாசி தீரவே, காசு நல்குவீர்**
> **மாசின் மிழலையீர், ஏச லில்லையே. (1)**

என்பது முதல் பாடல். இதனால் வாசியில்லாத நல்ல காசு இவருக்கும் கிடைக்கின்றது. பண்டம் வாங்குவதற்குச் சென்று கொடுத்தபோது வணிகர்கள் "இக்காசு மிகவும் நன்று; வேண்டுவன தருவோம்" என்று கூறி உணவுப் பொருள்களை வழங்குகின்றனர். அன்று முதல் பிள்ளையார் திருமடத்திலும் அடியார்கள் உரிய காலத்தில் திருவமுது செய்கின்றனர்.

இங்ஙனம் இருவருடைய திருமடங்களிலும் எண்ணிறந்த சிவனடியார்கள் திருவமுது செய்து மகிழ்ந்துறையும் காலத்தில் எங்கும் மழை பெய்து வேளாண்மை செழிக்கின்றது. நெல் முதலிய தானியங்கள் நிறைய

விளைகின்றன. உயிர்களெல்லாம் துன்பம் நீங்கி இன்புறு கின்றன.

இன்னொரு செய்தியும் ஈண்டு அறிதற்பாலது. பிள்ளையார் "வாசி தீரவே காசு நல்குவீர்" என வெளிப் படையாக வேண்டுதலால் இப்பதிகம் பிள்ளையார் பெற்ற படிக்காசின் வட்டம் தீர்தற் பொருட்டு அருளிச் செய்யப் பெற்றதென்பது தெளிவாகும். இங்ஙனம் பாடிப் போற்றிய சண்பை வேந்தரின் வேண்டுகோட்கிணங்க வீழிமிழலைப் பெருமான் வாசி தீரக் காசு அளித்தருளினார் என்பது வரலாறு. நாவுக்கரசர் பெருமானும் தம் ஆருயிர் நண்பர் வேணுபுரத்தாரைப் பேசும் நிலையில்,

**பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு**
**வாடி வாட்டந் தவிர்ப்பா ரவரைப்போல** (5·50:7)

என்று வாய்மூர்ப் பதிகத்தில் புகழ்ந்து போற்றுதலால் இந்த வரலாற்றின் உண்மை தெளிவாகும். ஞானசம்பந்தர் பெற்ற காசு வாசியுளதாதற்கு அதன் பழமையே காரணம் என்பதை "பரிசில் பழங்காசு" என்ற தொடரால் வாகீசப் பெருமான் நன்கு விளக்கியுள்ளமை கண்டு தெளியலாம்.

இனி, திருவீழிமிழலையில் தங்கியிருந்த காலத்தில் பாடியுள்ள திருப்பதிகங்களைக் காண்போம். 'அலர்மகள்' (1·124) என்ற முதற் குறிப்புடையது ஒரு பதிகம். இதில்,

**புகழ்மகள் துணையினர் புரிகுழல் உமைதனை**
**இகழ்வுசெய் தவனுடை யெழின்மறை வழிவளர்**
**முகமது சிதைதர முனிவுசெய் தவன்மிகு**
**நிகழ்தரு மிழலையை நினையவ லவரே.** (5)

என்பது ஐந்தாவது பாடல். 'ஏரிசையும்' (1·132) என்ற முதற் குறிப்புடையது மற்றொரு பதிகம். இதில்,

**ஆறாடு சடைமுடியன் அனலாடு**
**மலர்க்கையன் இமயப் பாவை**
**கூறாடு திருவுருவன் கூத்தாடுங்**
**குணமுடையோன் குளிருங் கோயில்**

**சேறாடு செழுங்கழுநீர்த் தாதாடி**
**மதுவுண்டு சிவந்த வண்டு**
**வேறாய உருவாகிச் செவ்வழிநற்**
**பண்பாடும் மிழலை யாமே. (7)**

என்பது ஏழாம் பாடல். பாடல் தோறும் முற்பகுதி கோயிலைப் பற்றியும் பிற்பகுதி அக்கோயில் அமைந்திருக்கும் இயற்கைச் சூழ்நிலை பற்றியும் அற்புதமாக எடுத்துரைக்கின்றது. எல்லாப் பாடல்களையும் இசையேற்றிப் பாடி மகிழ்ந்து கவிதையநுபவத்துடன் பக்தியின் கொடுமுடியை எட்ட முயல வேண்டும். இப்பதிகம் '**புல்லைந்தும்**' (1·130) என்ற ஐயாற்றுப் பதிகத்தை நினைவுகூரச் செய்கின்றது. இரண்டு பதிகங்களும் முதல் திருமுறையில் அடுத்தடுத்து இருப்பதையும் கண்டு மகிழலாம்.

'**கேள்வியர் நாள்**' (3·9) என்ற முதற் குறிப்புடையது ஒரு பதிகம். இதில்,

**கலையிலங்கும் மழுகட்டங்**
**கண்டிகை குண்டலம்**
**விலையிலங்கும் மணிமாடத்தர்**
**வீழி மிழலையார்**
**தலையிலங்கும் பிறைதாழ்**
**வடம்சூலந் தமருகம்**
**அலையிலங்கு புனலேற்ற**
**வர்க்கும் அடியார்க்குமே. (4)**

என்பது நான்காவது பாடல். '**சீர்மருவு**' (3·80) என்ற முதற் குறிப்புடைய பதிகத்தில்,

**செந்தமிழர் தெய்வமறை நாவர்செழு**
**நற்கலை தெரிந்த வரோ (டு)**
**அந்தமில் குணத்தவர்க ளர்ச்சனைகள்**
**செய்யஅமர் கின்ற அரனூர்**

கொந்தலர் பொழிற்பழன வேலிகுளிர்
தண்புனல் வளம்பெ ருகவே
வெந்தறல் விளங்கிவளர் வேதியர்
விரும்புவதி வீழி நகரே. (4)

*என்பது நான்காவது பாடல். சந்த நயம் கொழிக்கும் இப் பதிகப் பாடல்களனைத்தும் பன்முறை படித்து அநுபவிக்கத் தக்கவை.*

'மட்டொளி' (3·85) *என்ற முதற் குறிப்புடைய பதிகம் வீழிமிழலை பற்றியது.*

பொன்னன புரிதரு சடையினர்
பொடியணி வடிவினர்
உன்னினர் வினையவை களைதலை
மருவிய ஒருவனார்
தென்னென விசைமுரல் சரிதையர்
திகழ்தரு மார்பினில்
மின்னென மிளிர்வதொ ரரவினர்
பதிவிழி மிழலையே. (6)

*என்பது இப்பதிகத்தின் ஆறாவது மலர். சந்தம் கொழிக்கும் பாடல் இது. 'வெண்மதி' (3·98) என்ற முதற் குறிப் புடையது இன்னொரு பதிகம். இதில்,*

வேல்நிகர் கண்ணியர் மிழலை யுளீர்நல
பால்நிக ருருவுடை யீரே
பால்நிக ருருவுடை யீரும துடனுமை
தான்மிக வுறைவது தவமே. (5)

*என்பது ஐந்தாவது பாடல்.*

'வேலினேர்தரு' (3·111) *என்ற முதற் குறிப்புடையது ஒரு பதிகம். இதில்,*

வென்றி சேர்கொடி மூடுமாமதில்
மிழலைமாநகர் மேவி நாள்தொறும்
நின்ற ஆதிதன் னடிநினைப்பவர்
துன்பமொன் றிலரே. (4)

என்பது நான்காவது பாடல். அடுத்த பதிகம் 'துன்று கொன்றை' (3·116) என்ற முதற் குறிப்புடையது.

கட்டுகின்ற கழல்நாகமே
காய்ந்ததும் மதனனாகமே
இட்டமாவ திசைபாடலே
இசைந்தநூலி னமர்பாடலே
கொட்டுவான் முழவம்வாணனே
குலாயசீர் மிழலைவாணனே
நட்டமாடுவது சந்தியே
நானுய்தற் கிரவுசந்தியே. (3)

என்பது இப்பதிகத்தின் மூன்றாவது திருப்பாடல். 'புள்ளித்தோ' (3·119) என்ற முதற்குறிப்புடைய பதிகத்தில்,

நிருத்தன் ஆறங்கன் நீற்றன்நான் மறையன்
நீலமார் மிடற்றன் நெற்றிக்கண்
ஒருத்தன் மற்றெல்லா வுயிர்கட்கு முயிராய்
யுளனிலன் கேடிலி உமைகோன்
திருத்தமாய் நாளும் ஆடும் நீர்ப்பொய்கை
சிறியவ ரறிவினின் மிக்க
விருத்தரை யடிவீழ்ந் திடம்புகும் வீழி
மிழலை யானென வினைகெடுமே. (4)

என்பது நான்காவது பாடல். இங்ஙனம் தெய்வத் தொண்டும் சமயப் பணியும் கலந்த தமிழ்த் தொண்டில் காலத்தைப் போக்குகின்றார் பிள்ளையார். இறைவன் அருள் இல்லாவிடில் இங்ஙனம் பல்வேறு வகைப் பாடல்களை—அதுவும் பதினாறு வயதுக்குள்—பாட முடியாது என்பதை நாம் உணர முடிகின்றது.

**நம்பியாரூரர் :** சில ஆண்டுகட்குப் பின்னர்—இவர்கள் இருவரும் சிவப்பேறு அடைந்த பிறகு—நம்பியாரூரர் இத் தலத்திற்கு வருகின்றார். சீகாழிப் பதியில் உமையம்மை யுடன் தோணிமீது வீற்றிருந்தருளும் பெருமானைக் காண

விரும்பிய பிள்ளையாரைக் கழுமல நகருக்குப் போக விடாமல் தோணிபுரத் திருக்கோலத்தை வீழிமிழலை விண்ணிழி விமானத்திலேயே காட்டியருளிப் பிள்ளையாரையும் நாவின் வேந்தரையும் வீழிமிழலையிலேயே தங்கப் பணித்ததும், பஞ்சம் வந்தபொழுது அவ்விரு பெருமக்களுக்கும் நாடோறும் ஒவ்வொரு படிக்காசு நல்கியருளி சிவனடியார்கட்கு உணவு கிடைக்கச் செய்ததுமான வீழிமிழலை நாதனின் பேரருட் செயலைக் கேட்டு மகிழ்கின்றார். ''வீழிமிழலை நாதனே, நல்லிசை ஞானசம்பந்தரும் நாவினுக்கரையரும் பாடிய தேனொழுகும் தமிழ்ப் பாடல்களைக் கேட்கும் விருப்பால் அவர்கட்குப் படிக்காசு தந்தருளினீர். அவர்கள் பாடியருளிய தமிழ் மாலைகளை சொல்லியேத்தும் தொண்டினை மேற்கொண்டவன் அடியேன். ஆகையால் அடியேனுக்கும் அருளுதல் வேண்டும்'' என்று வேண்டும் முறையில்,

பரந்த பாரிட மூரிடைப்பலி
 பற்றிப் பார்த்துணுஞ் சுற்றமாயினீர்
தெரிந்த நான்மறை யோர்க்கிட
 மாய திருமிழலை
இருந்துநீர் தமிழோ டிசைகேட்கும்
 இச்சையால் காசுநித்தல் நல்கினீர்
அருந்தண் வீழி கொண்டீர்
 அடியேற்கும் அருளுதிரே. (7.88:8)

என்று வீழிமிழலைப் பெருமானைப் பாடிப் போற்றியுள்ளதை நாம் நினைந்து பார்க்கின்றோம். திருவீழிமிழலை முகாமை நிறைவு செய்து கொண்டு திருத்தலப் பயணத்தை மீண்டும் தொடருகின்றார் காழிப்பிள்ளையார்.

# 10. மதுரைமாநகர் அற்புதங்கள்

வரலாற்றுச் சிறப்பும் இலக்கியச் சிறப்பும் மிக்க மதுரை மாநகர் கூன்பாண்டியன் காலத்தில் சமண சமயப் பிடிப்பில் சிக்கிக் கொண்டுள்ளது. பாண்டி நாட்டிலுள்ள ஆனை மலை, பசுமலை, நாகமலை ஆகிய மலைகளைத் தம் இருப்பிடங்களாகக் கொண்டு வாழ்கின்றனர் சமண முனிவர்கள். இம்மூன்றும் பலம் பொருந்திய சமணர் கோட்டைகள். சமண சமயத் துறவிகள் தம் சமயத்தைப் பரப்புவதுடன் பிற சமயத்தவர்களை இகழ்ந்தும் வரு கின்றனர். பொதுவாக இவர்கள் அரசர்களை எப்படியோ தம் கைக்குள் போட்டுக் கொண்டு தம் கைவரிசைகளைக் காட்டுகின்றனர். பல்லவ வேந்தனைத் தம் கைக்குள் போட்டுக் கொண்டு நாவுக்கரசர் பெருமானுக்கு இழைத்த கொடுமைகள் எத்தனை? அம்மம்ம! அவற்றை நினைக்கும் போதே நம் உடல் நடுக்கம் கொள்கின்றது. கூன் பாண்டியன் (நின்றசீர்நெடுமாறன்) சமண சமயத்தவர் சூழ்ச்சியிற்பட்டுத் தனக்குரிய சைவ சமயத்தைத் துறந்து சமணனாகி விடுகின்றான். பாண்டி நாட்டுக் குடிமக்களில் பலரும் சமண சமயத்தை மேற்கொள்ளுகின்றனர். அரசன் எவ்வழியோ குடிமக்களும் அவ்வழி தானே நடப்பார்கள்? இன்றைய கட்சி அரசியலிலும் இதைத் தானே நாம் காண் கின்றோம்? சனநாயக ஆட்சியில் பொதுமக்களில் சிலர் ஆட்சியாளர்களின் பாட்டுக்குத் தாளம் போட்டு, அல்லது அதற்குத் தக சீறியாழை வாசித்துப் பல சலுகைகளையும்

பதவிகளையும் பெறுவது நமக்குத் தெரியும் அன்றாட நிகழ்ச்சிகளன்றோ? நாட்டிலுள்ள திருக்கோயில்களில் பல பாழிகளாகவும் பள்ளிகளாகவும் மாற்றப்பெறுகின்றன.

ஆனால் பாண்டிமாதேவியராகிய மங்கையர்க் கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் தமக்குரிய சிவ நெறியை நெகிழவிடாது கடைப்பிடித்து ஒழுகுகின்றனர். இந்த இருவரும் ஞானசம்பந்தப் பெருமான் திருமறைக் காட்டில் எழுந்தருளியிருத்தலைக் கேள்வியுற்றுப் பிள்ளையாரை வணங்கி வரும்படித் தம் பரிசனங்களை அனுப்பி வைக்கின்றனர். வந்தவர்கள் பிள்ளையாரைப் பணிந்து தம் நாட்டின் நிலைமையையும் மங்கையர்க் கரசியார் குலச்சிறையார் ஆகிய இவர்தம் அன்பு கனிந்த வணக்கத்தையும் தெரிவிக்கின்றனர். உடனிருந்த சிவனேசச் செல்வர்கள் பாண்டி நாட்டிற்கு எழுந்தருளிச் சிவநெறியைப் பரப்பவும் திருநீற்றின் சிறப்பை மக்கள் உணரும்படிச் செய்யவும் பிள்ளையாரை வேண்டுகின்றனர்.

பிள்ளையார் அப்பர் பெருமானை தனியே அழைத்துக் கொண்டு திருமறைக்காட்டு திருக்கோயிலினுட் சென்று இறைவனைப் பணிந்து தாம் மதுரைக்குச் செல்ல வேண்டு மென்கின்ற பெருவிருப்பத்தை நாவுக்கரசரிடம் தெரிவிக் கின்றார். இதனை யுணர்ந்த அப்பர் பெருமான் பிள்ளையாரை நோக்கி, "அந்த அமணர்கள் செய்யும் வஞ்சனைக்கு ஓர் அளவே இல்லை என்பதை நான் அநுபவத்தில் கண்டவன். தவிர, ஞாயிறு முதலிய கோள் களும் தற்சமயம் நன்னிலையில் இல்லை. ஆகவே இப்பொழுது பாண்டி நாட்டிற்கு எழுந்தருள உடன்படுவது தகாது" என்று கூறித் தடுத்தருள்கின்றார். இதனைக் கேட்ட பிள்ளையார், "நாம் போற்றுவது கயிலை நாதன் திருவடிகளாதலால் நம்பால் எத்தகைய தீங்கும் நேரிடாது" என்று வற்புறுத்து முகமாக[1] "வேயுறுதோளிபங்கன்" (2.85)

---

1. பெ. பு: ஞானசம்பந்த. 615, 616.

என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் அருளிச் செய்கின்றார்.

> வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
> மிகநல்ல வீணை தடவி
> மாசறு திங்கள்கங்கை முடிமே லணிந்தென்
> உளமே புகுந்த அதனால்
> ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியா ழன்வெள்ளி
> சனிபாம் பிரண்டும் உடனே
> ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
> அடியா ரவர்க்கு மிகவே. (1)

என்பது இப்பதிகத்தின் முதற் பாடல். "கோளும் நாளும் தீயவேனும் இறைவனடியார்களுக்கு நன்காம்" எனக் கூறியருளுகின்றார். இத் திருப்பதிக முழுவதையும் செவிமடுத்து மகிழ்ந்த[2] அப்பர் பெருமான், மதுரைப் பயணத்திற்கு உடன்படுகின்றார்; தாமும் அவருடன் புறப் படத் துணிகின்றார். இதனையுணர்ந்த சண்பைவேந்தர், "அப்பரே, நீர் இச்சோழ நாட்டிலேயே எழுந்தருளி இறைவனைத் தொழுதிருப்பீராக" எனக் கை கூப்பி வணங்கித் தடுக்கின்றார்; அப்பரும் பிள்ளையாரின் விருப்பத்திற்கிணங்கித் தமது பயணத்தை நிறுத்திக் கொள்கின்றார்.

'வேயுறு தோளிபங்கன்'

என்ற இத்தேவாரப் பதிகம் கோள்களாலும் (கிரகங்களாலும்) நாள்களாலும் (நட்சத்திரங்கள்) உலகியலில் நேரும் துன்பங்கள் சிவனடியார்களைச் சார்ந்து வருத்தாத

---

2. நம் வாழ்க்கையில் நாளும் கோளும் நன்னிலையில் இல்லை என்பதை அறிய நேரும்போது இப்பதிகத்தைக் காலையிலும் மாலையிலும் ஓதி உளங்கரைதல் நன்று என்பது என் அநுபவம்.

படி ஆளுடைய பிள்ளையாரால் அருளிச் செய்யப் பெற்ற தென்பதை,

> **தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல்துன்னி**
> **வளர்செம்பொ னெங்கு நிகழ**
> **நான்முக னாதியாய் பிரமா புரத்து**
> **மறைஞான ஞான முனிவன்**
> **தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து**
> **நலியாத வண்ணம் உரைசெய்**
> **ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்**
> **அரசாள்வர் ஆணை நமதே. (11)**

என வரும் இறுதிப் பாடலாகிய திருக்கடைக் காப்பினால் இனிது புலனாகும். இங்ஙனம் உறுதிப் பொருளைத் தம் மேல் ஆணையிட்டு அறிவிக்கும் உரவோர் பிள்ளையார் ஆதலின் இவரை '**ஆணை நமதென்ற பெருமான்**' என்ற பெயரால் நம் முன்னோர் கல் வெட்டுகளிலும் குறிப்பிட்டுப் போற்றியுள்ளனர்.

நாவுக்கரசர்பால் நன்முறையில் விடைபெற்ற பிள்ளையார் அடியார்கள் புடைசூழச் சிவிகையிலமர்ந்து தமது மதுரைத் திருப்பயணத்தைத் தொடங்குகின்றார். இப்பயணத்தில் அகத்தியான் பள்ளி, கோடிக் குழகர் முதலிய சில சோணாட்டுத் தலங்களை வழிபட்டுக் கொண்டு தென் மேற்குத் திசையை நோக்கிச் செல்லுகின்றார்; தென் பாண்டி நன்னாட்டை அடைகின்றார். திருக்கொடுங் குன்றத்துக் குழகனைச் (பிரான்மலை) சேவித்து மதுரை நகரின் மருங்கே வந்தணைகின்றார். காழிப் பிள்ளையாரின் வருகையை யறிந்து மகிழ்வுற்ற மங்கையர்க்கரசியார், பிள்ளையாரை எதிர்கொண்டழைக்கும்படி அமைச்சர் குலச்சிறையாரை அனுப்பி வைக்கின்றார். அமைச்சரும் மதுரை நகரின் எல்லைப் புறத்தே சென்று ஆளுடைய

பிள்ளையாரைக்[3] கண்டு நிலமிசைப் பணிந்து வீழ்கின்றார். பிள்ளையாரும் சிவிகையினின்றும் இறங்கி அவரைத் தமது கைகளால் பற்றி எடுத்து, "செம்பியர் குலமகள் மங்கையர்க் கரசியாருக்கும், தூய நெஞ்சமுடைய அமைச்சராகிய உமக்கும் சிவபெருமானது திருவருள் பெருகட்டும்" என வாழ்த்தி நலம்பல வினவுகின்றார். இதனைக் கேட்ட குலச்சிறையார் "சென்ற காலத்தில் நன்றாக இருந்தோம்; எதிர்காலத்தில் பெருஞ்சிறப்பு எய்த இருக்கின்றோம்; தேவரீர் தென் தமிழ்நாட்டிற்கு எழுந்தருளியதால் பெரும் பேறு பெற்றோம். இதனால் எக்காலத்தும் திருவருள் பெற்றவர்களாகின்றோம். நன்மையற்ற நெறியில் அழுந்திக் கிடக்கும் தென்னாடும் நல்ல தமிழ் வேந்தனாகிய எங்கள் பாண்டியனும் வெண்ணீற்றினால் அடையும் நன்மை களனைத்தையும் பெறப் போகின்றோம். அரசமாதேவி தாங்கள் இவண் எழுந்தருளியதை அறிந்து அடியேனைத் தங்கள் திருமுன் அனுப்பி வைத்தார்கள்" என அடக்கத் துடன் கூறுகின்றார்.

பிள்ளையார் மதுரையை நெருங்கியவுடன் திருவால வாய்[4] இருக்குமிடத்தை உசாவுகின்றார். அவண் நின்ற

---

3. ஆளுடைய பிள்ளையார் — ஞானசம்பந்தர்; ஆளுடைய அடிகள் — அப்பர் பெருமான்; ஆளுடைய நம்பி — நம்பியாரூரர் (சுந்தரர்).

4. ஆலவாய் (மதுரை): மதுரை இருப்பூர்தி நிலயத்தி லிருந்து 1 கல் தொலைவு. பாண்டி நாட்டின் தலைநகர். மூன்று தமிழ்ச் சங்கங்கள் திகழ்ந்த தலம். சொக்கலிங்கப் பெருமான் 64 திருவிளையாடல்கள் புரிந்த இடம். அங்கயற் கண்ணியார் அவதாரம் செய்து பாண்டியன் திருமகளாக வளர்க்கப்பெற்றுச் சோமசுந்தரராக வந்த சிவபெருமா னைத் திருமணம் செய்துகொண்டு அரசு புரிந்த பழம்பதி. மூர்த்தி நாயனார், நின்றசீர் நெடுமாற நாயனார், மங்கையர்க்கரசியார், குலச்சிறை நாயனார் முதலியோர்

அடியார்கள் கோபுரத்தைச் சுட்டிக் காட்டி அதுவே திருவாலவாய் என்று கூறுகின்றனர். கோபுரத்தைக் கண்ணுற்ற பிள்ளையார் நிறைந்த பேரன்பினால் நில மிசைப் பணிந்து 'அன்பராயினார் பரவும் ஆலவாயாவதும் இதுவே' என வியந்து 'மங்கையர்க்கரசி' (3-120) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ் மாலையால் நிலமிசை வீழ்ந்து ஆலவாயைப் போற்றுகின்றார்.

**மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை**
**வரிவளைக் கைம்மட மானி**
**பங்கயச் செல்வி பாண்டிமா தேவி**
**பணிசெய்து நாள்தொறும் பரவப்**
**பொங்கழல் உருவன் பூத நாயகனால்**
**வேதமும் பொருள்களும் அருளி**
**அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த**
**ஆலவா யாவதும் இதுவே. (1)**

என்பது இம் மாலையின் முதல் மலர். இப் பதிகம் மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் ஆகிய இருவரது திருத் தொண்டினையும் திருவாலவாய்ப் பெருமான் ஏற்றருளிய திறத்தைச் செப்புகின்றது. பின்பு குலச்சிறையாருடன் திருவாலவாய்த் திருக்கோயிலை வலங்கொண்டு இறைவன் திருமுன் நின்று 'நீலமாமிடற்றாலவாயிலான்' (1-94) என்ற திரு இருக்குக் குறள் செந்தமிழ் மாலை பாடிச் சேவிக் கின்றார். இதில்,

**நீல மாமிடற்**
**றால வாயினான்**
**பால தாயினார்**
**ஞால மாள்வரே. (1)**

---

வரலாற்றுத் தொடர்புடைய வளநகர். இத்தகைய பல நிகழ்ச்சிகள் நடைபெற்றத் தெய்வத் திருத்தலம். மூவரும் பாடிய சிறப்புடையது.

அண்ண லாலவாய்
நண்ணி னான்றனை
எண்ணி யேதொழத்
திண்ணம் இன்பமே. (6)

என்பது முதல், ஆறாவது வாடா நறு மலர்கள். பிள்ளையார் ஆலவாயானைத் தொழுதமுறையை,

அங்கம் எட்டினும் ஐந்தினும்
அளவின்றி வணங்கிப்
பொங்கு காதலின் மெய்ம்மயிர்ப்
புளகமும் பொழியும்
செங்கண் நீர்தரும் அருவியும்
திகழ்திரு மேனி
எங்கு மாகிநின் றேத்தினார்
புகலியர் இறைவர்.[5]

என்ற பாடலால் அழகுறக் காட்டுவர் சேக்கிழாரடிகள்.

இந்நிலையில் ஆலவாய் இறைவனைச் சேவிப்பதற்கு மங்கையர்க்கரசியார் திருக்கோயிலுக்கு வருகின்றார். இறைவனைச் சேவித்துக் கோயிலின் முன்றிலில் அணைந்த பிள்ளையாரைக் கண்டு அவருடைய திருவடித் தாமரைகளில் வீழ்ந்து பணிகின்றார். பிள்ளையார் தேவியை எழுதரிய மலர்க்கையால் எடுக்கின்றார். அரச மாதேவியும் கண்களில் நீர் மல்கப் பவளவாய் குளறி "யானும் என் பதியும் செய்த தவம் என்கொல்!" என்கின்றார். "அம்மையீர், புறச்சமயச் சூழ்நிலையில் இருந்தபோதிலும் அரனடி மறவாது சிவத்தொண்டு புரியும் உம்மைக் காணும் பொருட்டே யாம் இவண் போந்தனம்" என்று கூறி பாண்டிமாதேவிக்கு விடை கொடுக்கின்றார் சிவக்கன்று. திருக்கோயிலில் தங்கித் திருத்தொண்டு புரியும் அடியார் களும் பிள்ளையாரை அணுகி, "புறச்சமய இருள் கெடத் தாங்கள் மல்கு செல்வ மதுரையில் எழுந்தருள்வதற்கு

5. பெ. பு: ஞானசம்பந். 666.

அடியேங்கள் அளவிறந்த தவமுடையேம்'' என்று கூறிப் போற்றுகின்றனர். இவர்களுக்கு அருளுரை வழங்கி திருக் கோயிற் புறம் போந்து குலச்சிறையார் ஏற்பாடு செய்த திருமடத்தில் அடியார்களுடன் எழுந்தருளுகின்றார். அரச மாதேவியின் ஆணையின்படி குலச்சிறையார் பிள்ளை யார்க்கும் அவருடன் போந்த அடியார்கட்கும் நல்விருந்து அளித்து மகிழ்கின்றார்.

**கண்டு முட்டு — கேட்டு முட்டு :** பகற்பொழுது கழிந்து இராப்பொழுது வந்துறுகின்றது. சம்பந்தப் பெருமானுடன் வந்த அடியார்கள் பாடும் திருப்பதிகங்களின் இன்னிசை முழக்கம் மதுரை மாநகரெங்கும் பரவுகின்றது. இது சமணர் களின் அடிவயிற்றைக் கலக்குகின்றது. இது பொறாத சமணர்கள் குழுவாக அரசனைச் சந்தித்து ''மதுரையில் சைவ மறையாளர்கள் கூட்டமாக வந்திருத்தலைக் கண்ட மையால் உண்ணாநிலையை அடைந்தோம்'' என்பதை அறிவிக்கும் முறையில் 'யாங்கள் கண்டு முட்டு' என்கின் றனர். ''இத் துன்பச் செய்தியைக் கேட்டமையால் யானும் உண்ணா நிலைமையினேன் ஆயினேன்'' என்பான் 'யானும் கேட்டு முட்டு' என்கின்றான்.

**திருமடத்தில் தீ :** காழிப்பிள்ளையாரின் வருகையைக் கேள்வியுற்ற மன்னன் சினமுறுகின்றான். ''சிவனடியார்கள் இங்கு வந்திருப்பதன் நோக்கம் யாது?'' என வினவு கின்றான். ''சோழநாட்டில் சீகாழிப்பதியில் பிறந்த பார்ப்பனச் சிறுவன் சிவனிடத்தில் ஞானம் பெற்றதாகச் சொல்லிக்கொண்டு முத்துச்சிவிகையில் ஏறியமர்ந்து எங்களை வாதில் வெல்லும் நோக்குடன் அடியார்களோடு இங்கு வந்துள்ளான்'' என்று மறுமொழி தருகின்றனர் சமணர்கள். ''இதற்கு நாம் என்ன செய்யலாம்?'' என்று அவர்களை யோசனை கேட்கின்றான் மதிகெட்ட மன்னன். ''அவ்வந்தணச் சிறுவன் தங்கியிருக்கும் மடத்தில் மந்திர விச்சையினால் தீப்பற்றும்படி செய்வோமானால் அவன் நகரைவிட்டு ஓடிவிடுவான்'' என்கின்றனர். ''ஆவதென்

றிதுவேயாகில் அதனையே விரைந்து செய்யப் போமின்'' எனக் கூறி அவர்கட்கு விடையும் தருகின்றான்.

மிக்க கவலையுடன் பள்ளியறைக்குச் செல்லுகின்றான் பாண்டியன். அப்போது அரசமாதேவி அங்கு வருகின்றாள். சம்பந்தர் சமணர்களுடன் வாதம் செய்யும் பொருட்டு மதுரை வந்த செய்திபற்றி இருவரும் உரையாடுகின்றனர். ''இதுதான் எனக்குக் கவலை தருகின்றது'' என்கின்றான் அரசன். அரசமாதேவியும் ''வென்றவர் பக்கல் தாங்கள் சேர்வது உறுதியாகும், இதற்குக் கவலைப்படவேண்டிய தில்லையே'' என்கின்றாள். பின்னர் அரசமாதேவியார் மகிழ்ச்சியுற்று அறையைவிட்டு வெளியே போதர, குலச்சிறையார் அங்கு வந்தெய்துகின்றார். அரசமாதேவியார் இதனைக் குலச்சிறையாருக்கு விவரமாக உரைக்கின்றார்.

இந்நிலை இவ்வாறாக, அரசனது ஆதரவு பெற்றுச் சென்ற சமணர்கள் தங்கள் மந்திரவன்மையால் சம்பந்தர் தங்கியிருந்த திருமடத்திற்கு தீ மூட்ட முனைகின்றனர். ஆதிமந்திரமாகிய திரு ஐந்தெழுத்தினை ஓதும் சிவனடியார்கள் தங்கிய திருமடத்தில் சமணர்களுடைய மந்திரங்கள் யாவும் பயன்படா தொழிகின்றன. வேந்தன் ஈதறியின் தமது மதிப்பும் ஒழியும், தமது செல்வாக்கும் தேய்ந்தொழியும் என்ற கவலையால் சமணர்கள் இரவில் மறைந்து சென்று பிள்ளையார் தங்கியிருந்த திருமடத்தில் தாமே தீ மூட்டுகின்றனர். மடத்தின் ஒரு பகுதி தீப்பற்றி எரிவதைக் கண்டு அஞ்சிய சிவனடியார்கள் விரைந்து தீயினை அணைத்து பிள்ளையார்முன் சென்று செய்தி கூறி முறையிடுகின்றனர். இதனை அறிந்த பிள்ளையார் ''மாதவர் துயிலும் மடத்தில் பாவிகள் இங்ஙனம் பழுது செய்தல் முறையாகுமோ? என்பொருட்டு இத் தீங்கினை அவர்கள் செய்யினும், இஃது இறைவனடியார்களைப் பற்றவல்லதோ? இஃது அரசன் முறைசெய்து காப்பாற்றாமையால் நேர்ந்ததாகும்'' என்று சிந்திக்கின்றார்.

**மடையர் இட்ட தீ மன்னனின் வெப்பு நோயாதல்:** பிள்ளையாரின் சிந்தனை முதலில் அச்சத்தைத் தோற்றுவிக்கின்றது; பின்னர் சிறிது சினத்தையும் விளைவிக்கின்றது. 'சிவனடியார்கள் வாழும் மடத்து அமணர்கள் இட்ட தீத்தழல் பையவே சென்று பாண்டியனைச் சார்வதாகுக' என்று ஏவும் கருத்துடன் '**செய்யனே திருவாலவாய்**' (3.51) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடியருளுகின்றார்.

> **செய்ய னேதிரு ஆலவாய் மேவிய**
> **ஐய னேஅஞ்ச லென்றருள் செய்யெனைப்**
> **பொய்ய ராமம ணர்கொளு வுஞ்சுடர்**
> **பைய வேசென்று பாண்டியற் காகவே.** (1)

என்பது முதற் பாடல்.

பாண்டிய மாதேவியின் மங்கல நாணைப் பாதுகாத்தற் பொருட்டும் அமைச்சர் குலச்சிறையார் மன்னன்பால் வைத்த அன்பினைக் கருதியும், பாண்டியன்பால் அபராதம் உறுதலை எண்ணியும், அவன் திரும்பவும் சிவநெறியிற் சேர்தற்குரிய நற்பேற்றினை நினைந்தும் பிள்ளையார் தீப்பிணியைப் "பையவே செய்க" எனப் பணித்தருளினதாகக் கூறுவர் சேக்கிழார் பெருமான்.[6] "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறை மொழி"யாதலால் அவர்கள் கருதிய வண்ணம் நன்மையும் தீமையும் தரவல்லதாதலால், மறை முனிவராகிய பிள்ளையார் "பையவே சென்று பாண்டியற்காகவே" என்று திருப்பதிகத்தில் பணித்தவாறு 'விரிந்த வெந்தழல் வெம்மை போய்த்' தென்னவனை மெல்லத் தீண்டி வெப்பு நோயாக மாறுகின்றது.

**பல்வேறு சிகிச்சைகள்:** பொழுது புலர்ந்ததும் பிள்ளையார் திருமடத்தில் சமணர் இரவில் தீயிட்ட செய்தி நகரெங்கும் பரவுகின்றது. இதனைச் செவிமடுத்த அரசமா

---

6. பெ.பு. ஞானசம்பந். 705.

தேவியாரும் குலச் சிறையாரும் மனநடுக்க முறுகின்றனர். "இக் கொடியோர் வாழும் நாட்டில் பிள்ளையாரைத் தருவித்த நாம் மாய்வதே நன்று" எனத் துணிகின்றனர், பின்னர் திருமடத்திலே தீங்கொன்றும் நேரவில்லை என்ற செய்தியறிந்து ஒருவாறு ஆறுதல் பெறுகின்றனர். இந்நிலையில் அரசனை வெப்புநோய் பற்றி வருத்தும் செய்தியைக் காவலாளர்கள் மூலம் அறிந்து உளநடுக்க முற்று மன்னனை அடைகின்றனர். மருத்துவர்கள் தாம் கற்ற பல கலைகளால் நோயைத் தணிக்க முயன்றும் அவர்கள் முயற்சி பயன்படவில்லை. தங்கள் புரவலனான மன்னன் சுரநோயால் வருந்துவதை அறிந்த அமணர்கள் அரண்மனையை அடைந்து அவனது நோய்க்குக் காரணம் தமது தீச்செயலே என்பதை உணராமல் நோய் தணிக்கும் பல்வேறு மந்திரங்களைச் சொல்லி மயிற்பீலியால் தடவு கின்றனர். தம் கையிலுள்ள குண்டிகை நீரைத் தெளிக் கின்றனர். இவற்றால் மன்னனது நோய் முன்னையினும் பன்மடங்கு அதிகரிக்கின்றது. இதனைக் கண்டு வருத்த முற்ற மன்னன் "நீங்கள் ஒருவரும் இங்கு இருமருங்கும் இராது ஏகுமின்" என வெகுண்டு கூறி உணர்விழந்து சோர்கின்றான்.

மன்னனின் சோர்வு மங்கையர்க்கரசியார்க்கும் மந்திரி யார்க்கும் அச்சத்தை விளைவிக்கின்றது. அமைச்சரை நோக்கி அரசியார், "நேற்றிரவு பிள்ளையாருக்கு அமணர்கள் இழைத்த தீமைதான் இங்ஙனம் விளைந் ததோ?" என வருந்திக் கூறுகின்றார். குலச் சிறையார் கொற்றவனைப் பணிந்து "பிள்ளையாருக்கு அருகர்கள் செய்த தீமையே இவ்வாறு வந்து மூண்டது. பிள்ளையாரை அழைத்தால் இந்நோய் தீரும்" எனச் செப்புகின்றார். ஞானசம்பந்தர் என்னும் திருநாமம் தன் செவியகத்துப் புக்க அளவிலே அயர்வு நீங்கி உணர்வு பெறுகின்றான் பாண்டியன். அமணர்கள் இழைத்த தீச்செயல்களே தனது நோய்க்கு ஏதுவாயின என எண்ணுகின்றான்.

இறையருள் பாண்டியன் பக்கம் பாயத் தொடங்குகின்றது. "ஞானக் கன்றின் அருளால் இந்நோய் அகலுமேல் மகிழ்வேன்; யானுற்ற பிணியைத் தீர்த்து வென்றவர் பக்கமே சார்தற்குரியேன். அவ்வாறாயின் அவரை அழைப் பீராக" என்று பணிக்கின்றான் பாண்டியன்.

அரசியாரும் அமைச்சரும் மன்னனுக்குத் திருவருட்பேறு உண்டாதலை யுணர்ந்து மகிழ்ச்சி அடைகின்றனர். அரசியார் அணிமணிச் சிவிகை ஏறி அமைச்சர் முன்னே செல்ல பிள்ளையார் திருமடத்தை அடைகின்றனர். செவ்வி யறிந்து காழிவேந்தரைக் காண்கின்றனர். இதனைச் சேக்கிழார் பெருமான்,

" ஞானத்தின் திருவுருவை
நான்மறையின் தனித்துணையை,
வானத்தின் மிசையன்றி
மண்ணின்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச்
செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக்
கண்களிப்பக் கண்டார்கள்.[7]

என்று காட்டுவார். நாமும் அரசியாருடனும் அமைச்ச ருடனும் பிள்ளையாரைக் காண்பது போன்ற உணர்வை அடைகின்றோம். பிள்ளையாரின் திருவடித் தாமரை களைப் பணிந்து "சமணர்கள் செய்த தீத்தொழில் கேட்டு மிகவும் அஞ்சி வருந்துகின்றோம். அவர்கள் செய்த தீங்கு வெப்பு நோயாகி அரசனைப் பற்றி நின்று மிகவும் வருத்து கின்றது. அமணர்களின் மந்திர தந்திரங்களால் அதனைப் போக்க முடியவில்லை. அன்றியும் அவற்றால் மேலும் பெருகுகின்றது. ஆகவே, பெருமானே, தாங்கள் அரசன் திருமுன் அவர்களை வென்றருளினால் வேந்த உயிரும் எங்கள் உயிரும் உய்யும்" என்று விண்ணப்பம் செய்

7. பெ. பு: ஞானசம்பந்த. 728.

கின்றனர். இதனைக் கேட்ட பிள்ளையார், ''நீவிர் சிறிதும் அஞ்சுதல் வேண்டா; யாவரும் கண்டு மகிழும் வண்ணம் அமணர்களை இன்றே வாதில் வென்று தென்னவர் கோமானுக்குத் திருநீறு அணிவிப்போம்'' என்று அவர்கட்கு ஆறுதல் கூறுகின்றார்.

'ஆவதும் அழிவதும் அவன் செயல்' என்னும் உறுதியுடன் திருமடத்திலிருந்து நேரே திரு ஆலவாயை அடைகின்றார். ''கண்ணாற் காணவும் தகாத கொடியோரை நேரில் கண்டு வாது செய்தல் ஆலவாய்ப் பெருமானாகிய நினது திருவுள்ளத்திற்கு இயைந்த செயலாகுமா?'' என ஆலவாய் அமர்ந்துறையும் இறைவனது திருக்குறிப்பை அறிந்து கொள்ளும் விருப்புடன் 'காட்டுமாவுரி' (3.47) என்ற திருப்பதிகம் பாடி இறைவனது திருவுள்ளக் குறிப்பை அறிந்து கொள்ளுகின்றார். இதில்,

காட்டு மாவ துரித்துரி போர்த்துடல்
நாட்ட மூன்றுடை யாயுரை செய்வனான்
வேட்டு வேள்வி செய்யா அமண்கையரை
ஓட்டி வாது செயத்திரு வுள்ளமே (1)

ஓதி யோத்தறி யாஅம ணாதரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
ஆதி யேதிரு ஆல்வாய் அண்ணலே
நீதி யாக நினைந்தருள் செய்திடே. (4)

என்பது முதல், நான்காவது பாடல்கள். இங்ஙனம் எம்பெருமானின் திருவுள்ளக் குறிப்பை உணர்ந்து கொண்டு, ஆலவாய் இறைவனின் உடன்பாடு பெற்று அப்பெருமான்பால் விடைபெறுங் கருத்துடன் 'வேத வேள்வியை' (3.108) என்ற திருப்பதிகத்தைப் பாடிப் போற்றுகின்றார். இதில்,

வேதவேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி யமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே

ஞால நின்புக ழேமிக வேண்டுந் தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. (1)

என்பது முதற் பாடல். 'வாடல்மேனி யமணரை வாட்டிடக் கூடல்வாய்க் கோனிடம் விடை கொண்டு' (11) அடியார்கள் புடைசூழச் சிவிகையிலேறியமர்ந்து பாண்டியனது அரண்மனையை நோக்கிப் புறப்படுகின்றார் காழிநாடுடைய பிள்ளை. இவருக்குப் பின்னால் தென்னவன் தேவியாரும் திருமணிச் சிவிகையேறி வருகின்றார்; அமைச்சர் பிள்ளையாருக்கு முன்னால் பெருந்தொண்டர் குழாத்துடன் செல்லுகின்றார்.

சண்பை வேந்தரின் வருகையைத் தென்னவர் கோமானுக்குத் தெரிவிக்கின்றார் குலச்சிறையார். இதனையறிந்த வேந்தன் தனது நோய்த்துன்பம் சிறிது தணியப் பெற்றவனாய்ப் பிள்ளையார் அமர்வதற்கு பொற்றவிசு ஒன்றையிடும்படி அவரை அழைக்க அமைச்சரை ஏவுகின்றான். அவனது செயலைக் கண்டு சமணர்கள் பொறாமை கொள்ளுகின்றனர். அவர்கள் அரசனை நோக்கி, "நமது சமயத்தை நிலைநிறுத்தும் முறை இதுவோ? நினது அறநெறியை நீயே காத்தல் வேண்டும். பிள்ளையாரை நோய் தீர்க்க இங்கு அழைத்தாலும் அவரும் நாங்களும் தீர்க்கும்படி சொல்லவேண்டும். ஒருக்கால் அவரால் நோய் தீர்க்கப்பெற்றாலும் எங்களாலும் தீர்க்கப் பெற்றதாகச் சொல்லுக" என வேண்டுகின்றனர்.

சமணர்களின் சூழ்ச்சியை உணர்ந்த அரசன் "நீங்கள் இருதிறத்தீரும் உங்கள் தெய்வச் சார்பினாலே தீருங்கள். யான் நடுவுநிலை திறம்பி வஞ்சகம் பேசேன்" எனத் தெளிவாகக் கூறுகின்றான். அரசனது உரை அமணர்களின் அடிவயிற்றைக் கலக்குகின்றது. இந்நிலையில் காழிப் பிள்ளையார் அங்கு எழுந்தருளுகின்றார். வேந்தன் தன்

தலைப்பக்கத்தில் இடப்பெற்றிருந்த மணியாசனத்தைப் பிள்ளையாருக்குக் காட்ட அவரும் அதன்கண் அமர்ந்தருளு கின்றார். இதனைக் கண்ணுற்ற சமணர்கள் மேலும் அச்சமுறுகின்றனர். சம்பந்தரைக் காணப்பெற்ற நற் பேற்றினால் நோய்வருத்தம் சிறிது தணியப்பெற்ற பாண்டியன் பிள்ளையாரை நோக்கி "நுமது ஊர் யாது" என வினவுகின்றான். அதற்குப் பிள்ளையார்,

**பிரமனூர் வேணுபுரம் புகலிவெங்குருப்**
**பெருநீர்த் தோணி**
**புரமன்னு பூந்தராய் பொன்னஞ்**
**சிரபுரம் புறவஞ்சண்பை**
**அரன்மன்னு தண்காழி கொச்சைவயம்**
**உள்ளிட்டங் காதியாய**
**பரமனூர் பன்னிரண்டாய் நின்றதிருக்**
**கழுமலம்நாம் பரவுமூரே. (1)**

எனவரும் திருப்பதிகம் (2.70) பாடி பிரமபுரம் முதலிய பன்னிரண்டு திருப்பெயர்களையுடைய திருக்கழுமலமே நாம் கருதும் ஊர் என மறுமொழி கூறுகின்றார். இக் காட்டிய பாடலே இப்பதிகத்தின் முதற் பாடல். இதில் 1. பிரமனூர், 2. வேணுபுரம், 3. புகலி, 4. வெங்குரு, 5. தோணிபுரம், 6. பூந்தராய், 7. சிரபுரம், 8. புறவம், 9. சண்பை, 10. காழி, 11. கொச்சைவயம், 12. கழு மலம் என இம்முறையே பன்னிரண்டு திருப்பெயர்களும் இவ்வெண்ணு முறைப்படியே இத்திருப்பதிகத்தின் ஒன்று முதல் பன்னிரண்டு வரையுள்ள பாடல்களின் முதற்றிருப் பெயர்களாக அமைந்துள்ளன. இங்ஙனம் முதற்பாடலில் குறித்த பன்னிரண்டு பெயர்களும் நிரலே அப்பதிகத்தின் 1 முதல் 12 வரையுள்ள பாடல்களின் முதற்பெயர்களாக நின்று ஒரு வட்டமாக அமையும்படி அப்பெயர்களை மாற்றினமையால் இது **'சக்கர மாற்று'** என்ற திருப்பெய ரைப் பெறுகின்றது.

அருகிலிருந்த சமணர்கள் தம் உள்ளத்திற் கிளர்ந்தெழுகின்ற அச்சத்தை மறைத்துக் கொண்டு கோபத் தீ கண்களில் துள்ளி எழப் பலபல பேசுகின்றனர். காலை எழும் கதிரவனைப் புடைசூழும் கருமுகில்போல் பிள்ளையாரைச் சூழ்ந்து கொண்டு தம் கோலும் நூலும் காட்டிப் பிள்ளையாரை வாதுக்கு அழைக்கின்றனர். பிள்ளையார் அவர்களை நோக்கி "உங்கள் நூல் துணிபினை உள்ளவாறு பேசுங்கள்" என்கின்றார். அருகர் கூட்டமாக எழுந்து பிள்ளையாரைச் சூழ்ந்து கொண்டு பேசத் தொடங்குகின்றனர். இதுகண்டு அச்சமுற்ற அரசமாதேவியார் மன்னனை நோக்கி, 'பிள்ளையாரோ சிறு பாலர்; அமணர்களோ பலர். நினது வெப்புநோயை இவர்கள் தீர்த்த பிறகு சமணர்கள் வல்லமையுடையராயின் வாது செய்யலாம்' எனச் செப்புகின்றார். பாண்டியன் மங்கையர்க்கரசியாரை நோக்கி "நீ வருந்தற்க" எனக் கூறிச் சமணர்களை நோக்கி "நீங்கள் செய்தற்குரிய வாதம் என்ன இருக்கின்றது? நீங்களும் சிவநேசச் செல்வராகிய இவரும் என்னுடைய சுரநோயைத் தீர்த்து நீங்கள் தெளிந்துணர்ந்த தெய்வத் தன்மையை என்பால் தெரிவிப்பீராக" என்று கூறுகின்றான்.

ஞானவாரமுதம் உண்ட பிள்ளையார் தன்பால் தாயினும் சாலப்பரிவுடைய நற்றவத் திருவாகிய அரசமாதேவியாரை நோக்கித் "தேவியே, என்னைப் பால்மணம் மாறாத பாலன் எனக்கருதி நீ அஞ்ச வேண்டா; ஆலவாய் இறைவன் நிலைபெற்ற துணையாய் என் நெஞ்சில் எழுந்தருளியுள்ளான். அவன் இருக்கும்பொழுது நான் இவர்கட்கு எளியனல்லேன்" என்னும் கருத்தமைய 'மானினேர் விழி' (3·39) என்ற திருப்பதிகத்தைப் பாடி அவரது அச்சத்தைப் போக்கியருளுகின்றார்.

**மானி னேர்விழி மாதராய்**
**வழுதிக்கு மாபெருந் தேவிகேள்**
**பானல் வாயொரு பாலன்**
**ஈங்கிவன் என்றுநீ பரிவெய்திடேல்**

ஆனை மாமலை யாதியாய
இடங்க ளிற்பல அல்லல்சேர்
ஈனர் கட்கெளி யேனலேன்
திருவால வாயரன் நிற்கவே. (1)

என்பது இப் பதிக முதற் பாடல். இதில், மேற் கூறிய கருத்தினைக் கண்டு மகிழலாம். ஒவ்வொரு பாடலிலும் 'எளியேனலேன் திருவாலவாய் அரன் நிற்கவே' என்று முடிவதிலிருந்து 'ஆலவாயரன்' பிள்ளையார் உளத்தில் நன்கு நிலைபெற்றிருப்பதைக் கண்டு தெளியலாம்.

பாண்டியன் பிள்ளையாரையும் நோக்கி, "நீங்கள் என் வெப்பு நோயைத் தீருங்கள்; தீர்த்தவர் எவரோ அவரே வாதில் வென்றவர்" என்று விதியமைக்கின்றான். ஆண் மக்களுக்கு இடப்பாகத்திலுள்ள நோயைத் தீர்த்தல் எளிதென உணர்ந்த அமணர்கள், மன்னனை நோக்கி, "வேந்தனே, நினது வாம (இடப்) பாகத்தை எங்கள் சமய மந்திரத்தால் தீர்ப்போம்" என்று சொல்லி இடப் பக்கத்தைப் பீலிகொண்டு தடவுகின்றனர். இதனால் மன்னனுக்கு முன்னையினும் சுரநோய் அதிகரிக்கின்றது. இது கண்ட மன்னன் பிள்ளையாரை நோக்க, அக்குறிப் பறிந்த பிள்ளையார் அவனது வலப்பாகத்தை அடைந்து **'மந்திரமாவது நீறு'** (2·66) என்ற திருப்பதிகம் ஓதித் தென்னவன் மேனியில் திருவளர் நீறு கொண்டு பூசுகின்றார். இப்பதிகத்தின் முதற் பாடல்,

மந்திர மாவது நீறு; வானவர் மேலது நீறு;
சுந்தர மாவது நீறு; துதிக்கப் படுவது நீறு;
தந்திர மாவது நீறு; சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால
வாயான் திருநீறே. (1)

என்பது. இந்நிலையில் வலப்பாகத்தில் வெம்மை நீங்கு கின்றது. இடப்பாகத்தில் முன்னையினும் வெப்பம் இருமடங்காக அதிகரிக்கின்றது. இது கண்டு அருகர்கள்

நடுக்கமெய்தித் தூரத்தே அகல்கின்றனர். அரசன் அவர்களை நோக்கி "நீங்கள் தோற்றீர்கள்; என்னை விட்டு அகன்று போமின்" எனக் கட்டளையிட்டு பிள்ளையாரை நோக்கி "இடப்பாகத்து வெம்மையையும் தாங்களே போக்க வேண்டும்" என வேண்டுகின்றனன். பிள்ளையார் இடப்பாகத்தில் நீறு கொண்டு பூச, இந்நிலையில் இருபக்கத்து வெம்மையும் நீங்கிச் சுரநோய் முற்றிலும் தீர்ந்தொழிகின்றது; அரசனும் உய்கின்றான்.[8] அரசமாதேவியும், அமைச்சரும் பிள்ளையார் திருவடிகளை வணங்கிப் போற்றுகின்றனர். வெப்புநோய் நீங்கப்பெற்ற வேந்தனும் எழுந்து சென்னிமேற் கைகூப்பி ஞானக்கன்றின் திருவடிகளை வணங்கி "யான் உய்ந்தேன்" என்கின்றான்

சமயப் போட்டி நிகழ்ந்த காலத்தில் சமய வாதிகள் தம் கொள்கையை மக்களிடையே பரப்பி அவர்களைத் தம் வசப்படுத்துவதற்கு **மந்திரம், தந்திரம், வாதம்** என்ற மூன்று வகையான உபாயங்களைக் கையாண்டனர் என்பது வரலாற்றால் அறியும் உண்மை. வடநாட்டில் நடைபெற்ற

---

8. 1978 செப்டம்பரில் மஞ்சட் காமாலை நோயால் தாக்கப்பெற்றேன். சுமார் நாற்பது நாட்கள் துன்பப் பட்டேன். பல்வேறு நாட்டுமுறை சிகிச்சைகளை மேற் கொண்டேன்; பயன் இல்லை. ஒரு நாள் நாடி இறங்கி விட்டது; குடலிறக்கமும் ஏற்பட்டது. பிழைக்க மாட்டேன் என்ற நிலை ஏற்பட்டது. ஒரே வழி என் மனத்தில் தோன்றியது. இறையருளால் சம்பந்தப் பெருமானின் "மந்திரமாவது நீறு" என்ற வெண்ணீற்றுப் பதிகத்தைப் பத்து முறை படித்து நெற்றியிலும் மார்பிலும் கைகளிலும் வெண்ணீறு அணிந்து கொண்டேன். நோய் குறைந்தது; மூன்றே நாட்களில் முழுக்குணம் எய்தினேன். வெண்ணீற்றின் மகிமையை அநுபவத்தில் உணர்ந்தேன்; இஃது என் வாழ்க்கையில் மறக்கமுடியாத நிகழ்ச்சியாகி விட்டது.

இதே உக்தி முறைகள் தென்னாட்டிலும் நிகழ்ந்திருக்கின்றன. கி. பி. ஆறாம் ஏழாம் நூற்றாண்டுகளில்தான் இந்தப் பிரசார உக்திகள் முழுவேகத்துடன் முடுக்கப் பெற்றன என்பதற்கு நாவுக்கரசர், சம்பந்தர் இவர்களது வாழ்க்கையநுபவங்கள் நமக்குச் சான்றுகளாக அமைகின்றன.

பாண்டியனின் வெப்பு நோயைத் தீர்க்கும் ஆற்றலற்ற அமணர்கள் பிள்ளையாரைத் தருக்கவாதத்தால் வெல்லுதல் இயலாதெனத் தெளிந்து நீரிலும் நெருப்பிலும் வெல்வதாக எண்ணுகின்றனர். அவர்களை நோக்கி காழி வேந்தர் "இனி உங்கள் வாய்மையைப் பேசுமின்" என்கின்றார். இதனைக் கேட்ட அருகர்கள் "தருக்கம் பேசி வெல்ல வேண்டுவதில்லை. காட்சியளவினாலேயே நிறுவுதல் இயலும். இருதிறத்தாரும் தாம் கண்ட பேருண்மையினை ஏட்டில் எழுதி அதனை நெருப்பிலிட்டால் வேவுறாத ஏட்டினையுடைய சமயமே மெய்ச் சமயம்" என்கின்றனர். காழிப்பிள்ளையார் இந்த ஏற்பாட்டிற்கு ஒப்புக்கொள்கின்றார்.

**அனல்வாதம் :** பாண்டியன் தன் பேரவை முன்னர் தீக்குண்டம் அமைக்க ஏற்பாடு செய்கின்றான்; தீ மூட்டப் பெறுகின்றது. பிள்ளையார் சிவபெருமானே மெய்ப் பொருள் எனத் தெளிந்து தாம் பாடியருளிய திருப்பதிகங்கள் எழுதப்பெற்ற அடங்கன் முறையினைக் கொணரச் செய்கின்றார். "சிவபெருமானே முதற் பொருள்" எனத் தொழுது அத்திருமுறையினைச் சென்னிமேல் வைத்துப் போற்றித் திருக்காப்பு நாணை அவிழ்த்து அத்திருமுறை ஏட்டினை விரித்துப் பார்த்த அளவில், '**போகமார்த்த பூண் முலையாள்**' (1.49) என்ற நள்ளாற்றுப் பதிகம் நேர்படுகின்றது. அது கண்ட பிள்ளையார் அத் திருப்பதிகத்தினையே விரும்பி நள்ளாற்றுப் பெருமானைத் தொழுது அப்பதிக ஏட்டினைக் கழற்றிக் கையிலே எடுத்துக் கொள்கின்றார். "என்னை ஆளுடைய இறைவனது திருநாமமே

என்றும் நிலைபெற்ற மெய்ப்பொருளாகும் என உலக மாந்தர்க்கு அறிவுறுத்தும் நிலையில் இத்திருப்பதிக ஏடு தீயில் வெந்தழியாது நிலை பெறுக'' என்று சொல்லித் **'தளரிள வளரொளி'** (3.87) என்ற இன்னொரு நள்ளாற்றுத் திருப்பதிகத்தைப் பாடி முன்னைய ஏட்டை யாவரும் காணத் தீயில் இட்டருளுகின்றார்.

சம்பந்தப் பெருமானால் நெருப்பில் இடப்பெற்ற ஏட்டில் எழுதப்பெற்ற திருப்பதிகம், பரஞானம் அபர ஞானம் என்னும் இரு தனங்களையுடைய உமாதேவியாரை ஒரு பாகத்திற் கொண்டு திகழும் அட்டமூர்த்தியாகிய சிவ பெருமானைப் பொருளாகக் கொண்டமையால், கொழுந்து விட்டெரியும் அத்தீயினுள்ளே எரிந்து சாம்பலாகாது 'பச்சையாய்' விளங்குகிறது (ஆகவே, இது பச்சைப் பதிகம் எனப் பெயர் பெறுகின்றது). தங்கள் நூற்பொருள் எழுதப் பெற்று சமணர்கள் இட்ட ஏடு 'பஞ்சு தீயிடைப் பட்டது போல்' எரிந்து சாம்பலாகின்றது. அரசன் சமணர்களை நோக்கி ''இப்பொழுதும் நீவிர் தோற்றிலிரோ?'' என்று சொல்லி நகைக்கின்றான். இந்நிலையில் அவர்கள் வேந்தனை நோக்கி, ''அரசே, ஒருவாதினை மும்முறை செய்து உண்மை காணலே முறையாகும். இருதிறந்தாரும் தத்தம் சமய உண்மைகளை எழுதிய ஏட்டினை ஆற்று வெள்ளத்தில் இட்டால் எவருடைய ஏடு எதிரேறிச் செல்கின்றதோ அவ்வேட்டிற்குரியவரே வென்றவராவர்'' எனக் கூறுகின்றனர்.

அப்பொழுது அமைச்சர் குலச்சிறையார் அவர்களை நோக்கி, ''இனிமேல் செய்யக் கருதும் வாதில் தோற்பவர்கள் தம் தோல்விக்கு அடையாளமாகப் பெறும் இழப்பு இன்னது என்பதை இப்பொழுதே உறுதி செய்து கொள்ள வேண்டும்'' என்கின்றார். இதனைக் கேட்ட சமணர்கள் செற்றமுற்று ''யாம் இவ்வாதில் தோற்போமாயின் எங்களை இவ்வரசனே கழுவேற்றும் கடமையுடையவன்'' எனக் கூறுகின்றனர். சமணர்களின் சூளுரையைக் கேட்ட

பாண்டியன் அவர்களை நோக்கி 'நீவிர் நும் செய்கையை மறந்து செற்றத்தால் வாய் சோர்ந்து பேசி விட்டீர்கள். இனி வையையாற்றில் ஏட்டினை இடப்போதல் முறை' என்று கூறுகின்றான்.

**புனல்வாதம்** : அரசன் கட்டளையிட்ட வண்ணம் இரு திறத்தாரும் வைகைக் கரைக்கு வருகின்றனர். முன்னர்த் தோல்வியுற்றவர்கள் பின்னரும் தோல்வியுறார் என்பது சமணர்களின் நம்பிக்கை. பாண்டியன் முன்னிலையில் **'அஸ்தி நாஸ்தி'** என்ற வடமொழித் தொடரை ஏட்டில் எழுதி அதனை வைகை நதியில் இடுகின்றனர். அந்த ஏடு வெள்ளத்தை எதிர்த்துச் செல்ல மாட்டாது வெள்ளத்தோடு கடலை நோக்கிச் செல்லுகின்றது. ஏட்டினை நோக்கிக் கரை வழியே ஓடிய சமணர்கள் அதனைத் தொடர்ந்து ஓடமாட்டாது திரும்பி வருகின்றனர். வந்தவர்கள் சம்பந்தரை நோக்கி, "நீவிரும் நுமது சமய உண்மையை ஏட்டில் வரைந்து ஆற்று வெள்ளத்தில் இட்டால் உண்மை காண்போம்" என்கின்றனர். இந்நிலையில் பாண்டியன் பிள்ளையாரை நோக்குகின்றான். ஞானக் கன்றும் சைவ சமய உண்மைகளைத் தொகுத்து **'வாழ்க அந்தணர்'** (3 54) என்ற பொதுப் பதிகமாகப் பாடத் தொடங்குகின்றார். இந்தக் காட்சியைக் காண மதுரை மாநகரமே வைகையின் இரு கரையிலும் திரண்டெழுகின்றது. சீதை திருமணமாகி நகருலாச் சென்றபோது ஊர் மக்கள் திரண்டு பலவாறு புகழ்ப் பேச்சுகள் பேசினதுபோல் இப்போது நகர மாந்தர்கள் சம்பந்தர் செயலில் பெருநம்பிக்கை கொண்டு பலவாறாகப் பேசிக் கொள்வதைச் சேக்கிழார் பெருமான் அற்புதமாகக் காட்டுவதை அவர் திருப்பாடல்களைப் படித்துதான் அநுபவிக்க வேண்டும்.[9]

வேத நூல்களில் நவிலப்பெறும் ஒழுகலாறு உலகியல் வாழ்வின்பாற் படும். அஃது அழிவிலின்பப் பெருவாழ்

9. பெ. பு: ஞானசம்பந். (801-808)

வாகிய வீடுபேற்றினை அடைவிப்பது. இந்நெறி என்றும் சிதைவின்றி நிலை பெற்று நிலவும் சிவநெறியே; இந்த உண்மைகளைச் சமணர்கள் அறிய மாட்டார்கள்; அறிந்தாலும் ஒப்புக்கொள்ள உடன்படார்கள் என்பதைப் பிள்ளையார் நன்கு அறிவார். ஆயினும், திருநீறு பூசப் பெற்றுப் பழவினைப் பாசம் நீங்கி இருவினையொப்புடையவனாய் இறைவனை அடைந்து இன்புறும் பக்குவ நிலையுற்ற பாண்டியன் அறிதல் வேண்டும் என்ற பேரருள் உடையவர் பிள்ளையார். ஆகவே அவர்,

> **வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்**
> **வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக**
> **ஆழ்க தீயதுஎல் லாஅரன் நாமமே**
> **சூழ்க வையக முந்துயர் நீங்கவே.** (1)

என்ற முதற்பாடலையுடைய மேற்குறிப்பிட்ட திருப்பதிகத்தை ஏட்டில் எழுதித் தமது அற்புதத் திருக்கரத்தால் வைகையாற்றில் இடுகின்றார்.[10] பிறவி எனும் பேராற்றை அருந்தவருள்ளம் எதிர்த்து எதிர் செல்வது போன்று அவ்வேடு வைகை வெள்ளத்தைக் கிழித்து எதிர் ஏகுகின்றது. குலச்சிறையார் குதிரைமீது இவர்ந்து வைகையாற்றின் கரைவழியாக அதனைத் தொடர்ந்து செல்லுகின்றார். இத்திருப்பாசுரத்தின் இரண்டாம் அடியில் "வேந்தனும் ஓங்குக" எனப் பிள்ளையார் பாடியதனால் முன்பு கூனனாயிருந்த பாண்டியன் கூன் நீங்கி 'நின்றசீர் நெடுமாறன்' ஆகின்றான்.

பிள்ளையார், தம்மால் வைகையாற்றில் இடப்பெற்ற ஏடு எதிரேறி விரைந்து செல்லக் கண்டவர் **'வன்னியும் அத்தமும்'** (3.32) என்ற திருப்பதிகத்தைப் பாடிப் போற்றுகின்றார்.

---

10. இப்பாடலின் பொருளைச் சேக்கிழார் பெருமான் சம்பந்தர் புராணத்தின் 822—844 பாடல்களில் அற்புதமாக விளக்குகின்றார்.

வன்னியும் அத்தமும் மதிபொதி சடையினன்
பொன்னியல் திருவடி புதுமல ரவைகொடு
மன்னிய மறையவர் வழிபட அடியவர்
இன்னிசை பாடலார் ஏடகத் தொருவனே. (1)

என்பது இப்பதிகத்தின் முதற் பாடல். இந்த ஏடு வைகையின் வடகரையில் அமைந்துள்ள ஏடகத்[11] திருக்கோயிலின் அருகில் தேங்கிய நீர் நடுவே வந்து நிற்கின்றது. ஏட்டினைத் தொடர்ந்து சென்ற குலச்சிறையார் குதிரையை விட்டு இறங்கி ஏட்டினை எடுத்துத் தலைமேற் கொண்டு அங்குக் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஏடகத்திறைவனை இறைஞ்சி விரைந்து மீளுகின்றார். மீண்டவர் பிள்ளையாரின் பொற்பாதங்களை வணங்கித் தாம் கொணர்ந்த ஏட்டினை நின்ற சீர் நெடுமாறன் முதலிய யாவர்க்கும் காட்டுகின்றார். அங்குள்ளார் அனைவரும் மகிழ்வுற்று இறைவனது திருவருளை வியந்து போற்றுகின்றனர். வைகையாற்றில் எதிரேறிச் சென்ற ஏடு திருவேடகத் திருக்கோயிலின் பாங்கே ஒதுங்கிய செய்தி

---

11. ஏடகம் (திருவேடகம்): திண்டுக்கல் - மதுரை இருப்பூர்தி வழியில் சோழவந்தான் என்ற நிலையத்திலிருந்து 3 கல் தொலைவிலுள்ளது. ஏடு தங்கிய இடம் 'ஏடகம்' ஆயிற்றுப் போலும்! திருக்கோயில் ஆற்றோரத்தில் உள்ளது. சம்பந்தரின் பாடல் மட்டிலும் பெற்ற தலம். பல ஆண்டுகளுக்கு முன்னர் பெருந்தவத்திரு சித்பவானந்த அடிகள் நிறுவிய கல்லூரி சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றது. இதே ஞானச் செல்வர் கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுகட்கு முன்னர் திருப்பராய்த் துறையில் 'இராமகிருஷ்ணத் தபோவனம்' என்ற ஒரு திருமடத்தையும் அதற்கருகே காவிரியின் தென்கரைப் படுகையில் 'விவேகாநந்த வித்யாவனம்' என்ற உயர்நிலைப் பள்ளியையும் நிறுவியமை நினைவுகூரத் தக்கது. அடிகளாரின் சமய—கல்வித் தொண்டு காவியமாக எழுதத்தகும் பெற்றி வாய்ந்தது.

மேற்குறிப்பிட்ட 'வன்னியும் அத்தமும்' என்ற பதிகத்தின் திருக்கடைக் காப்பில் 'ஏடு சென்று அணை தரும் ஏகத் தொருவனை' என வரும் தொடரால் தெளிவாகப் புலனாதல் கண்டு மகிழலாம்.

இன்னொரு சான்றும் ஈண்டு நினைவுகூரத் தக்கது. 'வாழ்க அந்தணர்' எனத் தொடங்கும் திருப்பதிகம் புனல் வாதத்தில் வைகையாற்றில் எதிரேறிச் செல்லுமாறு ஏட்டில் எழுதி இடப்பட்டது என்பதற்கு இப்பதிகப் பாசுரமே (11) சான்றாக அமைகின்றது.

அற்றன்றி யந்தண்
மதுரைத்தொகை யாக்கினானும்
செற்றென்று தெய்வந்தெளியார்
கரைக்கோலைத் தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர்வி
னூரவும் பண்புநோக்கில்
பெற்றொன் றுயர்ந்த
பெருமான் பெருமானுமன்றே.

என்ற பாசுரத்தில் இச்சான்றினைக் காணலாம். இங்ஙனம் காழிப் பிள்ளையார் வைகையில் இட்ட ஏடு அந்நதியினில் எதிரேறிச் சென்ற நிகழ்ச்சி,

பருமதில் மதுரைமன் அவையெதிரே
பதிகம தெழுநிலை யவையெதிரே
வருந்தி யிடைமிசை வருகரனே
வசையொடு மலர்கெட வருகரனே (3.113: 82)

எனவரும் திருக்கழுமலத் திருவியமகப் பதிகத்தின் (3.113) திருக்கடைக் காப்பில் பிள்ளையார் தெளிவாகக் குறிப் பிட்டிருத்தலைக் கண்டு மகிழலாம்.

**சமணர் கழுவேறல்:** நின்றசீர் நெடுமாறன் தன் அமைச்சரை நோக்கி, ''வாதிற் சூளுரைத்துத் தோல்வியுற்ற

சமணர்கள் முன்னமே பிள்ளையார் தங்கியிருந்த திருமடத்தில் தீக்கொளுவி அவர்க்கும் அடியார்க்கும் தீங்கு விளைவித்தோராதலின், அவர்கள் செய்து கொண்ட சபதப்படி அவர்களைக் கழுவேறச் செய்தலேயாகும்'' எனக் கூறுகின்றான். காழிப்பிள்ளையார் சமணர்கள்பால் சிறிதும் பகைமை இல்லாதவராயினும், சிவனடியார்கள் இருந்த மடத்தில் தீ வைத்த காரணத்தால் அவர்கட்கு விதிக்கப்பெற்ற (அவர்களாகவே மேற்கொண்ட) தண்டனையை விலக்காதொழிகின்றார். அமைச்சர் குலச்சிறையார் தாம் அரசுப்பணியாளர் என்ற முறைப்படி கழுத்தறிகளை நாட்ட ஏற்பாடுகள் செய்கின்றார். சமணர்கள் யாவரும் அத்தறிகளில் ஏறி உயிர் துறக்கின்றனர்.

இப்போது நாம் கி.பி. நான்கு ஐந்து நூற்றாண்டுகளில் பௌத்த சமண வைதிகச் சமயப் போட்டிகள் ஒரு கட்டுப்பாடான ஒப்பந்த முறையான போட்டிகளாகவே நிகழ்ந்துள்ளன என்பதை அறிகின்றோம். தர்க்க வாதங்களும் மந்திர தந்திர வாதங்களும், ஆகாய கமனம், கூடுவிட்டுக் கூடு பாய்தல் என்ற பரகாயப் பிரவேசம் முதலியவை எல்லாம் எங்கும் பெருவழக்காக நிகழ்ந்தன. இத்தகைய வாதங்களிலும் போட்டிகளிலும் தோற்றவர்கள் தாமே தம்மைத் தண்டித்துக்கொள்ள ஒப்புதல் செய்திருப்பர். சிலர் சாத்விக முறையில் எதிர்கட்சியில் சேர்ந்து கொள்வர். மற்றவர்கள் குன்றிலிருந்து குதித்தோ, கழுவிலேறியோ தம் உயிரை மாய்த்துக் கொள்வர். கழுவிலேறுதல் அந்தக் காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தண்டனை. ஆகையால், மதுரைச் சமணர்கள் கழுவேறினார்கள் என்பது நினைக்கத் தக்கது. சேக்கிழார் பெருமானும், ''எண் பெருங்குன்றத்து எண்ணாயிரவரும் ஏறினார்கள்''[12] என்று கூறுவதும் சிந்திக்கத் தக்கது.

12. பெ. பு: ஞானசம்பந்த. 855.

மேலும் இந்தக் காட்சியைக் கவிஞர் பெருமான்,

தோற்றவர் கழுவில் ஏறித்
    தோற்றிடத் தோற்றுத் தம்பம்
ஆற்றிடை அமணர் ஓலை
    அழிவினால் ஆர்ந்த தம்பம்
வேற்றொரு தெய்வ மின்மை
    விளக்கிய பதாகைத் தம்பம்
போற்றுசீர்ப் பிள்ளை யார்தம்
    புகழ்ச்சயத் தம்ப மாகும்.[13]

என்று அற்புதமாகக் காட்டுவர். கவிதையில் 'தம்பம்' என்ற சொல் அற்புதமாகச் சிலம்பம ஆடுவதைக் கண்டு மகிழலாம்.

முன்னர்ச் சம்பந்தரால் வெப்பு நீங்குவதற்காக நீறணியப் பெற்றவன் இப்போது பிள்ளையாரிடம் நீறு வாங்கித் தன் மேனி முழுதும் பூசி மகிழ்கின்றான். இதனைக் காணும் நகரமக்கள் அனைவரும் பிள்ளையார் அளித்த நீறு பெற்றுச் சிவநெறியினை மேற்கொள்ளுகின்றனர். புறச்சமய இருள் நீங்கித் திருநீற்றின் ஒளி யாண்டும் பரவுகின்றது. அங்கயற்கண்ணியொகும் ஆலவாய் அமர்ந்துள்ள பெருமானின் திருவருளை எண்ணி உள முருகிய சண்பை வேந்தர் மதுரை வேந்தன் மாறனும் அரசமா தேவியாரும் அமைச்சரும் அடியார்களும் புடைசூழ்ந்து வர மதுரைத் திருக்கோயிலை வலம்வந்து இறைவன் திருமுன் நின்று 'வீடலாலவாய்' (3.52) என்னும் திருப்பதிகத்தைப் பாடிப் போற்றுகின்றார்.

ஆதி யந்த மாயினாய்
    ஆல வாயின் அண்ணலே
சோதி யந்த மாயினாய்
    சோதி யுள்ளோர் சோதியாய்

---

13. ஷை - ஷை - 856.

கீதம் வாய்ந்த வாய்மையால்
　　கிளர்த ருக்கி னார்க்கலால்
ஓதி வந்த வாய்மையால்
　　உணர்ந்து ரைக்க லாகுமே. (7)

என்பது ஏழாவது பாடலாகும். இப்பதிகப் பாடல்கள் யாவும் படித்து இறையநுபவம் பெறத் தக்கவை.

சிவநெறியினை மேற்கொண்ட நெடுமாறன் சொக்க லிங்கப் பெருமானை இறைஞ்சி "சமணரது மாயையால் மதி மயங்கி மன்னுயிர்த் தலைவனான நின்னை அறியா திருந்த எளியேனை ஆட்கொள்ளும் வண்ணம் இனிய அருளாளராகிய சம்பந்தப் பெருமானைத் தந்தருளினை" என்று நெஞ்சம் நெக்குருகப் போற்றுகின்றான். ஆளுடைய பிள்ளையார் திருமடத்திற்கு எழுந்தருளியபின் அரசனும் அரசியும் அமைச்சரும் பிள்ளையார்பால் விடை பெற்றுத் தத்தமக்குரிய திரு மாளிகையை அடைகின்றனர். பிள்ளையார் "ஆலநீழலுகந்த" (3·115) என்ற முதற் குறிப்புடைய திருவியமகப் பதிகத்தைப் பாடிப் போற்று கின்றார்.

ஆல நீழல் உகந்த திருக்கையே
　　யான பாடல் உகந்த திருக்கையே
பாலி னேர்மொழி யாளொரு பங்கனே
　　பாத மோதலர் சேர்புர பங்கனே
கோல நீறணி மேதகு பூதனே
　　கோதி லார்மன மேவிய பூதனே
ஆல நஞ்சமு துண்ட களத்தனே
　　ஆல வாயுறை அண்டர்க ளத்தனே (1)

என்பது இப்பதிகத்தின் முதற் பாடல்.

திருநீலகண்ட யாழ்ப்பாணர் பிள்ளையாரைச் சந்திக்கு முன்னரே நாயனார் பட்டம் பெற்று விட்டார் என்று சேக்கிழார் தெரிவிக்கின்றார்.[14] ஒரு சமயம் பெரும்

14. பெ. பு: திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் புராணம் காண்க.

பாணர் மதுரைக்குச் சென்று சொக்கநாதரின் கோயிலின் புறவாயிலில் நின்று யாழ் வாசிக்கின்றார். பாணர் கீழ்க்குலத்தவராகையால் வெளியே நின்று வாசிக்கின்றார். இதைக் காணும் இறைவன் வேதியர் கனவில் "யாழ்ப் பாணரை உள்ளே அழைத்து மண்டபத்தில் யாழை இயக்கச் செய்யுங்கள்" என்று அறிவிக்கின்றார். அங்ஙனமே பாணர் உள் மண்டபத்தில் தரையில் அமர்ந்து வாசிக்கும்போது "பாணர் யாழ் நிலத்தில் பட்டால் குளிர் தாக்கி அதன் சுருதி கலையும். ஆதலின் அவருக்கு ஒரு பலகை இடுங்கள்" என்று அந்தரத்து ஓசை எழுகின்றது. உடனே வேதியர்கள் ஒரு பலகை தந்து மரியாதை செய்கின்றனர்.[15] இந்த நிகழ்ச்சியை மேற் குறிப்பிட்ட பதிகத்தின்,

**நக்க மேகுவர் நாடுமோ ரூருமே**
**நாதன் மேனியின் மாசுண மூருமே**
**தக்க பூமனைச் சுற்றக் கருளொடே**
**தாரம் உய்த்தது பாணற் கருளொடே**
**மிக்க தென்னவன் தேவிக் கணியையே**
**மெல்ல நல்கிய தொண்டர்க் கணியையே**
**அக்கி னாரமு துண்கல னோடுமே**
**ஆல வாயர னாருமை யோடுமே.** (6)

என்ற ஆறாம் பாடலில் 'தக்கபூமனைச் சுற்றக் கருளொடே தாரம் உய்த்தது பாணர்க் கருளொடே' என்ற தொடரால் குறிப்பிடுவதைக் கண்டு மகிழலாம். இங்ஙனம் அருள் பெற்ற சிறப்புடைய பெரும்பாணருடன் அளவளாவி மகிழ்கின்றார் திருமடத்தில். மேலும் பாண்டிமாதேவியின் மங்கல நாணைப் பாதுகாத்தருளிய இறைவனின் பெருங்கருணைத் திறமும் 'மிக்க தென்னவன் தேவிக்கு அணியையே மெல்ல நல்கிய தொண்டர்க்கு

15. ஷை ஷை 3, 6.

அணியையே' என்ற தொடரால் உளமுருகிப் போற்றி யுள்ளமை ஈண்டு நினைக்கத் தக்கது.

சண்பை வேந்தர் மதுரையில் தங்கியிருக்கும் நாளில் அவரைக் காணும் ஆசையால் அவருடைய திருத் தந்தையார் மதுரை வருகின்றார். அப்பொழுது பிள்ளையார் 'மண்ணினல்ல வண்ணம்' (3·24) என்ற திருப் பதிகம் பாடிப் போற்றுகின்றார் (இது கழுமலம் பற்றிய பதிகம்). இதில்,

மண்ணினல்ல வண்ணம்
வாழலாம் வைகலும்
எண்ணினல்ல கதிக்கு
யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறும்
கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும்
பெருந்தகை இருந்ததே. (1)

என்பது முதல் பாடல். பாடல்தோறும் 'பெருந்தகை இருந்த திறத்தை' உசாவுவது தந்தையின் நலத்தைத் தனயன் உசாவுவதுபோல் நம் உள்ளத்தை உருக்கு கின்றது. "குழந்தைப் பருவத்தில் பொற்கிண்ணத்தில் பாலடிசில் ஊட்டி என்னை ஆட்கொண்டருளிய தோணி புரப் பெருந்தகை எம்பெருமாட்டியுடன் இனிதிருந்ததே" என்று கழுமலப் பெருமானின் நலம் உசாவுகின்றார். திருவாலவாயுடையானைக் காலம்தோறும் வழிபட்டு மதுரையில் தங்கியிருந்த பிள்ளையார் பாண்டிய நாட்டி லுள்ள ஏனைய தலங்களையும் சேவிக்கச் செல்லுகின்றார். அவரைப் பிரிந்துறைதலாற்றாத பாண்டியனும், பாண்டி மாதேவியும், குலச்சிறையாரும்[16] அவருடன் தொடர்ந்து

16. இந்த மூவரும் நாயனார் நிலைக்கு உயர்ந்த வர்கள் (பெரிய புராணம் காண்க).

செல்லுகின்றனர். திருத்தல வழிபாட்டுச் செய்திகளை அடுத்துக் காண்போம். பாண்டிநாட்டில் பிள்ளையார் சைவம் பரப்பியதைச் சேக்கிழார் பெருமான்,

பூழியன் மதுரை யுள்ளார்
 புறத்துளார் அமணர் சேரும்
பாழியும் அருகர் மேவும்
 பள்ளியும் ஆன எல்லாம்
கீழுறப் பறித்துப் போக்கிக்
 கிளரொளி தூய்மை செய்தே
வாழிஅப் பதிகள் எல்லாம்
 மங்கலம் பொலியச் செய்தார்.[17]

என்று காட்டுவர்.

17. பெ. பு: ஞானசம்பந். 871.

# 11. பாண்டிநாட்டுத் திருத்தல வழிபாடு

பாண்டி நாட்டுச் சிவத்தலங்கள் பதினான்கு. இவற்றைச் சம்பந்தர் பெருமான் இரு நிலைகளில் வழி படுகின்றார்.

**முதல்நிலை :** திருமறைக்காட்டிலிருந்து அப்பர் பெருமானிடம் விடை பெற்று மதுரை ஏகும்போது ஒரு தலத்தை வழிபடுகின்றார். அது **திருக்கொடுங்குன்றம்**[1] என்பது. கொடுங்குன்றப் பெருமான்மீது **'வானிற் பொலி'** (1·14) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடிப் போற்றுகின்றார்

---

1. **கொடுங்குன்றம்** (பிரான் மலை) : காரைக்குடியிலிருந்து 27 கல் தொலைவு. காரைக்குடியிலிருந்து திருப்புத்தூர் வரையிலும், திருப்புத்தூரிலிருந்து சிங்கம் புணரி வரையிலும் பேருந்துப் பயணம். சதுர்வேதிமங்கலம் (மட்டியூர்) என்னும் இடத்தில் இறங்கி 5 கல் தொலைவு மாட்டுவண்டியில் செல்லவேண்டும். மலையின் உயரம் 2452 அடி. திருச்சியிலிருந்து மதுரை போகும் வழியில் பேருந்துப் பயணம் செய்து (50 கல்) பள்ளப்பட்டியில் இறங்கி 3 கல் தொலைவு மாட்டுவண்டியில் சென்று இத் தலத்தை அடையலாம். பாடல் பெற்ற தலம் மலையடிவாரத்தில் உள்ளது. மலையின்மேல் வயிரவர் கோயிலும் சிவன் கோயிலும் உண்டு. சம்பந்தர் மட்டிலும் பாடிய தலம். பாரி என்னும் குறுநில மன்னனுக்குச் சொந்தமான மலை.

வானிற் பொலிவெய்தும்
மழைமேகம் கிழிந்தோடிக்
கூனற் பிறைசேரும்
குளிர்சாரல் கொடுங்குன்றம்
ஆனிற் பொலிவைந்தும்
அமர்ந்தாடி உலகேத்தத்
தேனிற் பொலிமொழியா
ளொடுமேயான் திருநகரே. (1)

என்பது முதற் பாடல். இத் திருப்பதிகப் பாடல்களில் குறிஞ்சி நிலக் கருப்பொருள்கள் நிறைந்த இயற்கைக் காட்சியைக் கண்டு மகிழலாம்.

**இரண்டாம் நிலை :** மதுரை மாநகர் நிகழ்ச்சிகள் வெற்றியுடன் நிறைவு பெற்ற பிறகு சேவித்த தலங்கள் இந்நிலையில் அடங்குகின்றது. மதுரையிலிருந்து **திருப்பரங் குன்றம்**[2] வருகின்றார். வந்தவர் **'நீடலர் சோதி'** (1.100) என்ற முதற்குறிப்புடைய பதிகம் பாடி பரங்குன்றுப் பரமனைப் போற்றுகின்றார். இதில்,

---

2. **பரங்குன்றம்** (திருப்பரங்குன்றம்): மதுரை - விருது நகர் இருப்பூர்தி வழியில் திருப்பரங்குன்றம் என்ற நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. மதுரையிலிருந்து பேருந்து மூலம் வருவது நலம். கோயில் மலைச் சரிவில் உள்ளது. முருகப் பெருமான், சிவபெருமான், திருமால் முதலியோர் இருக்கும் கோயிற்பகுதி அருமையான நுட்பம் செறிந்த சிற்பம் நிறைந்தது. நக்கீரர் திருமுருகாற்றுப்படை விண்ணப் பித்த தலம். அவர் சிவ வழிபாடு செய்த சரவணப் பொய்கை திருக்கோயிலுக் கருகிலுள்ளது. தெய்வயானைத் திருமணம் நடைபெற்ற தலம். தெய்வயானை மட்டிலும் முருகனின் இடப்பாகத்தில் நாச்சியாராக உள்ளார். கிருத்திகைதோறும் ஆயிரக்கணக்கான மக்கள் வழிபடு கின்றனர். சுந்தரமூர்த்தி நாயனார் மூவேந்தருடன் வழி பட்டதைப் பாசுரம் 7·2:11 கூறும். குடைவரைக் கோயில்.

வளர்பூங் கோங்கம்
மாதவியோடு மல்லிகைக்
குளிர்பூஞ் சாரல்
வண்டறைசோலைப் பரங்குன்றம்
தளிர்போல் மேனித்
தையல்நல்லா ளோடொருபாகம்
நளிர்பூங் கொன்றை
சூடினன்மேய நகர்தானே. (4)

என்பது நான்காவது பாடல். இத்தலத்தை வழிபடுவோர் அடையும் பலனை,

சித்தம் தொன்றிச் செய்கழல்
உன்னிச் சிவனென்று
நித்தலும் ஏத்தத் தொல்வினை
நம்மேல் நில்லாவே. (8)

என்ற பாடற்பகுதி தெரிவிக்கின்றது.

பரங்குன்றுப் பரமனிடம் விடை பெற்றுக் கொண்டு **ஆப்பனூர்**[3] என்ற திருத்தலம் எழுந்தருள்கின்றார் பிள்ளையார். இத்தலத்து எம்பெருமானை **'முற்றும் சடைமுடி'** (1.88) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடித் துதிக்கின்றார். இதில்,

பிணியும் பிறப்பறுப்பான்
பெருமான் பெருங்காட்டில்
துணியி னுடைதாழச்
சுடரேந்தி யாடுவான்

---

3. ஆப்பனூர் (திருவாப்புடையார் கோயில்): மதுரை இருப்பூர்தி நிலையத்திலிருந்து 1 கல் தொலைவு. வையையாற்றின் வடகரையிலுள்ளது. ஆற்று வெள்ளத்தால் தடைப்பட்ட பாண்டிய மன்னன் ஆப்பு ஒன்றைத் தாபித்து சிவபூசை செய்தமையால் தலப் பெயர் இப்படி ஏற்பட்டது. சம்பந்தர் மட்டிலுமே பாடிய தலம்.

அணியும் புனலானை
அணியாப்ப னூரானைப்
பணியு மனமுடையார்
வினைப்பற் றறுப்பாரே. (4)

என்பது நான்காவது பாடல்.

ஆப்பனூர் அப்பனிடம் விடை பெற்றுக் கொண்டு திருப்புத்தூர்[4] வருகின்றார் திருஞானக் கொழுந்து. வந்தவர் இத் தலத்துப் பெருமானை 'வெங்கல் விம்மு' (1.26) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடி வழிபடுகின்றார். இதில்,

நெய்த லாம்பல் கழுநீர் மலர்ந்தெங்கும்
செய்கண் மல்கு சிவனார் திருப்புத்தூர்த்
தையல் பாக மகிழ்ந்தார் அவர்போலும்
மையுள் நஞ்ச மருவு மிடற்றாரே. (7)

என்பது ஏழாம் திருப்பாடல்.

திருப்புத்தூர் எம்பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு திருப்பூவணம்[5] வருகின்றார். இத்தலத்து இறைவனை இரண்டு செந்தமிழ்ச் சொல்மாலையால் வழி படுகின்றார் சண்பை வேந்தர். 'அறையார் புனலும்' (1.64) என்ற முதற்குறிப்புடையது முதல் மாலை. இதில்,

---

4. புத்தூர் (திருப்புத்தூர்): காரைக்குடி இருப்பூர்தி நிலையத்திலிருந்து 15 கல் தொலைவு. நகரப் பேருந்து மூலம் ஊருக்கு வந்து அங்கிருந்து வேறு பேருந்து மூலம் திருப்பத்தூர் போகலாம். திருப்பத்தூர் பெரிய பேருந்து சந்திப்பு. பல திசைகளிலும் பேருந்துகள் வரும், போகும். இங்கு வைரவர் சந்நிதி சிறப்புடைத்து.

5. பூவணம் (திருப்பூவணம்): மதுரை - மானாமதுரை இருப்பூர்தி வழியில் திருப்புவனம் என்ற நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. வையை யாற்றங்கரையிலுள்ளது. தமிழ் வேந்தர் மூவரும் வழிபட்ட தலம்.

போரார் மதமா வுரிவை போர்த்துப்
பொடியணி மேனியனாய்க்
காரார் கடலின் நஞ்ச முண்ட
கண்ணுதல் விண்ணவனூர்
பாரார் வைகைப் புனல்வாய் பரப்பிப்பன்
மணிபொன் கொழித்துச்
சீரார் வாரி சேர நின்ற
திருப்பூ வணமே. (4)

என்பது நான்காம் நறுமலர். அடுத்த மாலை **'மாதமர் மேனி யனாகி'** (3.20) என்ற முதற் குறிப்புடையது. இதில்,

வெறிகமழ் புன்னை பொன்ஞாழல் விம்மிய
பொறியர வணிபொழில் பூவ ணத்துறை
கிறிபடு முடையினன் கேடில் கொள்கையன்
நறுமல ரடிதொழ நன்மை யாகுமே. (6)

என்பது **ஆறாவது** வாடா நறுமலர்.

திருப்பூவணத் திறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு **கானப்பேர்**[6] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். **'பிடி யெலாம் பின்செல'** (3.26) என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ்ப் பாமாலையால் வழிபடுகின்றார். இதில்,

---

6. **கானப்பேர்** (காளையார் கோயில்): திருச்சி-மானா மதுரை இருப்பூர்தி வழியில் நாட்டரசன்கோட்டை என்ற நிலையத்திலிருந்து தேவகோட்டை போகும் பேருந்து வழியில் 6 கல் தொலைவிலுள்ளது. சுந்தரர் கனவில் காளை யாகத் தோன்றித் தாம் இருப்பது கானப்பேர் என்று கூறி அவரை வழிபடச் செய்து பதிகம் பெற்ற படியால் 'காளையார் கோயில்' என்பது தலப் பெயராயிற்று. கோயிலும் திருக்குளமும் பெரியவை. காளையீசுவரர், சுந்தரேசுவரர், சோமேசுவரர் ஆகிய மூன்று சந்நிதிகள் உள்ளன. ஐராவதம் பூசித்து சாப விமோசனம் பெற்றதை 3.26:7 என்ற பாசுரம் கூறும்.

நிறையுடை நெஞ்சுளும் நீருளும் பூவுளும்
பறையுடை முழவுளும் பலியுளும் பாட்டுளும்
கறையுடை மிடற்றண்ணல் கருதிய கானப்பேர்
குறையுடை யவர்க்கலாற் களைகிலார் குற்றமே. (4)

என்பது நான்காவது வாடாத நறுமலர்.

கானப்பேர் அண்ணலிடம் விடைபெற்றுக் கொண்டு 'திருச்சுழியல்'[7] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார்; சுழியலீசனை வழிபடுகின்றார் (பதிகம் இல்லை). திருச்சுழியலிலிருந்து 'திருக்குற்றாலம்'[8] வருகின்றார் பிள்ளையார். இத்தலத்து இறைவனை சம்பந்தர் இரண்டு செந்தமிழ் மாலைகளால் வழிபடுகின்றார். முதல் மாலை 'வம்பார் குன்றம்' (1.99) என்ற முதற்குறிப்புடையது. இதில்,

---

7. சுழியல்: மதுரை இருப்பூர்தி சந்திப்பிலிருந்து 24 கல் தொலைவு. மதுரையிலிருந்து அருப்புக்கோட்டைப் பேருந்து மூலம் 17 கல் தொலைவு சென்று அங்கிருந்து வேறொரு பேருந்து மூலம் 7 கல் தொலைவு பயணம் செய்து இத்திருத்தலத்தை அடையலாம். (அருப்புக் கோட்டைக்கு விருதுநகரிலிருந்து 12 கல் தொலைவு பேருந்தில் வந்து அங்கிருந்து மேற்கூறியபடி 7 கல் சென்று அடையலாம்.)

8. குறும்பலா, குற்றாலம்: தென்காசி இருப்பூர்தி நிலையத்திலிருந்து 3½ கல் தொலைவு. இறைவன் சுந்தரருக்குக் கட்டமுது வழங்கியதை 7.29:3 (சுந்தரர்) என்ற பாசுரம் கூறும். இங்குள்ள சாரல் அருவி முதலியவற்றை அநுபவிக்க சூலை, ஆகஸ்டு மாதங்களில் மக்கள் திரண்டு வருவர். ஒரே சமயம் கோயிலுக்கருகிலுள்ள நீரருவியில் 500 பேர் நீராடுவதற்கு வசதி செய்யப் பெற்றுள்ளது. மலைமேலுள்ள சண்பகாடவி யருவியும் தேனருவியும் 3 கல் தொலைவிலுள்ள ஐந்தருவியும் நெடுநேரம் அமைதியாக நீராடுவதற்கு வசதி. அகத்திய முனிவர் திருமால் உருவைக் குறுகச்செய்து சிவலிங்கமாக்கியதால்

செல்வமல்கு செண்பகம்
　　வேங்கை சென்றேறிக்
கொல்லை முல்லை மெல்லரும்
　　பீனும் குற்றாலம்
வில்லி னொல்கமும்
　　மதிலெய்து வினைபோக
நல்குநம்பரன் நன்னகர்
　　போலும் நமரங்காள். (3)

என்பது இத்திருமாலையின் மூன்றாவது நறுமணம் மிக்க வாடாமலர். அடுத்த மாலை 'திருந்தமதிசூடி' (2.71) என்ற முதற்குறிப்புடையது. இதில்

பாதிவெண் மதிசூடிப் பாகத்தோர்
　　பெண்கலந்து பாடி யாடிக்
காலனுடல் கிழியக் காய்ந்தார்
　　இடம்போலும் கல்சூழ் வெற்பில்
நீலமலர்க் குவளை கண்திறக்க
　　வண்டரற்று நெடுந்தண் சாரல்
கோலமஞ்ஞை பேடை யோடாட்
　　டயரும் குறும்ப லாவே. (4)

என்பது நான்காவது வாடா நறுமலர்.

குறும்பலா ஈசரிடம் விடைபெற்றுக் கொண்டு **நெல்வேலிக்கு**[9] வருகின்றார் ஞானக்கன்று. இத்தலத்து எம்

---

**குற்றாலம்** எனவும், பலாமரம் தலவிருட்சமாதலால் **குறும்பலா** எனவும் தலப்பெயர் ஏற்பட்டது. நடராசரின் ஐந்து சபைகளுள் இங்குள்ளது சித்திரசபை. குற்றாலத் தல புராணம், குற்றாலக் குறவஞ்சி இலக்கியச் சுவை நிரம்பியவை.

9. **நெல்வேலி** (திருநெல்வேலி): திருநெல்வேலி டவுன் இருப்பூர்தி நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. தண் பொருநையாற்றங்கரையிலுள்ள திருத்தலம். ஆற்று

பெருமானை 'மருந்தவை மந்திரம்' (3.92) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ்ப் பாமாலையால் வழிபடுகின்றார் சிவக்கன்று.

**ஏனவெண் கொம்பொடு மெழில்திகழ்**
**மத்தமும் இளஅரவும்**
**கூனல்வெண் பிறைதவழ் சடையினர்**
**கொல்புலித் தோலுடையார்**
**ஆனினல் லைந்துகந் தாடுவர்**
**பாடுவ ரருமறைகள்**
**தேனில்வண் டமர்பொழில் திருநெல்**
**வேலியுறை செல்வர்தாமே. (5)**

என்பது இத்திருமாலையில் ஐந்தாவது வாடா நறுமணம் மிக்க நல்மலர்.

நெல்லையப்பனிடம் விடை பெற்றுக்கொண்டு **இராமேச்சுரம்**[10] வந்து சேர்கின்றார். இராமலிங்கரை **இரண்டு**

---

வெள்ளச் சேதமின்றிச் சிவபெருமான் நிவேதனத்துக்குச் சேமிக்கப் பெற்ற நெற்களஞ்சியத்தை வேலிகட்டிக் காத்தமையால் நெல்வேலி என்று தலப்பெயராயிற்று. நடராசர் ஐந்து சபைகளுள் இங்குள்ளது தாமிரசபை எனும் செப்பறை. சுவாமி சந்நிதிக்கெதிரில் ஏழிசை ஒலி எழும்பும் கருங்கல் தூண்கள் உள்ளன. ஒரு சிறுகோலால் தட்டிக் கேட்கலாம். அம்மை காந்திமதியின் திருவுருவம் அழகும் அருளும் நிரம்பியது. ஆற்றின் நடுவிலுள்ள குறுக்குத் துறை முருகன் கோயில் சிறப்புடையது. 'மதுத்திவலை, சிந்து பூந்துறை கமழ் திருநெல்வேலி' (3.92:8) என்று பாசுரத்திலுள்ளதை யொட்டி ஆற்றங்கரையிலுள்ள ஓர் ஊர்ப்பகுதி சிந்துபூந்துறை என்று இன்றும் வழங்கப்பெறுகின்றது.

10. **இராமேச்சுரம்** (இராமேஸ்வரம்): மானாமதுரை-இராமேஸ்வரம் இருப்பூர்தி வழியில் இராமேஸ்வரம் என்ற நிலையத்திலிருந்து 1 கல் தொலைவு. கடற்கரைத்தலம்;

செந்தமிழ் மாலைகளால் வழிபடுகின்றார். **'அலைவளர் தண்மதி'** (3.10) என்ற முதற்குறிப்புடையது முதல் மாலை.

**தேவியை வவ்விய**
**தென்னிலங்கைத் தசமாமுகன்**
**பூவிய லும்முடி**
**பொன்றுவித்த பழிபோயற**
**ஏவிய லுஞ்சிலையண்ணல்**
**செய்தவி ராமேச்சுரம்**
**மேவிய சிந்தையி**
**னார்கள்தம்மேல் வினைவீடுமே. (2)**

என்பது இந்த மாலையின் இரண்டாவது வாடா நறுமலர். **'திரிமருமாமணி'** (3.101) என்ற முதற்குறிப்புடையது இரண்டாவது மாலை. இதில்,

**கணைபிணை வெஞ்சிலை கையிலேந்திக்**
**காமனைக் காய்ந்தவர்தாம்**
**இணைபிணை நோக்கி நல்லாளொடாடும்**
**இயல்பினர் ஆகிநல்ல**

---

இஃது ஒரு தீவிலுள்ளது. சில ஆண்டுகட்கு முன்னர் இராமேஸ்வரத்திலிருந்து நேரே தனுஷ்கோடி தீர்த்த கட்டத்திற்கு இருப்பூர்தி சென்றது. மணல் காற்றினால் இருப்பூர்தி வழி தூர்ந்து போவதைத் தடுப்பதற்குப் பெரும்பொருள் செலவழிவதால், இப்போது வண்டி போவதில்லை. இராமேஸ்வரத்திலிருந்து இப்போது (அப்போதும் கூட) தீர்த்த கட்டம் வரையில் படகில் போகலாம். காசிப் பயணத்தில் கொண்டுவரும் கங்காதீர்த்தத்தை இராமலிங்க சுவாமிக்குத் திருமுழுக்காட்டி காசிப் பயணத்தை முடிப்பது மரபு. நிரம்ப அழகிய தேசிகர் இயற்றிய சேதுப்புராணம் இத்தலத்திற்கு உண்டு. அம்பிகை அழகும் அருளும் நிரம்பிய பர்வதவர்த்தினி (மலைவளர் காதலி). தாயுமானவர் பாடல் அம்மையின் சிறப்பை விளக்கும்.

இணைமலர் மேலன்னம் வைகுகானல்
இராமேச்சுர மேயார்
அணைபிணை புல்கு கரந்தைசூடும்
அடிகள்செயும் செயலே. (6)

என்பது ஆறாவது நறுமலர். மன்னனாகிய இராமன் இராமேச்சுரத்தில் சிவபெருமானைப் பூசனை புரிந்த தொன்மை வரலாற்றினை அமைத்துத் திருப்பதிகம் பாடி இறைவனை வழிபட்டு அடியார்களுடன் அத்தலத்தில் தங்கியிருக்கின்றார். பாண்டிமாதேவியும் குலச்சிறையாரும் அடியார்கள் திருவமுது செய்தற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கின்றனர்.

இராமேச்சுரத்திலிருக்கும்போதே பிள்ளையார் ஈழ மண்டலத்திலுள்ள திருக்கோணமலை, மாதோட்டக் கேதீச்சரம் ஆகிய சிவத்தலங்களை நினைந்து திருப்பதிகங்கள் பாடிப் பணிந்து போற்றுகின்றார். 'திரைகழலரவம்' (3.123) என்ற முதற் குறிப்பினையுடைய பதிகம் திருக்கோணமலை மேலது.

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் னரற்றும் செழுங்கடல் தாளஞ்
செம்பொனும் இப்பியும் சுமந்து
கொழித்துவன் திரைகள் கரையிடைச் சேர்க்கும்
கோணமா மலையமர்ந் தாரே. (4)

என்பது இப்பதிகத்தின் நான்காவது திருப்பாடல். 'விருது குன்றமா மேருவில்' (2. 107) என்ற முதற்குறிப்புடைய பதிகம் மாதோட்டக்கேதீச்சரம் பற்றியது.

பேழை வார்சடைப் பெருந்திரு மகள்தனைப்
பொருந்தவைத் தொருபாகம்
மாழை யங்கயற் கண்ணிபா லருளிய
பொருளினர் குடிவாழ்க்கை

வாழை யம்பொழில் மந்திகள் களிப்புற
மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீள் மார்பர்
கேதீச்சரம் பிரியாரே (6)

என்பது இதன் ஆறாவது திருப்பாடல்.

இராமநாதனிடம் விடைபெற்றுக் கொண்டு திருவாடானை[11] வருகின்றார் பிள்ளையார். இத்தலத்துப் பெருமான்மீது 'மாதோர் கூறுகந்தேற' (2.112) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடிச் சேவிக்கின்றார்.

வாடல் வெண்டலை அங்கை யேந்திநின்(று)
ஆட லானுறை யாடானை
தோடு லாமவர் தூவிக் கைதொழ
வீடு நுங்கள் வினைகளே. (2)

என்பது இப்பதிகத்தின் இரண்டாவது திருப்பாடல். திருவாடானையிலிருந்து திருப்புனவாயில்[12] என்ற திருத்

---

11. ஆடானை (திருவாடானை): காரைக்குடியிலிருந்து 32 கல் தொலைவு. பேருந்து வசதி உண்டு. தொண்டிக்குச் செல்லும் பேருந்தில் ஏறவேண்டும். ஒரு முனிவரின் சாபத்தால் ஆட்டுத் தலையும் ஆனை உடலும் பெற்ற தேவகுமாரன் ஒருவன் இங்கு வழிபட்டு மீண்டும் தேவ உடல் பெற்றதால் ஆடானை தலப் பெயராயிற்று.

12. புனவாயில் (திருப்புனவாயில்): காரைக்குடி-மயிலாடுதுறை இருப்பூர்தி வழியில் அறந்தாங்கி நிலையத்திலிருந்து 22 கல் தொலைவிலுள்ள மீமிசல் போய் அங்கிருந்து 7 கல் தொலைவு மாட்டுவண்டியில் சென்றால் இத் தலத்தை அடையலாம். ஆடானையிலிருந்து 12 கல் தொலைவு சென்றாலும் இத்தலத்தை அடையலாம். கடற்கரைத் தலம். மூலத்தான இலிங்கம் பெரிது. ஆவுடையாரைச் சுற்றியுடுத்த 30 முழம் நீளமுள்ள பரிவட்டம் தேவை. தஞ்சை பெரிய கோயில் பிருஹதேசுவரர் நினைவுவரும்.

தலத்திற்கு எழுந்தருள்கின்றார். இத்தலத்து எம் பெருமானை 'மின்னியல் செஞ்சடை' (3.11) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ் மாலையால் வழிபடுகின்றார்.

பெருங்கடல் நஞ்சமு
துண்டுகந்து பெருங்காட்டிடைத்
திருந்திள மென்முலைத்
தேவிபாட நடமாடிப்போய்ப்
பொருந்தலர்தம் புரமூன்றும்
எய்து புனவாயிலில்
இருந்தவன் தன்கழல்
ஏத்துவார்கட் கிடரில்லையே. (7)

என்பது இந்த மாலையின் ஏழாவது வாடாத மணம்மிக்க நறுமலர்.

பின்னர் குலச்சிறையார் பிறந்த பதியாகிய மணமேற் குடியில் எழுந்தருள்கின்றார். இதனைச் சேக்கிழார் பெருமானே,

பதிநிலவு பாண்டிநா டதனில் முக்கட்
பரமனார் மகிழ்விடங்கள் பலவும் போற்றி
விதிநிலவு வேதநூல் நெறியே ஆக்கி
வெண்ணீற்றின் சார்வினால் மிக்கு யர்ந்த
கதியருளிக் காழிநகர் வாழ வந்தார்
கண்ணுதலார் திருத்தொண்டர் பலரும் சூழ
மதிநிலவு குலவேந்தன் போற்றிச் செல்ல
மந்திரியார் பதிமணமேற் குடியில் வந்தார்.[13]

என்று கூறுவர். பின்னர் சோழநாட்டுத் திருத்தலங்களை வழிபட்டுக் கொண்டு சீகாழியை வந்தடைகின்றார். இங்குச் சில நாட்கள் தங்கி ஓய்வு கொள்ளுகின்றார். இந்த விவரங்களை அடுத்த கட்டுரையில் விரித்துரைப்போம்.

---

13. பெ.பு. ஞானசம்பந். 892.

# 12. சோழநாட்டுத் திருத்தலப் பெரும் பயணம் - (3)

இந்தப் பயணத்தை சண்பைவேந்தர் மூன்று நிலைகளில் மேற்கொள்ளுகின்றார்.

**முதல்நிலை:** திருமறைக்காட்டில் அப்பர் பெருமானைச் சோழநாட்டில் இருக்குமாறு சொல்லிவிட்டுத் தாம் மட்டிலும் பாண்டி நாட்டுக்குப் போவதாக ஏற்பாடு செய்தார் என்பதை நாம் அறிவோம். இங்ஙனம் மதுரை நோக்கிச் செல்லும்போது சில தலங்களை வழிபடுகின்றார். முதலில் **அகத்தியான் பள்ளி**[1] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார், '**வாடிய வெண்டலைமாலை**' (2. 76) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி தலத்து இறைவனைச் சேவிக்கின்றார்.

---

1. **அகத்தியான் பள்ளி** (*அகஸ்தியாம் பள்ளி*): திருத்துறைப்பூண்டி—கோடிக்கரை இருப்பூர்தி வழியில் கோடிக்கரைக்கு முன்புள்ள அகஸ்தியாம் பள்ளி நிலையத்திலிருந்து ¼ கல் தொலைவு. பார்வதி தேவியாருக்கு இமயமலையில் நடைபெற்ற திருமணத்தை அகத்தியர் இத்தலத்திலிருந்தே தரிசித்தார். கடற்கரைத்தலம். சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற திருத்தலம்.

தெரிந்ததுவும் கணையொன்று
 முப்புரம் சென்றுடன்
எரிந்ததுவும் முன்னெழிலார்
 மலருறை வான்றலை
அரிந்ததுவும் பொழில்சூழ்
 அகத்தியான் பள்ளியான்
புரிந்ததுவும் உமையா
 ளோர்பாகம் புனைதலே. (6)

என்பது இப்பதிகத்தின் ஆறாவது பாடல். அகத்தியான் பள்ளி இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு **கோடி**[2] வருகின்றார்; இறைவனை வழிபடுகின்றார் (பதிகம் இல்லை).

கோடிக் குழகரிடம் விடைபெற்றுக் கொண்டு **'கடிக்குளம்'**[3] என்ற தலத்திற்கு வருகின்றார். **'பொடிகொள் மேனி'** (2-104) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனை வழுத்துகின்றார்.

விண்க ளார்தொழும் விளக்கினைத்
 துளக்கிலா விகிர்தனை விழவாரும்
மண்க ளார்துதித் தன்பரா
 யின்புறும் வள்ளலை மறுவித்தம்
கண்க ளார்தரக் கண்டு
 நங்கடிக் குளத்துறைதரு கற்பகத்தைப்
பண்க ளார்தரப் பாடுவார்
 கேடிலர் பழியிலர் புகழாமே. (2)

என்பது இப்பதிகத்தின் இரண்டாவது பாடல்.

---

2. கோடி (குழகர் கோயில், கோடிக்கரை): கோடிக் கரை இருப்பூர்தி நிலையத்திலிருந்து 3 கல் தொலைவி லுள்ளது. சுந்தரர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

3. கடிக்குளம் (கற்பகனார் கோயில்): மயிலாடுதுறை-காரைக்குடி இருப்பூர்தி வழியில் பாண்டி நிலையத்திலிருந்து

கடிக்குளத்திறைவனிடம் விடை பெற்றுக்கொண்டு இடும்பாவனம் என்ற திருத்தலத்தை அடைகின்றார் திருஞானக் கன்று. 'மனமார்தரு' (1.17) என்ற திருப்பதிகம் பாடி இறைவனை வழுத்துகின்றார்.

**நீறேறிய திருமேனியர்**
**நிலவும்உல கெல்லாம்**
**பாறேறிய படுவெண்டலை**
**கையிற்பலி வாங்கக்**
**கூறேறிய மடவாளொரு**
**பாகம்மகிழ் வெய்தி**
**ஏறேறிய இறைவர்க்கிடம்**
**இடும்பாவனம் இதுவே. (7)**

என்பது இப்பதிகத்தின் ஏழாவது திருப்பாடல்.

இடும்பாவனம் ஈசனிடம் விடை பெற்றுக் கொண்டு திருவுசாத்தானம்[5] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். 'நீரிடைத்துயின்றவன்' (3.33) என்ற திருப்பதிகம் பாடி இறைவனைப் போற்றுகின்றார். இதில்,

**நீரிடைத் துயின்றவன் தம்பிநீள் சாம்புவான்**
**போருடைச் சுக்கி ரீவன்அனு மான்தொழக்**
**காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்தஎம்**
**சீருடைச் சேகூர்வாழ் திருவுசாத் தானமே. (1)**

---

நான்கு கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

4. இடும்பாவனம்: பாண்டி என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து 3 கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

5. உசாத்தானம் (கோயிலூர்) : மயிலாடுதுறை-காரைக்குடி இருப்பூர்தி வழியில் முத்துப்பேட்டை என்ற நிலையத்திலிருந்து 2 கல் தொலைவு; இங்கு சங்கர வேதாந்திகள் மடம் ஒன்றுள்ளது. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

என்பது முதற் பாடல். இதில் இராமன், இலக்குவன், அநுமன் முதலியோர் பூசித்த செய்தி கூறப்பெற்றுள்ளது. இப்பதிகத்தில் 5, 6ஆம் பாடல்கள் காணப்பெறவில்லை.

**இரண்டாம் நிலை:** குலச்சிறையார் பிறந்தவூராகிய மணமேற்குடித் தங்கலுடன் பாண்டிநாட்டுப் பயணம் நிறைவு பெற்றுச் சோழநாட்டுக்குள் அடி எடுத்து வைக்கின்றார்.[6] முதலில் திருக்களர்[7] என்ற தலத்திற்கு வருகின்றார். இறைவனை வழிபடுகின்றார்; (பதிகம் இல்லை. இஃது இரண்டாம் முறை வருகை).

திருக்களர் பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு **பாதாளீச்சரம்**[8] வருகின்றார். '**மின்னியல் செஞ்சடை**' (1.108) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனைச் சேவிக்கின்றார்.

**நாகமும் வான்மதியும் நலமல்கு**
**செஞ்சடை யான்சாமம்**
**போகநல் வில்வரையாற் புரமூன்**
**றெரித்து கந்தான்**
**தோகைநன் மாமயில்போல் வளர்சாயல்**
**தூமொழி யைக்கூடப்**
**பாகமும் வைத்துகந் தானுறை**
**கோயில் பாதாளே.** (3)

என்பது இப்பதிகத்தின் மூன்றாவது பாடல்.

---

6. பாண்டிநாட்டுத் திருத்தல வழிபாடு (கட்டுரை-11) இந்நூல் பக். 229 காண்க.

7. முதல் முறை வந்தது அப்பருடன். இந்நூல் பக். 156 காண்க. பெ. பு. ஞானசம். 575.

8. **பாதாளீச்சரம்** : மன்னார்குடியிலிருந்து $1\frac{1}{2}$ கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

**ஓடம் உய்த்தல் :** பாதாளீச்சரப் பரமனிடம் விடை பெற்றுக் கொண்டு திருக்கொள்ளம் பூதூர்[9] வர நினைக்கின்றார். அப்பொழுது முள்ளியாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தோடுகின்றது.

**மலைவளர்சந் தனமகிலும் தேக்கும் உந்தி**
**மலர்ப்பிறங்கல் வண்டிறைப்பச் சுமந்து பொங்கி**
**அலைபெருகி ஆள்இயங்கா வண்ணம் ஆறு**
**பெருகுதலால் அத்துறையில் அணையும் ஓடம்**
**நிலைபுரியும் ஓடக்கோல் நிலையி லாமை**
**நீர்வாழ்நர் கரையின்கண் நிறுத்திப் போகக்**
**கலைபயிலும் கவுணியர்கோன் அதனைக் கண்டு(அ)க்**
**கரையின்கண் எழுந்தருளி நின்ற காலை.**[10]

என்று வெள்ளப் பெருக்கை வருணித்திடுவர் சேக்கிழார் பெருமான். பெரிய வெள்ளம். ஆதலால் ஓடம் விடுவோர் ஓடங்களைக் கரையிலே பிணித்து விட்டுப் போய்விட்டனர். கரையில் நின்ற ஞானக் கன்றுக்கு ஆற்றுக்கு அப்பால் தோன்றும் கொள்ளம் பூதூர் சென்று அங்குக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைத் தொழ வேண்டும் என்ற பேரார்வம் மனத்தில் உந்துகின்றது. கரையில் கட்டப் பெற்றிருந்த ஓடத்தைக் கட்டவிழ்த்து

9. **கொள்ளம் பூதூர்** (திருக்களம்பூர்): தஞ்சை - நாகூர் இருப்பூர்தி வழியில் கொரடாச்சேரி நிலையத்திலிருந்து 4 கல் தொலைவு. கோயிலின் பக்கத்தில் ஓடுகின்ற முள்ளியாற்றுக்கு எதிர்க்கரையில் சம்பந்தர் வந்தபோது வெள்ளம் போயிற்று. ஓடக் கோல் நிலைக்காமையால் ஓடத்தைக் கரையிலுள்ள மரத்தில் கட்டிவிட்டு ஓடக்காரன் வீட்டிலிருந்தான். சம்பந்தர் ஓடத்தை அவிழ்த்து விட்டு ஏறிக்கொண்டு **'கொட்டமே கமழும்'** (3.6) என்னும் பதிகம் பாட "நாவலமே கோலாக" ஓடம் கோயிலருகிற் சேர்ந்தது. இஃது ஐப்பசி அமாவாசையன்று உற்சவமாக நடைபெறுகின்றது.

10. பெ. பு : திருஞானசம்பந்—897.

அடியார்களை ஏற்றித் தாமும் ஏறுகின்றார். நாவலமே கோலாக அதன் மேல் நின்று நம்பர் தமைக் 'கொட்டமே கமழும்' (3.6) என்ற திருப்பதிகம் பாடிக் கொள்ளம் பூதூர் இறைவனைப் போற்றுகின்றார்.

கொட்டமே கமழும் கொள்ளம் பூதூர்
நட்ட மாடிய நம்பனை உள்க
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே. (1)

ஓடம் வந்தணையும் கொள்ளம் பூதூர்
ஆடல் பேணிய அண்ணலை உள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே. (6)

ஆறு வந்தணையும் கொள்ளம் பூதூர்
ஏறு தாங்கிய இறைவனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே. (7)

என்பன முதல், ஆறு, ஏழாம் பாடல்கள்.

பிள்ளையாரின் நாவன்மையே கோலாக இருந்து ஓடத்தை இயக்குகின்றது. எடுத்த திருப்பதிகம் நிறைவு பெறுவதற்குள் ஓடம் எதிர்க் கரையை அடைந்து விடுகின்றது.[11] அடியார்களுடன் கொள்ளம் பூதூரை யடைந்த பிள்ளையார் ஆற்றில் ஓடம் செல்லும் வண்ணம் தமக்கு அருள் புரிந்த பெருமானை நோக்கி, "தாணுவே! ஆற்றின்கண் ஓடம் உய்க்கும் தன்மையால் அருள் தந்த தலைவா! நாகப் பூணினாய்! களிற்றுரிவை போர்த்த

11. தில்லையில் சேந்தனார் திருப்பல்லாண்டு பாட, சேற்றில் அழுந்திய திருத்தேர் ஆட்கள் இழுக்காமல் நகர்ந்து நிலை வந்து சேர்ந்தமை ஈண்டு நினைத்தல் தகும் (ஒன்பதாந் திருமுறை).

முக்கட் புனிதனே!'' என்று பரவிப் போற்றுகின்றார். இப் பதிகத்தின் பாடல்தோறும் ''செல்ல வுந்துக சிந்தையார் தொழ, நல்கு மாறருள் நம்பனே'' என ஈரடி மேல் வைப்பாக வரும் தொடரால் நன்கு புலனாகின்றது. பிள்ளையார் இப்பதிகத்தைப் பாடின அளவில் அவர் ஏறி வந்த ஓடம் கொள்ளம் பூதூர்க் கரையினை அணைந்தது என்பது,

'ஓடம் வந்தணையும் கொள்ளம் பூதூர்.' (6)

'ஆறு வந்தணையும் கொள்ளம் பூதூர்.' (7)

என்று வரும் **ஆறாவது, ஏழாவது** பாடல்களின் தொடர் களால் அறிய முடிகின்றது.

கொள்ளம் பூதூர் இறைவனிடம் விடை பெற்றுக் கொண்டு **திருநள்ளாறு**[12] வருகின்றார். இது பிள்ளையாரின் **இரண்டாவது முறை** வருகையாகும். முதல் முறை வந்தது 'சோழ நாட்டுத் திருத்தலப் பெரும் பயணத்தின் போது. (2) [13] இப்பொழுது **'பாடக மெல்லடி.'** (1·7) என்ற திருப்பதிகம் பாடி நள்ளாற்றிறைவனை வழுத்துகின்றார்.

---

12. **நள்ளாறு :** பேரளம் - காரைக்கால் இருப்பூர்தி வழியில் 'திருநள்ளாறு' என்ற நிலையத்திலிருந்து ½ கல் தொலைவு. காரைக்காலிலிருந்து அடிக்கடி பேருந்து வசதி உண்டு. சப்த விடங்கங்களுள் இது நகவிடங்கர்; உன்மத்த நடனம். மதுரையில் அனல் வாதத்தில் இந்தவூர் **'போக மார்த்த பூண்முலையாள்'** (1.49) என்ற பதிகம் எரியாமல் நின்று 'பச்சைப் பதிகம்' எனப் பெயர் பெற்றது. நளன் பூசித்து கலி நீங்கப் பெற்ற தலம். சனி பெயர்ச்சியின்போது அது பெருவிழாவாகக் கொண்டாடப் பெறும். இலட்சக் கணக்கான மக்கள் கூட்டம் திரளும். சனி பகவான் தங்கக் காக்கை வாகனத்தில் வீதி வலம் வருவது கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

13. இந்நூல் பக். 145. காண்க.

பூவினில் வாசம் புனலிற் பொற்பு
புதுவிரைச் சாந்தினி நாற்றத்தோடு
நாவினிற் பாடல் நள்ளா றுடைய
நம்பெருமா னிதுஎன் சொல்லாய்
தேவர்கள் தானவர் சித்தர்விச் சாதரர்
கணத்தோடும் சிறந்து பொங்கி
ஆவினி லைந்துகந் தாட்டுங் கூடல்
ஆலவாயின்கண் அமர்ந்த வாறே. (4)

என்பது நான்காம் திருப்பாடல்.

நள்ளாற்றிறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு தெளிச்சேரி[14] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். வந்தவர் 'பூவலர்ந்தன கொண்டு' (2·3) என்ற முதற் குறிப்பினையுடைய திருப்பதிகம் பாடி இறைவனைப் போற்றுகின்றார். இதில்,

தவள வெண்பிறை தோய்தரு
தாழ்பொழில் சூழநல்
திவள மாமணி மாடந்
திகழ்தெளிச் சேரியீர்!

---

14. தெளிச்சேரி (கோயில்பத்து): பேரளம்—காரைக்கால் இருப்பூர்தி வழியில் 'காரைக் கோயில் பத்து' என்ற நிலையத்திலிருந்து ¾ கல் தொலைவு. சம்பந்தர் திருக்கூட்டத்தார், 'பரசமய கோளரிவிந்தார்' என்று விருது கூறிச் செல்வதைத் தடுத்த புத்தர்கள் தலையில் இடிவிழும் படியாகத் திருமுறை எழுதும் தொண்டர் 3·22:10 என்ற பாடலை ஓதியவுடன் அவ்வாறே இடி விழுந்தது. பிறகு அவர்களுட் சிலரோடு வாதம் செய்து இத்தொண்டரே வென்றார். சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற திருத்தலம்.

**குவளை பொற்கண்ணி துண்ணென்**
**வந்து குறுகிய**
**கவள மால்கரி யெங்ஙன்**
**நீர்கையிற் காய்ந்ததே. (6)**

என்பது ஆறாவது திருப்பாடல்.

**புத்தரை வாதில் வென்றது:** திருத்தெளிச்சேரியை வழிபட்டுத் தெளிச்சேரியின் அருகிலுள்ள **போதிமங்கை**[15] என்ற பௌத்தமடத்தின் அருகே வரும்போது 'பரசமயக் கோளரி வந்தார்' என்று முழக்கமிட்டுச் சின்னம், காளம் முதலிய பல்லியங்களை இயம்பி ஆரவாரிக்கின்றனர். இந்த முழக்கத்தையும் ஆரவாரத்தையும் கேட்கப் பொறாத புத்தர்கள் தம் சமயக் கல்வியில் மேம்பட்ட புத்த நந்தி என்பவனையடைந்து நிலைமையினை விளக்கி முறையிடுகின்றனர். இச்செய்தியை அறிந்து உளங்கனன்ற புத்த நந்தி என்பான் தேரர் கூட்டத்துடன் அங்கு விரைந்து வருகின்றான். சிவனடியார்களை நோக்கி, "நீங்கள் எங்களை வாதில் வென்ற பின்னரன்றோ நுமது வெற்றிக்கு அடையாளமாகிய சின்னம் முதலியவற்றைப் பிடித்தல் வேண்டும்" எனக் கூறித் தடுத்து நிறுத்துகின்றான். இதனைக் கேட்டு மனம் பொறாத அடியார்கள் அந்நிகழ்ச்சியைப் பிள்ளையாரிடம் தெரிவிக்கின்றனர். இதனைக் கேட்ட பிள்ளையார் "புத்தர்கள் வாதிற் பொருமிடத்து அறிவோம்" என்று அமைதியாகக் கூறுகின்றார். இந்நிலையில் பிள்ளையார் அருளும் பதிகங்களை அவ்வப்போது எழுதிக் கொண்டு வரும் சம்பந்த சரணாலயர் என்பவர் புத்த நந்தியின்மீது ஆத்திரப்பட்டு,

---

15. அந்தக் காலத்தில் நாகப்பட்டினம் முதலிய கீழ்க்கரைப்பட்டினங்களில் பௌத்தர்கள் பலர் மடம் அமைத்து வாழ்ந்து வந்தனர். இத்தகைய மடங்களில் ஒன்றுதான் '**போதிமங்கை**'.

**புத்தர் சமண்க முக்கையர் பொய்கொளார்**
**சித்தத்தவர்கள் தெளிந்து தேறின**
**வித்தக நீறணிவார் வினைப்பகைக்**
**கத்தர மாவன அஞ்செழுத்துமே. (3·22:10)**

என்ற திருப்பாட்டினை யோதி "அவன் தலைமீது இடிவிழ" என வெகுண்டுரைக்கின்றார். அன்பர் கூறிய மந்திர வாக்கின் மகிமையால் இடி விழவே அவன் தலை உடலினின்றும் அறுபட்டு வீழ்கின்றது.

இதனைக் கண்டு திடுக்கிட்டு அஞ்சிய புத்தர்கள் சிதறுண்டு ஓடுகின்றனர். அஃதுணர்ந்த பிள்ளையார் அடியார்களை நோக்கி "அரண் நாமமே ஓதுமின்" என்று பணிக்கின்றார். 'அரகர' முழக்கங் கேட்ட புத்தர்கள் மீண்டும் கூட்டமாகக் கூடிச் சாரிபுத்தன் என்பவனை அழைத்து வந்து பிள்ளையாரை அணுகி மந்திர வாதமின்றி தருக்க வாதமே புரியவேண்டும் என்கின்றனர். பிள்ளையாரும் அதற்கு இசைந்தருளுகின்றார். சந்திர மண்டபத்தில் சிவனடியார்களும் புத்தர்களும் ஒருங்கு கூடுகின்றனர். சம்பந்த சரணாலயரும் சாரிபுத்தனும் நிகழ்த்திய வாதத்தில் சாரிபுத்தன் தோல்வியுறுகின்றான். அது கண்டு அங்குள்ள புத்தர்கள் அனைவரும் பிள்ளையார் திருவடிகளை வணங்கி சைவர்களாகின்றனர். இங்ஙனம் பிள்ளையார் தம் அடியார்களைக் கொண்டு புத்தரை வாதில் வென்ற செய்தியை சேக்கிழார் அற்புதமாக விரித்துரைக்கின்றார்.[16]

**அப்பரைக் காணல் :** போதிமங்கையில் சிவநெறி பரப்பிய சண்பைவேந்தர் **திருக்கடவூர்** வருகின்றார். இறைவனை வழிபடுகின்றார். இஃது **இரண்டாவது** தடவைப் புரிந்த வருகை[17] (பதிகம் இல்லை). கடவூரில்

16. பெ. பு : ஞானசம்பந். 908 - 925.

17. அப்பர் பெருமானுடன் தலவழிபாடு (கட்டுரை - 8) —இந்நூல் பக். 156 காண்க.

தங்கியிருக்கும் நாளில் "அப்பர் எங்குற்றார்?" என அடியார்களை வினவுகின்றார். அவர்கள் அப்பெருமான் பூந்துருத்தியிலிருப்பதாகத் தெரிவிக்கின்றனர். அவரைக் காணும் பெருவிருப்புடன் பல தலங்களை வணங்கிச் செல்லும் நிலையில் காவிரியின் தென்கரையை அடைகின்றார்; திருப்பூந்துருத்தியை நோக்கி விரைகின்றார். பிள்ளையாரின் வருகையை முன்னதாகவே அறிந்த அப்பரடிகள் திருப்பூந்துருத்தி எல்லைக்கே வந்துவிடுகின்றார். வந்தவர் தொண்டர் கூட்டத்துடன் தாமும் ஒருவராகக் கலந்து பிள்ளையாரின் முத்துச் சிவிகையைத் தாங்கி வருகின்றார். இந்நிலையில் பிள்ளையாரின் நெஞ்சில் ஒருவகை உணர்ச்சி எழுகின்றது. "அப்பர்தாம் எங்குற்றார் இப்பொழுது?" என அடியார்களை வினவுகின்றார். இவ்வுரை கேட்ட வாகீசப் பெருமான் நெஞ்சம் நெக்குருகி நின்று இவ்வாறு செப்புவர் :

**" ஒப்பரிய தவஞ்செய்தேன்**
**ஆதலினால் உம்மடிகள்**
**இப்பொழுது தாங்கிவரப்**
**பெற்றுய்ந்தேன் யான்.**[18]

என்கின்றார். பிள்ளையார் விரைந்து சிவிகையை விட்டிழிந்து "இவ்வாறு செய்தருள்வதென்னை?" எனக் கூறி அப்பரடிகளை வணங்குகின்றார். அப்பர் பெருமானும் "ஞானசம்பந்தருக்கு எளியேனாற் செய்யத்தக்கது வேறு யாதுளது?" எனக்கூறி உடன் வணங்குகின்றார். அவண் இருந்த தொண்டர்கள் அனைவரும் இப்பெருமக்களின் நண்பின் திறத்தைக் கண்டு மனமுருகி இறைஞ்சிப் போற்றுகின்றனர்.

இருபெரு அடியார்களும் பூந்துருத்திக்[19] கோயிலுக்கு வந்து பூந்துருத்திப் பெருமானைப் பணிகின்றனர். (தலத்

---

18. பெ. பு : ஞானசம்பந். 935.

19. **பூந்துருத்தி** (திருப்பூந்துருத்தி) : தஞ்சையிலிருந்து 8 கல் தொலைவு. சப்தஸ்தான தலங்களுள் ஒன்று. அப்பர்

திற்குப் பதிகம் இல்லை). பின்னர் நாவுக்கரசரின் திருமடத்தில் எழுந்தருளுகின்றார் பிள்ளையார். நாவேந்தர் சண்பைவேந்தரை நோக்கி, போக்கும்வரவுமாகிய நிகழ்ச்சியை வினவுகின்றார். காழிவேந்தரும் பாண்டி நாட்டில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளனைத்தையும் ஆதியோடந்தமாக அப்பர் பெருமானுக்கு விரித்துரைக்கின்றார். இவற்றைச் செவிமடுத்த நாவுக்கரசர் பிள்ளையாரை அடி வணங்கி, "வாழி திருத்தொண்டென்னும் வான் பயிர் தான் ஓங்குதற்குச் சூழும் பெருவேலியானீர்" என்று புகழ் மாலை சூட்டுகின்றார். அன்பின் பெருவெள்ளம் அனைய மங்கையர்க்கரசியாரின் மாட்சியையும், குலச்சிறையாரின் தொண்டின் சிறப்பினையும் பிள்ளையார் எடுத்துரைக்கின்றார். இவ்விருபெருமக்களின் திருத்தொண்டினைக் கேட்டு மகிழ்ந்த நாவேந்தர் அவ்விருவர் தொண்டினையும் ஏற்று மகிழும் ஆலவாயிறைவனைப் பணிந்து வழிபடும் பெருவிருப்பால் உந்தப்படுகின்றார். அப்பரடிகளும் தொண்டை நாட்டின் சிறப்பினைப் பிள்ளையாருக்குச் சொல்ல, அவரும் சான்றோர்கள் வதியும் அந்நாட்டின் திருத்தலங்களை வழிபடப் பேரார்வமுறுகின்றார். வாகீசர் பிள்ளையார்பால் விடைபெற்றுப் பாண்டி நாட்டை நோக்கிப் புறப்படுகின்றார்.[20]

காழிவேந்தரும் அடியார்களுடன் காவிரியின் வடகரையை அடைகின்றார். அக்கரையிலுள்ள சில தலங்களை வழிப்படுகின்றார். முதலில் நெய்த்தானம் வருகின்றார்.

---

சுவாமிகள் இங்குத் திருமடம் அமைத்துப் பல பொதுப் பதிகங்கள் அருளினார். அத்திருமடச் சிதைவு இன்றும் உள்ளது. பாண்டி நாட்டிலிருந்து திரும்பிய பிள்ளையார் அப்பரைச் சந்தித்து அளவளாவுகின்றார். சம்பந்தர் பதிகம் இல்லை.

20. இவர்தம் பாண்டிநாட்டுத் திருத்தல வழிபாட்டை 'நாவுக்கரசர்' என்ற நூலில் உரிய இடத்தில் கண்டு தெளிக.

(இஃது இரண்டாம் முறை வழிபட்ட தலம்) இறைவனை வழிபடுகின்றார் (பதிகம் இல்லை).

நெய்த்தானத்திறைவனிடம் விடை பெற்றுக் கொண்டு ஐயாறு வருகின்றார். இங்கு இவரது வருகை இரண்டாவதாயினும்[21] மூன்று பதிகங்களால் இப்பொழுதும் வழிபடுகின்றார்.

'கலையார் மதி' (1.36) என்ற முதற்குறிப்புடையது முதற்பதிகமாகும்.

தலையின் தொடைமாலை யணிந்து
கலைகொண்ட தொர்கையினர் சேர்வாம்
நிலைகொண்ட மனத்தவர் நித்தம்
மலர்கொண்டு வணங்கும் ஐயாறே. (6)

என்பது இப்பதிகத்தின் ஆறாவது பாடல். அடுத்த பதிகம் 'பணிந்தவரரு' (1.120) என்ற முதற்குறிப்புடையது. இதில்,

வானமர் மதிபுல்கு சடையிடை யரவொடு
தேனமர் கொன்றையன் திகழ்தரு மார்பினன்
மானன மென்விழி மங்கையொர் பாகமும்
ஆனவன் வளநக ரந்த ணையாறே. (5)

என்பது ஐந்தாவது பாடல். மூன்றாவது பதிகம் 'திருத்திகழ்' (2.32) என்ற முதற்குறிப்புடையது.

பூதமொடு பேய்கள்பல பாடநட மாடிப்
பாதமுதல் பையரவு கொண்டணி பெறுத்திக்
கோதையர் இடும்பலி கொளும்பர னிடம்பூ
மாதவி மணங்கமழும் வண்திரு வையாறே. (6)

என்பது இப்பதிகத்தின் ஆறாவது பாடல்.

---

21. முதல் வருகை - கட்டுரை 5 காண்க. திருத்தலக் குறிப்பு பற்றி — அடிக்குறிப்பு 27 காண்க. இந்நூல் பக். 86 காண்க.

ஐயாற்றிறைவனிடம் விடை பெற்றுக் கொண்டு **கழுமலம்** வந்தணைகின்றார். காழியம் பதியிலுள்ள மறையவர் மகிழ்ந்து எதிர்கொள்ளுகின்றனர். பிள்ளையார் சிவிகையிலிருந்து இறங்கித் திருத்தோணிபுரக் கோயிலை யடைந்து மாதொரு பாகனார் மலரடி பணிகின்றார். கழுமலத்திறைவன்மீது **"உற்றுமை சேர்வது"** (3.113) என்ற முதற்குறிப்புடைய திருவியமகப் பதிகத்தை உவகையால் எடுத்தோதுகின்றார். இதில்,

**உற்றுமை சேர்வது மெய் யினையே;**
**யுணர்வது நின்னருள் மெய்யினையே;**
**கற்றவர் காய்வது காமனையே;**
**கனல்விழி காய்வது காமனையே;**
**அற்ற மறைப்பது முன்பணியே;**
**அமரர்கள் செய்வது முன்பணியே;**
**பெற்று முகந்தது கந்தனையே**
**பிரமபுரத்தை யுகந்தனையே.** (1)

என்பது முதல் திருப்பாடல். இப்பதிகத்தின் திருக்கடைக் காப்பில்,

**பருமதில் மதுரை மன்னவை யெதிரே**
**பதிகம தெழுநிலை யவையெதிரே**
**வருநதி யிடைமிசை வருகரனே**
**வசையொடு மலர்கெட வருகரனே.**

என்ற அடிகளில் "மதுரை மன்னவனாகிய பாண்டியனது பேரவையின் முன்னர்த் திருப்பதிகம் எழுதப்பெற்ற ஏடு நதியின்மீது எதிரேறிச் செல்லுதற்கு அருளிய இறைவனே" என்று பிரமபுரத்திறைவனைப் போற்றி மகிழ்தலைக் காணலாம். பின்னர்த் தம்மைப் பிரியாது உடன் வரும் திருநீலகண்ட யாழ்ப்பாணரை விறலியாருடன் அவரது மாளிகை செல்லப் பணிக்கின்றார்; தம்மைப் பெற்றெடுத்த அன்னையார் மகிழ்ந்து எதிர்கொள்ளத் தமது திரு மாளிகையில் சென்று அமர்ந்து ஓய்வு கொள்ளுகின்றார் காழிப்பிள்ளையார்.

# 13. நடுநாட்டுத் தல வழிபாடு

நடுநாட்டுத் திருத்தலங்கள் இருபத்திரண்டு. பாணருடன் பயணம் செய்யும்போது எருக்கத்தம்புலியூர், பெண்ணாகடம், நெல்வாயில் அரத்துறை, நெல் வெண்ணெய், முதுகுன்றம் ஆகிய ஐந்து தலங்களின் வழி பாடு நிறைவு பெற்று விடுகின்றது. தொண்டை நாட்டுத் திருத்தலப் பெரும் பயணத்தைத் தொடங்கும்போது பெரும் பாலான நடுநாட்டுத் தலவழிபாடு நிறைவு பெறுகின்றது. சீகாழிப் பதியிலிருந்து புறப்பட்டுத் தில்லைக் கூத்தப் பெருமானைப் பணிந்து பயணத்தைத் தொடங்குகின்றார் பிள்ளையார். இதனைச் சேக்கிழார் பெருமான்,

> **செல்வம் மல்கிய தில்லைமூ**
> **தூரினில் திருநடம் பணிந்தேத்திப்**
> **பல்பெ ருந்தொண்டர் எதிர்கொளப்**
> **பரமர்தந் திருத்தினை நகர்பாடி**
> **அல்கு தொண்டர்கள் தம்முடன்**
> **திருமாணி குழியினை அணைந்தேத்தி**
> **மல்கு வார்சடை யார்திருப்**
> **பாதிரிப் புலியூரை வந்துற்றார்.**[1]

என்று எடுத்துக்காட்டுவார். இவர் குறிப்பிட்டவாறு முதலில் தினைநகர்[2] வருகின்றார். 'தினைநகர் பாடி'

1. பெ. பு: ஞானசம்பந். 962.

2. தினைநகர் (தீர்த்தகிரி): கடலூர்-சிதம்பரம் இருப் பூர்தி வழியில் ஆலப்பாக்கம் என்ற நிலையத்திலிருந்து 5½ கல் தொலைவு. நம்பியாரூரர் மட்டிலும் இத்தலத் தைப் பாடியுள்ளார்.

என்று சேக்கிழார் பாடினாலும் பதிகம் கிடைக்கவில்லை; அடங்கன்முறையில் பதிகம் காணப்பெறவில்லை. தினை நகர்ப் பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு சோபுரம்[3] வருகின்றார். 'வெங்கணானை' (1.51) என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ் மாலையால் வழிபடுகின்றார். இதில்,

குற்றமின்மை உண்மைநீஎன்றுன்
அடியார் பணிவார்
கற்றகேள்வி ஞானமான
காரணம் என்னைகொலாம்
வற்றலாமை வாளரவம்
பூண்டயன் வெண்டலையில்
துற்றலான கொள்கையானே
சோபுர மேயவனே. (7)

என்பது ஏழாவது வாடா நறுமலர்.

சோபுர ஈசனிடம் விடைபெற்றுக் கொண்டு மாணிகுழி[4] வருகின்றார் பிள்ளையார். 'பொன்னியல் பொருப்பரையன்' (3.77) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகத்தால் தலத்திறைவனை வழிபடுகின்றார்.

---

3. சோபுரம் (தியாகவல்லி): ஆலம்பாக்கம் என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து 2 கல் தொலைவு. உப்பங்கழியைப் படகேறிக் கடக்க வேண்டும். கோயில் மணல் மூடியிருந்து சென்ற நூற்றாண்டில் அகழ்ந்தெடுக்கப் பட்டது. சம்பந்தர் மட்டிலுமே இத்தலத்தைப் பாடியுள்ளார்.

4. மாணிகுழி (திருமாணிகுழி): கடலூர் (புதுநகரம்) என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து 3½ கல் தொலைவு. இத்தலத்திற்குப் போகும் வழியில் திருவயிந்தபுரம் என்ற திருமால் தலம் உள்ளது. திருமால் வாமனாவதாரத்தில் (= மாணி) பூசித்ததை 3.77:4: பாசுரம் கூறும்.

மந்தமலர் கொண்டுவழி பாடுசெயு
　　மாணியுயிர் வவ்வ மனமாய்
வந்தவொரு காலனுயிர் மாளவுதை
　　செய்தமணி கண்ட னிடமாம்
சந்தினொடு காரகில் சுமந்துதட
　　மாமலர்கள் கொண்டு கெடிலம்
உந்துபுனல் வந்துவயல் பாயுமணம்
　　மாருதவி மாணி குழியே. (6)

[கெடிலம்—கெடிலநதி]

என்பது ஆறாவது வாடா நறுமண மலர். பாடல்களில் இயற்கைவளம் மிக அழகாகச் சித்திரிக்கப்படுகின்றது.

மாணிகுழிப் பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு திருப்பாதிரிப்புலியூர்[5] வருகின்றார் சம்பந்தப் பெருமான். ''முன்ன நின்ற'' (2.121) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ் மாலையால் பாதிரிப்புலியூர்ப் பெருமானை வழிபடுகின்றார்.

---

5. பாதிரிப்புலியூர் (திருப்பாப்புலியூர்): திருப்பாபுலியூர் இருப்பூர்தி நிலையத்திலிருந்து ¼ கல் தொலைவு. கடற்கரைத்தலம். கெடிலநதியின் தென்கரையிலுள்ளது. புலிக்கால் முனிவர் (வியாக்ரக பாதர்) பாதிரி மரத்தின் கீழிருந்த சிவலிங்கத்தைப் பூசித்தமையால் பாதிரிப்புலியூர் எனத் தலப்பெயர் வழங்குகின்றது. மல்கணர் என்ற முனிவர் சாபத்தால் பெற்ற முடக்கால் முயல் உருவில் பூசித்து அவ்வுரு நீங்கப்பெற்ற வரலாற்றுக் குறிப்பை 2.121:1 என்ற பாசுரம் கூறும். கல்லிற் பூட்டிக் கடலில் பாய்ச்சப்பெற்ற அப்பர் சுவாமிகள், அக்கல்லையே தெப்பமாகக் கொண்டு ஐந்தெழுத்தோதிக் கரையேறிய இத்தலத்தின் பகுதி 'கரையேறவிட்டகுப்பம்' என வழங்கப்பெறுகின்றது. இது 'வண்டிப்பாளையம்' என்று இப்போது வழங்குகின்றது. இந்த இடத்தில் சித்திரைமாதம் அனுடநாளன்று திருநாவுக்கரசர் சம்பந்தமான 'கரையேறவிட்ட

போரதினாலும் புகையாலும்
 உய்த்தே அடியார்கள்தாம்
போதினாலே வழிபாடுசெய்ய
 புலியூ ரதனுள்
ஆதிநாலும் வலமிலாத
 அடிகள்மறை
ஓதிநாளும் இடும்பிச்சை
 ஏற்றுண் டுணப்பாலதே (4)

என்பது நான்காவது நறுமலர். சம்பந்தர் அப்பர் பெருமானிடம் நட்புக் கொண்ட பிறகுதான் திருப்பாதிரிப் புலியூருக்கு வருகின்றார். இதுதான் அப்பர் காலத்தில் பாடலிபுரம் என்ற பெயரால் வழங்கியது. தமிழ்நாட்டுச் சமணரின் குருபீடத்தானமாகவும் நிலவியது. சமணப் பெரும்பள்ளிகள், கல்வி நிலையங்கள், மடங்கள் எல்லாம் இங்கு நிரம்பியிருந்தன. அப்பர் பெருமான் 'தருமசேனர்' என்ற சமண சந்நியாசி வாழ்க்கையைக் கழித்த இடம் இதுவேயாகும். இவற்றையெல்லாம் பிள்ளையார் அப்பர் பெருமான் மூலம் அறிந்திருக்க வேண்டுமாதலால், பிள்ளையார் இவற்றைப்பற்றியெல்லாம் இங்கு வந்த போது சிந்தித்திருக்க வேண்டும்.

பாதிரிப்பூர் இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு வடுகூர்[6] வருகின்றார். "சுடுகூரெரிமாலை" (1.87) என்ற திருப்பதிகம் பாடி வடுகூர் அடிகளை வழிபடுகின்றார்.

---

விழா' சிறப்பாக நடைபெற்று வருகின்றது. கெடிலநதி இந்த வழியாகத்தான் பாய்ந்தது என்றும் பின்னர் வழி மாறிப்போனது என்றும் சொல்வர். இங்கு நாவுக்கரசரின் நினைவாக ஒரு குளம், ஒரு படித்துறை, ஒரு மண்டபம் இப்போது அமைக்கப் பெற்றுள்ளன.

6. வடுகூர் (ஆண்டார் கோயில்): விழுப்புரம்-பாண்டிச்சேரி இருப்பூர்தி வழியில் உள்ள சின்னபாபு சமுத்திரம் என்ற நிலையத்திலிருந்து 2 கல் தொலைவு. சம்பந்தர் மட்டிலும் இத்தலத்தைப் பாடியுள்ளார்.

தளரும் கொடியன்னாள்
　　தன்னோ டுடனாகிக்
கிளரும் அரவார்த்துக்
　　கிளரும் முடிமேலோர்
வளரும் பிறைசூடி
　　வரிவண் டிசைபாட
ஒளிரும் வடுகூரில்
　　ஆடும் அடிகளே. (6)

என்பது ஆறாவது திருப்பாடல்.

வடுகூரிலிருந்து வக்கரை[7] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். (இது தொண்டை நாட்டுத் திருத்தலங்கள் 32 இல் ஒன்று). 'கறையணி மாமிடற்றான்' (3·60) என்ற முதற் குறிப்பினையுடைய செந்தமிழ் மாலையால் வக்கரை இறைவனை வழிபடுகின்றார்.

கார்மலி கொன்றையொடுங்
　　கதிர்மத்தமும் வாளரவும்
நீர்மலி யுஞ்சடைமேல்
　　நிரம்பாமதி சூடிநல்ல

---

7. வக்கரை (திருவக்கரை): சென்னை — விழுப்புரம் இருப்பூர்தி வழியில் உள்ள மயிலம் நிலையத்திலிருந்து 12 கல் தொலைவு. மயிலம் நிலையத்திலிருந்து மயிலம் சென்று அங்கிருந்து புதுச்சேரி செல்லும் வழியில் 4 கல் தொலைவு சென்ற பிறகு எரையூர் நெமிலி வழியாக 5 கல் தொலைவு சென்றால் இத்தலத்தை அடையலாம். வக்கரையிலுள்ள கருங்கற்கள் மரங்களைப்போல் தோன்றும். மூலத்தான இலிங்கம் மூன்று முகம் உடையது. நடராசர் வக்ர தாண்டவமூர்த்தி. சம்பந்தர் மட்டிலுமே இத் தலத்தைப் பாடியுள்ளார்.

வார்மலி மென்முலையாளொடும்
　　வக்கரை மேவியவன்
பார்மலி வெண்டலையிற்
　　பலிகொண்டுழல் பான்மையனே. (6)

என்பது ஆறாவது வாடா நறுமலர்.

வக்கரை இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு இரும்பை மாகாளம்[8] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். இதுவும் தொண்டை நாட்டுத் தலமாகும். 'மண்டு கங்கை' (2·117) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி இத்தலத்து எம்பெருமானை வழிபடுகின்றார்.

வெந்தநீறும் எலும்பும்
　　அணிந்த விடையூர்தியான்
எந்தைபெம்மானிடம் எழில்கொள்
　　சோலை இரும்பைதனுள்
கந்தமாயபல வின்கனிகள்
　　கமழும் பொழில்
மந்தியேறிக் கொணர்ந்துண்
　　டுகள்கின்ற மாகாளமே. (3)

என்பது இத்திருப்பதிகத்தின் மூன்றாவது திருப்பாடல்.

இரும்பை மாகாளத்திலிருந்து புறப்பட்டு திருவதிகை[9] வருகின்றார். பிள்ளையார் திருவதிகைக்கு எழுந்தருள்

---

8. இரும்பை மாகாளம் (இரும்பை): புதுச்சேரியிலிருந்து 5 கல் தொலைவு. சம்பந்தர் மட்டிலுமே இத்தலத்தைப் பாடியுள்ளார்.

9. அதிகை வீரட்டானம் (திருவதிகை): பண்ணுருட்டி இருப்பூர்தி நிலையத்திலிருந்து 2 கல் தொலைவு. சிவத் தலங்களுள் அதிகப்பட்டது (மேம்பட்டது) அதிகா, அதிகை. பழைய பல்லவச் சிற்ப முறையில் கோயிலும் இலிங்கமும் அமைந்திருக்கும் சிறப்பை நேரில்தான்

வதை முன்னமே கேட்டறிந்த சிவனடியார்கள் அவரை எதிர்கொண்டு வரவேற்கின்றனர். திருவதிகை வீரட்டானத் திறைவர் பூதம்பாட நின்றாடும் தமது ஆடற் கோலத்தைப் பிள்ளையாருக்குக் காட்டருளுகின்றார். அத் தெய்வக் காட்சியைக் கண்டு உளம் உருகிய காழிவேந்தர் **'குண்டைக் குறட்பூதம்'** (1·46) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடிப் போற்றுகின்றார்.

> **ஆடல் அழல்நாக மரைக்கிட் டசைத்தாடப்**
> **பாடல் மறைவல்லான் படுதம் பலிபெயர்வான்**
> **மாட முகட்டினமேல் மதிதோய் அதிகையுள்**
> **வேடம் பலவல்லான் ஆடும்வீரட் டானத்தே** (3)

என்பது **மூன்றாம்** திருப்பாடல். பிள்ளையார் திருவதிகைப் போந்தபோது அப்பர் பெருமானுக்காக வீரட்டானத் திறைவர் நிகழ்த்திய அற்புதச் செயல்கள், திலகவதியாரின் திருத்தொண்டு ஆகியவற்றையும் பிள்ளையார் நினைந்து பார்த்திருக்க வேண்டும். திலகவதியாரையும் சந்தித்து உரையாடியிருக்க வேண்டும். ஆனால் சேக்கிழார் பெருமான் இதுபற்றிய குறிப்பே தரவில்லை.

---

அநுபவிக்கவேண்டும். அப்பர் சுவாமிகட்குத் தொல்லை கொடுத்து, கடைசியில் சைவனாகிய பல்லவன் சமணர் பாழிகளை இடித்து, அக்கற்களைக் கொண்டே கட்டிய குணபதேசுவரம் வீரட்டேசுவரர் கோயிலுக்கருகில் உள்ளது. இவருக்குச் சூலைநோய் நீக்கி **'நாவுக்கரசு'** என்ற பட்டம் அளித்தவர் வீரட்டேசரே. அப்பரும் திலகவதி யாரும் சரியைத் தொண்டு செய்த அருமைத்தலம். சுந்தரருக்குத் திருவடி தீட்சை செய்த சித்தவட மடம் கோயிலின் தெற்கு வீதியிலுள்ளது. அருகில் கெடில நதி ஓடுகின்றது. திரிபுர தகன உற்சவம் சித்திரைப் பெருவிழாவில் திருத்தேரோட்டத்தன்று நடைபெறு கின்றது.

திருவதிகையிலிருந்து திருவாமாத்தூர்[10] வருகின்றார் சண்பைவேந்தர். இரண்டு பதிகங்களால் பிள்ளையார் ஆமாத்தூர் இறைவனை வழிபடுகின்றார். முதல் பதிகம் 'குன்றவார்சிலை' (2·50) என்ற முதற் குறிப்பையுடையது. இதில்,

> மங்கை வாணுதல் மான்மனத்திடை
> வாடியூட மணங்க மழ்சடைக்
> கங்கையாள் இருந்த கருத்தாவ தென்னைகொலாம்
> பங்கய மதுவுண்டு வண்டிசை
> பாட மாமயில் ஆடவிண்முழ
> வங்கயையா லதிர்க்கும் ஆமாத்தூ ரம்மானே. (7)

என்பது ஏழாவது பாடல். இரண்டாவது பதிகம் 'துன்னம் பெய்' (2·44) என்ற முதற்குறிப்புடையது. இதில்,

> கோணாகப் பேரல்குல் கோல்வளைக்கை மாதராள்
> பூணாகம் பாகமாப் புல்கி யவளோடும்
> ஆணாகங் காதல்செய் ஆமாத்தூ ரம்மானைக்
> காணாத கண்ணெல்லாம் காணாத கண்களே. (4)

---

10. ஆமாத்தூர் (திருவாமாத்தூர்): விழுப்புரம் இருப்பூர்தி நிலையத்திலிருந்து 4 கல் தொலைவிலுள்ளது. ~~இஃது அப்பர் சுவாமிகள் திருவவதரித்த தலம்.~~ கோயில் தன்னந் தனியாக உள்ளது. இறைவன், பசுபதீசுவரர்; இறைவி, திரிபுரசுந்தரி. 16 குருடர்கள் நாடோறும் கோயிலில் திருப்பதிகம் 'விண்ணப்பிக்கவும் (= தேவாரம் ஓதவும்) அவர்கட்குக் கண் காட்டுவார் இருவர் (= விழிப் பார்வையுடைய வேறு இருவர்) வழித்துணையாக அவர்களைக் கையிற் பிடித்து நடத்திச் செல்லவும் திட்டம் செய்யப்பெற்றதை ஒரு கல்வெட்டு கூறுகின்றது. இத் தலத்து இறைவனை இராமபிரான் வழிபட்டதை 5·44:5 (அப்பர்) பாசுரம் கூறும். இத்தலத்து அப்பர் பாசுரங்கள் சிலவற்றில் (6·9 பதிகம் காண்க) இறைவன் அழகியரே

என்பது நான்காவது பாடல். பிள்ளையார் ஆமாத்தூரி லிருக்கும் போது அப்பர் பெருமானின் பிறப்பு, வளர்ப்பு, இளமைச் செயல்கள், மதமாற்றம் முதலியவற்றைச் சிந்தித்திருக்க வேண்டும்.

திருவாமாத்தூர் இறைவனிடம் விடை பெற்றுக் கொண்டு திருக்கோவலூர்[11] வருகின்றார். 'படை கொள் கூற்றம்' (2.100) என்ற முதற்குறிப்புடைய பதிகம் பாடி வீரட்டானரைப் போற்றுகின்றார். இதில்,

> **உரையும் பாட்டும் தளர்வெய்தி**
> **உடம்பு மூத்த போதின்கண்**
> **நரையும் திரையும் கண்டெழ்கி**
> **நகுவர் நமர்க ளாதலால்**
> **வரைகொள் பெண்ணை வந்துலா**
> **வயல்கள் சூழ்ந்த கோவலூர்**
> **விரைகொள் சீர்வெண் ணீற்றினை**
> **வீரட் டானஞ் சேர்துமே.** (7)

என்பது ஏழாவது பாடல். ஒவ்வொரு பாடலிலும் மூன்றாவது நான்காவது அடிகளில் இயற்கை வருணனை

---

என வழங்கப் பெற்றிருப்பதற்கேற்பக் கல் வெட்டுகளிலும் 'அழகிய நாயனார்' எனற பெயர் காணப்படுகின்றது. இதையே வடமொழியில் 'அபிராமேசுவரர்' என்கின்றனர்.

11. **கோவலூர் வீரட்டம்** (கீழூர்): விழுப்புரம்—காட்பாடி இருப்பூர்தி வழியில் திருக்கோயிலூர் நிலையத்திலிருந்து 1 கல் தொலைவிலுள்ளது. பெண்ணையாற்றின் தென்கரை யிலுள்ளது. அந்தகாசுரனைச் சங்கரித்த வீரட்டம். **மெய்ப்பொருள் நாயனார்** அரசு புரிந்து முத்தியடைந்த தலம். முதலாழ்வார்கள் மூவரும் சேர்ந்து முகுந்தனைத் துதித்த இடமும் இவ்வூரே. திருமால் கோயில் திரிவிக்கிரமன் பெரும் புகழ் பெற்றவன்.

காணலாம். நாலாயிரத்தில் ஆழங்கால் பட்டவர்கள் திருக்கோவலூர் மங்களாசாசனத் திருமொழியின் பாடல்களிலும் மூன்றாவது நான்காவது அடிகளில் தலத்து வளம் சித்திரிக்கப் பெற்றிருப்பதை நினைவு கூரத் தவறார்கள்.[12]

விரட்டப் பெருமானிடம் விடை பெற்றுக் கொண்டு **அறையணி நல்லூர்**[13] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். இத்தலத்து இறைவனை **'பீடினாற் பெரியோர்களும்'** (2.77) என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ் மாலையால் வழிபடுகின்றார். இதில்,

**விரையி னார்கொன்றை சூடியும்**
**வேக நாகமும் வீக்கிய**
**அரையி னாரறை யணிநல்லூ**
**ரண்ண லாரழ காயதோர்**
**நரையி னார்விடை யூர்தியார்**
**நக்க னார்நறும் போதுசேர்**
**உரையி னாலுயர்ந் தார்களும்**
**உரையி னாலுயர்ந் தார்களே.** (6)

என்பது தமிழ் மணங்கமழும் ஆறாவது வாடா நறுமர்.

---

12. பெரி - திரு. 2·10. காண்க.

13. **அறையணி நல்லூர்** (அறகண்ட நல்லூர்): திருக்கோயிலூர் இருப்பூர்தி நிலையத்திலிருந்து ¼ கல் தொலைவு. நிலையத்திற்கு அருகில் உள்ளது. கற்பாறையில் குடையப் பெற்ற குகைக்கோயில் வேறொன்றுள்ளது. மலை மேல் வலம் வரும்போது ஓரிடத்தில் நின்று பார்த்தால் திருஅண்ணாமலை நன்கு தெரியும். அன்பர்கள் இதனைக் காட்டக் கண்ட காழிப்பிள்ளையார் இங்கிருந்தவாறே 'உண்ணமுலை உமையாளொடும்' (1.10) எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினதாக வரலாறு. சம்பந்தர் பாடல் மட்டுமே கொண்ட தலம்.

அறையணி நல்லூர் அண்ணலிடம் விடை பெற்றுக் கொண்டு திருவண்ணாமலை[14] வந்து சேர்கின்றார் வேணு புரத்தார். அண்ணாமலையாரை இரண்டு பதிகங்களால் வழுத்துகின்றார். முதற்பதிகம் 'உண்ணாமுலை உமையாளொடும்' (1.10) என்ற முதற்குறிப்புடையது. இதில்,

> உண்ணாமுலை உமையாளொடும்
> உடனாகிய ஒருவன்
> பெண்ணாகிய பெருமான் மலை
> திருமாமணி திகழ

---

14. அண்ணாமலை (திருவண்ணாமலை): விழுப்புரம்-காட்பாடி இருப்பூர்தி வழியில் திருவண்ணாமலை நிலையத்திலிருந்து 1 கல் தொலைவு. பஞ்ச பூதத் தலங்களுக்குள் இது தேஜஸ் என்னும் தீயைக் குறிக்கும். அழல் உருவே மலையாக உள்ளது என்பது ஐதிகம். மலைகள் நான்கு வகை என்று நிலநூல் (geology) கூறுவதுள் இம்மலை நெருப்பினால் வந்தது (Igneons rock) என்று நில வல்லுநர் கூறுவர். அண்ணாமலையார் உண்ணாமுலையம்மை அழகும் அருளும் நிரம்பியவை. அண்ணாமலையார் அஷ்டபந்தன மருந்து சாத்திப் பிரதிட்டை செய்யாமல் சுவர்ண பந்தனம் (சுத்தமான தங்கபந்தனம் செய்யப் பெற்றுள்ளார். அபிடேகத்தின்போது தரிசிக்கலாம். நினைத்தாலே முத்தி தரும் நலம். மணிவாசகர் திருவெம்பாவை இங்கு அருளப் பெற்றது. தேவாரம், திருவாசகம் திருப்புகழ் முதலியவற்றோடு அருணகிரியந்தாதி, அண்ணாமலை வெண்பா, சோணசைலமாலை அருணைக்கலம்பகம் முதலியனவும் புகழ் பெற்றவை. சைவ எல்லப்ப நாவலர் இயற்றிய 'அருணாசல புராணம், இலக்கியச் சுவை மிக்கது. அண்ணாமலை தீபம் பெரும் புகழ் பெற்றது; கார்த்திகை மாதம் நடைபெறும் திருவிழாவுடன் நடைபெறுவது.

**மண்ணார்ந்தன அருவித்திரள்**
**மழலைம் முழவ திரும்**
**அண்ணாமலை தொழுவார்வினை**
**வழுவாவண்ண மறுமே. (1)**

என்பது முதற்பதிகம். இப்பதிகம் அறையணி நல்லூரில் இருந்த வண்ணமே பாடியது என்பது முன்னமே குறிப்பிட்டுள்ளோம்; அதனை ஈண்டு நினைவு கூரலாம்.

'**பூவார் மலர் கொண்டு**' (1.69) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் இத்திருத்தலப் பெருமான்மீது எழுந்த இரண்டாவது பதிகமாகும்.

**எனைத்தொ ரூழி அடியா**
**ரேத்த இமையோர் பெருமானார்**
**நினைத்துத் தொழுவார் பாவம்**
**தீர்க்கும் நிமலர் உறைகோயில்**
**கனைத்த மேதி காணாது**
**ஆயன் கைம்மேற் குழலூத**
**அனைத்தும் சென்று திரளும்**
**சாரல் அண்ணா மலையாரே. (6)**

என்பது இதில் **ஆறாவது** திருப்பாடலாகும். பாடலின் இறுதி இரண்டு அடிகளில் காட்டப் பெறும் '**ஆயன் செயல்**' அநுபவித்து மகிழத் தக்கது. சம்பந்தர் சில நாட்கள் இத்தலத்தில் தங்கியிருக்கின்றார்.

இத்துடன் நடுநாட்டுத் திருத்தல வழிபாடு நிறைவு பெறுகின்றது. நடுநாட்டுத் திருத்தலங்கள் இருபத்திரண்டினுள் ஐந்தன் வழிபாடு வேறொரு சந்தர்ப்பத்தில் நிறைவு பெற்றதை மேலே குறிப்பிட்டோம். எஞ்சியுள்ள **பதினேழு** தலங்களுள் **பத்தின்** வழிபாட்டை இந்தப் பயணத்தில் நிறைவு செய்துவிடுகின்றார். இன்னும்

எஞ்சியிருக்கும் ஏழு தலங்களில் 'புறவார் பனங்காட்டூர்' என்ற தலத்தை (நடுநாட்டுக்குரியது) தமது தொண்டை நாட்டுத் திருத்தலப் பயணத்தில் இறுதிக் கட்டத்தில் வழிபடுகின்றார். மீதமுள்ள ஆறு தலங்கட்குச் சென்றதாக அறியக் கூடவில்லை. மேலும் தாம் செல்லும் வழியருகேயுள்ள தொண்டை நாட்டுத் திருத்தலங்களாகிய திருவக்கரை, திருஇருப்பை மாகாளம் என்ற இரு தலங்களின் வழிபாட்டையும் இப்பயணத்திலேயே நிறைவு செய்தது கவனிக்கத் தக்கது. இன்னும் தம் வழியில் நேர்படாத 'புறவார் பனங்காட்டூர்' என்ற தலத்தை இப் பயணத்தில் ஒதுக்கி வைத்ததும் நினைக்கத் தக்கது.

# 14. தொண்டை நாட்டுத் திருத்தலப் பயணம்

சான்றோர்களை உடைத்தாகிய தொண்டை நாட்டில் முப்பத்திரண்டு சிவத்தலங்கள் உள்ளன. நடுநாட்டுத் திருத்தல வழிபாட்டை நிறைவு செய்து கொண்ட கழுமல வேந்தர் தொண்டை நாட்டுப் பயணத்தைத் தொடங்குகின்றார். திருவோத்தூர்[1] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். 'பூத்தேர்ந்தாயன்' (1.54) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடி திருவோத்தூர் இறைவனை வழுத்துகின்றார். இதில்,

> பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
> ஏத்தாதார் இல்லை எண்ணுங்கால்
> ஓத்தூர் மேய வொளிமழுவா ளங்கைக்
> கூத்தீ ரும்ம குணங்களே (1)

---

1. ஓத்தூர் (திருவேதிபுரம், திருவத்தூர்): காஞ்சியிலிருந்து 19 கல் தொலைவிலுள்ளது. காஞ்சியிலிருந்து பேருந்து வசதி உண்டு. வந்தவாசி செல்லும் பேருந்தில் ஏற வேண்டும். கோயிலின் மேற்கில் சேயாறு (செய்யாறு) ஓடுகின்றது. சிவபெருமான் தேவர்கள் முனிவர்கட்கு வேதப் பொருளை ஓதியதலம் (ஓத்துவேதம்). சம்பந்தர் அடியார் வேண்டுகோட்கிணங்கி ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கிய அற்புதம் நிகழ்ந்த தலம். தை மாதம் இரத சப்தமியைத் தேர்த்திருநாளாகக் கொண்ட பத்து நாள் திருவிழா நடைபெறுகின்றது. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற திருத்தலம்.

என்பது முதல் பாடல். நான் திருப்பதியில் பணியாற்றிய போது (1975 என்று நினைக்கின்றேன்) செய்யாறு அரசினர் கல்லூரியில் முதல்வராக இருந்த பேராசிரியர் க. பெருமாள் கல்லூரியில் ஒரு சிறப்புச் சொற்பொழிவுக்கு அழைத்திருந்தார். 'அறிவியல் தமிழ்' என்ற தலைப்பில் பேசியதாக நினைவு. பேராசிரியர் பெருமாள் உழவர் குடிவழியைச் சேர்ந்தவர். உடல் உழைப்புக்கு அஞ்சாதவர்; அப்பர் பெருமானின் கைத்தொண்டு இவருக்கு அகத்தெழுச்சியை விளைவித்திருக்க வேண்டும். பாலைவனமாக இருந்த கல்லூரி வளாகத்தைச் சோலைவனமாக்கிப் பொலிவுறச் செய்த திருத்தொண்டை நேரில் கண்ணுற்றேன். இவரே உடலுழைப்பிற்கு அஞ்சாதவராதலால் 'தலைவனைப் பின்பற்று' (Follow the Leader) என்ற ஆங்கில மொழிக்கிணங்க மாணாக்கர்களில் பெரும்பாலோர் இவர் வழி நடந்து பெரும் ஒத்துழைப்பு நல்கியதால் இவர் பணி சிறப்புற்றோங்கியது.

கல்லூரியில் பிறபாடங்களைத் தமிழில் கற்பிப்பதில் பேரூக்கம் காட்டி வந்தவர். நான் வேதியியல் பட்டதாரியாதலால என்னை பி. எஸ்சி வகுப்பில் வேதியியல் நடைபெறும் வகுப்பொன்றிற்கு இட்டுச் சென்றார். அறிவியல் பேராசிரியர் தமிழில் அற்புதமாகக் கற்பித்தது என்னை வியக்க வைத்தது. ஒருசில கலைச் சொற்களைத் தவிர ஓர் ஆங்கிலச் சொல்லோ, வடமொழிச் சொல்லோ, கொச்சைத் தமிழோ கலவாமல் இலக்கியம் கற்பிப்பது போல் அழகாகக் கற்பித்ததை நேரில் கண்டு மகிழ்ந்தேன். மாணாக்கர்கள் முகங்களிலெல்லாம் பகலவனைக் கண்ட தாமரை மலர்களையொத்த மலர்ச்சியைக் கண்டு பெருங் களிப்புற்றேன்.

நான் செய்யாற்றில் தங்கியிருந்த காலத்தில் ஒருநாள் காலை என்னையும் பேராசிரியர் ந. சஞ்சீவியையும் (இவரும் சொற்பொழிவுக்காக வந்திருந்தவர்) திருவோத்தூருக்கு

இட்டுச் சென்று வழிபாடு செய்துவைத்தார். ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கி அற்புதம் நிகழ்த்திய சம்பந்தப் பெருமானையும் நினைவு கூரச்செய்தது இன்றும் என்மனத்தில் பசுமையாகவே உள்ளது. இது நிற்க.

**ஆண்பனை பெண்பனையாதல் :** சம்பந்தர் திருவோத்தூர் இறைவனை வழிபட்டு அவ்வூரில் தங்கியிருந்தபொழுது சிவனடியார் ஒருவர் காழிவேந்தரை வணங்கி நின்று, "எளியேன் இறைவனுக்கு அடிமைத் தொண்டன். சிவனடியார்கட்கெனத் தண்ணீர் இறைத்து வளர்த்த பனைகள் ஒன்றேனும் காய்த்திலது. இனையறிந்த சமணர்கள் 'இப்பனைகளைச் சிவனருளால் காய்க்க வைக்க முடியுமா?' என வினவி அடியேனை இகழ்கின்றனர்," என முறையிடுகின்றார். இது கேட்ட பிள்ளையார் திருக்கோயிலினுள் சென்று மேற்குறிப்பிட்ட திருப்பதிகத்தைப் பாடி அதன் திருக்கடைக் காப்பில்,

> **குரும்பை யாண்பனை யின்குலை யோத்தூர்**
> **அரும்பு கொன்றை அடிகளைப்**
> **பெரும்புகலி யுள்ஞான சம்பந் தன்சொல்**
> **விரும்பு வார்வினை வீடே.**

என முடித்த அளவில் அங்கிருந்த ஆண்பனைகளெல்லாம் பெண்பனைகளாக மாறிக் குரும்பை யீன்று காய்க்கின்றன. இத்திருவருள் நிகழ்ச்சியை நேரில் கண்ட சமணர்கள் பலரும் தமது சமயத்தை வெறுத்துச் சிவநெறியைத் தழுவிப் பிள்ளையாரை வணங்கினார்கள் என்பது வரலாறு.[2]

திருவோத்தூரிலிருந்து பிள்ளையார் **திருமாகறல்**[3] என்ற தலத்திற்கு வருகின்றார். **'வீங்குவிளை'** (3.72) என்ற

---

2. பெ.பு. ஞானசம்பந். 977—983.

3. **மாகறல்:** காஞ்சியிலிருந்து 10 கல் தொலைவு. பேருந்து வழி. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்றுள்ள தலம்.

முதற்குறிப்புடைய செந்தமிழ் மாலையால் இத்தலத்து எம்பெருமானை வழிபடுகின்றார்.

துஞ்சுநறு நீலமிருள் நீங்கவொளி
தோன்றுமது வார்க முனிவாய்
மஞ்சுமலி பூம்பொழிலின் மயில்கள்நட
மாடல்மலி மாகற லுளான்
வஞ்சமத யானையுரி போர்த்து மகிழ்
வானொர்மழு வாளன் வளரும்
நஞ்சமிருள் கண்டமுடை நாதனடி
யாரை நலியா வினைகளே (5)

என்பது இந்த மாலையில் நறுமணம் மிக்க வாடா நறுமலர். இந்தத் தலத்தைப் பற்றிச்சிந்திக்கும் நமக்கு முதன் முதலாக மொழியியல் பற்றிச்சிந்தித்து முதல்நூல் எழுதி வெளியிட்ட மாகறல் கார்த்திகேய முதலியார் நினைவிற்கு வருகின்றார்.

மாகறல் மாதேவனிடம் விடைபெற்றுக் கொண்டு குரங்கணில் முட்டத்துக்கு[4] வருகின்றார். 'விழுநீர் மழுவாட்' (1.31) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி தலத்துப் பெருமானை வழிபடுகின்றார் வேணுபுரத்தார். இதில்,

இறையார் வளையாளை யொர்பாகத் தடக்கிக்
கறையார் மிடற்றான் கரிகீறிய கையான்
குறையார் மதிசூடி குரங்கணில் முட்டத்
துறைவான் எமையாள் உடையொண் சுடரானே (5)

என்பது ஐந்தாவது வாடா நறுமலர்.

4. குரங்கணில் முட்டம்: காஞ்சியிலிருந்து 6 கல் தொலைவிலுள்ளது. குரங்கு (வாலி) அணில், முட்டம் (காக்கை) பூசித்த தலம். சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

குரங்கணில் முட்டத் திறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு காஞ்சி திருவேகம்பம்[5] வருகின்றார் காழிப் பிள்ளையார். 'மறையானை' (2.12) என்ற முதற்குறிப் புடைய திருப்பதிகத்தால் வழிபடுகின்றார். இதில்,

குன்றேய்க்கு நெடுவெண்மாடக்
 கொடிகூ டிப்போய்
மின்றேய்க்கு முகில்கள்
 தோயும் வியன்கச்சியுள்
மன்றேய்க்கு மல்குசீரான்
 மலியே கம்பம்
சென்றேய்க்கும் சிந்தையார்
 மேல்வினை சேராவே. (4)

(மேல்வினை—வருவினை)

---

5. **கச்சி ஏகம்பம்** (ஏகாம்பரேசுவரர் கோயில்): செங்கல்பட்டு—அரக்கோணம் இருப்பூர்தி வழியில் உள்ள காஞ்சிபுரம் என்ற நிலையத்திலிருந்து 1 கல் தொலைவு. ஐயடிகள் காடவர்கோன், மறவாது கல் எறிந்த சாக்கியர், திருக்குறிப்புத் தொண்டர் முத்தி பெற்ற தலம். என்றும் அழியாத மாவடியின் கீழ் இருத்தலால் ஏகாம்பரன் ஆயினன் (ஏக ஆம்பரன்—ஒருமாவின் கீழ் இருப்பவன்). காஞ்சிப்பதியிலுள்ள தேவார வைப்புத்தலங்கள் பல தலங்களின் வரலாற்றைக் காஞ்சி புராணத்தில் காணலாம். மூலத்தானம் மணலாதலால் அபிடேகம் இல்லை. புனுகுச் சட்டமே சாத்தப் பெறுவது. ஆவுடையாருக்கே அபிடேகம். காஞ்சிபுரத்திலுள்ள சிவாலயங்கட்கு அம்மன் சந்நிதியே இல்லை. இவ்வாலயங்களிலுள்ள சிவபெருமானுக்கு அம்பிகை காமாட்சியம்மையாகத் தனிக்கோயிலில் உள்ளார். பஞ்சபூதங்களுள் மணல் இலிங்கமுள்ள இத் தலம் பிருதிவித்தலம். கண்ணிழந்த சுந்தரர் இத்தலத்தில் இடக்கண் பெற்றார். முத்திதரும் நகரங்கள் ஏழனுள் இஃது ஒன்று. இலக்கியச் சிறப்பும் சாத்திரச் சிறப்பும் கொண்ட தலம்.

என்பது நான்காம் திருப்பாடல். அடுத்து, அறப்பெருஞ் செல்வக் காமக் கோட்டத்திற்கு வந்து காமாட்சி அம்மையை வழிபட்டு மீண்டும் ஏகம்பம் சென்று மூன்று செந்தமிழ் மாலைகளால் வழிபடுகின்றார்.

'பாயும் விடை' (3.114) என்ற முதற்குறிப்புடையது முதல் செந்தமிழ் மாலை. இதில்,

வேட னாகி விசயற் கருளியே;
வேலை நஞ்ச மிசையற் கருளியே;
ஆடு பாம்பரை ஆர்த்த துடையதே;
அஞ்சு பூதமும் ஆர்த்த துடையதே;
கோடு வான்மதிக் கண்ணி யழகிதே;
குற்ற மின்மதிக் கண்ணி யழகிதே;
காடு வாழ்பதி யாவது மும்மதே;
கம்ப மாபதி யாவது மும்மதே. (5)

என்பது ஐந்தாவது வாடா நறுமலர். அடுத்த மாலை 'கருவார் கச்சி' (3.41) என்ற முதற்குறிப்புடையது. இச் சிறு மாலையில்,

படமார் கச்சி
இடமே கம்பத்
துடையா யென்ன
அடையா வினையே. (5)

என்பது நறுமணம் மிக்க ஐந்தாவது தமிழ்மலர். மூன்றாவது மாலை 'வெந்த வெண்பொடி' (1.133) என்ற முதற்குறிப் புடையது.

தோட ணிம்மலர்க் கொன்றை
சேர்சடைத் தூமதி யம்புனைந்து
பாடல் நான்மறை யாகப்
பல்கணப் பேய்க ளவைசூழ
வாடல் வெண்டலை யோடன
லேந்தி மகிழ்ந்துட னாடல்புரி
சேடர் சேர்கலிக் கச்சி
ஏகம்பஞ் சேர இடர்கெடுமே. (5)

என்பது ஐந்தாவது தேன் பிலிற்றும் நறுமணம் மிக்க செந் தமிழ் மலர்.

கச்சி ஏகம்பனிடம் விடை பெற்றுக் கொண்டு **கச்சி நெறிக் காரைக்காடு**[6] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார் காழிவேந்தர். வந்தவர் **'வாரணவு'** (3.65) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ் மாலையால் வழிபடுகின்றார்.

**பன்மலர்கள் கொண்டடிக்கீழ்**
**வானோர்கள் பணிந்திறைஞ்ச**
**நன்மையிலா வல்லவுணர்**
**நகர்மூன்றும் ஒருநொடியில்**
**வின்மலையின் நாண்கொழுவி**
**வெங்கணையா லெய்தழித்த**
**நின்மலனார் கலிக்கச்சி**
**நெறிக்காரைக் காட்டாரே.** **(6)**

என்பது இம்மாலையின் நறுமணம் கொழிக்கும் **ஆறாவது** நன்மலர்.

காரைக்காட்டிறைவனிடம் விடை பெற்றுக் கொண்டு **கச்சி அநேகங்காவதம்**[7] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். வழிபடுகின்றார் (பதிகம் இல்லை). இத்தலத்திலிருந்து

---

6. **கச்சி நெறிக் காரைக்காடு:** (திருச் சாலீசுவரன் கோவில்): காஞ்சி இருப்பூர்தி நிலையத்திலிருந்து $1\frac{1}{2}$ கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

7. **கச்சி அநேகங்காவதம்:** காஞ்சி இருப்பூர்தி நிலையத்திலிருந்து $1\frac{1}{2}$ கல் தொலைவு. இது புத்தேரித் தெருவிலுள்ளது. காஞ்சியிலுள்ள சிவாலயங்களில் அம்பிகைக்கு மூலத்தானம் இல்லை. காமாட்சியம்மன் சந்நிதி தனிக் கோயிலாக உள்ளது. சுந்தரர் பாடல் மட்டிலும் கொண்டது.

கச்சித் திருமேற்றளிக்கு[8] வருகின்றார் கழுமல வேந்தர். இரண்டு சந்நிதிகளையும் வழிபடுகின்றார் (பதிகம் இல்லை).

காஞ்சியிலிருந்து மாற்பேறு[9] என்ற திருத்தலத்திற்கு ஏகுகின்றார். இரண்டு திருப்பதிகங்களால் வழிபடுகின்றார். 'ஊறியார் தரு' (1.55) என்பது முதற் பதிகம். இதில்,

> சால மாமலர் கொண்டு சரணென்று
> மேலை யார்கள் விரும்புவர்
> மாலி னார்வழி பாடுசெய் மாற்பேற்று
> நீலமார் கண்ட நின்னையே. (4)

என்பது நான்காவது திருப்பாடல். அடுத்த பதிகம் 'குருந் தவன்' (1.114) என்ற முதற்குறிப்புடையது. இதில்,

> பெண்ணினல் லாளையோர் பாகம் வைத்துக்
> கண்ணினாற் காமனைக் காய்ந்தவன்றன்
> விண்ணவர் தானவர் முனிவ ரோடு
> மண்ணவர் வணங்குநன் மாற்பேறே. (6)

---

8. கச்சித் திருமேற்றளி (பிள்ளை பாளையம்): காஞ்சி இருப்பூர்தி நிலையத்திலிருந்து $1\frac{1}{2}$ கல் தொலைவிலுள்ளது. பேருந்து நிலையத்தின் அருகிலுள்ளது. இத் திருக்கோயிலில் சிவபெருமானுக்கு இரண்டு சந்நிதிகள் உள்ளன. ஒன்று திருமாலுருவம். சம்பந்தர் பதிகம் ஓத உருகிச் சிவலிங்கம் ஆகிய ஓதவுருகீசர் சந்நிதி; மற்றொன்று திருமேற்றளி நாதர் சந்நிதி — இச்சந்நிதித் தெருவின் கோயிலில் ஆளுடைய பிள்ளையார் கோயில் உள்ளது. இவர் வருகையால் இப்பகுதி பிள்ளையார் பாளையம் எனப் பெயர் பெற்றது.

9. மாற்பேறு (திருமால்பூர்): செங்கல்பட்டு - அரக்கோணம் இருப்பூர்தி வழியில் திருமால்பூர் நிலையத்திலிருந்து 3 கல் தொலைவு. திருமால் சக்கராயுதம் வேண்டிச் சிவனை வழிபட்டுப் பெற்ற தலம்.

என்பது ஆறாவது பாடல். இப்பதிகத்தில் ஏழாவது பாடல் காணப் பெறவில்லை.

மாற்பேற்று இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு **திருவல்லம்**[10] வருகின்றார். வந்தவர் **'எரித்தவர் முப்புரம்'** (1.113) என்ற திருப்பதிகம் பாடி இறைவனை ஏத்துகின்றார். இதில்,

> **சார்ந்தவர்க் கின்பங்கள் தழைக்கும்வண்ணம்**
> **நேர்ந்தவன் நேரிழை யோடுங்கூடித்**
> **தேர்ந்தவர் தேடுவார் தேடச்செய்தே**
> **சேர்ந்தவன் உறைவிடம் திருவல்லமே.** (5)

என்பது ஐந்தாவது பாடல்.

திருவல்லத்திறைவனிடம் விடை பெற்றுக் கொண்டு **இலம்பையங் கோட்டூர்**[11] என்ற தலத்திற்கு வருகின்றார்.

---

10. **வல்லம் (திருவலம்) :** அரக்கோணம் - காட்பாடி இருப்பூர்தி வழியில் திருவலம் என்ற நிலையத்திலிருந்து 1½ கல் தொலைவு. நிவாநதிக் கரையிலுள்ளது. இத்தலத்தி லிருந்து 8 கல் தொலைவு சென்றால் வள்ளிமலை என்ற முருகன் தலம் உள்ளது. தினைப்புனம், நீராடிய சுனை முதலியன காணலாம். சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

11. **இலம்பையங் கோட்டூர் :** சென்னை-அரக்கோணம் இருப்பூர்தி வழியில் கடம்பத்தூர் (திருவள்ளூருக்கு அடுத்த நிலையம்) நிலையத்திலிருந்து 7 கல் தொலைவு. சென்னை யிலிருந்து பேருந்துமூலம் நேரே கூவத்திற்குச் சென்று, கூவம் ஏரியினுள் குறுக்கே 1 கல் தொலைவு சென்றால் இத் தலத்தை அடையலாம். ஏரியில் தண்ணீர் மிகுதியாக இருப்பின் கரை வழியே சுற்றிப் போக வேண்டும். இவ்வூரில் கிறித்தவர்களே மிகுதி. கூவத்திலிருந்து பூசை செய்யப் போகும் குருக்களோடு போய்த் திரும்புதல் வசதி. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

'**மலையினார் பருப்பதத்**' (1.76) என்ற திருப்பதிகம் பாடி இத்தலத்து இறைவனை வழிபடுகின்றார். இதில்,

**நீருளான் தீயுளான் அந்தரத் துள்ளான்**
**நினைப்பவர் மனத்துளான் நித்தமா ஏத்தும்**
**ஊருளான் எனதுரை தனதுரை யாக**
**ஒற்றைவெள் ளேறுகந் தேறிய ஒருவன்**
**பாருளார் பாடலோ டாட லறாத**
**பண்முரன் றஞ்சிறை வண்டினம் பாடும்**
**ஏருளார் பைம்பொழி லிலம்பையங் கோட்டூர்**
**இருக்கையாப் பேணியென் னெழில்**
**கொள்வ தியல்பே.** (7)

என்பது ஏழாம் பாடல். எல்லாப் பாடல்களையும் படித்து கொஞ்சு தமிழில் விஞ்சும் பக்திச் சுவையை அநுபவித்து மகிழவேண்டும்.

இலம்பையங்கோட்டூர் இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு, **திருவிற்கோலம்**[12] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார் திருஞானசம்பந்தர். '**உருவினா ருமையொடும்**' (3.23) என்ற பதிகம் பாடி இத்தலத்து இறைவனை ஏத்து கின்றார். இதில்,

---

12. **விற்கோலம்** (கூவம்): கடம்பத்தூர் என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து 6 கல் தொலைவு. சென்னையிலிருந்து கூவத்திற்குப் பேருந்து வசதி உண்டு. திரிபுரம் எரிக்கச் செல்லும் வழியில் இத்தலத்தில் தேரின் கூவரம் (=ஏர்க்கால்) ஒடிந்தமையால், சிவபெருமான் விற்கோலமாகக் காட்சியளித்தமையால் தலப்பெயர் திருவிற்கோலம் என்றும் கூவம் என்றும் வழங்கி வருகின்றது. மூலத்தான மூர்த்தி தீண்டாத் திருமேனி. துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகள் இயற்றிய தலபுராணம் அருமையானது. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம். இத்தலத்துப் பதிகம் 5, 6ஆம் பாடலில் வரும் **கூகம்** என்பது மருவி **கூவம்** ஆயிற்று என்பதும் பொருந்தும்.

முந்தினான் மூவருள் முதல்வ னாயினான்
கொந்துலா மலர்ப்பொழிற் கூக மேவினான்
அந்திவான் பிறையினான் அடியர் மேல்வினை
சிந்துவான் உறைவிடம் திருவிற் கோலமே. (5)

என்பது ஐந்தாவது பாடல். இப்பதிகத்தில் எட்டாவது பாடல் காணப்பெறவில்லை.

திருவிற்கோலத்திறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு திருவூறல்[13] (தக்கோலம்) என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். 'மாறில வுணரரணம்' (1.106) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனை ஏத்து கின்றார். இதில்,

செய்யணி மூவிலை வேல்நிறை
வெண்மழு வும்மன லுமன்று
கையணி கொள்கையி னான்கட
வுள்ளிடம் வினவில்
மையணி கண்மட வார்பலர்
வந்திறைஞ்ச மன்னி நம்மை
உய்யும் வகைபுரிந் தான்திரு
ஊறலை யுள்குதுமே. (4)

என்பது நான்காம் திருப்பாடல்.

---

13. திருஊறல் (தக்கோலம்): அரக்கோணம் - செங்கல் பட்டு இருப்பூர்தி வழியில் தக்கோலம் என்ற நிலையத்தி லிருந்து 3 கல் தொலைவு. கோயிலின் மேற்புறம் மலைச் சரிவில் ஓர் இயற்கை ஊற்று உள்ளது. இதிலிருந்து தண்ணீர் கோயிலின் உட்புறச் சுற்றில் தரைமட்டத்தில் ஒரு நந்தி வாயின் வழியாக வந்து, நாற்புறமும் ஓடி, கோயிலுக்கெதிரில் மற்றொரு நந்தி வாயின் வழியாக விழுந்து ஒரு சிறு குளத்தை நிரப்பி வழிந்து ஓடுகின்றது. சோழ மன்னனும் மேலைச் சாளுக்கிய மன்னனும் போர் புரிந்த இடம் இங்கு மணற்பெருவெளியாக உள்ளது. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

தக்கோலத்திலிருந்து கள்ளில்[14] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். 'முள்ளின் மேல்' (1.119) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகத்தால் இத்தலத் தீசனை ஏத்துகின்றார். இதில்,

வரியாய மலரானும் வையந் தன்னை
உரிதாய அளந்தானும் உள்ளு தற்கங்
கரியானும் அறியாத கள்ளில் மேயான்
பெரியானென் றறிவார்கள் பேசு வாரே. (9)

என்பது ஒன்பதாம் பாடல்.

கள்ளில் பெருமானிடம் விடை பெற்றுக்கொண்டு திருவாலங்காடு[15] வருகின்றார். 'துஞ்சவருவார்' (1.45) என்ற திருப்பதிகத்தால் வழிபடுகின்றார். இதில்,

---

14. **கள்ளில்** (திருக்கள்ளம்): பொன்னேரி இருப்பூர்தி நிலையத்திலிருந்து 11 கல் தொலைவு. சென்னை தங்க சாலைப் பேருந்து நிலையத்திலிருந்து பெரியபாளையம்-நாகலாபுரம் செல்லும் பேருந்தில் ஏறி கன்னிப்புத்தூர் (கன்னிப் பேர்) என்ற இடத்தில் இறங்கி 2 கல் தொலைவு மேலும் சென்றால் இத்தலத்தை அடையலாம் (21 கல்). சென்னை பர்மாஷெல் தலைமை நிலையத்தருகிலிருக்கும் பேருந்து நிலையத்தில் பூண்டி - திருத்தணி - திருவள்ளூர் செல்லும் பேருந்தில் ஏறி அத்திப்பேட்டிலிறங்கி கொடு தலை ஆற்றையும் பூண்டி வாய்க்காலையும் கடந்து சென்றாலும் இத்தலம் சேரலாம் (19 கல்). திருவள்ளூர் நிலையத்திலிருந்து பேருந்து வழியாக அத்திப்பேட்டிலிறங்கிச் சென்றாலும் இத்தலம் சேரலாம் (19 கல்). சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

15. **ஆலங்காடு** (திருவாலங்காடு): சென்னை - அரக்கோணம் இருப்பூர்தி நிலையத்திலுள்ள திருவாலங்காடு என்ற நிலையத்திலிருந்து 3 கல் தொலைவிலுள்ளது. 8¼ மணங்கு செப்பேடு ஒன்றில் இராஜேந்திர சோழன் பழையனூர் கிராமத்தைத் திரு ஆலங்காட்டு இறைவனுக்கு

கணையும் வரிசிலையும்
எரியும்கூடிக் கவர்ந்துண்ண
இணையில் எயில்மூன்றும்
எரித்திட்டார் எம்மிறைவனார்
பிணையும் சிறுமறியும்
கலையும்எல்லாம் கங்குல்சேர்ந்
தணையும் பழையனூர்
ஆலங்காட் டெம்மடிகளே. (8)

என்பது எட்டாம் பாடல்.

---

தானமாகத் தந்த செய்தி விவரிக்கப் பெற்றுள்ளது. அக் காலத்தில் இவ்வூர்க் கோயில் நிலங்களிலிருந்து கள் இறக் குதல் இல்லை. காளியைத் தோற்கடிக்கச் சிவபெருமான் ஊர்த்துவ தாண்டவம் புரிந்த தலம். காரைக்கா லம்மையார் தலையாலே நடந்து வந்த தலம். அம்மையார் தலையால் நடந்து வந்த இத்தலத்தைத் தமது காலால் மிதிக்க அஞ்சிய சம்பந்தர் ஊருக்கு வெளியில் ஓரிடத்தில் இறங்கி, அன்றிரவு துயிலும்போது ஆலங்காட்டப்பன் 'நம்மைப் பாடுதற்கு அயர்ந்தனையே?' என்று நினைவூட்ட அடுத்த நாள் தலத்துக்குள் சென்று பதிகம் பாடி வணங்கி னார். ஆலங்காட்டு நீலி வஞ்சனையால் உயிர் நீத்த வணிகனுக்கு, உறுதியளித்த 70 வேளாளர்கள் தாங்கள் உயிர்விட்ட செய்தியும் இத்தல வரலாற்றில் ஒரு பகுதி யாகும். இந்த இரண்டு செய்திகளும் 1.45:1 என்ற பாசு ரத்தில் குறிப்பிடப் பெற்றுள்ளன. கூத்தபிரான் சபைகள் ஐந்தனுள் இரத்தினசபை அல்லது மணிமன்று இங்குள்ளது. பழையனூர் ஆலங்காட்டிற்கு $\frac{3}{4}$ கல் தொலைவிலுள்ளது. தேவார முதலி மூவர்கட்கும் அம்மையார் முற்பட்டவ ராகையால் அவர் திருவாக்கு 'மூத்த திருப்பதிகம்' என்று வழங்கப்படுகின்றது. (இவ்வாக்கு முழுமையும் 11ஆம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது). ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி மார்கழித் திருவாதிரையன்றும் பங்குனி உத்தரத்

ஆலங்காட்டண்ணலிடம் விடைபெற்றுக்கொண்டு திருப் பாசூர்[16] என்ற திருத்தலத்துக்கு வருகின்றார். 'சிந்தை யிடையார்' (2.60) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடித் தலத்து இறைவனை வழிபடுகின்றார். இதில்,

கையால்தொழுது தலைசாய்த்து
  உள்ளம் கசிவார்கள்
மெய்யார் குறையுந்துயரும்
  தீர்க்கும் விமலனார்
நெய்யாடு தலஞ்சுடையார்
  நிலாவும் ஊர்போலும்
பைவாய் நாகம்
  கோடலீனும் பாசூரே. (3)

என்பது மூன்றாவது பாசுரம்.

திருப்பாசூர் இறைவனிடம் விடை பெற்றுக்கொண்டு பிள்ளையார் திருக்காரிக்கரை.[17] வருகின்றார்; இறை வனை வழிபடுகின்றார் (பதிகம் இல்லை). இத்தலத் திறைவனிடம் விடை பெற்றுக் கொண்டு திருக்காளத்தி[18]

---

தன்றும் பழையனூருக்கு எழுந்தருளுவது வழக்கம். முஞ்சி கேசவ முனிவர்க்கும் கார்க்கோடக முனிவர்க்கும் அப் பொழுது காட்சி தருவார்

16. பாசூர் (திருப்பாசூர்): திருவள்ளூர் என்ற இருப் பூர்தி நிலையத்திலிருந்து 3½ கல் தொலைவு.

17. இது தொண்டை நாட்டு வைப்புத் தலம். திருக்காரிக்கரை எனச் சேக்கிழார் (ஞானசம்பந். 1015) குறிப்பிடுவர். இது நாகலாபுரத்திலிருந்து ஒரு கல் தொலைவிலுள்ள ராமகிரி என்ற ஊராகும். காரி (காலேறு) நதியின் கரையிலுள்ளமையால் இப்பெயர் பெற்றது,

18. காளத்தி (ஸ்ரீகாளஹஸ்தி): ரேணிகுண்டா — கூடூர் இருப்பூர்தி வழியில் உள்ள நிலையம். இங்கிருந்து கோயில் ஒரு கல் தொலைவு. சென்னையிலிருந்து பேருந்து

வந்து சேர்கின்றார். சிவனடியார்களும் ஊர்ப் பெரு மக்களும் சிறந்த வரவேற்பு நல்குகின்றனர். '**வானவர்கள் தானவர்கள்**' (3·69) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ் மாலையால் வழிபடுகின்றார். இதில்,

**வேயனைய தோளுமையொர் பாகமது**
**வாகவிடை யேறிசடைமேல்**
**தூயமதி சூடிசுடு காட்டில்நட**
**மாடிமலை தன்னைவினவில்**
**வாய்கலச மாகவழி பாடுசெயும்**
**வேடன்மல ராகும்நயனம்**
**காய்கணையி னாலிடந் தீசனடி**
**கூடுகா ளத்திமலையே,** (4)

---

வசதிகள் உள்ளன. கோயில் அருகில் இறங்கலாம். சிலந்தி ( — ஸ்ரீ), பாம்பு ( = காளம்), யானை ( = ஹஸ்தி) ஆகிய மூன்றும் பூசித்து முத்தி அடைந்த தலம். மலைமேல் உச்சி யிலிருந்த குடுமித் தேவர் வழிபாடே கண்ணப்ப நாயனார் செய்ததென்பதும், தேவார முதலிகள் மூவரும் வழி பட்டனர் என்பதும் பெரியபுராணத்தாலறியப்படும். ஆனால் இப்போது பொன்முகலி யாற்றங்கரையில் ஊர்த் தரைமட்டத்திலுள்ள கோயிலுக்குள் இருக்கும் மூர்த்தி யையே வணங்குகின்றோம். ஆற்றிலிருந்து சில படிகளேறி ஆலயம் செல்வதால் இப்போதுள்ள ஆலயமும் மலை மீதுள்ளதென்பாரும் உளர். பஞ்சபூத தலங்களுள் இது வாயு தலம். மூலத்தானத்திலுள்ள விளக்குகள் எப்போதும் காற்றில் அசைந்து கொண்டே இருக்கும். சிவலிங்க மூர்த்தியின் திருவுருவத்தில் சிலந்தி, பாம்பு, யானை மூன்றும் உள்ளன. சுயம்புலிங்கம். நீண்ட பல செங்குத் தான உட்குழிந்த குடைவுகள் நிரம்பிய திருமேனி. 11 ஆம் திருமுறையிலுள்ள கயிலைப் பாதி காளத்தி பாதி அந்தாதியும், கண்ணப்பர்தேவர் திருமறமும் நக்கீரரால் பாடப் பெற்ற தலம்.

என்பது நான்காவது பாசுரம். இதில் கண்ணப்ப நாயனாரது அன்பின் திறம் போற்றப்பெற்றுள்ளது.

பொன்முகலியாற்றின் கரையை அடைந்து காளத்தி மலை மீதேறிச் சிவபெருமானைப் பணிந்து வீழ்ந்தெழுகின்றார்; தாம் வழிபட்ட பயன் காண்பார் போல வில் வேடர் பெருமானாகிய கண்ணப்ப நாயனாரைக் கண்டு தாழ்கின்றார். உள்ளத்தில் தெளிவுற்ற அன்பின் மெய்ம்மை உருவினையும் அத்தகைய அன்பினுள்ளே நிலை பெற்றுத் தோன்றும் சிவப் பரம்பொருளையும் ஒருங்கே கண்ட விருப்பம் பொங்கப் புகலிப் பிள்ளையார் பல முறையும் வீழ்ந்து வணங்குகின்றார். பின்பு காளத்தி மலையினின்றும் இறங்கி அங்குள்ள திருமடமொன்றில் அமர்ந்து பெருமானைக் காலங்கள்தோறும் வழிபட்டிருக்கின்றார்.[19]

காழிவேந்தர் காளத்தியில் தங்கியிருக்கும் நாட்களில் வடதிசையிலுள்ள திருக்கயிலாயம், கேதாரம், கோகரணம், திருப்பருப்பதம், இந்திர நீல பருப்பதம், அநேகங்காவதம் முதலிய தலங்கள்மீது திருப்பதிகங்கள் பாடி வழிபடுகின்றார். வடகயிலை[20] மீதுள்ள திருப்பதிகம் '**பொடி கொளுருவர்**' 1·68) என்ற முதற் குறிப்புடையது.

**பொடிகொ ளுருவர் புலியின**
**தளர்புரிநூல் திகழ்மார்பில்**
**கடிகொள் கொன்றை கலந்தநீற்றர்**
**கரைசேர் கண்டத்தார்**

---

19. பெ. பு: ஞானசம்பந். 1021-1024.

20. **கயிலாயம்:** இமயமலையிலுள்ள திருப்பதி. சென்னை — இலட்சுமணபுரி (லக்னோ) — பிரெய்லி — காத்கோரம் — அல்மோரா சென்று — பரிச்சினா — கனெரிச்சீனா — கநாய் — பெரிநாகு — தால் — டிடிகட் — ஆஸ்கோடெடை — பலவக் கோட்டை — டார்ச்சுலா —

இடியகுர லாலிரியு மடங்கல
தொடங்கு முனைச்சாரல்
கடியவிடை மேற்கொடியொன் றுடையர்
கயிலை மலையாரே. (1)

என்பது இதன் முதல் பாடல். கயிலைநாதர்மீது இன்னொரு பதிகமும் பாடியுள்ளார், இது 'வாளவரி கோலபுரி' (3·68) என்ற முதற் குறிப்புடையது. இதில்,

சென்றுபல வென்றுலவு புன்றலையர்
துன்றலொடு மொன்றி யுடனே
நின்றமரர் என்றுமிறை வன்றனடி
சென்றுபணி கின்ற நகர்தான்
துன்றுமலர் பொன்றிகழ்செய் கொன்றைவிரை
தென்றலொடு சென்று கமழக்
கன்றுபிடி துன்றுகளி றென்றிவைமுன்
நின்றகயி லாய மலையே. (7)

என்பது ஏழாம் பாடல்.

அடுத்து பாடுவது கேதாரம்[21] பற்றி. 'தொண்டரஞ்சு களிறு' (2·114) என்ற முதற் குறிப்புடையது. இதில்,

---

கேலா — கர்பியாங் — காலபானி — லிப்பு தடாக்—லி கணவாய்—தக்கள கோட்டை — தீர்த்தா — புரி தீ புரி கயிலை அடிவாரம்—ஆக மொத்தம் அல்மோராவிலிருந்து 297 கல் தொலைவு. 22980 அடி உயரம். பனிக்கட்டியாலாகிய ஒரு தூபி போலுள்ளது. கயிலைநாதன் அருளினால்தான் அவன் காட்டக் கண்டு அவன் திருவுருவைச் சேவிக்க வேண்டும். இன்றேல் பனிமலை சிகரம் ஒன்றையே கண்டு திரும்ப வேண்டும். பனிக்கட்டித் தூபியை வலம் வர 29 கல் தொலைவு. மிக்க கடினமான திருத்தலப் பயணம்.

21. கேதாரம் (பத்ரிகேதார்) : இதுவும் இமயமலையிலுள்ள தலம். சென்னை — தில்லி — ரிஷிகேசம் — தேவபிரயாகை — கீர்த்தி நகர் — ஸ்ரீநகர் — ருத்ரப்பிர

**நீறு பூசி நிலத்துண்டு**
**நீர்மூழ்கி நீள்வரை தன்மேல்**
**தேறு சிந்தை யுடையார்கள்**
**சேரு மிடம் என்பரால்**
**ஏறி மாவின் கனியும**
**பலவின் இருஞ்சு ளைகளும்**
**கீறி நாளும் முசுக்கிளை**
**யொடுண் டுகளும் கேதாரமே. (6)**

என்பது **ஆறாவது** பாடல்.

இதனையடுத்து **திருக்கோகரணம்**[22] மீது பதிகம் பாடிப் போற்றுகின்றார். தலத்து எம்பெருமான் மீது **'என்று**

---

யாகை — சத்தோலி — நாம்பூர் — அகஸ்தியமுனி — சவுர்ஹி — சந்திரபுரி — குண்ட்சட்டி — குப்தகாசி —நள சட்டி — நாராயண் கோடி — மேகண்டா — பாடா சட்டி —பதல்பூர்—ராம்பூர்— கௌரி குண்டம் (இதுதான் அனேக தங்காவதம்) போகவேண்டும். இங்கே வெந்நீர் ஊற்றில் நீராடி தவக்கோலத்திலுள்ள அம்மையையும் உமா மகேசு வரரையும் சேவிக்க வேண்டும். பிறகு கஷ்டமான ஏற்ற வழியில் ஜங்கல்சட்டி, ராம்பர் ஹ், கேதார்நாத் — கேதாரம் செல்லவேண்டும். பார்வதி தேவியார் இத் தலத்தில் நோன்பிருந்து கேதாரீசுவரரை வழிபட்டு அர்த்த நாரீசுவரப் பேறு பெற்றனர். இந்த நோன்பு தீபாவளியை யொட்டி தமிழ் நாடெங்கும் கொண்டாடப்பெறுகின்றது. கடல் மட்டத்திற்கு மேல் 14,000 அடி உயரம். சித்திரை 15-ல் கோயில் திறப்பார்கள். ஐப்பசி தீபாவளி முடிந்த வுடன் மூடப்படும். பனிக்கட்டி விழுந்து கோயிலையே மூடிவிடும். கடைசி நாள் பூசித்த மலர்கள் பனிக் குளிர்ச்சி யால் திறக்கும் நாளன்று வாடாமலிருக்கும். சம்பந்தரும், அப்பரும் காளத்தியிலிருந்தே பதிகம் ஓதினர்.

22. **கோகரணம்** (கோகரண்): பெஜவாடா — நந்தி யால் — குண்டக்கல் — ஹுப்ளி இருப்பூர்திப் பாதையில் ஹுப்ளியிலிருந்து 90கல் தொலைவிலுள்ளது. பேருந்து

மரியான்' (3.79) என்ற முதற் குறிப்புடைய செந்தமிழ்ப் பதிகம் பாடிப் போற்றுகின்றார். இதில்,

நீறுதிரு மேனிமிசை யாடிநிறை
வார்கழல் சிலம்பொ லிசெய
ஏறுவிளை யாடவிசை கொண்டிடு
பலிக்குவரு மீசன் இடமாம்
ஆறுசம யங்களும் விரும்பியடி
பேணியர னாகம மிகக்
கூறுமனம் வேறிரதி வந்தடியார்
கம்பம்வரு கோக ரணமே. (6)

என்பது ஆறாவது பாடல்.

---

வசதி உண்டு. வழிநெடுகத் தேக்குமரக் காடுகளும், மலைச் சரிவுகளும், இயற்கை வனப்புமிக்க சோலைகளும் உள்ளன. தலம் மேல் சமுத்திரக் கரையில் உள்ளது. பம்பாய் மாநிலம் வடகன்னட மாவட்டத்திலுள்ளது. கயிலையிலிருந்து இராவணன் ஓர் இலிங்கம் கொணர்ந் தான். மாலைக் கடன் முடித்தற்பொருட்டுத் தரையில் வைக்கக் கூடாதென்று நினைத்தபோது, விநாயகர் ஒரு சிறுவன் போல எதிர்வந்து தமது கையில் சிவலிங்கத்தை யேற்று, மீண்டும் விரைவில் பெற்றுக் கொள்ளாவிடில் தரையில் வைத்து விடுவதாகச் சொன்னார். சிறிது நேரமானவுடன் வைத்துவிட்டார். மாலைக்கடன் முடிந்த வுடன் இராவணன் எடுக்க முயன்றான். இலிங்கம் வேரூன்றியபடியால் எவ்வளவு முயன்றும் பெயர்க்க முடியவில்லை. பலமெல்லாம் பயன்படாதபடியால் இலிங்கம் மகா பல லிங்கமாய்க் கீழேயே போய், மேலும் ஒரு பசுவின் காது நுனியளவே தெரிந்தபடியால் தலப்பெயர் கோகரணம் ஆயிற்று. இத்தலத்தில் மகாபல லிங்கத்தைத் தொட்டு, நீராட்டி வழிபடலாம். விநாயகர் திருவுருவம் நின்ற திருக்கோலமாக அழகு நிரம்பியுள்ளது. மகா சிவராத்திரியில் திருத்தேர். ஓர் இலட்சம் பக்தர்கட்கு மேல் சேவிப்பார்கள்.

அடுத்து, திருப்பருப்பதத்தின்[23] மீது 'சுடுமணியுமிழ் நாகம்' (1·118) என்ற முதற் குறிப்புடைய பதிகம் பாடிப் போற்றுகின்றார். இதில்,

துறைபல சுனைமூழ்கித்
  தூமலர் சுமந்தோடி
மறையொலி வாய்மொழியால்
  வானவர் மகிழ்ந்தேத்தச்
சிறையொலி கிளிபயிலுந்
  தேனின மொலியோவாப்
பறைபடு விளங்கருவிப்
  பருப்பதம் பரவுதுமே. (5)

---

23. பருப்பதம் (ஸ்ரீசைலம்): திருப்பதியிலிருந்து பேருந்து வசதியுண்டு. சிவராத்திரி சமயம் சேவிப்பது வசதி. விசயநகர மன்னர் கிருஷ்ணதேவராயர் பல திருப்பணிகள் செய்த தலம். கடல் மட்டத்திற்கு மேல் 1563 அடி உயரம். மக்கள் மலையேறிச் சென்றவுடன் நீராடாமல் மூலத்தானத்திலுள்ள சிவலிங்கத்தைத் தழுவிச் சேவிப்பதை 'தூளி தரிசனம்' என வழங்குவர். திருநந்தி தேவரே மலையாகப் பரமசிவனைத் தாங்குகிறார் என்று புராணம் கூறும். இத்தலத்தில் மூலத்தான இலிங்கத்தைத் தொட்டு அபிடேக ஆராதனை முதலியன நாமே செய்து வழிபடலாம். கோயிலிலிருந்து 3 கல் தொலைவு செங்குத்தான இறக்கப்படிகள் வழியில் சென்றால் கிருஷ்ணை நதியை அடையலாம். சுவாமி மல்லிகார்ச்சுனேசுவர்; தேவியார் பிரமராம்பிகை. கற்பாறைகளின் நடுவில் நதி ஓடுவதால் மிக விழிப்புடன் நீராடவேண்டும். கற்பிளவுகளும் முதலைகளும் ஆபத்தைத் தரும். இலிங்கம் தரித்த ஜங்கமர் பூசையே கோவிலில் நடைபெறுகின்றது. சிவராத்திரி முதல் நாள் மாலை சென்று மறுநாள் திரும்பி விடுதல் நல்லது. அப்பர் நேரில் சேவித்த தலம். சம்பந்தரும் சுந்தரரும் காளத்தியில் இருந்தவாறே பதிகம் ஓதினர்.

என்பது ஐந்தாவது பாடல். அடுத்து, 'குலவு பாரிடம்' (2·27) என்ற முதற் குறிப்புடைய பதிகத்தால் 'இந்திர நீல பருப்பதம்' [24] என்ற தலத்தைப் போற்றுகின்றார். இதில்,

நாச மாம்வினை நன்மை தான்வரும்
தேச மார்புக ழாய செம்மையெம்
ஈச னிந்திர நீலப் பருப்பதம்
கூசி வாழ்த்துதுங் குணம தாகவே. (4)

---

24. இந்திர நீல பருப்பதம்: இமய மலையிலுள்ள தலம். சென்னை—கல்கத்தா — பகால்பூர் — தர்பங்கா — ரக்சூல் — பிக்நதொரி — செல்லும் பாதையில் ரக்சூலிலாவது பிக்நதொரியிலாவது இறங்கி அங்கிருந்து சுமார் 60 கல் தொலைவிலுள்ள நேபாள நாட்டிலுள்ள காட்மாண்டு என்னும் தலைநகர் செல்லவேண்டும். இங்குப் 'பசுபதி நேபாளம்' என்று பெரியபுராணத்தில் திருமூல வரலாற்றிலுள்ள (திருமூலர் புராணம் — 3) பசுபதி கோயிலைச் சேவித்து அங்கிருந்து வடகிழக்கில் 100 கல் தொலைவு சென்றால் இந்திர நீல பருப்பதம் சென்று அடையலாம். கடல் மட்டத்திற்கு மேல் 18000 அடி உயரமுள்ளது கேதாரம். கைலாயம் போலவே பனிக்கட்டியின் மீது நடந்து செல்லவேண்டிய பகுதியும் உண்டு. ஒரு மலை நாகப்படம்போற் கவிந்து ஈசான திக்கை நோக்கியுள்ளது. கட்டப்பட்ட கோயிலில்லை. மூர்த்தி 'தலசுயம்பு' ஆகிய மலையின் பகுதியே; குவிவான கீழ்ப்பகுதி பீடம். இந்தக் கீழ்ப் பகுதி நீலமயமான கற்பாறை. இங்கு வடமேற்கில் ஒரு பள்ளத்தாக்கில் ஓடுவது நீல கங்கா என்ற ஒரு சிறிய ஆறு. ஈசன் சந்நிதிக்குச் சற்று வடகிழக்கில் பச்சை நிறமுள்ள கற்பாறையே சுயம்பு அம்பிகை. சுவாமியின் அருகில் அரைச் சந்திர வடிவில் ஒரு பாறையே இந்திரன். இப்பாறையில் கண்கள் போன்ற பல குழிவுகள்; பக்கத்தில் கிரீடம், வஜ்ராயுதம் போன்ற வடிவங்கள் உள்ளன. இந்திரன் பூசித்த தலம். சம்பந்தர் காளத்தியிலிருந்தே பதிகம் அருளினார்.

என்பது நான்காவது பாடல். அடுத்து, 'அனேகதங்காவதம்'[25] என்ற தலத்தின்மீது 'நீடல் மேவுநிமிர்' (2·5) என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் பாடிப் பரவுகின்றார். இதில்,

வெருவிவேழம் இரியக்கதிர்
முத்தொடு வெண்பளிங்
குருவிவீழ வயிரங்கொழி
யாவகி லுந்திவெள்
அருவிபாயு மணிசாரல்
அனேகதங் காவதம்
மருவிவாழும் பெருமான்
கழல்சேர்வது வாய்மையே. (7)

என்பது ஏழாம் பாடல்.

இங்ஙனம் வடநாட்டுத் திருத்தலங்கள்மீது செந்தமிழ்ப் பாமாலைகள் பாடிய காழிப் பிள்ளையார் காளத்தியான் மீது 'சந்தமாரகிலொடும்' (3·36) என்ற செந்தமிழ்ப் பாமாலை சூட்டி அப்பெருமானிடம் விடைபெறுகின்றார்.

---

25. அனேகதங்காவதம் (கௌரி குண்டம்): சென்னை — ரிஷிகேசம் — தேவப்ரயாகை — கீர்த்திநகர் — ஸ்ரீ நகர் — ருத்திரப்பிரயாகை — சத்தோலி — நாம்பூர் — அகத்திய முனி — சவுர்ஹி — சந்திரபுரி — குண்ட்சட்டி — குப்தகாசி — நளசட்டி — நாராயண்கோடி — மேகண்டா — பாடா சட்டி — பதல்பூர் — ராம்பூர் — கௌரிகுண்டம் அடைதல் வேண்டும். இதுதான் அனேகதங்காவதம் என்னும் தலம். இது கடல் மட்டத்திற்கு மேல் 12000 அடி உயரம். வழிக் குறிப்பில் சட்டி என்றால் தங்குமிடம் என்றும், பிரயாகை என்றால் இரண்டு ஆறுகள் கூடுமிடம் என்பதும் பொருள். தேவப்ரயாகை என்பது பெரியாழ்வார் மங்களாசாசனம் பெற்ற கண்டம் கடிநகர் என்னும் திருமால் தலம். 'உமா தேவியார் தவம் இருந்த இடமாதலால் கௌரி குண்டம் என்று அனேகதங்காவதற்குப் பெயராயிற்று. சம்பந்தர் காளத்தியிலிருந்தே பதிகம் ஓதியருளினார்.

முத்து மாமணிகளும்
    முழுமலர்த் திரள்களும்
எத்து மாமுகலியின்
    கரையினில் எழில்பெறக்
கத்திட அரக்கனைக்
    கால்விர லூன்றிய
அத்தன்றன் காளத்தி
    அணைவது கருமமே. (8)

என்பது எட்டாவது திருப்பாடல். இப்பதிகத்தில் 6, 7ஆம் பாடல்கள் காணப்பெறவில்லை.

காளத்தியானிடம் விடைபெற்றுக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டுப் பாலாற்றின் வடகரையை அடைந்து திருவேற்காடு[26] என்னும் திருத்தலத்தை அடைகின்றார். 'ஒள்ளி துள்ளக்' (1.57) என்ற குறிப்புடைய திருப்பதிகம் பாடி இறைவனைப் போற்றுகின்றார்.

காட்டி னாலும் அயர்த்திடக் காலனை
வீட்டி னானுறை வேற்காடு
பாட்டி னாற்பணிந் தேத்திட வல்லவர்
ஓட்டி னார்வினை ஒல்லையே. (5)

என்பது ஐந்தாவது திருப்பாடல். மூன்றாண்டுகட்கு முன்பு (1982) இத்தலத்தை அடியேன் வழிபட்டதுண்டு.

---

26. வேற்காடு (திருவேற்காடு): சென்னை—அரக்கோணம் இருப்பூர்தி வழியில் ஆவடி நிலையத்திலிருந்து 4 கல் தொலைவு. சென்னையிலிருந்து பேருந்து மூலம் செல்வது வசதி. மூர்க்க நாயனார் தலம். அகத்தியருக்குத் திருமணம் காட்டிய காட்சி மூலத்தான இலிங்கத்தின் பின்புறம் உள்ளது. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம். சில ஆண்டுகளாக இத்தலம் மிகு புகழோங்கியுள்ளது.

வேற்காட்டு இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு **வலிதாயம்**[27] என்ற திருத்தலம் வந்தணைகின்றார் பிள்ளையார். 'பத்தரோடு பலரும்' (1.3) என்ற முதற் குறிப்புடைய பதிகத்தால் பரமனைப் பரவுகின்றார். இதில்,

**புந்தி யொன்றிநினை வார்வினை**
**யாயின தீரப் பொருளாய**
**அந்தி யன்னதொரு பேரொளி**
**யானமர் கோயி லயலெங்கும்**
**மந்தி வந்துகடு வன்னொடுங்**
**கூடி வணங்கும் வலிதாயம்**
**சிந்தி யாதவர் தம்மடும்**
**வெந்துயர் தீர்தல் எளிதன்றே.** (5)

என்பது ஐந்தாவது பாடல்.

வலிதாயப் பெருமானிடம் விடை பெற்றுக் கொண்டு **திருவொற்றியூர்**[28] வருகின்றார் திருஞானக் கன்று. பெரிய தொண்டர் குழாம் இவரை எதிரேற்று வரவேற்கின்றது.

---

27. **வலிதாயம்** (பாடி): சென்னை-அரக்கோணம் இருப்பூர்தி வழியில் வில்லிவாக்கம் என்ற நிலையத்திலிருந்து 2 கல் தொலைவிலுள்ளது. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்றதலம்.

28. **ஒற்றியூர்** (திருவொத்தியூர்): சென்னை-தங்கசாலை பேருந்து நிலையத்திலிருந்து அடிக்கடிப் பேருந்து செல்கின்றது. இவ்வசதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். புற்றிடங்கொண்டார், வன்மீகநாதர், படம் பக்கநாதர் என்பன மூலத்தான மூர்த்தியின் பெயர்கள். கார்த்திகை பௌர்ணமி அடுத்த இரண்டு நாட்கள் புற்றின் மேலுள்ள கவசம் எடுத்துவிடப்படும். புற்றாகவே உள்ள மூர்த்தியைச் சேவிக்கலாம். கவசம் சாத்தியுள்ளபொழுது புற்றின் ஒரு சிறு பகுதியே தென்படும். வடிவுடையம்மன் சந்நிதியில் மலையாளத்து அந்தணர் பூசை. சப்தவிடங்கக் கணக்கில்

யாவரும் திருக்கோயிலுக்கு வர, பிள்ளையார் 'விடையவன்' (3.57) என்ற முதற்குறிப்புடைய செந்தமிழ் மாலை புனைந் தேத்துகின்றார். இதில்,

> விளிதரு நீரு மண்ணும்
> விசும்போ டனல்காலு மாகி
> அளிதரு பேரரு ளான
> அரனாகிய ஆதி மூர்த்தி
> களிதரு வண்டு பண்செய்
> கமழ்கொன்றை யினோட ணிந்த
> ஒளிதரு வெண்பிறை யானுறை
> யும்மிடம் ஒற்றி யூரே. (3)

என்பது மூன்றாவது பாடல்.

பிள்ளையார் ஒற்றியூர் இறைவனைவழிபட்ட செய்தி யைச் சேக்கிழார் பெருமான்,

> மிக்கதிருத் தொண்டர்தொழு தணையத் தாமும்
> தொழுதிழிந்து 'விடையவன்' என்றெடுத்துப் பாடி
> மைக்குலவு கண்டத்தர் மகிழும் கோயில்
> மன்னுதிருக் கோபுரத்து வந்து தாழ்ந்து

---

சேராத தியாகராஜத்தலம்; பட்டினத்தடிகள் போற்றியத் தலம்; அவருடைய முத்திதலமும் இதுவே. அடிகளாரின் கோயில் தேர் நிலையிலிருந்து ½ கல் தொலைவிலுள்ளது. கலியநாயனார் தொண்டு புரிந்து முத்தியடைந்ததலம். சங்கிலிநாச்சியார் நம்பியாரூரரைத் திருமணம் புரிந்து வாழ்ந்த தலம். விவரம் 'தம்பிரான் தோழர்' என்ற என் நூலில் காண்க. ஒற்றியூர்க் கோயிலின் வடமேற்குப் பகுதியில் ஆதிபுரீசர் கோயில் திருப்பணி மிக அழகிய முறையில் செய்யப் பெற்றுள்ளது. மூவர் தேவாரமும் பெற்ற தலம்.

தக்கதிருக் கடைகாப்புச் சாற்றித் தேவர்
தம்பெருமான் திருவாயி லூடுசென்று
புக்கருளி வலங்கொண்டு புனிதர் முன்பு
போற்றெடுத்துப் படியின்மேல் பொருந்த வீழ்ந்தார்.

பொற்றிரல்கள் போற்புரிந்த சடையார் தம்பால்
பொங்கிஎழுங் காதல்மிகப் பொழிந்து விம்மிப்
பற்றிஎழும் மயிர்ப்புளகம் எங்கு மாகிப்
பரந்திழியும் கண்ணருவி பாய நின்று
சொற்றிகழும் திருப்பதிகம் பாடி ஏத்தித்
தொழுதுபுறத் தணைந்தருளித் தொண்ட ரோடும்
ஒற்றிநகர் காதலித்தங் கினிது றைந்தார்
உலகுய்ய உலவாத ஞானம் உண்டார்.[29]

என்று அற்புதமாகக் காட்டுவர். இதைப் படிக்கும் நாமும் சம்பந்தரோடு சேர்ந்து கொண்டு ஒற்றியூர் இறைவனை வழிபடும் நிலையினை அடைந்து விழிகளில் கண்ணீர் பெருக்குகின்றோம்.

**எலும்பைப் பெண்ணாக்குதல்:** ஒற்றியூரில் சில நாட்கள் தங்கி இறைவழிபாட்டைக் காலந்தோறும் செய்து வந்த பிள்ளையார் புற்றிடங்கொண்ட பெருமானிடம் விடை பெற்றுக் கொண்டு **மயிலை**[30] வர எண்ணியிருக்கின்றார். மயிலையில் வணிகர் மரபில் தோன்றி வாணிகத் தொழிலில்

---

29. பெ. பு: ஞானசம்பந். 1031, 1032.

30. **மயிலை** (மயிலாப்பூர்): சென்னை சென்ட்ரல் நிலையத்தினின்றும், எழும்பூர் நிலையத்திலிருந்தும் 4 கல் தொலைவு. உமாதேவியார் மயிலுருவில் சிவபெருமானைப் பூசித்துத் தமது சுய உருவம் பெற்று இறைவனைத் திருமணம் புரிந்து கொண்ட தலம். கோயில் பெயர் கபாலீச்சரம். பழைய காலத்தில் இப்போது சாந்தோம் கிறித்தவர் கோயிலுள்ள இடத்திலிருந்தது. கி. பி. 16ஆம் நூற்றாண்டில் போர்த்துகேசியர்கள் கைப்பற்றிக்

மேம்பட்டு பெருஞ்செல்வம் எய்தினார் ஒருவர். இவர் சிவபக்தியால் சிறந்து விளங்கி 'சிவநேசர்' என்னும் பெயர் பெற்று விளங்குகின்றார். இவருக்குப் புறச்சமயங்களைத் தமிழ்நாட்டைவிட்டு அகற்ற வேண்டும் என்ற எண்ணம் உளது. இவர் காழிப்பிள்ளையாரின் பெருமையைக் கேள்வியுற்றிருக்கின்றார். இவருக்குப் பிறந்த 'பூம்பாவை' என்ற அழகுடைய நங்கை மணப்பருவம் எய்தியிருக்கின்றாள். இவளையும் தான் ஈட்டிய பெருநிதியையும் தன்னையும் சிவநேசர் காழிநாடுடையவர்க்குக் கொடுக்க எண்ணியிருக்கின்றார்.

ஒருநாள் பூம்பாவை கன்னிமாடத்தருகேயுள்ள பூஞ் சோலையில் மலர் கொய்யச் செல்லும்பொழுது மல்லிகைப் பந்தரிலே மறைந்து இருந்த பூநாகம் ஒன்று அவளைத் தீண்டு கின்றது. தந்தையார் மருத்துவர், மந்திரவாதிகளை வர வழைத்து மந்திர தந்திரங்களால் சிகிச்சையளித்தும் பயன் படாது விடம் தலைக்கேறி ஆவிசோர்ந்து மரிக்கின்றாள். சிவநேசர் கலக்கமுற்றாராயினும், 'இவள் சம்பந்தருக்கு

---

கோயிலைத் தகர்த்து அங்கு ஒரு கோட்டை கட்டினர். அக்கோட்டையிலிருந்த கொடிமரச் சிதைவு இன்றும் காணப்படுகின்றது. பழைய கோயில் கடற்கரையில் திருச்சீரலைவாய்போல் மதிற்சுவர்களில் அலை வீச இருந்தது. 'ஊர்திரை வேலை உலாவும் மயிலை'' (சம்பந். 2:27:4) என்ற பாசுரம் இதைத் தெரிவிக்கின்றது. பிள்ளையார் எலும்பைப் பெண்ணாக்கிய நிகழ்ச்சி இக் கோயிலில் நடைபெற்றது. பங்குனிப் பெருவிழாவில் இத்தலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் யாவும் காட்டப் பெறுகின்றன. கோயிலில் உள்ள விளக்கு ஒன்றைத் தனது மூக்கினால் தூண்டிய எலி அப்புண்ணியத்தின் பயனாக மறுபிறவியில் மாவலிச் சக்கரவர்த்தியான வரலாற்றை பாசுரம் (நாவுக், 4.49;8) கூறும். மேலைக் கோபுரவாயில் எதிரிலுள்ள விநாயகர் சந்நிதி பெரும்புகழ் வாய்ந்தது.

உரியள்' என்று கூறினமையால் 'இனித் துன்பமுறவேண்டிய தில்லை' எனத் தெளிந்து ஒருவாறு துன்பம் நீங்குகின்றார். 'சம்பந்தர் இவண் போதரும் வரையிலும் தகனஞ்செய்த சாம்பலையும் எலும்பினையும் ஒரு கலயத்திலே இட்டு வைப்பேன்' எனத் துணிகின்றார். அக்கலயத்தைப் பூசித்தும் வருகின்றார். இந்நிலையில் சம்பந்தர் திருவொற்றியூரில் அடியார்களுடன் எழுந்தருளியுள்ளார். என்ற செய்தி கேட்டு மகிழ்வுற்று அவரை எதிர் கொண்டழைக்கச் செல்லுகின்றார். சம்பந்தரும் மயிலை நாதனை வணங்கும் விருப்புடையராய்த் திருவொற்றி யூரிலிருந்து புறப்பட்டு எதிரே வந்தருளுகின்றார். சிவநேசரும் சம்பந்தரின் முத்துப் பல்லக்கின் கீழ் வீழ்ந்து வணங்குகின்றார். ஞானசம்பந்தரும் சிவிகையினின்றும் இறங்கித் தம்மை வணங்கி நிற்கும் சிவநேசருடைய செயல்களை அடியார்கள் நவிலக் கேட்டு அவருடன் மயிலை வந்து சேர்கின்றார்.

பிள்ளையார் கபாலீச்சரத்திறைவனை வணங்கிப் புறம்போந்து சிவநேசரை நோக்கி, 'அன்பீர், நும் திருமகளாரின் என்பு நிறைந்த குடத்தினை உலகறியக் கோயிலின் புறவாயிலில் கொணர்வீராக' எனப் பணிக் கின்றார். சிவநேசரும் என்பு அடங்கிய குடத்தினைக் கொணர்ந்து கபாலீச்சரத்து இறைவன் திருமுன்னர் வைத்து வணங்குகின்றார். உலகவருக்கு உறுதிப் பொருளை உணர்த்தத் திருவுளங் கொண்ட பிள்ளையார் மயிலை நகர மக்களும் புறச் சமயத்தாரும் காணும் வண்ணம் திருக்கோயிலை வந்தடைகின்றார். வந்தவர் குடத்தினை நோக்கி, இறைவனது திருவருளைச் சிந்தித்து, "மக்கள் அடைதற்குரிய பயன் சிவனடியார்கட்கு அமுது செய் வித்தலும் இறைவனுடைய திருவுலாப் பொலிவு கண்டு மகிழ்தலுமே என்பது உண்மையானால், பூம்பாவாய் நீ உலகினர் முன் உயிர் பெற்று வருக" எனப் பூம்பாவையை அழைக்கும் முகமாக 'மட்டிட்ட புன்னையங் கானல்' (2·47)

என்ற முதற் குறிப்புடைய பதிகத்தைப் பாடுகின்றார். இதன் முதற் பாடல்:

“ மட்டிட்ட புன்னையங்
கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான்
கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின்
உருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே
போதியோ பூம்பாவாய். ” (1)

என்பது; ஞானசம்பந்தரின் வாக்காகிய அமுதம் குடத்திலுள்ள அங்கத்திலே பொருந்த அவ்வெலும்பனைத்தும் ஒருருவாய் வடிவு நிரம்புகின்றது. முதற் பாடலிலேயே வடிவு பெறும் பூம்பாவை, இப்பதிகத்தின் இரண்டு முதல் ஒன்பது வரையுள்ள எட்டுப் பாடல்களைப் பாடியதும் பன்னிரண்டு வயதுடைய அழகிய மங்கையளாகின்றாள். சமணரும் சாக்கியரும் இச்செய்கை இயல்வதன்று என்று கூறுவர் என்னும் கருத்தமைய,

உரிஞ்சாய வாழ்க்கை
அமணுடையைப் போர்க்கும்
இருஞ்சாக் கியர்கள்
எடுத்துரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த
கபாலீச் சரமமர்ந்தான்
பெருஞ்சாந்தி காணாதே
போதியோ பூம்பாவாய். ” (10)

என்ற பத்தாம் பாடலைப் பாடிய அளவில் செந்தாமரை மலர் விரிய அதனுள்ளேயிருந்து எழும் திருமகளைப் போன்று கூப்பிய செங்கையுடன் குடம் உடைய எழுந்து வழிபட்டுத் தோன்ற அழகினுக்கு அணியாய் நிற்கின்றாள்.

இவ்விடத்தில் சேக்கிழார் பெருமானின் பூம்பாவையைப் பற்றிய வருணனை படித்து மகிழத்தக்கது.[31] இவ் வருணனையின் முத்தாய்ப்பாக,

எண்ணிலாண் டெய்தும் வேதாப்
 படைத்தவள் எழிலின் வெள்ளம்
நண்ணுநான் முகத்தால் கண்டான்;
 அவளினும் நல்லாள் தன்பால்
புண்ணியப் பதினா றாண்டு
 பேர்பெறும் புகலிவேந்தர்
கண்ணுதல் கருணை வெள்ளம்
 ஆயிர முகத்தார் கண்டார்.

—(ஞானசம்பந். 1109)

என்று காட்டுவார். ஞானக்கன்று பூம்பாவையின் மேனி வனப்பினை நோக்காது சிவபெருமானது திருவருட் பெரு வெள்ளத்தை ஆயிர முகத்தாற் காணுதற்குரியதாகக் கண்டு மகிழ்கின்றார் என்ற கவிஞரின் நுட்பம் உணர்ந்து மகிழத்தக்கது. இந்த அற்புதம் நிகழ்ந்த பொழுது பிள்ளையாரின் வயது பதினாறு என்பது அறியக் கிடக்கின்றது. பிள்ளையார் திருக்கடைக் காப்புச் சாத்தி இறைவனைப் பரவுகின்றார். பூம்பாவையைக் கண்ட சிவநேசர் பிள்ளையாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்குகின்றார். பூம்பாவையும் சிவபெருமானைப் பணிந்து ஞானக்கன்றை வணங்கி நிற்கின்றாள்.

ஞானக்கன்றை வணங்கி நிற்கும் சிவநேசர், "அடியேன் பெற்றெடுத்த பூம்பாவையைத் தேவரீர் திருமணம் புரிந்து கொள்ள வேண்டும்" என வேண்டுகின்றார். இதனைச் செவிமடுத்த பிள்ளையார், "அன்பீர், நீவிர் பெற்ற பெண் விடத்தால் மரித்த பின்பு யாம் மீண்டும் பிறக்கச் செய்தோம். ஆகவே இவள் எமக்கு மகளா

31. பெ. பு; ஞானசம்பந். 1095 - 1108.

கின்றாள். எனவே இவளை மணத்தல் தகாது'' என மறுக்கின்றார். சிவநேசருக்கும் அவர்தம் உறவினருக்கும் மறைமுறையினை எடுத்துரைத்து அவர்தம் மயக்கத்தைப் போக்குகின்றார். பிள்ளையார் செப்பிய உரை தக்கதென உணர்ந்த சிவநேசர் பிறருக்கும் மணம் கூட்ட இசைவின்றித் தம் மகளைக் கன்னிமாடத்தே இருக்கச் செய்கின்றார். பூம்பாவையும் சிவனருளைச் சிந்தித்திருந்து சிவப்பேறு அடைகின்றாள் என்பது வரலாறு.

இந்தப் பயணத்தில் காளத்தியில் இருந்தபடியே வடநாட்டுத் திருத்தலங்களை வழிபட்டமை நினைவில் கொள்ளத்தக்கது.

மயிலை இறைவனிடம் விடை பெற்றுக் கொண்டு **திருவான்மியூர்**[32] போதருகின்றார் பிள்ளையார். **இரண்டு** பதிகங்களால் தலத்து இறைவனைச் சேவிக்கின்றார். **'விரையார் கொன்றை'** (3·55) என்பது ஒரு பதிகம்.

> **நீதி நின்னையல்லால்**
> **நெறியாது நினைந்தறியேன்**
> **ஓதி நான்மறைகள்**
> **மறையோன்தலை ஒன்றினையும்**
> **சேதீ சேதமில்லாத்**
> **திருவான்மி யூருறையும்**
> **ஆதீ உன்னையல்லால்**
> **அடையாதென தாதரவே.** (6)

---

32. வான்மியூர் (திருவாமூர்): சென்னை-சைதாப்பேட்டையிலிருந்து 4 கல் தொலைவு நகரப் பேருந்து வசதியுண்டு. வான்மிக முனிவருக்கு திருநடனச் சேவை தந்த தலம். சப்தவிடங்கக் கணக்கில் சேராத தியாகராஜத் தலம். மூலத்தானச் சிவலிங்கத்தைக் காராம்பசு பால் சுரந்து அபிடேகிக்க, உருகியதால் மூர்த்தி அந்நிலையில் காட்சித் தருகின்றார். கடற்கரைத் தலம்.

என்பது ஆறாவது பாடல். அடுத்த பதிகம் 'கரையுலாவும்' (2.4) என்ற முதற்குறிப்பையுடையது.

மண்ணினிற் புகழ்பெற்றவர்
மங்கையர் தாம்பயில்
திண்ணெனப் புரிசைத்
தொழிலார் திருவான்மியூர்த்
துண்ணெனத் திரியுஞ்
சரிதைத் தொழிலீர்சொலீர்
விண்ணினிற் பிறைசெஞ்
சடைவைத்த வியப்பதே. (5)

என்பது இதன் ஐந்தாம் பாடல்.

வான்மியூர் இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு இடைச்சுரம்[32] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார் திருஞானசம்பந்தர். 'வரிவளரவிரொளி' (1.78) என்ற திருப்பதிகத்தினால் திருத்தலத்து இறைவனைச் சேவிக்கின்றார். இதில்,

தோடணி குழையினர் சுண்ணவெண் ணீற்றர்
சுடலையி னாடுவர் தோலுடை யாகப்
பீடுயர் செய்ததோர் பெருமையை யுடையர்
பேயுட னாடுவர் பெரியவர் பெருமான்
கோடல்க ளொழுகுவ முழுகுவ தும்பி
குரவமும் அரவமும் மன்னிய பாங்கர்
ஏடவிழ் புதுமலர் கடிகமழ் சாரல்
இடைச்சுர மேவிய இவர்வணம் என்னே. (6)

---

32. இடைச்சுரம் (திருவடிசூலம்) : செங்கல்பட்டிலிருந்து 3 கல் தொலைவு. மூலத்தான இலிங்கம் மிகவும் பளபளப்பானது. சிதம்பரம் இரத்தின சபாபதியைத் தரிசிப்பதுபோல் பின்புறம் கற்பூரம் காட்டினால் நன்றாகத் தெரியும்.

என்பது ஆறாவது பாடல். இவர் திருமேனியைச் சம்பந்தர் ஒவ்வொரு பாடலிலும் 'இடைச்சுர மேவிய இவர்வணம் என்னே' என்று புகழ்கின்றார்.

இடைச்சுர ஈசனிடம் விடைபெற்றுக் கொண்டு திருக்கழுக்குன்றம்[33] வருகின்றார். 'தோடுடையான் ஒரு

---

33. கழுக்குன்றம் (திருக்கழுக்குன்றம்) : செங்கல்பட்டிலிருந்து 9 கல் தொலைவு. பேருந்து வசதியுண்டு. வடநாட்டார் பட்சி தீர்த்தம் என்பர். வேதமே மலையாதலின் வேதகிரி, வேதாசலம் என்ற பெயரும் உண்டு. மலையுச்சியில் அருமையாகக் குடைந்தெடுக்கப் பெற்றது இத்திருக்கோயில். கருவறைச் சுவர்களில் பல அழகிய சிவ பராக்கிரம வரலாறுகள் செதுக்கப்பட்டுள்ளன. பாடல் பெற்ற தலங்களுள் இங்கும் திருப்பரங்குன்றத்திலுமே இன்றும் பூசிக்கப்பெறும் குகைக் கோயில்கள் உள்ளன. உச்சி வேளையில் இரண்டு கழுகுகட்கு நெய்யும் சருக்கரைப் பொங்கலும் 'பட்சி பண்டாரம்' என்பவரால் அளிக்கப் பெறுகின்றது. இராமாயண காலத்திலிருந்த சடாயு, சம்பாதி என்ற இரு கழுகுகள் கழுக்குன்றத் துச்சியானை வழிபட்டதாகவும், இக்கழுகுகளின் வழித்தோன்றல்களே இப்போது வருவன என்றும் கூறப்படுகின்றது. மாணிக்க வாசகருக்குக் 'கணக்கிலாத் திருக்கோலம் நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே' என்று கூறப்படும் அநுபவம் நிகழ்ந்த இடம் மலைவலம் வரும் வழியில் இன்று மாணிக்க வாசகர் கோயிலாக உள்ளது. தேவாரமுதலிகள் மூவரும் தங்கியிருந்த இடம் 'மூவர் பேட்டை' என வழங்குகின்றது. உடல் நலிவுற்றவர் பலர் இத்தலத்தில் ஒரு மண்டலம் தங்கி நாடோறும் மலையேறிக் கழுக்குன்றத்துச்சியானின் அருளையும் சஞ்சீவிக் காற்றினின் (Ozone) நன்மையையும் ஒருங்கே பெற்று மாலையில் மலை வலம் வந்து திடம் பெறுவதால் இத்தலம் நலப்பேறூர் (Sanatorium) ஆகின்றது. அடிவாரத்தில் பக்தவத்சலர் ஆலயம்.

காதில்' (1 103) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி குன்றத்தீசனைச் சேவிக்கின்றார்.

வெள்ள மெல்லாம் விரிசடை
மேலோர் விரிகொன்றை
கொள்ள வல்லான் குரைகழ
லேத்தும் சிறுத்தொண்டர்
உள்ள மெல்லா உள்கி
நின்றாங்கே யுடனாடும்
கள்ளம் வல்லான் காதல்செய்
கோயில் கழுக்குன்றே. (6)

என்பது ஆறாவது பாடல். ஏழாவது பாடல் காணப் பெற வில்லை.

திருக்கழுக்குன்றுடையானிடம் விடைபெற்றுக் கொண்டு "அச்சிறுபாக்கம்"[34] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார்.

---

34. அச்சிறுபாக்கம் (அச்சரவாக்கம்): சென்னை - விழுப்புரம் இருப்பூர்தி வழியில் அச்சரவாக்கம் என்ற நிலையத்திலிருந்து ¼ கல் தொலைவு. முப்புரம் எரிக்கச் சிவபெருமான் தேரேறிச் செல்லத் தொடங்கும்போது, தேரின் உறுப்புகளாக அமைந்த தேவர்கள், விநாயகரை வணங்காமல் இறுமாப்புக் கொள்ள, அவர்கட்கு நல்லறி வூட்ட, விநாயகர் அருளால் தேர் அச்சு இற்று ஒடிந்தது (அச்சு-சிறுபாக்கம்). விநாயகரை வணங்கிய பின், தேர் புறப்பட்டுத் திருவதிகை சேர்ந்தது. மூலத்தான மூர்த்திகள் இருவர். முக்கியமானவர் கோபுர வாயிலுக்குச் சற்று வடபுறத்தில் நந்தி பலிபீடம் துவஜ ஸ்தம்பங்களோடு 'ஏமையாட்சீசர்' அல்லது ஆட்சி கொண்டவராக விளங்கு கின்றார். கோபுர வாயிலுக்கெதிரிலுள்ளவர் உமையாட் சீசர் எனப்படுகின்றார். இவற்றுள் 'ஆட்சி கொண்ட மகா தேவர்' என்பதே சுவாமி பெயர். சம்பந்தர் தேவாரம் மட்டிலும் பெற்ற தலம்.

'பொன்றிரண்டன்ன' (1.77) என்ற முதற்குறிப்புடைய பதிகம் பாடி இறைவனை ஏத்துகின்றார்.

தேனினும்இனியர் பாலனநீற்றர் தீங்கரும்
பனையர்தம் திருவடி தொழுவார்
ஊனயந்துருக உவகைகள்தருவார் உச்சிமேல்
உறைபவர் ஒன்றலா தூரார்
வானகமிறந்து வையகம்வணங்க வயங்கொள
நிற்பதோர் வடிவினை யுடையார்
ஆனையின் உரிவை போர்த்தவெம் அடிகள்
அச்சிறுபாக்கம் ஆட்சிகொண் டாரே. (2)

என்பது இரண்டாம் பாடல்.

அச்சிறுபாக்கத்து இறைவனிடம் விடை பெற்றுக் கொண்டு அரசிலி[35] என்ற திருத்தலத்திற்கு வருகின்றார். 'பாடல் வண்டறை' (2.95) என்ற முதற் குறிப்புடைய பதிகம் பாடிப் பரமனை ஏத்துகின்றார்

மானஞ்சும் மடநோக்கி மலைமகள்
பாகமு மருவித்
தானஞ்சா வரண்மூன்றுந் தழலெழச்
சரமது துரந்து
வானஞ்சம் பெருவிடத்தை யுண்டவன்
மாமறை யோதி
ஆனஞ்சாடிய சென்னி யடிகளுக்
கிடம்அர சிலியே. (5)

என்பது ஐந்தாவது பாடல்.

அரசிலி அரனிடம் விடை பெற்றுக் கொண்டு 'புறவார் பனங்காட்டூர்'[36] என்ற திருத்தலத்துக்கு வருகின்றார்.

---

35. அரசிலி (ஒழுந்தியார்பட்டு) : புதுச்சேரியிலிருந்து 7 கல் தொலைவு. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற தலம்.

36. புறவார்பனங்காட்டூர் (பனையபுரம்): விழுப்புரம்-எழும்பூர் இருப்பூர்திப் பாதையில் முண்டியம்பாக்கம்

நடுநாட்டுத் தலம். நடுநாட்டுத் தலப் பயணத்தின்போது இத்தலம் சற்று விலகியிருந்தபடியால், அப்போது சேவிக்காமல் இப்போது சேவிக்கின்றார். 'விண்ணமர்ந்தன' (2·53) என்ற முதற்குறிப்புடைய பதிகம்பாடி இறைவனை வழுத்துகின்றார். இதில்,

**நீரினார்வரை கோலிமால்கடல்**
**நீடிய பொழில்சூழ்ந்து வைகலும்**
**பாரினார் பிரியாப் புறவார் பனங்காட்டூர்க்**
**காரினார்மலர்க் கொன்றை தாங்கு**
**கடவுள்என்று கைகூப்பி நாள்தொறும்**
**சீரினால் வணங்குந் திறத்தார்க் கருளாயே** (6)

என்பது ஆறாவது பாடல்.

புறவார் பனங்காட்டூர் இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு கோயில் (சிதம்பரம்) வருகின்றார். இத்திருக் கோயில் பெருமானை வழிபட்டபின் அவரிடம் விடை பெற்றுக் கொண்டுதான் நடுநாட்டுத் தல வழிபாட்டைத் தொடங்கி அதை நிறைவு செய்து கொண்டு, தொடர்ந்து தொண்டை நாட்டுத் தல வழிபாட்டைத் தொடங்கி அதையும் நிறைவு செய்து கொண்டு பயணம் தொடங்கிய இடத்திற்கே வந்து சேர்கின்றார். 'எங்கும் சுற்றி அரங்கனைச் சேர்ந்த மாதிரி' என்று வைணவர்கள் கூறும் மரபு ஒன்று உண்டு. எல்லாப் பெருமாள்களிலும் கோயில் (அரங்கம்) பெருமாளே ஆதிப் பெருமாள் என்பது அவர்கள் கொள்கை. இதை நினைவூட்டவே அவர்கள் இப்பழமொழியைக் கூறுவர். சைவர்கட்கும் கோயில் (சிதம்பரம்) என்பது சிறப்பான தலம். மூவர் முதலிகளும் மணிவாசகப் பெருமானும் அதிகமாக ஈடுபட்ட தலம் கோயில். ஆகவே, சம்பந்தரும் எங்கும் சுற்றி அரங்கனைச் சேர்ந்த மாதிரி தில்லைக் கூத்தனிடமே வந்து சேர்கின்றார்.

---

நிலையத்திலிருந்து $1\frac{1}{2}$ கல் தொலைவு. சம்பந்தர் தேவாரம் மட்டிலும் பெற்ற தலம்.

தில்லையிலிருந்து திரும்பும்போது 'பன்னிரண்டு பேர் படைத்த தொல்லைவளப் பூந்தராய்' தொலைவில் தோன்றுவதைக் காண்கின்றார் காழிப் பிள்ளையார். உடனே தம் முத்துச் சிவிகையினின்றும் இறங்கி அப்பதிமேல் 'வண்டார் குழல் அரிவை' (1.9) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடி நறுமலர் கொண்டு அருச்சித்துப் பதியைச் சேவிக்கின்றார்.

வண்டார் குழலரிவை
 யொடுபிரியா வகையாகப்
பெண்டான் மிகவானான்
 பிறைச்சென்னி பெருமானூர்
தண்டா மரைமலராள்
 உறைதவளந் நெடுமாடம்
விண்டாங் குவபோலும்
 மிகுவேணு புரமதுவே. (1)

என்பது இப்பதிகத்தின் முதற் பாடல். பின்னர் ''நம் பொருள் நம்மக்கள்'' (2.97) என்ற முதற்குறிப்புடைய திருப்பதிகம் பாடிப் பரவிக் காழிநகர் புகுகின்றார்.

நம்பொருள்நம் மக்களென்று
 நச்சியிச்சை செய்துநீர்
அம்பரமடைந்து சால
 அல்லலுய்ப்ப தன்முனம்
உம்பர்நாத னுத்தமன்
 ஒளிமிகுந்த செஞ்சடை
நம்பன்மேவு நன்னகர்
 நலங்கொள்காழி சேர்மினே. (1)

என்பது இப்பதிகத்தின் முதற்பாடல். இப்பதிகப் பாடல்கள் யாவும் பாடிப் பாடி இன்புறத்தக்கவை. பாடல்தோறும்

'காழிசேர்மினே' என்ற முடிவு காழிப் பெருமானுடன் நாமும் காழிநகர் சேர்வது போன்ற உணர்வைப் பெறுகின்றோம்.

பின்னர் திருக்கோயிலை வலம் வந்து கோபுரம் வழிபட்டு திருவருளின் முழு நோக்கம் பெற்றது போன்ற உணர்வுடன் 'பொன்மயப் பாவையுடன் புணர்ந்திருந்த புராதனராம்' தோணியப்பரைச் சென்னிமிசைக் கரங் குவித்து நிலத்தில் வீழ்ந்து வணங்குகின்றார். பின்னர்த் தம் திருமாளிகையடைந்து தாய் தந்தையரை வணங்கி மகிழ் கின்றார். இதற்குப் பிறகு திருத்தலப் பயணத்திற்கு முற்றுப்புள்ளி. தோணிபுரத்துப் பெருமானைச் செந்தமிழ்ப் பதிகங்களால் போற்றி வருகின்றார்; பிள்ளையாரின் இறுதி நாட்கள் இப்படிக் கழிகின்றன.

# 15. பெருமணத்தில் திருமணம்

ஞானசம்பந்தர் கழுமலத்தில் தோணியப்பர்மீது திருப்பதிகங்கள் பாடிக் கொண்டிருக்கும் நாளில் அவரைக் காணும் விருப்புடன் முருகநாயனார், திருநீலநக்க நாயனார் முதலிய திருத்தொண்டர்கள் தம் சுற்றத்தாருடன் சீகாழிக்கு வந்து சேர்கின்றனர். இவர்களைப் பிள்ளையார் அன்புடன் வரவேற்று அவர்களைத் திருத்தோணிபுரத்துப் பெருமானிடம் அழைத்துச் சென்று அவரை வழிபடுகின்றார்; திருப்பதிகங்கள் பல பாடுகின்றார். இந்நிலையில் சிவபாத விருதயரும் உறவினர்களும் ஒருங்கு கூடித் திருஞானசம்பந்தர் திருமணம் செய்து கொள்ளுதற்குரிய பருவம் இதுவென்று எண்ணி அவரை அணுகித் திருமணம் புரிந்து கொள்ளுமாறு வேண்டுகின்றனர். இதுகேட்ட மாதவத்தின் கொழுந்தனையார் சுற்றமுறு பெரும்பாசத் தொடக்கு விட்டு நீங்கும் நினைவினராய் 'அது கூடாது' என மறுக்கின்றார். அருமறையோர் அவரை மீண்டும் வணங்கி, "பெருந்தகையீர், வேதநெறியை மீண்டும் இவ்வுலகியலில் நிலைபெறச் செய்த பெருமை தங்கட்கு உரியது. ஆதலால் அவ்வேத நெறிப்படியே அந்தணர்க்குரிய அறுதொழில் நடைபெறத் திருமணம் புரிந்து கொள்ளத் திருவுள்ளங்கொண்டருளல் வேண்டும்" என்று வற்புறுத்தும் பாங்கில் வேண்டிக் கொள்கின்றனர். ஞான சம்பந்தர் இறைவன் திருவருள் இதுவாயிருப்பின் நடை பெறட்டும் என்று உடன்படுகின்றார்.

சிவபாத இருதயர் திருமணத்திற்குரிய ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்குகின்றார். தம்மோடு ஒத்த குலத்த ராய்த் திருநல்லூரில் வாழும் நம்பாண்டாரின் திருமகள் தம் அருமைத் திருமகனுக்கு ஏற்ற வாழ்க்கைத்துணைவி எனக் கருதுகின்றார். மகள் பேசுவதற்காக நல்லூர் செல்லு கின்றார். நம்பாண்டார் நம்பியும் சிவபாத விருதயரை உவகையுடன் எதிர்கொண்டு போற்றித் தம்முடைய திருமகளை காழிப்பிள்ளையாருக்கு மணம் செய்துதர உடன்படுகின்றார். சிவபாதவிருதயரும் சீகாழிக்கு மீண்டு திருமண நாளை உறுதிசெய்து கொண்டு நம்பாண்டார் நம்பிக்கு அறிவிக்கின்றார். அவரும் ஏழு நாட்களுக்கு முன்னதாக மணவினையைத் தொடங்கும் பாங்கில் முளைப்பாளிகை அமைத்துத் திருநல்லூரில் திருமணப் பொலிவு எங்கணும் விளங்க மங்கல அணி செய்கின்றார்.

திருக்கழுமலப்பதி திருமண விழாக்கொண்ட கோலத் தைச் சேக்கிழார் வாக்கைக் கொண்டநுபவிக்க வேண்டும்.[1] வீதிகள், மண்டபங்கள், மாளிகைகள் எல்லாம் தோரணங் களால் அலங்கரிக்கப் பெறுகின்றன. கொடிமாலை, மணிமாலை முதலிய தோரணங்களின் இடையில் அமைக்கப்பெறுகின்றன. வைதிகச் சடங்குகட்கு வேண்டிய பொருள்கள் வந்து குவிகின்றன. திருத்தொண்டர், மறை யவர், ஏனையோர் மங்கல மணநாள் கேட்டு புகலி நகருக்கு வந்தவண்ணம் உள்ளனர்.[2] ஏற்கெனவே சாத்த மங்கையிலிருந்து திருநீலநக்கர் வந்துள்ளார்; திருப்புகலூரி லிருந்து முருகநாயனாரும் எழுந்தருளியுள்ளார். நீலகண்டப் பாணரும் அவர் துணைவி மதங்கசூளாமணியும் பிள்ளையார் அருகிலேயே உள்ளனர். எங்கும் வாசனைப்

---

1. பெ. பு: ஞானசம்பந். 1173—1181.

2. சம்பந்தர் திருமணத்திற்கு அவருடைய கெழுதகை நண்பர் அப்பர் பெருமான் ஏன் வரவில்லை என்பதை அறியக்கூடவில்லை.

பொருள்களின் மணம் மூக்கைத் துளைக்கின்றது. சந்தனம் அகிற்புகைகள், செங்கனல் ஆகுதிப்புகைகள் ஆகியவை கலந்து தெய்வமணம் கமழச் செய்கின்றன. இங்ஙனம் நினைவரிய பெருவளங்கள் நெருங்குதலால் இறைவன் நிதிக்கோமான் குபேரனை ஏவி இவற்றையெல்லாம் செய்வித்தது போல் புகலிநகர்ப் பொலிவு பெறுகின்றது என்கின்றார் சேக்கிழார் பெருமான்.[3]

'ஆறுசூடினார் அருட்டிருக்காப்புநாண்' தொண்டர்களுடனும் மறையவர்களுடனும் கவின்திகழ் மங்கையருடனும் நகர்வலம் செய்யப் பெறுகின்றது. வைதிகச் சடங்குகள் நிறைவேறியபின் காப்புநாண் பிள்ளையார் திருக்கையில் கட்டப்பெறுகின்றது. இதனால் அங்குக் குழுமியிருந்தோர் சிந்தையும் வதனமும் மலர்கின்றன. அந்தணர் குலம் ஆர்க்கின்றது. இந்நிலையில் பகலோன் பரந்த பேரிருள் துறந்து வந்தெழுகின்றான். திசைகள் மாசிருள் கழுவிச் சிறப்புடன் துலக்கமடைகின்றன. எங்கணும் உள்ள பல்வளங்கள் வந்து காழியம்பதியில் நிரம்புதலால் வையம் வரம்பில் தன் பயன் காட்டுவதொக்கின்றது. பிள்ளையாரின் மண எழுச்சியின் முழக்கம் என்னுமாறு புணரி பேரொலியுடன் முழங்குகின்றது. மணவிழாவுடன் விரைந்து செல்வதுபோல் வேதியர் ஆகுதி தொடங்கிடாமுன்னம் வன்னி வலஞ்சுழித்து எழுகின்றது. வாயு மணம் கொணர்ந்தெழுகின்றது. பல்வேறு திசைகளினின்றும் மக்கள் புகலிவந்து பெருகுகின்றனர். விசும்பு வெண்ணிறக் கொண்டல்களையொப்ப எங்கணும் வெண்துகிற் கொடிகளை நிறைக்கின்றன. இயற்கையே இத்திருமணத்தைக் கொண்டாடுவது போன்ற நிலை ஏற்படுகின்றது.[4]

---

3. ஷை: ஷை. 1182.

4. ஆன்மா பரமபதம் செல்லுங்கால் வழியில் ஆன்மாவுக்கு என்னென்ன மரியாதைகள் நடைபெறும் என்று நம்மாழ்வார் "சூழ்விசும்பு அணிமுதல்" (திருவாய்.10.9).

ஞானசம்பந்தர் தோணிமீது பெரிய நாச்சியாருடன் வீற்றிருந்தருளும் பெருமானை இறைஞ்சி விடை பெற்றுத் தம் முத்துச் சிவிகையின்மீது அமர்ந்து உறவினரும் அடியவரும் புடை சூழ **திருநல்லூரை**[5] அடைகின்றார். சிவிகையினின்றும் இறங்கிப் '**பெருமணம்**' என்ற திருக்கோயிலில் வீற்றிருந்தருளும் சிவபெருமானைப் பணிந்து வணங்குகின்றார். திருமணக் கோலம் புனைந்தருள வேண்டுமென அன்பர்களின் வேண்டுகோளுக்கு இசைந்து, திருக்கோயிலின் அருகிலுள்ள திருமடத்திற்குச் சென்று திருமஞ்சனமிடுகின்றார்; வெண்பட்டுடுத்தி வெண்ணீ றணிந்து இறைவனது திருவளையாட மாலை பூண்டு திருமணக் கோலத்துடன் வெளி வருகின்றார். இங்ஙனம்

---

என்ற திருவாய்மொழியில் கற்பனையில் காணும் நிலையுடன் இந்நிலையை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

5. **நல்லூர்ப் பெருமணம்:** சிதம்பரத்துக்கருகிலுள்ள கொள்ளிடம் என்ற இருப்பூர்தி நிலையத்திலிருந்து 3 கல் தொலைவு. இதைத் 'திருமண நல்லூர்' என்று சொல்வதும் உண்டு. மக்கள் வழக்கில் ஆச்சாள்புரம் என்று பெயர். சம்பந்தரின் திருக்கல்யாணம் நடைபெற்ற தலம் சம்பந்தர் திருமணத்திற்கு வந்தோர் அனைவருக்கும் கொள்ளை கொள வீடருளிய அற்புதத் தலம். திருநீலநக்கர், முருக நாயனார், நீலகண்ட யாழ்ப்பாணர், சிவபாத இருதயர், நம்பாண்டார் நம்பிகள், முத்துச் சிவிகை தாங்குவோர் முதலிய பரிசனங்கள், திருமணம் காண வந்தோர் ஆண் பெண் அனைவரும் சோதியுட் சென்ற பின்பு சம்பந்தர் காதலியைக் கைப்பற்றிச் சோதியுட் புக்கு ஒன்றி உடனாய் முத்தி பெற்ற தலம். இதைத் துறைமங்கலம் சிவப்பிரகாச முனிவர் முதலிய பல பெரியோர்கள் பாராட்டியுள்ளனர். இத் திருநாள் ஆண்டுதோறும் வைகாசி மூலந்தோறும் மிக்கச் சிறப்புடன் நடைபெறுகின்றது. சம்பந்தர் பாடல் மட்டிலும் பெற்ற திருத்தலம்.

திருமணக் கோலம் கொண்டதையும் அவர் சிவிகை மீதமர்ந்து அவர் தெருவில் உலா வரும் காட்சியையும் சேக்கிழாரின் தெய்வத் தமிழில் படித்து அநுபவிக்க வேண்டும்.[6] மணமகனாகிய காழிப் பிள்ளையார் முத்துச் சிவிகையின் மீதமர்ந்து மங்கல வாத்தியம் முழங்க திருவீதியில் உலா வருங்கால் மறையவர்கள் மறை முழக்கம் செய்து வருகின்றனர். திருமணப் பந்தர் முன் வருங்கால் மங்கையர் மணப் பொருளை ஏந்தி எதிர்கொண்டு வரவேற்கின்றனர். பிள்ளையார் சிவிகையை விட்டிறங்கித் திருமணப் பந்தரில் இடப்பெற்றிருக்கும் பொற்பீடத்தில் அமர்ந்தருளுகின்றார்.

அப்பொழுது நம்பாண்டார் நம்பி தம் துணைவி யாருடன் பிள்ளையாரின் திரு முன்பு வந்து மணமகனின் திருவடிகளைத் தூய நீரால் விளக்கி அந்நன்னீரை உட்கொள்ளுகின்றார்; சுற்றத்தார் மேலும் தெளிக் கின்றார். பிள்ளையாரைப் 'புரிசடையான்' என்றெண் ணியே திருவடிகளை விளக்கினார் என்கின்றார் சேக்கிழார் பெருமான்; பிள்ளையார் கையில் மங்கலநீர் சொரிந்து, "என்றன், அருநிதிப் பாவையாரைப் பிள்ளையார்க்கு அளித்தேன்" என்று தாரை வார்த்துத் தருகின்றார். மங்கல மகளிர் மணமகளை அழைத்து வந்து பிள்ளை யாரின் வலப்பக்கத்தில் அமரச் செய்கின்றனர். மணமக்கள் அமர்ந்திருந்த காட்சி 'வெள்ளை மேகமோடு மின்னுக் கொடிபோல் இருந்தது' என்கின்றார் சேக்கிழார் பெருமான்.

திருநீல நக்க நாயனார் திருஞானசம்பந்தர் முன்பிருந்து கண்ணுதலப்பனை இறைஞ்சி வேத விதிப்படித் திருமணச் சடங்குகளை நிகழ்த்தி வைக்கின்றார். நல்லோரை வரும் நேரத்தில் மங்கலநாண் பூட்டப்பெறுகின்றது. கூடியிருந்த பெருமக்கள் யாவரும் கண்ணிமையாது அட்சதை, மலர்கள்

6. பெ. பு: ஞானசம்பந். 1210 - 1230.

தூவி வாழ்த்துகின்றனர். கண்ணிமையாது வாழ்த்துதலால் 'மனிதரும் தேவரானார்' என்கின்றார் சேக்கிழாரடிகள். மணமகன் வெண்பொரியினைத் தூவித் தீவலம் வருதலாகிய சடங்கினை நிறைவேற்றும் நிலையில் மணமகளது மலர்க்கையைப் பற்றி, ''விருப்புறும் அங்கியாவார் விடையுயர்த்தவரே'' என்னும் தெளிவுடைய சிந்தையராகின்றார். மந்திர முறையால் வளர்க்கப் பெற்ற எரியினை வலம் வருங்கால், ''இருவினைக்கு வித்தாகிய இல்லொழுக்கம் வந்து என்னைச் சூழ்ந்து கொண்டதே. இனி, இவள் தன்னோடும் அந்தமில் சிவன் தாள் சேர்வேன்'' என்னும் உறுதி கொள்ளுகின்றார்.

உறவினர்கள், தொண்டர் பெருமக்கள் சூழ பெருமணத் திருக்கோயிலை நோக்கி தம் துணைவியாருடன் நடக்கின்றார். திருக்கோயிலை அடைந்தவுடன் தவநெறி வளர்க்க வந்த பிள்ளையார் பெருமணம் மேவிய பெம்மானை நோக்கி, ''பவமற என்னை முன்னாள் ஆண்ட அப்பண்புகூட, நவமலர்ப் பாதங் கூட்டும்'' என்னும் நல்லுணர்வுடன், தமது திருமணத்தைக் கண்டோரது பிறவிப் பாசத்தை நீக்குதலையே பொருளாகக் கொண்டு 'கல்லூர்ப் பெருமணம்' (3·125) என்ற முதற் குறிப்பினையுடைய திருப்பதிகத்தால் ''நாதனே! நல்லூர் மேவும் பெருமண நம்பனே! நின் திருவடி நீழல் சேரும் பருவம் இதுவாகும்'' என்று உளமுருகப் போற்றுகின்றார்.

'' கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணம் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேய நம்பரனே. '' (1)

என்பது இப்பதிகத்தின் முதல் பாடல்.

அப்பொழுது பேரருட்கடலாகிய சிவபெருமான் நல்லூர்ப் பெருமணக் கோயில் தன்னுள் ஒடுங்கும்படியாக அதற்கு மேலோங்கிய தூயபெருஞ் சோதிப் பிழம்பாகத்

தோன்றி நிற்கின்றார். பிள்ளையாரை நோக்கி, "ஞான சம்பந்தனே, நீயும் பூவை யன்னாளாகிய நின் துணைவியும் இங்கு நின் புண்ணிய மணத்தைக் காண வந்தார் யாவரும் இந்தச் சோதியினுள் வந்து சேர்மின்" என்று திருவாய் மலர்ந்து அச்சோதியினுள் புகுதற்கென்று வாயிலொன்றையும் வகுத்துக் காட்டியருளுகின்றார். புகலி மன்னரும் அச்சோதியைத் தொழுது நின்று மாயிருஞாலம் உய்ய வழியினைக் காட்டும் பாங்கில் "ஞான மெய்ந் நெறிதான் யார்க்கும் நமச்சிவாயச் சொல்லாம்" என்று "காதலாகிக்" (3.49) என்ற முதற்குறிப்புடைய நமச்சிவாயப் பதிகத்தை 'வானமும் நிலமும் கேட்க அருளிச்' செய்து[7] "இம் மணத்தில் வந்தோர், ஈனமாம் பிறவி தீர யாவரும் புகுக" என்று அனைவரையும் அன்பால் அழைத் தருள்கின்றார். இப்பதிகம் முழுவதையும் அடிக்கடி நாம் பாடி அநுபவித்தால் "பந்த பாசங்களை அறுத்து" எறியலாம்.

**காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி**
**ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது**
**வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது**
**நாதன் நாமம் நமச்சி வாயவே. (1)**

என்பது இதன் முதல் திருப்பாடல்.

பிறவிப் பெருங்கடலில் அல்லல் பட்டுத் தத்தளிக்கும் மக்கள் திருஞானசம்பந்தரின் திருமணத்தைக் கண்டு உடன் சேவித்துச் செல்லும் நற்பேற்றினாலே அங்குத் தோன்றிய பெருஞ்சோதியில் புகுந்து பிறவா நெறியாகிய பேரின்ப வாழ்வைப் பெறுகின்றனர். திருநீல நக்க நாயனார், முருக நாயனார், சிவபாதவிருதயர், நம்பாண்டார் நம்பி, திருநீலகண்டப் பெரும்பாணர் முதலிய திருத்தொண்டர்கள் தங்கள் இல்லக் கிழத்தியருடனும் உறவினர்களுடனும் சோதியில் புகுகின்றனர். பிள்ளையாரின் பரிசனங்களும்

7. இது பொதுப் பதிகம்.

ஆறுவகைச் சமயத்தினராகிய அருந்தவர்களும் அடியார்களும் முனிவர்களும், முத்துச் சிவிகை சுமந்தவர்கள் உட்படப் பிறரும் இறைவன் காட்டிய பெருஞ்சோதியிற் கலந்து இன்புறுகின்றனர். இங்ஙனம் திருபெருமணம் காண வந்த அனைவரும் பெருஞ்சோதியிற் புகுந்த பின்னர் பிள்ளையார் தம் காதலியாரைக் கைப்பிடித்து இறைவனது எழில் பெருஞ்சோதியை வலம் வந்து சிவபெருமானுடன் ஒன்றி உடனாகின்றார். இதனைச் சேக்கிழார் பெருமான்

**காதலியைக் கைப்பற்றிக்**
**கொண்டுவலஞ் செய்தருளித்**
**தீதகற்ற வந்தருளும்**
**திருஞான சம்பந்தர்**
**நாதனெழில் வளர்சோதி**
**நண்ணியதன் உட்புகுவார்**
**போனநிலை முடிந்தவழிப்**
**புக்கொன்றி உடனானார்.**[8]

என்று காட்டுவர். உடனே எழில் வளர்சோதி மறைகின்றது. திருக்கோயில் முன்போலவே காட்சியளிக்கின்றது காலந்தாழ்த்து வந்தவர்கள் சோதியில் நுழையும் நற்பேறின்றி கலங்கி நிற்கின்றனர். விண்ணவர், முனிவர் முதலியோர் தமது ஏசறவு தீர இறைவனை ஏத்தி மகிழ்கின்றனர். இது வரலாறு.

இவ்வரலாற்றால் சம்பந்தர் இயல்பு பற்றிச் சில உண்மைகளை அறியலாம். சம்பந்தர் தம் காதலியுடன் தீயை வலம் வருங்கால், சுட்டுணர்வுக்கு அப்பாற்பட்ட இறைவனே தீயுருவில் நின்று அருள் செய்பவன் என்ற மெய்ம்மையை உணர்கின்றார். அதனால்தான் பெருமணக் கோயிலை வலம் வருகின்றார். இதனால் இறைவன் ஒருவனே மெய்ப்பொருள் எனக் கொண்ட ஒரு நெறிய மனம் உடையவர் என்பது தெளிவாகின்றது. ஆளுடைய

8. பெ.பு: ஞானசம்பந்தர்—1253

*பிள்ளையார் சுற்றத் தொடர்பு நீங்கி இறைவன் திருவடியை அடையவேண்டும் என்ற பெருவிருப்பால் 'கல்லூர்ப் பெருமணம் வேண்டா' என்ற பதிகம் பாடுகின்றார். இது,*

**நறும்பொழிற் காழியுள் ஞானசம் பந்தன்**
**பெறும்பத நல்லூர்ப் பெருமணத் தானை**
**உறும்பொரு ளாற்சொன்ன ஒண்தமிழ்** **(11)**

*என்ற திருக்கடைக் காப்புச் செய்யுளாலும்,*

**தக்கிருந் தீரன்று தாளால் அரக்கனை**
**உக்கிருந் தொல்க உயர்வரைக் கீழிட்டு**
**நக்கிருந்தீர் இன்று நல்லூர்ப் பெருமணம்**
**புக்கிருந் தீர்எமைப் போக்கரு ளீரே.** **(8)**

*என்று இறைவேண்டும் 8ஆம் செய்யுளாலும் இனிது புலனாகும்.*

*மேலும், யாவரிடத்தும் விரிந்த பேரருளை வைத்திருந்தவர், புறச்சமயத்தார் கூறும் மயக்க உரையிற் சிக்குண்டு மதிமயங்கி நிற்கும் உலகமக்களை அவர்கட்கு வீடு பேற்றின்பம் நல்குதற் பொருட்டுப் பெருமணக் கோயிலுக்குள் புகுமாறு அழைக்கின்றார். இது,*

**ஆதர் அமணொடு சாக்கியர் தாஞ்சொல்லும்**
**பேதைமை கேட்டுப் பிணக்குறுவீர் வம்மின்**
**நாதனை நல்லூர்ப் பெருமணம் மேவிய**
**வேதன் தாள்தொழ வீடெளி தாமே.** **(10)**

*என்ற 10 ஆம் பாடலால் இனிது தெளிவாகும். இன்னும், எல்லோரும் சோதியிற் புகுந்த பின்னரே தாம் தம் காதலியாருடன் அதில் புகுந்தார் என்பதைச் சிந்திக்குங்கால், பிள்ளையார் தனக்கென வாழாப் பிறக்குரியாளர் என்பது வெள்ளிடை விலங்கல்.*

**கொள்ளை கொள்ள வீடுதவிக்**
**கூற்றைப் பிடர்பிடித்துத்**
**தள்ளும் திருஞான சம்பந்தா!**

என்று அழைத்துப் போற்றும் துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகளின் பாடற்பகுதியும் சம்பந்தரின் பேரருள் சிந்தைக்கு அரணாக அமையும்.

மயிலையில் பூம்பாவையை உயிர் பெற்றெழச் செய்த காலத்தில் பிள்ளையாரின் வயது பதினாறு என்பதைச் சேக்கிழார் குறிப்பிட்டுள்ளதை நாம் அறிவோம். இந்த அற்புத நிகழ்ச்சிக்குப் பின்னர்ப் பல தலங்களைச் சேவித்து வருதற்கு சில திங்களாதல் கூடும். பதினாறாண்டு ஆடவர்க்குரிய மணப்பருவம்; அப்பருவத்தே அவர்க்குத் திருமணம் நிகழ்கின்றது; அப்போதே சோதியிற் கலப்பும் நிகழ்ந்துவிடுகின்றது. இதனால் பிள்ளையார் இவ்வுலகில் நடமாடிய காலம் பதினாறாண்டு என்பது நன்கு உறுதிப்படுகின்றது. 'தொல் ஞான சம்பந்தர்க்(கு), அந்தப் பதினா றறி' என்ற பழம் பாடல்தொடரும் இதனை வலியுறுத்துகின்றது.

சைவசமய வரலாற்றிலும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் ஓர் ஒப்பற்ற தனி நாயகன் சம்பந்தப் பெருமான். மூன்று வயதிலேயே இறையருளால் செந்தமிழ்ப் பாடல்கள் பாடும் ஆற்றல் பெற்றுத் தமிழக வரலாற்றில் ஒரு பெரும் புரட்சி செய்த ஞானக்கன்று காழிப்பிள்ளையார். அருமறை அந்தணர் குலத்தில் பிறந்தவராயினும் தாழ்ந்த குலத்தவராகக் கருதப்பெறும் நீலகண்ட யாழ்ப்பாணரைப் பாராட்டி அவர்க்குச் செய்த சிறப்பும் மரியாதையும், திருநீலநக்கர் இல்லத்தில் பாணருக்கு மிக உயரியநிலை அளிக்கச் செய்து மறைமுகமாகச் சமூகப்புரட்சி செய்ததும் இக்காலச் சமூகச் சீர்திருத்தவாதிகள் வைத்துப் போற்ற வேண்டியவையாகும். பழங்காலத்தில் சைவ வைணவ ஆசாரியப் பெருமக்கள் தாழ்த்தப்பட்ட குலத்தார்களையும் வேறுபாடு காட்டாமல் போற்றியதை பிற்காலத்தார் மறந்துவிட்டனர். இன்று இப்பிரச்சினை அரசியல்-சமூக இயல் பிரச்சினையாக விசுவரூபங்கொண்டு விட்டதைக் காண்கின்றோம்.

# 15. அருளிச் செயல்கள்

ஒன்று முதல் ஏழு வரை அமைந்த இத்தேவாரத் திருமுறைகளின் வரிசை முறை அவ்வாசிரியர்களின் பிறந்த குலம், வயது முதலிய உலகியல் முறையினை ஒரு சிறிதும் கருதாமல் அப்பெருமக்கள் இவ்வுலக வாழ்க்கையைத் துறந்து இறைவன் வீடுபெற்ற கால அடைவினை உளத்துட் கொண்டு அமைக்கப்பெற்றது. நல்லூர்ப் பெருமணத்தில் பிள்ளையார் ஈறில் பெருஞ்சோதியிற் புகுந்த சில ஆண்டுகள் கழித்தே நாவுக்கரசர் திருப்புகலூரில் நண்ணரிய சிவானந்த ஞான வடிவேயாகி அண்ணலார் சேவடிக்கீழ் எய்தி இன்புற்றார் என்பது ஆய்வுகளால் கண்ட முடிபு.

இந்த இரு பெருமக்களுள் முதற் கடவுளாகிய சிவபெருமானது திருவருளை இன்னிசைச் செந்தமிழால் போற்றியவர் சண்பைவேந்தர். தேவாரத் திருமுறைகளுள் முதன் முதல் பாடப்பெற்ற பழமையுடைய திருப்பதிகம் 'தோடுடைய செவியன்' எனத்தொடங்கும் பிள்ளையாரின் தேவாரமேயாகும். சிவபெருமானை இன்னிசைத் தமிழால் முதலில் பாடிப் போற்றினமையாலும் அப்பெருமான் திருவடியில் கலந்தமையாலும் சம்பந்தரின் பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளாக தொகுக்கப் பெற்றன அடுத்து அப்பர் பெருமானின் பதிகங்கள் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாக வரிசைப் படுத்தப் பெற்றன. இவ்விருவர்க்கும் காலத்தால் பிற்பட்ட நம்பியாரூரரின் பாடல்கள் ஏழாம் திருமுறையாக

அமைக்கப் பெற்றன. இந்த மூவரின் அருளிச் செயல்களும் 'தேவாரம்' என்ற பெயரால் வழங்கி வருகின்றன. இவை 'பண்முறை' எனவும், 'தல முறை' எனவும் இருவேறு முறைகளில் வரிசைப் படுத்தப்பெற்று வழங்கி வருகின்றன.

**பாடல்களின் தொகை:** முதல் திருமுறையில் 136 பதிகங்களும், இரண்டாம் திருமுறையில் 122 பதிகங்களும், மூன்றாம் திருமுறையில் 125 பதிகங்களும் ஆக 383 பதிகங்கள் அடங்கியவை சம்பந்தரின் தேவாரம். பதிகம் என்பது பத்துப்பாடல்கள் அடங்கிய பகுதி. பிற்காலத்தில் 'திருவிடைவாய்' திருப்பதிகம் கல்வெட்டினின்றும் எடுக்கப் பெற்று தனியாக மூன்றாம் திருமுறையின் இறுதியில் சேர்க்கப் பெற்றுள்ளது. தேவாரம் தொகுக்கப் பெற்ற காலத்தில் இது கிடைத்திருப்பின் இஃது இரண்டாம் திருமுறையின் பண் இந்தளத்தில் சேர்க்கப் பெற்றிருக்கும். இவற்றுடன் இவர் பாடிய திருப்பாடல்கள் 4158 ஆகத் தொகை பெறுகின்றன.

**பதிக அமைப்பு:** சம்பந்தர் பெருமான் இறைவனது திருவருட்டிறங்களாகக் குறிக்கத் தக்கனவற்றுள் மூன்று கருத்துகளைச் சிறப்பாகத் தேர்ந்தெடுத்து அம்மூன்றினையும் தாம் அருளிய திருப்பதிகங்கள் தோறும் தவறாது விரித்துரைத்தலைக் கடமையாகக் கொண்டுள்ளார். ஒவ்வொரு பதிகத்திலும் ஒன்று முதல் ஏழுவரையிலுள்ள திருப்பாடல்கள் அப்பதிகத்திற்குரிய திருத்தலங்களின் இயற்கை வனப்பு, அங்கு கோயில் கொண்டிருக்கும் இறைவனின் அருமை, அவன் தன்னடியார்கட்கு எளிவந்தருளும் எளிமை, உலகெலாம் படைத்தளித்தழிக்கும் வரம்பிலாற்றலுடைமை முதலிய திருவருட் பண்புகள், அவ்வத்தலங்களிலிருந்து இறைவனை வழிபட்டு மகிழும் அடியார்களின் திருத் தொண்டின் திறம் ஆகியவை விரித்துரைக்கும் முறையில் அமைந்துள்ளன.

எட்டாம் பாட்டில் இராவணனைப் பற்றிய செய்தி இருக்கும். தென்னிலங்கை வேந்தனாகிய இராவணன் முன் அறியாமையினால் கயிலாய மலையை எடுக்க முயன்றான். அவனுடைய தலைகளும் தோள்களும் அம்மலையின்கீழ் அகப்பட்டு நசுங்கி அங்கிருந்து மீள முடியாது அல்லலுற்றான். பின்னர்த் தன் தவறுணர்ந்து அதனைப் பொறுத்தருளும்படி சிவபெருமானை வேண்டி இசைப் பாடல்களால் பாடித் துதித்தான். சிவபெருமானும் அவனுக்கு அருள்புரிந்தார். இந்த ஆக்கப்பாடே இப் பாட்டில் குறிக்கப் பெற்றிருப்பது. படைத்தற் கடவுளாகிய நான்முகனும், காத்தற் கடவுளாய திருமாலும் தாம் தாம் பெரியர் எனத் தம்முள் மாறுகொண்டு அன்னமாயும் ஏன (பன்றி)மாயும் இறைவனது முடியும் அடியும் தேடமுயன்று பெரிதும் அல்லற்பட்டுக் காணமுடியாது பின்னர் அவனது திருவருளால் திருவைந்தெழுத்து ஓதியுய்ந்த செய்தி ஒன்பதாம் பாட்டில் உணர்த்தப்பெற்றுள்ளது. பத்தாம் பாட்டில் தெய்வம் உண்டு என்ற தெளிவான ஞானமில்லாத புறச் சமயத்தவர்களாகிய சமணர் புத்தர் ஆகியோரின் நெறிகள் அவர்க்கும் பிறர்க்கும் பயன்படாது பழி விளைவிக்கும் குற்றமுடையன என்பதனை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. இங்ஙனம் ஒவ்வொரு பதிகத்தையும் பத்துப் பத்துப் பாடல்களால் நிறைவித்த சம்பந்தர் பெருமான் அத்திருப்பதிகங்களைப் பக்தியுடன் ஓதி உளங் கரையும் உலக மக்கள் அடையும் நற்பயன்களை விளக்கும் முறையில் பதினோராம் பாடலை அமைத்துள்ளார். இதில் பாடிய தலப் பெயரின் முத்திரையும் இருக்கும். இப் பாடலைச் சேக்கிழார் பெருமான் 'திருக்கடைக் காப்பு' என்ற திருப்பெயரால் குறித்துள்ளார். இத் திருக் கடைக் காப்புப் பாடல்கள் யாவும் பிள்ளையாரின் ஆணையிற் கிளந்த மறை மொழிகளாகத் திகழுகின்றன. இங்ஙனம் பிள்ளையார் தம் வாய்மொழியில் உண்மையான நம்பிக்கை உண்டாகும் வண்ணம் 'ஆணை நமதே' என்று

ஆணையிட்டுக் கூறியதால் இவரைப் பெருமக்கள் 'ஆணை நமதென்ற பெருமாள்' எனப் பாராட்டிப் போற்றுவர்.

**பாடல்களின் செய்திகள் :** ஞானத் திருவுருவாகிய பிள்ளையார் அருளிய திருப்பாடல்கள் யாவும் உமையம் மையார் அளித்த திருவருள் ஞானமாகிய பாலடிசிலைப் பருகிய மகிழ்ச்சி நிலையில் எழுந்தவை. சிவனடியே சிந்திக்கும் அவர் உள்ளத்திலிருந்து பொங்கி எழுந்து பொழிந்த உயர் ஞானத் திருமொழிகளாகும் இவை. இத் திருப்பாடல்கள் இயற்கைப் பொருள்களின் எழில் நலங்களை எடுத்தியம்பும். அந் நலங்களில் பிரிவறத் தோய்ந்து இன்பஞ் செய்யும் இறைவனின் திருவருள் வனப்பை விரித்துரைக்கும். மேலும் இவை நானிலத்து ஐந்திணை வருணனைகளைச் சந்தம் மலிந்த செந்தமிழ்ச் சொற்களால் இசை நலம் பொருந்த எடுத்துரைக்கும் பான்மையன. பாடிய வாய் தேனூறும் பான்மையுடைய இத்திருப்பாடல்கள் பாடுவோர்க்கும் கேட்போருக்கும் தெவிட்டாத தீஞ்சுவை அமிழ்தத் தன்மையனவாய்த் திகழ்பவை. இவை தவிர, இறைவன் ஒருவனுளன் என்ப தற்குரிய பிரமாணங்கள், அம்முதல்வனுக்குரிய பொதுவும் சிறப்புமாகிய இலக்கணங்கள், இறைவனை வழிபடுதற்குரிய இன்றியமையாத சாதனங்கள், வழிபாடு செய்யும் அடியார்கள் பெறும் நற்பயன்கள் முதலியவற்றை நுவல் வனவாகவும் இருக்கும் இத் தெய்வச் செந்தமிழ் நறுமலர்கள்.

**பாடல்களின் சிறப்பமைப்பு :** சம்பந்தர் பெருமான் அருளிய திருப்பதிகங்களில் பெரும்பாலானவை பதினொரு திருப்பாடல்களைக் கொண்டவை. திருப்பிரமபுரத் திருப்பதிகங்களில் சில அத்தலத்திற்கு அமைந்த பன்னிரு திருப்பெயர்களையும் பரவிப் போற்றும் கருத்துடன் பன்னிரண்டு திருப்பாடல்களாக வளர்ந்துள்ளன. சைவ சமயத்தின் நுண் பொருள்களை விளக்கும் முறையில்

(3.54)

அமைந்த 'வாழ்க அந்தணர்' என்னும் முதற் குறிப்புடைய திருப்பதிகம் பன்னிரண்டு திருப்பாடல்களையுடையவை. திருவெழுக் கூற்றிருக்கை என்னும் மிறைக் கவி ஆசிரியப் பாவாக அமைந்த ஒரே ஒரு திருப்பாட்டு

காழி வேந்தர் 'விருந்தாய சொல் மாலைகள்' சிலவற்றையும் அருளியுள்ளார். இவ்வாறு முதன் முதலாக அருளிச் செய்யப்பெற்ற அத் திருப்பதிகங்கள் இத்தகைய பனுவல்கட்கு மூல இலக்கியங்களாகத் திகழ்கின்றன. இவற்றை 'மிறைக் கவிகள்' எனவும், 'சித்திரக் கவிகள்' எனவும் வழங்குவர். இவை மொழி மாற்று, மாலை மாற்று, வழிமொழி, மடக்கு, இயமகம், ஏகபாதம், இருக்குக் குறள், எழுகூற்றிருக்கை, ஈரடி - ஈரடிவைப்பு, நாலடிமேல் வைப்பு, முடுகியலாகிய திருவிராகம், சக்கர மாற்று, கோமூத்திரிகம், கூடற் துக்கம் முதலியனவாகும்.[1] செய்யுளகத்து மொழிகள் தம்முட் புணரும் முறை நிரல் நிறை, சுண்ணம், அடிமறி, மொழி மாற்று என நால் வகைப்படும். இத்தகைய அமைப்பும் இவர்தம் பாடல்களில் காணலாம்.

**பொதுப் பதிகங்கள் :** சம்பந்தர் பெருமான் அருளிச் செய்த திருப்பதிகங்களில் ஒரு தலத்திற்குரியனவேயன்றி, எல்லாத் தலங்கட்கும் பொதுவாக அமைந்த பதிகங்களும் உள்ளன அவை: திருநீலகண்டப் பதிகம், சேஷத்திரக் கோவை, கோளறு திருப்பதிகம், பஞ்சாக்கரத் திருப்பதிகம், தனித் திருவிருக்குக் குறள், நமச்சிவாயத் திருப்பதிகம், திருப்பாசுரம் ஆகிய ஏழு பதிகங்கள்.

**பதிகங்களின் சொற்பொருள் போக்கு :** இப்போக்கினைக் கூர்ந்து நோக்கினால் பல்வேறு வகைகளைக் காணலாம். சிலவற்றை மட்டிலும் காண்பேம்.

---

1. இவை பற்றிய விளக்கங்கள் — இந்நூல் 4-வது கட்டுரையில் காண்க.

1. ஒரு தலத்தினுள் புகும்பொழுது அங்குத் தம்மை எதிர் கொண்டழைத்த சிவனடியார்களை ஆர்வமுடன் நோக்கி, 'உங்கள் பெருமான் என்னையும் ஆட்கொள் வரோ' என வினவும் முறையில் உள்ள பதிகங்கள் உள.

(எ-டு.) " ஆரூரம்,
எந்தை தானெனை
ஏன்றுகொளுங் கொலோ " (3.45:1)

என்பதுபோல் உள்ளவை.

2. இறைவனுக்கு உவப்பான தலம் இதுவென்றும், இதனை வழிபடுமின் என்று மக்களுக்கு அறிவுறுத்தும் பதிகங்கள் பல.

(எ-டு.) " திருவாஞ்சியம்
என்னை யாளுடையான்
இடமாக உகந்ததே. " (2.7:1)

என்பனபோல் திகழ்பவை.

3. சிவபெருமான் கோயில் கொண்டெழுந்தருளிய வளமார்ந்த திருத்தலம் இன்னது என அத்தலத்தின் பெயர் கூறிப் போற்றும் முறையில் அமைந்த பதிகங்கள் பல.

(எ-டு.) வரைநின் றிழிவார் தருபொன்னி
அரவங் கொடுசேரும் ஐயாறே (1.36:7)

என்பதுபோல் வருபவை.

4. 'இன்ன தலத்தில் எழுந்தருளிய இறைவனை வழி படுவார் இத்தன்மையராய் விளங்குவார்கள்' என அடியார் திறம் விளக்குவன சில பதிகங்கள்.

(எ-டு.) பாடி னாரிசை மாமழ பாடியை
நாடி னார்க் கில்லை நல்குரவானவே (3.48:6)

என்பதுபோல் உள்ளவை.

5. இறைவன் எழுந்தருளிய இத்தலத்தை வழிபட வினைத்துயர் நீங்கும் எனவும் நற்பயன்களை அடைந்து இன்புறலாம் எனவும் அறிவுறுத்தும் முறையில் பல பதிகங்கள் உள்ளன.

(எ-டு.) செற்றமில் சீரானைத்
திருவாப்ப னூரானைப்
பற்றும் மனமுடையார்
வினைபற் றறுப்பாரே. (1.88:1)

*என்பதுபோல் உள்ளவை.*

6. *இறைவன் இன்ன இன்ன தலங்களில் இன்ன இன்ன தன்மையில் விளங்கி அருள் புரிகின்றான் எனக் கூறும் முறையில் அமைந்தவை சில பதிகங்கள்.*

(எ-டு.) வேத மோதி வெண்ணூல் பூண்டு
வெள்ளை எருதேறிப்
பூதம் சூழப் பொலிய வருவார்
புலியின் உரிதோலார்
நாதா எனவும் நக்கா எனவும்
நம்பா எனநின்று
பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார்
பழந் நகராரே. (1.67:1)

*என்பதுபோல் உள்ளவை.*

7. *ஒரு தலத்தினை அடையும் நிலையில் அதன் செய்மையிலும் அணிமையிலும் நின்று அத்தலத்தினைக் கண்டு போற்றியனவாகச் சில பதிகங்கள் காணப் பெறுகின்றன.*

(எ-டு.) உண்ணாமுலை யுமையாளொடு
முடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள்
மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை
வழுவாவண்ண மறுமே. (1.10:1)

*என்பதுபோல் உள்ளவை.*

8. *ஒரு தலத்தை வழிபட்டுத் திரும்பும் நிலையில் அங்கே கண்ட தெய்வக் காட்சியினைத் தம் உள்ளத்தே*

நினைவுகூரும் முறையில் அருளிய திருப்பதிகங்களும் உள்ளன.

(எ-டு.) சந்தமா ரகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையார் இணையடி என்மனத் துள்ளவே.
(3.36:1)

என்பது போல்வன.

9. இறைவனது திருவருள் வண்ணமாகிய திருநீற்றின் சிறப்பினை விரித்துணர்த்துவது.

(எ-டு.) காண இனியது நீறு;
கவினைத் தருவது நீறு;
பேணி யணிபவர்க் கெல்லாம்
பெருமை கொடுப்பது நீறு;
மாணந் தகைவது நீறு;
மதியைத் தருவது நீறு;
சேணந் தருவது நீறு
திருஆல வாயான் திருநீறே. (2.66:4)

என்பது போல்வன.

10. இறைவனது திருப் பெயராய்த் திகழும் திருவைந் தெழுத்தின் பெருமையினையும் மந்திரமாகிய அதனைக் காதலாகிக் கசிந்து ஓதுவார் எய்தும் நலங்களையும் அறிவுறுத்தும் முறையில் அமைந்தவை.

(எ-டு.) துஞ்சலும் துஞ்ச லிலாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்த கூற்
றஞ்ச வுதைத்தன அஞ்செ ழுத்துமே. (3.22:1)

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாம நமச்சி வாயவே. (3.49:1)

என்பனபோல் வருவன.

11. சில திருப்பதிகங்களில் 'அருந்தமிழின் பொருள்' ஆகிய அகப் பொருட்டுறை யமைதி சிறப்பிடம் பெற்றுள்ளன.

(எ-டு.) வழுவாள் பெருமான் கழல்வாழ் கவெனா
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவாள் உடையாய் மருகற் பெருமான்
தொழுவாள் இவளைத் துயராக் கினையே. (2.18:7)

திருத்தாயார் தம் மகள் நிலையை திருமருகலில் எழுந்தருளியிருக்கும் பெருமானை நோக்கிப் பேசுவது. இங்ஙனம் பல பதிகங்கள் உள்ளன.[2]

12. காழிப்பிள்ளையார் தம்மை ஆட்கொண்டருளிய இறைவனை நோக்கியும் அவன்பால் அன்புடைய அடியார்களை நோக்கியும் இறைவனது இயல்பினைக் குறித்து வினவும் முறையில் சில திருப்பதிகங்கள் அமைந்துள்ளன. வினவும் முறையில் அமைந்த அத் திருப்பதிகங்கள் 'வினாவுரை' என்றே குறிக்கப் பெற்றுள்ளன.

(எ-டு.) சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய்க எனக்குன்
கதவந் திருக்காப்புக் கொள்ளுங் கருத்தாலே.
(2.37:1)

என்று மறைக்காட்டிறைவனை வினவுவதாக அமைந்துள்ளது.

வினவி னேனறி யாமை யில்லுரை
செய்மின் னீரருள் வேண்டுவீர்
கனைவி லார்புனற் காவி ரிக்கரை
மேய கண்டியூர் வீரட்டன்

---

2. I. 44, 56, 63, 73, 76.
II. 18, 23 (106-இல் 6, 7 பாடல்கள்)
III. 63, 100 பதிகங்கள் காண்க.

தனமு னேதனக் கின்மை யோதம
ராயினா ரண்ட மாளத்தான்
வனனில் வாழ்க்கைகொண் டாடிப் பாடிஇவ்
வைய மாப்பலி தேர்ந்ததே. (3.38:1)

இஃது அடியாரை நோக்கி வினவுவது. 'வினாவுரை' என்ற பெயர் பிள்ளையாராலேயே இட்ட பெயர் என்பதை

'அருத்த னைத்திறம் அடியர் பால்மிகக்
கேட்டு கந்த வினாவுரை' (3.38:11)

என்ற இப்பதிகத் திருக்கடைக் காப்பால் அறியலாம்.[3]

**புராணச் செய்திகள்:** சண்பை வேந்தரின் அருளிச் செயல்களில் பல புராண வரலாற்றுச் செய்திகள் காணப் பெறுகின்றன. அவை: இறைவன் உபமன்ய முனிவர்க்குப் பாற்கடல் ஈந்தது, குபேரனைத் தோழனாகக் கொண்டது, சலந்தரனைச் சக்கரத்தால் தலையரிந்தது, சக்கரப் படையைத் திருமாலுக்களித்தது, நஞ்சுண்டு தேவர்களை உய்யக் கொண்டது, திரிபுரம் எரித்தது, தக்கனது வேள்வியை அழித்தது, யானைத் தோலை உரித்துப் போர்த்தது, தாருகாவனத்து முனிவர் மகளிரது நிறையழிய ஓடேந்து செல்வராய்ப் பிச்சையேற்றது, அயனும் மாலும் அடிமுடிதேட அன்னோர் அறியா வண்ணம் தீப்பிழம்பாய் உயர்ந்தது, நான்முகனது தலையைக் கிள்ளியது, மார்க்கண்டேயர்க்காகக் கூற்றுவனை வதைத்தது, காமனை எரித்தது முதலிய புராணச் செய்திகள் ஆகும்.

**தேவாரம்—மறைமொழிகள்:** ஞானசம்பந்தப் பெருமான் தம் செயலற்றுத் 'தான்' என்னும் உயிர் முனைப்பு அடங்கப் பெற்றவர். உயிர்க்குயிராய்த் திகழும் சிவபெரு

---

3. I. 4,6,77; II. 1,2,4,36; III. 38 பதிகங்கள் வினாவுரையாகக் குறிப்பிடப் பெற்றுள்ளன. II-37, III-47, 108 பதிகங்கள் இறைவனை நோக்கி வினாவும் முறையில் அமைந்துள்ளன.

மானின் திருவருள் வழி ஒட்டி வாய்ந்த செம்புலச் செல்வர். ஆகவே, அப்பெருமான் அருளிச் செய்த திருப்பாசுரங்கள் யாவும் சிவபெருமான் அருளிச் செய்த மறைமொழி களாகவே கொண்டு போற்றத்தக்கவை என்று போற்றுவர் பெரியோர். சண்பை வேந்தரே,

> **மலையினார் பருப்பதம் துருத்தி மாற்பேறு**
> **மாசிலாச் சீர்மறைக் காடுநெய்த் தானம்**
> **நிலையினான் 'எனதுரை தனதுரை'யாக**
> **நீறணிந் தேறுகந் தேறிய நிமலன்.** **(1·76:1)**

எனவரும் இலம்பையங் கோட்டூர்த் திருப்பதிகத்தால் தாம் பாடிய திருப்பாடல்கள் யாவும் இறைவன் தன்னவையாகக் கொண்ட குறிப்பை எடுத்துகாட்டுவது அறிந்து மகிழத் தக்கதாகும். 'என்னைத் தன்னாக்கி, என்னால் தன்னை இன் தமிழ் பாட ஈசனை' (திருவாய் 7·9:1) என்றும்,

> **என்சொல்லால் யான்சொன்ன**
> **இன்கவி என்பித்துத்**
> **தன்சொல்லால் தான்தன்னைக்**
> **கீர்த்தித்த மாயன்.** **(ஷை 7·9:2)**

என்றும் நம்மாழ்வார் அருளியதை மனத்திற் கொண்டு திருவாய் மொழியை வைணவர்கள் இறைவனின் வாய் மொழியாகக் கருதித் 'தமிழ் மறை' என்று போற்றுவதை ஈண்டு 'எனதுரை தனதுரையாக' என்பதனோடு ஒப்பிட்டுச் சைவர்கள் ஞானக்கன்றின் வாக்கைத் தமிழ் மறையாகவே கொண்டு போற்றுவது மிகவும் பொருத்தமாகும். இவை இரண்டும் 'நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறை மொழிகளன்றோ?'

## பின்னிணைப்பு — (1)

## பயன்பட்ட நூல்கள்


**ஆழ்வார்கள்:** நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம் (கி. வேங்கட சாமி ரெட்டியார் 2ஆம் பதிப்பு (1981). திருவேங்கடத்தான் திருநெறி மன்றம், 31, பெருமாள் முதலித் தெரு, இராயப் பேட்டை, சென்னை-600 014).

**சிவஞான முனிவர்:** காஞ்சிபுராணம் (கழக வெளியீடு).

**சுப்புரெட்டியார், ந:** சைவசமய விளக்கு (பாரிநிலையம், 184, பிரகாசம் சாலை, சென்னை-600 108 — முதற்பதிப்பு — 1984).

**தம்பிரான் தோழர்:** (ஷை — முதற்பதிப்பு — டிசம்பர் 1985).

**நாவுக்கரசர்:** (ஐந்திணைப் பதிப்பகம், 282, பாரதிசாலை, திருவல்லிக்கேணி — சென்னை-600 005. முதற் பதிப்பு — ஜூன் 1986).

**சேக்கிழார்:** பெரிய புராணம் (திருப்பனந்தாள் மடத்து வெளியீடு 1978).

**தாயுமான அடிகள்:** தாயுமான சுவாமிகள் பாடல்கள் (தருமை யாதீனம், மயிலாடுதுறை, 1965).

**பரஞ்சோதியார்:** *திருவிளையாடற் புராணம். (வேங்கடசாமி நாட்டார் உரை — கழகம்).*

**பாலசுப்பிரமணிய முதலியார் (ப):** *தேவாரம் அடங்கன் முறை (சமாஜப்பதிப்பு — 1953)*

**மாணிக்கவாசகர்:** திருவாசகம் *(தண்டபாணி தேசிகர் குறிப்புரை, தருமையாதீன வெளியீடு — முதற் பதிப்பு — 1949).*

**வெள்ளைவாரணன், க:** பன்னரு தலமுறை வரலாறு-I *(அண்ணாமலைப் பல்கலைக் கழகம் — அண்ணாமலை நகர் — 1962 பதிப்பு).*

**வெள்ளைவாரணன், க:** பன்னிரு திருமுறை வரலாறு-II *(ஷை-ஷை — 1969 பதிப்பு).*

பின்னிணைப்பு — (2)

# ஞானசம்பந்தர் வழிபட்ட தலங்கள்

| தலம் | பதிகம் | பக்கம் |
|---|---|---|
| அகத்தியான் பள்ளி | 2.76 | 240 |
| அச்சிறு பாக்கம் | 1.77 | 301 |
| அண்ணாமலை | 1.10; 1.69 | 265 |
| அதிகை வீரட்டானம் | 1.46 | 260 |
| அம்பர் பெருந்திருக்கோயில் | 3.19 | 167 |
| அம்பர் மாகாளம் | 1.83; 2.103; 3.93 | 165 |
| அரசிலி | 2.95 | 302 |
| அரதைப் பெரும்பாழி | 3.30 | 121 |
| அரசிற்கரைப் புத்தூர் | 2 63 | 125 |
| அவளிவணல்லூர் | 3.82 | 115 |
| அழுந்தூர் | 2.20 | 137 |
| அறையணி நல்லூர் | 2.77 | 264 |
| அனேகங் காவதம் | 2.5 | 289 |
| அன்பில் ஆலந்துறை | 1.33 | 89 |
| அன்னியூர் | 1.96 | 78 |
| ஆக்கூர் | 2.42 | 170 |
| ஆடானை | 2.112 | 239 |
| ஆப்பனூர் | 1.88 | 231 |
| ஆமாத்தூர் | 2.44; 2.50 | 262 |
| ஆரூர் | 1.91; 1.105; 2.79; 2.101; 3.45 | 159, 247 |

| தலம் | பதிகம் | பக்கம் |
|---|---|---|
| ஆலங்காடு | 1.45 | 279 |
| ஆலம் பொழில் | (பதிகம் இல்லை) | 100 |
| ஆலவாய் (மதுரை) | 1.94; 2.66; 2.70; 3.39; 3.47; 3.51; 3.52; 3.54; 3.108; 3.120. | 203 |
| ஆவடுதுறை | 3.4 | 133 |
| ஆவூர்ப் பசுபதீச்சரம் | 1.8 | 117 |
| ஆனைக்கா | 2.23; 3.53; 3.109 | 96 |
| இடும்பாவனம் | 1.17 | 243 |
| இடைச்சுரம் | 1.78 | 299 |
| இடைமருதூர் | 1.32; 1.95; 1.110; 1.121; 1.122; 2.56. | 130 |
| இந்திரநீலப்பருப்பதம் | 2.27 | 288 |
| இராமனதீச்சரம் | 1.115 | 154 |
| இராமேச்சுரம் | 3.10; 3.101 | 236 |
| இரும்பூளை | 2.36 | 121 |
| இரும்பை மாகாளம் | 2.117 | 260 |
| இலம்பையங் கோட்டூர் | 1.76 | 276 |
| இன்னம்பர் | 3.95 | 82 |
| ஈய்ங்கோய் மலை | 1.70 | 91 |
| உசாத்தானம் | 3.33 | 243 |
| ஊறல் | 1.106 | 278 |
| எதிர்கொள்பாடி | (பதிகம் இல்லை) | 79 |
| எருக்கத்தம்புலியூர் | 1.89 | 36 |
| எறும்பியூர் | (பதிகம் இல்லை) | 99 |
| ஏடகம் | 3.32 | 221 |
| ஐயாறு | 1.36; 1.120; 1.130; 2.6; 2.32. | 84, 253 |
| ஒற்றியூர் | 3.57 | 291 |
| ஓத்தூர் | 1.54 | 268 |
| ஓமாம் புலியூர் | 3.122 | 47 |

| தலம் | பதிகம் | பக்கம் |
|---|---|---|
| கச்சி அநேகங்காவதம் | (பதிகம் இல்லை) | 274 |
| கச்சி ஏகம்பம் | 1.133; 2.12; 3.41; 3.114. | 272 |
| கச்சி நெறிக்காரைக்காடு | 3.65 | 274 |
| கச்சித் திருமேற்றளி | (பதிகம் இல்லை) | 275 |
| கஞ்சனூர் | (பதிகம் இல்லை) | 80 |
| கடம்பூர் | 2.68 | 49 |
| கடவூர் மயானம் | 2.80 | 169 |
| கடவூர் வீரட்டம் | 3.8 | 168 |
| கடிக்குளம் | 2.104 | 242 |
| கடை முடி | 1.111 | 100 |
| கண்டியூர் வீரட்டம் | 3.38 | 101 |
| கண்ணார் கோயில் | 1.101 | 73 |
| கயிலாயம் | 1.68; 3.68 | 283 |
| கரவீரம் | 1.58 | 174 |
| கருகாவூர் | 3.46 | 115 |
| கருக்குடி | 3.21 | 120 |
| கருப்பறியலூர் | 2.31 | 51 |
| கருவூர் ஆனிலை | 2.28 | 113 |
| கலிக்காமூர் | 3.105 | 27 |
| கழிப்பாலை | 2.21; 3.44 | 33 |
| கழுக்குன்றம் | 1.103 | 300 |
| களர் | 2.51 | 181 |
| கள்ளில் | 1.119 | 279 |
| கற்குடி | 1.43 | 93 |
| காட்டுப்பள்ளி (கீழை) | 1.5 | 25 |
| காட்டுப்பள்ளி (மேலை) | 3.29 | 100 |
| காரிக்கரை (வை) | (பதிகம் இல்லை) | 281 |
| காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரம் | 1.65 | 20 |

| தலம் | பதிகம் | பக்கம் |
|---|---|---|
| காழி | காழி: 1.24; 1.34; 1.81; 1.102; 2.11; 2.49; 2.59; 2.75; 2.96; 2.97; 2.113; 3.43; 3.117. (13); கொச்சைவயம் : 2.83; 2.89; 3.83 (3); சண்பை நகர்: 1.66; 3.75 (2) சிரபுரம்: 1.47; 1.109; 2.102 (3) தோணிபுரம்: 1.60; 3.81; 3.100 (3) பிரமபுரம்: 1.1; 1.63; 1.90; 1.117; 1.127; 1.128; 2.40; 2.65; 2.70; 2.73; 2.74; 3.37; 3.56; 3.67; 3.110 (15); புகலி: 1.4; 1.30; 1.104; 2.25; 2.29; 2.54; 2.122; 3.3; 3.7 (9); புறவம்: 1.74; 1.97; 3.84 (3); பூந்தராய்: 2.1; 3.2; 3.5; 3.13 (4); வெங்குரு: 1.75; 3.94 (2); வேணுபுரம்: 1.9; 2.17; 2.81 (3) | 1, 52 முதல் |
| காளத்தி | 3.36; 3.69 | 281 |
| காறாயில் | 2.15 | 175 |
| கானப்பேர் | 3.26 | 233 |
| கானூர் | 1.73 | 88 |
| கீழ்வேளூர் | 2.105 | 148 |
| குடந்தைக் காரோணம் | 1.72 | 128 |
| குடந்தைக் கீழ்க்கோட்டம் | (பதிகம் இல்லை) | 128 |
| குடமூக்கு | 3.59 | 127 |




தலம்

| தலம் | பதிகம் | பக்கம் |
|---|---|---|
| குடவாயில் | 2.22; 2.58 | 123 |
| குரங்கணில்முட்டம் | 1.31 | 271 |
| குரங்காடுதுறை (தென்) | 2.35 | 132 |
| குரங்காடுதுறை (வட) | 3.91 | 83 |
| குருகாவூர் | 3.124 | 27 |
| குறுக்கைவீரட்டம் | (பதிகம் இல்லை) | 78 |
| குறும்பலா, குற்றாலம் | 1.99; 2.71 | 234 |
| கேதாரம் | 2.114 | 282 |
| கேதீச்சரம் | 2.107 | 238 |
| கைச்சினம் | 2.45 | 177 |
| கொடிமாடச் செங்குன்றம் | 1.~~107~~ 116 | 108 |
| கொடுங்குன்றம் | 1.14 | 229 |
| கொள்ளம்பூதூர் | 3.6 | 245 |
| கொள்ளிக்காடு | 3.16 | 179 |
| கோகரணம் | 3.79 | 285 |
| கோடி | (பதிகம் இல்லை) | 241 |
| கோடிகா | 2.99 | 80 |
| கோட்டாறு | 2.52; 3.12 | 167 |
| கோட்டூர் | 2.109 | 179 |
| கோணமலை | 3.123 | 238 |
| கோயில் | 1.80; 3.1 | 31 |
| கோலக்கா | 1.23 | 11 |
| கோவலூர்வீரட்டம் | 2.100 | 263 |
| கோழம்பம் | 2.13 | 135 |
| கோளிலி | 1.62 | 162 |
| சக்கரப்பள்ளி | 3.27 | 104 |
| சத்திமுற்றம் | (பதிகம் இல்லை) | 119 |
| சாத்தமங்கை | 3.58 | 146 |
| சாய்க்காடு | 2.38; 2.41 | 22 |
| சிக்கல் | 2.8 | 148 |
| சிராப்பள்ளி | 1.98 | 95 |

| தலம் | பதிகம் | பக்கம் |
|---|---|---|
| சிவபுரம் | 1.21; 1.112; 1.125 | 126 |
| சிறுகுடி | 3.97 | 137 |
| சிற்றேமம் | 3.42 | 181 |
| சுழியல் | (பதிகம் இல்லை) | 234 |
| செங்காட்டங்குடி | 3.63; 1.6 | 149, 153 |
| செம்பொன்பள்ளி | 1.25 | 139 |
| சேய்ஞலூர் | 1.48 | 45 |
| சேலூர் (வை) | (பதிகம் இல்லை) | 105 |
| சேறை | 3.86 | 122 |
| சோபுரம் | 1.51 | 256 |
| சோற்றுத்துறை | 1.28 | 102 |
| தண்டலை நீணெறி | 3.50 | 180 |
| தருமபுரம் | 1.136 | 140, 142 |
| தலச்சங்காடு | 2.55 | 18 |
| தலையாலங்காடு | (பதிகம் இல்லை) | 174 |
| தவத்துறை | (பதிகம் இல்லை) | 98 |
| தனிச்சாத்தங்குடி | (பதிகம் இல்லை) | 174 |
| திருந்துதேவன்குடி | 3.25 | 82 |
| திலதைப்பதி | 2.118 | 173 |
| தினைநகர் | (பதிகம் இல்லை) | 254 |
| துருத்தி | 3.90; 2.98 | 79, 138 |
| தெங்கூர் | 2.93 | 178 |
| தெளிச்சேரி | 2.3 | 248 |
| தென்குடித்திட்டை | 3.55 | 103 |
| தேவூர் | 2.82; 3.74 | 176 |
| நணா | 2.72 | 109 |
| நல்லம் | 1.85 | 136 |
| நல்லூர் | 1.86; 2.57; 3.83 | 105 |
| நல்லூர்ப்பெருமணம் | 3.125 | 309 |
| நள்ளாறு | 1.7; 1.49; 2.33 | 145 |
| நறையூர் சித்தீச்சரம் | 1.29; 1.71; 2.87 | 124 |

| தலம் | பதிகம் | பக்கம் |
|---|---|---|
| நனிபள்ளி | 2.84 | 15 |
| நாகேச்சரம் | 2.24; 2.119 | 129, 130 |
| நாகைக் காரோணம் | 1.84; 2.116 | 147 |
| நாரையூர் | 2.86; 3.102; 3.107 | 49 |
| நாலூர்மயானம் | 2.46 | 123 |
| நியமம் | (பதிகம் இல்லை) | 99 |
| நின்றியூர் | 1.18 | 76 |
| நீடூர் | (பதிகம் இல்லை) | 76 |
| நெடுங்களம் | 1.52 | 99 |
| நெய்த்தானம் | 1.15 | 86, 252 |
| நெல்லிக்கா | 2.19 | 177 |
| நெல்வாயில் திருவுச்சி | 2.26 | 33 |
| நெல்வாயில் அரத்துறை | 2.90 | 40, 42 |
| நெல்வெண்ணெய் | 3.96 | 42 |
| நெல்வேலி | 3.92 | 235 |
| பட்டீச்சரம் | 3.73 | 119 |
| பந்தணைநல்லூர் | 3.121 | 46, 78 |
| பரங்குன்றம் | 1.100 | 230 |
| பராய்த்துறை | 1.135 | 92 |
| பரிதிநியமம் | 3.104 | 116 |
| பருப்பதம் | 1.118 | 287 |
| பழனம் | 1.67 | 83 |
| பழுவூர் | 2.34 | 43 |
| பழையாறை மேற்றளி | (பதிகம் இல்லை) | 119 |
| பழையாறை வடதளி | (பதிகம் இல்லை) | 120 |
| பறியலூர் வீரட்டம் | 1.134 | 140 |
| பனந்தாள் | 3.62 | 46 |
| பனையூர் | 1.37 | 164 |
| பாசூர் | 2.60 | 281 |
| பாச்சிலாச்சிராமம் | 1.44 | 90 |
| பாண்டிக்கொடுமுடி | 2.69 | 112 |

| தலம் | பதிகம் | பக்கம் |
|---|---|---|
| பாதாளீச்சரம் | 1.108 | 244 |
| பாதிரிப்புலியூர் | 2.121 | 257 |
| பாலைத்துறை | (பதிகம் இல்லை) | 160 |
| பாம்புரம் | 1.41 | 171 |
| பாற்றுறை | 1.56 | 98 |
| புகலூர் | 2.115; 1.2 | 155, 164 |
| புகலூர் வர்த்தமானீச்சரம் | 2.92 | 156 |
| புத்தூர் | 1.26 | 232 |
| புள்ளமங்கை ஆலந்துறை | 1.16 | 104 |
| புள்ளிருக்கு வேளூர் | 2.43 | 74 |
| புறம்பயம் | 2.30 | 44 |
| புறவார் பனங்காட்டூர் | 2.53 | 302 |
| புனவாயில் | 3.11 | 239 |
| புன்கூர் | 1.27 | 76 |
| பூந்துருத்தி | (பதிகம் இல்லை) | 101, 251 |
| பூவணம் | 1.64; 3.20 | 232 |
| பூவனூர் | (பதிகம் இல்லை) | 117 |
| பெண்ணாகடம் | 1.59 | 39 |
| பெரும்புலியூர் | 2.67 | 86 |
| பெருவேளூர் | 3.64 | 174 |
| பேணுபெருந்துறை | 1.42 | 172 |
| பைஞ்ஞிலி | 3.14 | 90 |
| மங்கலக்குடி | 2.10 | 81 |
| மணஞ்சேரி | 2.16 | 78 |
| மண்ணிப்படிக்கரை | (பதிகம் இல்லை) | 78 |
| மயிலாடுதுறை | 1.38; 3.70 | 138 |
| மயிலை | 2.47 | 293 |
| மயேந்திரப்பள்ளி | 3.31 | 26 |
| மருகல் | 2.18 | 150 |
| மழபாடி | 2.9; 3.28: 3.48 | 87 |

| தலம் | பதிகம் | பக்கம் |
|---|---|---|
| மறைக்காடு | 1.22; 2.37; 2.85 (பொது) 2.91; 3.76 | 182 |
| மாகறல் | 3.72 | 270 |
| மாணிகுழி | 3.77 | 256 |
| மாந்துறை | 2.110 | 81, 89 |
| மாற்பேறு | 1.55; 1.114 | 275 |
| மீயச்சூர் | 2.62 | 170 |
| முதுகுன்றம் | 1.12; 1.53; 1.93; 1.131; 2.64: 3.34; 3.99 | 36 |
| முல்லைவாயில் (தென்) | 2.88 | 25 |
| முக்கீச்சரம் | 2.120 | 94 |
| மூவலூர் (வை) | (பதிகம் இல்லை) | 138 |
| வக்கரை | 3.60 | 259 |
| வடுகூர் | 1.87 | 258 |
| வலஞ்சுழி | 2.27; 2.106; 3.106 | 117 |
| வலம்புரம் | 3.103 | 19 |
| வலிதாயம் | 1.3 | 291 |
| வலிவலம் | 1.50; 1.123 | 161 |
| வல்லம் | 1.113 | 276 |
| வாஞ்சியம் | 2.7 | 173 |
| வாட்போக்கி | (பதிகம் இல்லை) | 92 |
| வாய்மூர் | 2.111 | 184 |
| வாழ்கொளிப் புத்தூர் | 1.40; 2.94 | 48 |
| வான்மியூர் | 2.4; 3.55 | 298 |
| விசயமங்கை | 3.17 | 43 |
| வியலூர் | 1.13 | 81 |
| விளநகர் | 2.78 | 140 |
| விளமர் | 3.88 | 175 |
| விற்குடிவீரட்டம் | 2.108 | 158 |
| விற்கோலம் | 3.23 | 277 |

| தலம் | பதிகம் | பக்கம் |
|---|---|---|
| வீழிமிழலை | 1.4; 1.11; 1.20; 1.35; 1.82; 1.92; 1.124; 1.132; 3.9; 3.85; 3.111; 1.119. | 171,180 |
| வெஞ்சமாக்கூடல் | (பதிகம் இல்லை) | 113 |
| வெண்காடு | 2.48; 2.61; 3.15 | 23 |
| வெண்டுறை | 3.61 | 180 |
| வெண்ணியூர் | 2.14 | 103 |
| வேட்களம் | 1.39 | 32 |
| வேட்டக்குடி | 3.66 | 141 |
| வேதிகுடி | 3.78 | 102 |
| வேள்விக்குடி | 3.90 | 79 |
| வேற்காடு | 1.57 | 293 |
| வைகன்மாடக்கோயில் | 3.18 | 136 |
| வைகாவூர் | 3.71 | 44 |
| விடைவாய் (திருவிடைவாசல்) | கொரடாச்சேரியிலிருந்து 3 கல் தொலைவு. திருமுறை கண்ட காலத்தில் கிடைக்காமல் 1918 ஆம் ஆண்டு அரசு கல்வெட்டுத் துறையினரால் கண்டுபிடிக்கப்பெற்ற பதிகம். 'மறியார் கரத்தெந்தை' என்ற முதற் குறிப்புடையது. A. R. No. 8 of 1918 என்று பதிவு செய்யப் பெற்றுள்ளது. மூன்றாம் திருமுறையின் இறுதியில் தனியாகக் காட்டப் பெற்றுள்ளது. | |

## பின்னிணைப்பு — (3)

## சிறப்புத் தலங்கள்

(அ) அட்டவீரட்டத் தலங்கள்: (சிவபெருமானின் வீரச் செயல்களைக் காட்டுபவை):

1. திரு அதிகை வீரட்டானம் (திரிபுரத்தை எரித்தது).
2. திருக்கடவூர் வீரட்டம் (காலனைக் காலால் உதைத்தது).
3. திருக்கண்டியூர் வீரட்டம் (பிரமனின் சிரசைக் கிள்ளியது).
4. திருக்குறுக்கை வீரட்டம் (மன்மதனை எரித்தது).
5. திருக்கோவலூர் வீரட்டம் (அந்தகாசுரனைச் சங்கரித்தது).
6. திருப்பறியலூர் வீரட்டம் (தக்கன் வேள்வி தகர்த்தது).
7. திருவிற்குடி வீரட்டம் (சலந்தராசுரனைச் சங்கரித்தது).
8. திருவழுவை வீரட்டம் (வைப்புத்தலம்). மாயூரத் தருகே உள்ளது.

(ஆ) சப்தஸ்தானத் தலங்கள்: (ஐயாற்று ஏழூர் வலம் வரும் விழாத் தலங்கள்).

1. திரு ஐயாறு
2. கண்டியூர் வீரட்டம்.
3. திருச்சோற்றுத்துறை.
4. திருநெய்த்தானம் (தில்லை ஸ்தானம்).
5. திருப்பழனம்.
6. திருப்பூந்துருத்தி.
7. திருவேதிக்குடி.

(இ) முசுகுந்த சக்கரவர்த்தி வழிபட்ட ஏழுவிடங்க மூர்த்திகள். (தியாகராசத் தலங்கள்):

1. திருவாரூர் வீதிவிடங்கன், அஜபா நடனம்.
2. துருக்காறாயில் ஆதிவிடங்கர், குக்குட நடனம்.
3. திருக்கோளிலி அவனிவிடங்கர், உன்மத்த நடனம்.
4. திருநள்ளாறு, தகரவிடங்கர், உன்மத்த நடனம்.
5. திருநாகை சுந்தரவிடங்கர் பாளவார தரங்க நடனம்.
6. திருமறைக்காடு, புவனவிடங்கர், ஹம்ஸ பாத நடனம்.
7. திருவாய்மூர், மூலவிடங்கர், கமல நடனம்.

(ஈ) பஞ்ச பூதத் தலங்கள்:

1. திரு ஆனைக்கா; காவிரி கொள்ளிடம் ஆகிய ஆறுகட்கு இடைப்பட்ட தலம். மூலத்தானத்தில் எப்போதும் நீர் கசிந்து கொண்டே இருக்கும். (அப்பு — நீர்).
2. திருவண்ணாமலை; அரனார் அழல் உருவாய் நின்ற தலம் (தேயு — தேஜஸ் — நெருப்பு).

3. திருக்காளத்தி; மூலத்தானத்துள்ளிருக்கும் விளக்குகள் எப்போதும் காற்றில் அசைந்து கொண்டே இருக்கும் (வாயு — நெருப்பு).

4. கோயில் (சிதம்பரம்); ஆகாயம். இதனை அறிவுறுத்தற்குப் பல பொன்வில்வமாலைகள் தொங்கவிடப் பெற்றுள்ளன (திரை நீக்கித் தரிசிப்பதால் இஃது இரகசியமாகிறது).

5. திருஆரூர் (பிருதிவி — பூமி); இதை இவ்வாறு கருதுவதுண்டு. ஆனால் கச்சி ஏகம்பம் மணல் இலிங்கமுள்ள தலமாதலால் இதையே பிருதிவித் தலமாகக் கொள்வோர் பெரும்பாலோர்.

(உ) பண்டை நாட்டுப் பிரிவின்படி பாடல்பெற்ற தலங்கள் (சேர, சோழ, பாண்டியர் காலம்).

| | | |
|---|---|---|
| 1. | சோழ நாட்டுச் சிவத்தலங்கள் | 190 |
| 2. | பாண்டி நாட்டுத் தலங்கள் | 14 |
| 3. | மலைநாட்டுத் தலம் | 1 |
| 4. | கொங்குநாட்டுத் தலங்கள் | 7 |
| 5. | நடுநாட்டுத் தலங்கள் | 22 |
| 6. | தொண்டை நாட்டுத்தலங்கள் | 32 |
| 7. | துளுவ நாட்டுத்தலம் | 1 |
| 8. | வடநாட்டுத் தலங்கள் | 5 |
| 9. | ஈழ நாட்டுத் தலங்கள் | 2 |
| | | 274 |
| | அண்மையில் கண்டறியப் பெற்ற திருவிடைவாய் (சோழநாடு) | 1 |
| | ஆக மொத்தம் | 275 |

# பேராசிரியர்
# டாக்டர் ந. சுப்பு ரெட்டியாரின்
# நூல்கள்

**ஆசிரியம் :**

1. தமிழ் பயிற்றும் முறை
2. கவிதை பயிற்றும் முறை
3. அறிவியல் பயிற்றும் முறை
4 கல்வி உளவியல் கோட்பாடுகள்
5. யுனஸ்கோ : அறிவியல் பயிற்றும் மூலமுதல் நூல்

**இலக்கியம் :**

6. கவிஞன் உள்ளம்
7. காலமும் கவிஞர்களும்
8. காதல் ஓவியங்கள்
9. அறிவுக்கு விருந்து
10. முத்தொள்ளாயிர விளக்கம் (பதிப்பு)
11. பரணிப் பொழிவுகள்
12. அறிவியல் தமிழ்
13. திருக்குறள் கருத்தரங்கு மலர்—1974 (பதிப்பு)
14. கம்பனின் மக்கள் குரல்
15. காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது (பதிப்பு)
16. திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்

**சமயம், தத்துவம் :**

(அ) விளக்க நூல்கள் :

17. முத்திநெறி (தமிழக அரசு பரிசு பெற்றது)
18. சிலநோக்கில் நாலாயிரம்
19. வைணவமும் தமிழும்
20. சைவசமய விளக்கு
21. ஆன்மிகமும் அறிவியலும்
22. வைணவ உரைவளம் (ஐதிகம், இதிகாசம், சம்வாதம்)
23. கலியன் குரல்

(ஆ) திருத்தலப் பயண நூல்கள் :

24. மலைநாட்டுத் திருப்பதிகள்
25. தொண்டை நாட்டுத் திருப்பதிகள்
26. பாண்டிநாட்டுத் திருப்பதிகள்
27. வடநாட்டுத் திருப்பதிகள்
28. சோழநாட்டுத் திருப்பதிகள் - முதற்பகுதி (த. அ. ப. பெற்றது)
29. சோழநாட்டுத் திருப்பதிகள் - இரண்டாம் பகுதி (ஷை)
30. தம்பிரான் தோழர்
31. நாவுக்கரசர்
32. ஞானசம்பந்தர்
33. மாணிக்கவாசகர்

திறனாய்வு :

34. பாட்டுத் திறன்
35. கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள்
36. அகத்திணைக் கொள்கைகள்
37. புதுக்கவிதை - போக்கும் நோக்கும்
38. கண்ணன்பாட்டுத் திறன்
39. பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு
40. பாரதீயம் (த. அ. ப. பெற்றது)
41. குயில்பாட்டு - ஒரு மதிப்பீடு
42. உயிர்தந்த உத்தமன் (பதிப்பு)
43. ஆழ்வார்களின் ஆராஅமுது
44. கீதைக்குறள் (பதிப்பு)
45. விட்டு சித்தன் விரித்த தமிழ்

வரலாறு; தன் வரலாறு :

46. நினைவுக் குமிழிகள் - முதற் பகுதி
47. நினைவுக் குமிழிகள் - இரண்டாம் பகுதி
48. நினைவுக் குமிழிகள் - மூன்றாம் பகுதி
49. நினைவுக் குமிழிகள் - நான்காம் பகுதி
50. வேமனர்
51. குரஜாட
52. மேகாணி
53. சி. ஆர். ரெட்டி

54. தாயுமான அடிகள்
55. பட்டினத்தடிகள்
56. வடலூர் வள்ளல்
57. பிரதிவாதி பயங்கரம்

**அறிவியல் :**

58. மானிட உடல்
59. அணுவின் ஆக்கம்
60. இளைஞர் வானொலி
61. இளைஞர் தொலைக்காட்சி
62. அதிசய மின்னணு
63. தமது உடல் (த. அ. ப. பெற்றது)
64. இராக்கெட்டுகள் (த. அ. ப. பெற்றது)
65. அம்புலிப் பயணம்
66. தொலை உலகச் செலவு
67. அணுக்கரு பௌதிகம் (செ. பல்கலைக் கழகப் பரிசு பெற்றது)
68. இல்லற நெறி
69. வாழையடி வாழை
70. அறிவியல் விருந்து (தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்றது)
71. வானமண்டலக் காட்சி

**ஆராய்ச்சி :**

72. கலிங்கத்துப் பரணி ஆராய்ச்சி
73. Religion and Philosophy of Nalayiram with Special Reference to Nammalvar
74. Studies in Arts and Sciences (61st Birth Day Commemoration Volume)
75. Collected Papers.

# இந்நூலாசிரியரைப் பற்றி . . .



பிறப்பு : 7 - 9 - 1917

70 - அகவையை எட்டும் இந்த நூலாசிரியர் பி.எஸ்சி., எல்.டி., வித்துவான், பி.ஏ., எம்.ஏ., பி.எச்டி., பட்டங்கள் பெற்றவர். ஒன்பதாண்டுகள் துறையூர் உயர்நிலைப் பள்ளி யில் தலைமையாசிரியராகவும் (1941-1950), பத்து ஆண்டு கள் காரைக்குடி அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும், (1950-60) பதினேழு ஆண்டு கள் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலை வராகவும் பேராசிரியராகவும் (1960-77) பணியாற்றி ஓய்வு பெற்றவர். 1978-இல் சென்னை யில் குடியேறி பதினைந்து மாதங்கள் (1978 பிப்பிரவரி-1979 ஜூன்) கலைக் களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியராகப் பணி யாற்றியவர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வார் தத்துவத்தை ஆராய்ந்து டாக்டர் (பிஎச்.டி.) பட்டம் பெற்றவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வெளி யிட்டவர். பெரும்பாலும் இவை நூல் வடிவம் பெற்றன; பெற்றும் வருகின்றன. தவிர, ஆசிரியம் (5), இலக்கியம்(11), சமயம்(17) திறனாய்வு (12), அறிவியல் (14), ஆராய்ச்சி (4), வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு(12) — என்று 75 நூல்களின் ஆசிரியர். இவர்தம் அறிவியல் நூல்களில் இரண்டும் சமய நூல்களில் மூன்றும் திறனாய்வு நூல்களில் ஒன்றும் தமிழக அரசு பரிசுகளும் அறிவியல் நூல்களில் ஒன்று சென்னைப் பல்கலைக் கழகப் பரிசும், ஒன்று தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசும்—ஆக ஏழு நூல்கள் பரிசுகள் பெற்றவை. இனிமை, எளிமை, தெளிவு இவர்தம் நூல் களின் தனிச் சிறப்புகளாகும்.

---

Wrapper Printed at : Eskay Art Printers, Madras-5.
Designed by : P. N. Anandan